# முத்துமணி

# ஜாலக்க ஒரு பேச்சு

COMICS PDF TIMES
HSC

தமிழ் பத்திரிகையுலக
வரலாற்றில் வாசகர்
விருப்பத்தின் படி
கதைப்போக்கு மாற்றி
எழுதப்பட்டது ஒரேஒரு
தொடர்கதைததான். அந்த சவாலை
அநாயசமாகச் சந்தித்தவர்
புஷ்பா தங்கதுரை
/ஆபாசமின்றி/. அந்த ஒரே
ஒரு க்ரைம் த்ரில்லர்...

Ph: 78710 55555

COMICS PDF TIMES
காமிக்ஸ் PDF டைம்ஸ்

# காமிக்ஸ்

# மலர்

# வெளியீடு

19

# 15-1-81



பொங்கல் சிறப்பிதழில்
ஆரம்பம்



இரவு மணி பன்னிரண்டைத் தாண்டி விட்டது தெருவெல்லாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. சீனிவாசா தியேட்டரில் கடைசி கிளைமாக்ஸ் காட்சியின் ஓசைகள் காற்றில் மிதந்து வருகின்றன. தியேட்டருக்கு இடப்புறத் தெரு. கல்லும் புழுதியும் நெருடும் சிறிய சந்து. அதிலே சின்னச் சின்ன வீடுகள். கடைசி வீட்டின் வலது பக்கத்து அறை. ஓரமாகப் புத்தக அலமாரி; பீரோ. சுவரில், மத்தளம் அடிக்கும் ஒரு பிளாஸ்டிக் சிறுவன். அறை நடுவே ஒரு மேசை. அதன் மீது டேபிள் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. பரட்டைத் தலை கிராப்பும் உருண்டை முகமும் பெரிய கண்களுமுள்ள ஒருவர் தலை நிமிராமல் எழுதிக் கொண்டிருக்கிறார். அவர்தான் புஷ்பா தங்கதுரை. அவர் எழுதும் 'இளமைக்கு ஒரு விசா' அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

# மறுபடி ஒருமுறை

# தலை மறை வில்

## ஓர் முடி

*You can carry enough diamonds on your naked body to set you up for life.*

*—Ian Fleming.*

## 1

திருக்கோணம் செல்லும் மலைப்பாதை.

விச்வேச்வர் சீரான முப்பதில் பிரயாணித்தார்.

இரு பக்கமும் டிராபிகல் செழிப்பு.

கண்ணுடி சுத்தமுடன் காற்று.

புதுப் பதிப்பாகக் காலை வெளிச்சம். இயற்கையில் கன்னி நேர்த்திகள், அவை பிறந்த கதியில் எங்கும் கிடக்க, அவர் மனம் மெள்ள அவிழ்ந்து மேலே பறந்தது.

முன்னால், ரிப்பன் நெளிவுடன் சாலை ஓடியது. நிசப்தமாக அவரை இழுத்து, முதல் மலையின் இடுப்பைச் சுற்றியது. பிறகு இரண்டாம் மலையை வருடி மூன்றுவதில் மெள்ள ஏறியது. ஹேர்ப்பின்கள் இங்கே அடுக்குகளாக வந்தன.

ஹேர்ப்பின் மூன்றுவதில் வளையும்போது, லாலி திரும்பிப் பார்த்தாள். கண் ஒரு வினுடி சுருங்கியது.

அந்த அம்பாசிடர் சற்றுத் தொலைவில் தோற்றம் கொடுத்தது. காலையில் சின்னசத்திரம் பங்க் கடையில் பார்த்த அம்பாசிடர். பிறகு மீண்டும் குறுப்பூர் பெட்ரோல் கடையில் பார்த்தது. அதன் மூஞ்சியும் கண்ணும் பிடிக்கவில்லை. அதன் கரும்பச்சைக் கலர் மனத்தில் வீணைகச் சஞ்சலத்தை உண்டாக்கியது.

—அப்பா, கார் வருது! என்றாள்.

விச்வேச்வர் உல்லாச தூரங்களில் இருந்தார். அவள் சொன்னதைக் கேட்கவில்லை.

லாலி தவிப்புடன் பின்னால்

பார்த்தாள். அம்பாசிட்டர் வீசி வந்தது. பல இடங்களில் அது தாவுவது போன்ற பிரமை! அதன் பின்னல் நீண்ட புழுதித் தோகை! முன்னல் பானெட்டில் துணுக்குச் சூரியன்கள்.

—அப்பா, கார்! என்றுள் இரண்டாம் முறையாக.

அப்பா இன்னும் கேட்காமல் போக, அவள் மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

கார் பின்னல் உறுமலுடன் வந்திருந்தது. ஒரு மிருகம் போல் சாலையில் அங்கும் இங்கும் உலாத்தியது, இடம் கேட்டுக் கோபமாக அதட்டியது.

அவளுக்கு அது கடைசிப் பொறி.

COMICS PDF TIMES

—அப்பா! என்று கத்தினாள். குரல் ஒரு கழுகு இறக்கையுடன் வீறியது.

விச்வேச்வர் திரும்பினார். சடக்கென்று பிரேக் போட்டார். கார் ஓரத்தில் சிராய்ந்தது. உள்ளே ஆவேசமாகத் திருஷ்டிப் பொம்மை ஆடியது.

—லாலி, என்ன? என்று பதைப்புடன் கேட்டார்.

லாலி மெள்ளத் திரும்பினாள். பின்புறக் கார் அப்போது விலகியது.

அதன் அவசரத்தில் அவளுக்கு ஒரு காட்சி தெரிந்தது.

முன் ஸீட்டில் ஒரு பெண் இருந்தாள். ஸ்கார்ப்பினால் தலையை அடக்கி, குளிர்க் கண்ணாடி அணிந்திருந்தாள். கார் விலகும்போது அவசரமாகச் சன்னலைத் தூக்க முயன்றாள். சிக்கலில் கண்ணாடி மேலே போகவில்லை. அந்தத் தொல்லையில் அவள் லாலியை வெறுப்புடன் பார்க்க லாலியும் அவளை விநோதமாய்ப் பார்த்தாள்.

அந்தப் பெண்ணுக்கு அடுத்த டிரைவர் ஸீட்டில் ஓர் ஆண் இருந்தான். அவனும் குளிர்க் கண்ணாடி போட்டிருந்தான். தலையை உல்லன் குல்லாயில் மறைத்திருந்தான். லாலியைப் பார்த்தவுடன் முகத்தை வெட்டி வேறுபுறம் திருப்பினான்.

கார் விலகி ஓடியது.

—லாலி! என்றார் விச்வேச்வர்.

இழைத்தவாறு லாலி அவரைப் பார்த்தாள். நெற்றியில் பொட்டு வியர்வைகள்.

—ஆர் யு ஆல் ரைட்?

—எஸ் ப்பா?

—வாடடர் வேணுமா?

—கொடப்பா.

—மாத்திரை?

—கொடு.

—இமிப்ரமின் மாத்திரை, மனத்தின் டிப்ரஷனை மாற்றி விடும். வாயில் போட்டு விழுங்கினாள்.

விச்வேச்வர் இறங்கி வந்தார்.

—லாலி! பாஸிடிவ் நினைப்பே நினை! இப்போ பாரு! உலகம் என்ன ஆனந்தமா இருக்கு? என்ன அமைதியா இருக்கு? இந்த இயற்கையைப் பாரு! இந்தப் பள்ளத்தாக்கைப் பாரு! என்ன அழகு! இந்த பட்டர்ஃப்ளை துடிச்சுக்கிட்டே போறது பாரு! வாழ்க்கை ரொம்ப நேர்த்தியானது. அதை நினைச்சுக்கோ லாலி!

—ஆட்டும்'பா! என்றாள் அவள். மனசில் அவர் சொல்வதைப் பற்றுதலாக நினைத்தாள். அதைத் தன் உணர்வு ஸெல்கள் மூலம் உணர முயன்றாள். அழகான பள்ளத்தாக்கு! நீண்ட குழி போல் எவ்வளவு தூரம் வியாபிக்கிறது! அதோ! இன்னும் கூடப் பனி கொஞ்சமா உட்காந்திட்டிருக்கு...

மெள்ள மெள்ள சுவாசங்கள் நிதானமாயின. விழிகளில் கிலி மறைந்தது. நுரைகளாகக் கலைந்த உலகம் இப்போது மெதுவாக ஸ்திரங்களை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது.

—அப்பா! என்றாள்.

விச்வேச்வர் திரும்பினார்.

—கார் வருதுன்னு நான் சொன்னதும் நீ நிறுத்தியிருக்கணும். எனக்கு ஆங்க்ஸைட்டி மேனியா உண்டு. எல்லோரும் கண்ட்ரோல் பண்ணுவாங்க. என்னாலே முடியாதப்பா.

அவள் முகம் தேம்பியது: அவள் கீழே குனிந்து விம்மினாள்.

—ஐ'ம் ஸாரி, லாலி! அது என் முட்டாள்தனம். இனிமே சரியாக நடக்கிறேன்.

ஸீட்டில் ஏறி உட்கார்ந்தார்.

—போகலாமா?

அவள் பதில் சொல்லவில்லை.

அவளுக்கு நேரம் வேண்டும் என்று நினைத்தார். அப்போதுதான் ஆசுவாசம் ஏற்படும்.

(தொடர்ச்சி 81'ம் பக்கம்)

யாரோ 'ஹாண்ட்ஸ் அப்!' என்று எதிரே வந்து பயமுறுத்தியிருக்கிறார்கள் போலும்...

'வேலைக்காரி விஜயா'வில்—மாயா

(4'ம் பக்கத் தொடர்ச்சி)

அவளை ஆறவிட்டுவிட்டு, மெள்ளத் திரும்பினார். அவர் மனம் லேசாகக் கிளர்ந்தது.

'மனை கல்பித ஜகத்'. என்று நினைத்தார். *The world as perceived by the senses, as perceived by the mind.*

மனம் வழியாக ஃபில்டர் ஆகித் தெரியும் உலகம். இந்த மனம் மட்டும் லேசாகக் கலைந்து விட்டால் உலகம் எப்படி மாறித் தெரிகிறது?

லாலியின் நோயை அவர் அறிவுப் பூர்வமாக அறிவார். அவளது மனம் ஆரோக்கியத்தில் இல்லை. எங்கேயோ கொஞ்சம் கலைந்திருக்கிறது. அது சீரானால்தான் அவள் உலகமும் சீராகும். அவள் மனம் சீராக அவர்தான் உதவவேண்டும், பரிவு உணர்வோடு உதவ வேண்டும்.

—நாராயண! என்றார். திருக்கோணத்தின் மூலதெய்வம் அவர். அவர்தான் உதவ வேண்டும்.

—போலாமா?

—போலாம்பா!

—இப்போ கண்ட்ரோல் வந்துடுத்தா, லாலி?

—வந்துடுத்து. கண்ட்ரோலை நான் முழுக்க இழக்கல்லே. கொஞ்சம் டிஸ்டர்ப் ஆச்சு! இப்போ சரியாயிடுத்து, அப்பா.

அது அவருக்குத் திருப்தியாக இருந்தது.

—லாலி! நீ எத்தனையோ காரைப் பார்க்கிறே? இந்தக் காரைப் பார்த்து ஏன் நிதானம் இழக்கறே?

—அதன் மூஞ்சியையும் கண்ணையும் பார்த்தியாப்பா! ஸினிஸ்டர் லுக்கிங்! அதை நான் வெறுக்கிறேன்.

விச்வேச்வர் முறுவல் செய்தார்.

—கார் என்ன செய்யும் லாலி? அது ஒரு ஜடப் பொருள்! அதைப் போயி...

—நோ, நோ ஃபாதர்! அது ஒரு மிருகம் மாதிரி—பார்க்கிறது, தாவறது, பாயறது...

—ஆமாம் என்று தலையாட்டினார் விச்வேச்வர். விவாதிக்க விருப்பமில்லை. சிரமப்பட்டு வேதனையை அடக்கினார். ஒரே பெண். முழு ஆரோக்கியத்துடன் இருக்கக் கூடாதா?...

காரைக் கிளப்பினார்...

இரண்டு நாட்களுக்கு முன்...

ஆம்ஸ்டர்டாமிலிருந்து அந்தக் கேபிள் வந்தது. அதன் வாசகங்கள் *Bently phrase code*'ல் இருந்தன.

காரியதரிசி கே.ஜி. பால் அந்தக் கேபிளையும், பருமனை பெண்ட்லி கோட் புத்தகத்தையும் 'தானின் மேனேஜரில் வைத்துவிட்டுப் போனான்.

தாஸ் கையை மடித்து மொழி பெயர்க்க ஆரம்பித்தான்.

மொழி பெயர்ப்பில் வந்த வார்த்தைகள் சங்கேத வார்த்தைகளாக இருந்தன.

*'Marlow bbd bgz bee bbj bne'*

புன்னகையோடு இரும்புக் காபினெட்டைத் திறந்து மற்றொரு சங்கேத மொழிப் புத்தகத்தை எடுத்தான். ஐரோப்பிய 'சந்தேக' வைர வியாபாரிகள் இதை உபயோகிப்பார்கள்.

இரண்டாம் மொழி பெயர்ப்பில் அர்த்தம் வெளிவந்தது.

*'Marlow will arrive to-morrow from Geneva flight number 719'*

—பால் என்றான் இன்டர்காமில்.

—எஸ் சீஃப்! என்று குழாய்க்குள் கரகரத்தான் பால்.

—உடனே வா!

வந்தான்.

—ஜெனிவாலேர்ந்து மார்லோ வரான்.

—ஜெம்மாலிஜிஸ்டா?

—ஆமா! ஸி.எஸ்.ஓ அனுப்பிச்சிருப்பாங்க.

ஸெண்ட்ரல் ஸெல்லிங் ஆர்கனேஸேஷன், லண்டன், என்று கே.ஜி. பாலுக்குத் தெரியும். உலகத்தின் 90 சதவீத வைர விற்பனையை அது கையாளுகிறது.

—எதுக்கு வரான், சீஃப்?

—போன தடவை நினைவிருக்கா? என்றான் தாஸ்.

—லவண சமுத்திரம் ஜமீன் நகை விஷயமாக வந்தான்.

—யூ ஆர் ரைட். அவனைத்தான் சரியான மதிப்புப் போட முடிஞ்சுது. அரசாங்கம் அதைத்தான் ஒப்புக்கிட்டது. நம்மூர் ஆசாமிங்க போட்ட மதிப்பீடுகளை ஒப்புக்கல்லை.

—காரணம் உண்டு சீஃப்!

—எல்லாம் பழம் நகைங்க! பரம்பரையா வருது! ஆண்டிக் மதிப்புப் போட அவங்களாலேதான் முடியும்!

—போன தடவை ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தான், நினைவிருக்கா சீஃப்?

—ஆமாம், பழங்கால வைரத்துக்கு ஒளி ஜாஸ்தி மதிப்பும் ஜாஸ்தியாப் போடணும்னுன்.

—ரைட் பால்! இப்போ மார்லோ வரான்னு காரணம் இருக்கணும். பேப்பரை ஒழுங்காப் பார்த்தியா?

—பார்த்தேன். எந்த ராஜாவும் திவாலா ஆகல்லே...!

—பாலஸ் ஜுவெல்லரி ஏதாவது ஏலத்துக்கு வந்ததா?

—நைஜாம் நகைதான் கோர்ட்லே இருக்கு. வேறு எதுவும் ஏலத்துக்கு வரல்லே.

தாஸ் யோசனையோடு எழுந்தான். தெக்கு மேஜைமீது தோரணக்காலுடன் உட்கார்ந்தான்.

ஒரு 555யைப் பெரிய சடங்குடன் உருவிப் பற்ற வைத்தான்.

—அப்போ பால்! ரகசியமாக ஏதோ நடக்கிறுப் போலே இருக்கு? நீ ஏர்போர்ட்டுக்குப் போகணும்.

—மார்லோ எங்கே போறுன்னு கவனிக்கணும், அவ்வளவுதானே?

—ஆமாம். அது தெரிஞ்சதுன்னு, நமக்கு லாட்டரி விழுந்த மாதிரி.

—ஓகே சீஃப்!

அவனது மூணு அங்குல பெல்ட் தெய்ந்த வெளிச்சத்தைச் சிதற, வாட்டமான உடம்பை மெள்ள ஒரு வாகனம் போல் திருப்பினன் கே.ஜி. பால்.

—ஷோபனாவுக்குப் போன் பண்ணு. தயாரா இருக்கச் சொல்லு.

—எஸ் சீஃப்!

அவன் போனதும் கேபினை மீண்டும் படித்து டிராயருள் வைத்து அழுத்தினன். புகைவிட்டுச் சிந்தனை செய்தான். மார்லோ வருவது என்றால் சாதாரண மதிப்பீடாக இருக்காது. கோடிக்கு மேல் இருக்கும்.

போனமுறை வந்தபோது ஏலத்துக்கு வந்த ஜமீன் நகைகளின் மதிப்பு 2 கோடி. அதில் 25 லட்சம் பெறுமான

இரண்டு படங்களுக்கும் குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றன. விடை 85'ம் பக்கம்

அடிகையை இரவுக்கிரம்வ திட்டமிட்டு அழுத்தியது தாஸின் சாமர்த்தியம்.

இப்போதும் அது போலப் பெரிய வேட்டை கிடைக்குமா?

கே.ஜி. பால் அன்று முழுதும் வரவில்லை. மறுநாள் மூன்று மணிக்குத்தான் திரும்பினான்.

—சீஃப்!

—சொல்!

—மார்லோ வந்தாச்சு! போயாச்சு!

—எங்கே?

—திருக்கோணம்!

—திருக்கோணம்?

தாஸ் முகவாயை வழுவினான். கண் அரைச் செருகலிட்டு மோட்டைப் பார்த்தது. கையில் வெய்ட் உருண்டை சுழன்றுகொண்டே இருந்தது.

—என்ன காரணம்? என்று எழுந்தான்.

—புனித யாத்திரை இருக்கும் சீஃப்!

—சுப்! அவனுவது புனித யாத்திரை பண்றதாவது! எதையாவது மதிப்புப் போட வந்திருப்பான்!

—திருக்கோணத்திலா?

—ஏன் இருக்காது? பழங்காலக் கோவில். பணக்காரக் கோவில். நகை ஏதாவது இருக்காதா?

—சீஃப்! என்று விரலைச் சொடக்குப் போட்டான் கே.ஜி. பால்— ஒரு பேப்பர் செய்தி! ரெண்டு மாசமாச்சு!

பால், ஸ்டோர் ரூமுக்கு ஓடிப்போய்க் குடைந்து அந்தப் பேப்பரைக் கொணர்ந்தான். தாஸ் ஆவலோடு அந்தத் துணுக்குச் செய்தியைப் பார்த்தான். திருக்கோணக் கோவிலின் பொக்கிஷ அறையிலிருந்து சில பழைய நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகச் செய்தி ஓரத்தில் நுணுங்கியிருந்தது.

பெருத்த பரபரப்புடன் கீழே வைத்தான்.

—ஸோ! ஆன்டிக் நகைங்க! நிறைய மதிப்பு இருக்கும். நிச்சயம் நாம்ப வேட்டையாடணும். பச்சை அம்பாசிடரைத் தயார் பண்ணு. ஷோபனாகிட்டே சொல்லு. நாளை புறப்படணும்.

கோவில் தரிசனங்களுடன் இரண்டு நாள் பொழுது ஓடிற்று.

### ஆறு வித்தியாசங்கள் விடை

1. காக்கை
2. பானை வியாபாரி மீசை
3. பானைகளைத் (அறிவிப்பு)
4. ஜன்னல்
5. வலது கோடிப் பானை கோடு
6. காகிதத் துண்டுகள்

இரண்டாம் இரவு படுத்த பிறகு லாலி தூங்கவில்லை. சுறுசுறுப்பாக இருந்தாள். இந்தக் கோவிலுக்கு வந்ததில் மகிழ்ச்சி. மனசு அடங்கியிருந்தது. பீதி நினைவுகள் எழவில்லை.

கடிகாரப் பட்டனை அழுத்தினாள். மணி பதினொன்று. அப்பா தூங்கிவிட்டார்.

வெளியே மெல்லிய சத்தம். என்னதாக இருக்கும்?

இப்போது தைரியமான ஆர்வம் அவளுக்கு. இரண்டாவது கதவுக்கு வந்தாள். அதைத் திறந்து பால்கனிக்குள் நழுவினாள். சில்லான காற்று அவளைத் தழுவியது.

எல்லா அறைகளின் பால்கனியும் ஒரு இருட்டான பின்புறத்தை நோக்கியிருந்தன. பகலில் பார்த்தால் ஒழுங்கில்லாத செடி வரிசைகள் அங்கு தென்படும்.

இரண்டாவது மாடி அறையில் இருந்தாள் அவள். பால்கனிக்கு அவள் வரவும், நேரே எதிரே உள்ள பால்கனியில் வெளிச்சம் உள்ளிருந்து அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

அவள் பார்க்க எதிரே அந்த மங்கிய வெளிச்சத்தில் இருவரை அடையாளம் கண்டு திடுக்கிட்டாள். காலையில் காரில் பார்த்த பெண் அவள். நிச்சயம் அவன் அந்தக் காரை டிரைவ் செய்தவன்தான்.

இருவரும் ஒரு மனித உடலை பால்கனிக்குக் கொண்டு வந்து, கைப்பிடிச் சுவரிலிருந்து கீழே தள்ள, சில விநாடிகள் அவள் கண்கள் மரத்து நின்றன.

பிறகு சொத் என்று அந்த உடல் விழுந்த சத்தம் கீழே கேட்க, 'வீ' என்ற ஓர் அலறல் மேலே வந்தது. அதை அமுக்க முயன்றாள் அவள். முக்காலும் வென்று விட்டாள். அப்படியும் ஒரு துணுக்கு வெளியே தப்பித்துப் பறந்தது.

அதைத் தொடர்ந்து .ஒரு வட்டமான டார்ச் வெளிச்சம் அவள்மீது விழுந்தது.

[தொடரும்]

புஷ்பா தங்கதுரை

# சாயம்மாள் முதல் ரஞ்சனா



COMICS PDF TIMES

## முன்கதை

தொழிலதிபர் விச்வேச்வர் தன் மகள் லாலியுடன் திருக்கோணம் சென்று கொண்டிருக்கிறார் காரில். அவர் காரை வேகமாக ஓவர்டேக் செய்கிறது இன்னொரு கார். அதிலுள்ள ஒரு பெண்ணும் காரோட்டியும் அவர்களை முறைத்து விட்டுச் செல்கிறார்கள். லாலி திகிலடைகிறாள். பயந்த சுபாவமுள்ள மன நோயாளி அவள்.

ஆம்ஸ்டர்டாமிலிருந்து கடத்தல் கொள்ளைக்காரனை மார்லோ திருக்கோணக் கோவிலின் பழம் நகைகளில் குறிவைத்து வந்திருக்கிறான். ஷோபனா என்பவளின் உதவியுடன் அவனை மடக்கவே தாஸும் அவன் செக்ரட்டரி பாலுவும் திருக்கோணத்துக்கு வருகிறார்கள். அவர்கள் அன்று தங்கள் பால்கனியிலிருந்து ஒரு மனித உடலை வெளியே தூக்கியெறிகிறார்கள். எதிர் பால்கனியிலிருந்து அதைப் பார்க்கும் லாலி, தன்னையும் மீறி அலற, டார்ச் வெளிச்சம் அவள்மீது விழுகிறது.

# 2

*Diamonds are a smuggler's best friend. He can hide them in his ears, nose, mouth, stomach and rectum. Ladies, of course, are even better endowed.*

*—A South African Police Colonel*

அந்த வட்ட வெளிச்சத்திற்கு ஓர் உடற் பலம் இருந்தது. லாலியைக் கையால் தள்ளுவது போல தள்ளியது. அவளால் நிற்க முடியவில்லை. தள்ளாடி அறைக்குள் சாய்ந்தாள். வெளிச்சம் விநாடிக்குள் அவிந்தது.

விச்வேச்வர் கலைந்து எழுந்தார்.

—லாலியா? என்றார்.

லாலி காலால் கதவை அடைத்தாள். இன்னும் உணர்வுகள் மாயவில்லை. அடி வயிற்றிலிருந்து குரல் எழும்பி வாய்க்குள் வர முயன்றது. வாயை இறுக மூடினாள். ஆட்டோஸஜஷன் நிறையத் தேவை! டாக்டர் அப்படித்தான் கூறியிருந்தார்.

—நான் என் கூச்சலைத் தடுப்பேன். என் அனுமதி இன்றி கூச்சல் வெளி வராது, என்றாள்.

மந்திரம் போல அதை ஜபித்தாள்.

விச்வேச்வர் எழுந்து விளக்கைப போட, —போடாதே! அசை! என்று கத்தினாள்.

ஜெயஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ?

உமா வெங்கட்ராமன்?

# கிரீன் நாவல் பேரில் ஒரு வர்தரன்

விச்வேச்வர் உடனே விளக்கை அணைத்தார். பிறகு ஆதுரத்துடன் பக்கத்தில் உட்கார்ந்து—என்ன விஷயம்? என்றார்.

—இங்கே என்னவோ நடந்தது, அப்பா! இப்போ கேட்காதே! எனக்கு கண்ட்ரோல் போயிடும். நாளைக்குச் சொல்லறேன், என்று இழைத்தவாறு கூறினாள்.

இருட்டில் தடவி மாத்திரையைத் தேடி எடுத்தாள். தண்ணீரைக் குடித்துப் படுத்தாள்.

கெட்ட கனவுகள் கண்டு கொண்டே சிறிது நேரத்தில் உறங்கிப் போனாள்.

காலையில் லாலி தாமதமாக எழுந்தாள்.

மனசில் முந்திய நாள் உடனே ஓடி வந்தது.

அதெல்லாம் நடந்ததா? அந்த பயங்கர நிகழ்ச்சிகள்!

கிட்டத்தட்ட பத்து மணி நேரம் தாண்டி விட்டதால் அந்த நிகழ்ச்சிகளின் உண்மைத்தனம் சிறிது குறைந்திருந்தது.

பகலின் வெளிச்சத்தில் எல்லாவற்றையும் இப்போது சத்தியமாகப் பார்க்கும் நிலையில் முந்திய நாள் சம்பவம் மெள்ள ஒரு கனவின் தன்மையைப் பெற்றுக் கொண்டிருந்தது.

கனவு தானே?

விச்வேச்வர் தாமதமாக எழுந்தார். பெட்ஷீட்டை உடம்பிலிருந்து சுழலவிட்டு, சோம்பல் முறித்தபோது, ஆச்சரியமாக லாலி குளித்த மெருகுடன் உட்கார்ந்திருந்தாள்.

—ஸோ ஏர்லி? என்றார்.

—யா! என்று புன்னகையிட்டாள் அவள்.

சீக்கிரமாகப் பல் தேய்த்து டிபனுக்கு ஆர்டர் செய்து, அவர் நிதானமாக உட்கார்ந்தார்.

—என்னம்மா, நேத்து ராத்திரி என்ன நடந்தது?

லாலி தைரியமாக எழுந்து பால்கனி கதவைத் திறந்தாள். அதற்கான திடம் இப்போது வந்திருந்தது.

அவள் எதிர்பார்த்தது, கீழே, எதிர் பால்கனிக்கு நேர் கீழே, ஒரு கூட்டம், சில போலீஸ் தலைகள் கையையும் காலையும் விரித்த ஒரு சடலம்.

நெஞ்சு பதைக்க எட்டிப் பார்த்தாள்.

வாய் சட்டென்று திறந்தது. சப்தமில்லை.

ஆச்சரியம்! கீழே எதுவுமே இல்லை. யாரும் நிற்கவும் இல்லை. தரையில் கிடக்கவும் இல்லை.

ராதாகணேசன்?

நயனதாரா வீரராகவன்?

# சிலையில் இருப்பவர் யார்?

(விடை: 94'ம் பக்கம்)

தூரம் வரை அதன் எல்லை பரவி இருந்தது. சில பூவரசுகள். சில வாதாம்கள், சில வேம்புகள் அங்கங்கே கொத்துக் கொத்துக் கூட்டங்களாக வளர்ந்திருக்க, அவைகளைத் தாண்டி ஒரு கம்பி வேலி தரையிலிருந்து மூன்றடி உயரத்தில் ஓடியிருந்தது.

எதிரே பால்கனியைப் பார்த்தாள்.

சிக்!

கதவும் சன்னல்களும் அடைபட்டிருக்க, சன்னல் கண்ணாடி நீல ஆகாயத்தைச் சோகையாகப் பிரதிபலித்தது.

கண்ணாடிக் கசக்கினாள்.

சுற்று முற்றும் பார்த்தாள்.

இன்னும் ஒரு முறை கீழே பார்த்தாள்.

நேற்று எதுவும் நடக்கவில்லையா?

நடந்ததெல்லாம் கனவா?

இருக்க முடியாது, நான்தான் இந்த பால்கனிக்கு வந்தேனே! எதிரே அவர்கள் ஓர் உடலைத் தூக்கிக் கீழே போட்டார்களே! நான் 'வீ' என்ற அலற, என் மீது டார்ச் அடித்தார்களே!

அவளது நினைவின் கனம் சிறிது குறைந்த மாதிரி இருந்தது. ஒவ்வொரு நினைப்புக்கும் ஒரு கனம் வேண்டும். அது இல்லாததால் நினைவுகள் அழுத்தமாக இல்லை. விலவிலப்பாக இருக்கின்றன. உண்மைக்கும் கனவுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. அப்படித்தான் நினைத்தாள் அவள்.

இது என்ன மனப் பிரமை!

திரும்பினாள். தனக்குத் தானே வெட்கப்பட்டாள். இதைப் போய் அப்பாவிடம் வேறு சொல்லவா? ஏற்கனவே வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். மனம் இன்னும் சரியில்லை என்று சொல்லவா?

—என்ன லாலி, விஷயம்?

குனிந்து கொண்டு வந்தாள். நாற்காலியில் நிசப்தமுடன் அமர்ந்தாள்.

—என்னம்மா லாலி, விஷயம் இருந்தாச் சொல்லு! உனக்கு நான் உதவி செய்யறேன்.

லாலி மேலே நிமிர்ந்தாள்.

சில கோணங்களில் அவர் ரொம்பவும் வசீகரம். முகத்தில் அறியாமை ஒரு பால் வெளியாக ஓடும்.

—இல்லேப்பா! என்னுள் இழுத்து.

—நோ, லாலி! மனசிலே எது இருந்தாலும் கேளு. முதல்லே ஒன்று புரிஞ்சுக்க! நீ எதையாவது அடக்கப் பார்த்தாலோ, மறைக்கப் பார்த்தாலோ, நிச்சயம் விபரீதம் ஏற்படும்.

—நான் உணர்றேன் அப்பா! ஒரே ஒரு கேள்வி.

—கேளு!

—நீ ராத்திரி பதினெரு மணிக்கு எழுந்து லேட் போட்டே இல்லை?

—ஆமாம், போட்டேன்.

—அப்போ நான் எங்கே உட்கார்ந்திருந்தேன்?

—ஏன், தரையிலே தான்!

—நான் என்ன சொன்னேன், நினைவிருக்கா?

—'லட்டைப் போடாதே, அணை'ன்னு' சொன்னே.

—அது உண்மை தானே?

—ஆமாம்!

—அப்போ ஏம்'ப்பா! அதுக்கு முன்னுடி பார்த்தது மட்டும் நிஜமில்லாமல் போயிடும்?

—என்ன பார்த்தே?

—நான் எழுந்து பால்கனிக்குப் போனேன். எதிர்த்த பால்கனியிலே ரெண்டு பேர் ஒரு சடலத்தைத் தூக்கிக் கீழே விட்டெறிஞ்சாங்க! என் கண்ணுலே பார்த்தேன். என்னை மீறி ஆன்னு வாயைத் திறந்துட்டேன்.

விச்வேஸ்வர் அவளை விசித்திரமாகப் பார்த்தார்.

எழுந்திருந்தார். பால்கனிக்குப் போனார். எல்லா இடங்களையும் ஆய்ந்து பார்த்தார். பிறகு சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார்.

—ப்யூர் ஹல்யூஸினேஷன்!

லாலி அவரைக் கண்களால் பின்பற்றினாள்.

—அப்பா, உள்ளே நான் தரையில் உட்கார்ந்திருந்தது நிஜம். உங்களை லட்டை அணைக்கச் சொன்னது நிஜம். [illegible] நிஜம். எதிர் பால்கனியிலே பார்த்தது மட்டும் பொய்! நிஜமும் பொய்யும் ஒன்று சேருமா அப்பா?

—வொய் நாட்? ரெண்டும் ரொம்ப அதிசயமாய்ச் சேர்ந்துக்கும்.

—ஓ! என்னுள் குறிலாக. —ஐ'ம் ஸாரி! எனக்கு மனசிலே அப்படித்தான் விழுந்தம் நடக்குது. இதைச் சீக்கிரம் நான் சரியாக்கிக்கணும்.

—நிச்சயமா செஞ்சுக்கணும். லாலி, உனக்கு உதவி பண்ணறேன். சீக்கிரம் சரியாயிடுவே! நம்பிக்கையோட இரு.

மத்தியானம் சாப்பிட்டார்கள். பிறகு ஷாப்பிங் போனார்கள். குறுகலான சுடைத் தெருவில் தேர்ள்களை உரசி நிறைய பேரம் பேசினார்கள். ஒரே ஒரு லாக்கெட் மட்டும் வாங்கி ஹோட்டலுக்குத் திரும்பினார்கள்.

மேட்டு ரஸ்தாவில் ஏறியதும்— அப்பா! என்று லாலி அவர் கையைப் பிடித்தாள். என்னவென்று விசாரிப்பதற்கு முன் வெடவெடத்தாள்.

சற்றுத் தூரத்தில் தாழ்வான நிலப் பரப்பில் ஒரு காம்பவுண்ட். அதனுள்ளே கொழுத்த வேப்ப மரம். அதன் தாழ்வான கிளைகள் ஒரு பச்சைக் காரின் முகத்தை மறைத்துக் கொண்டிருந்தன. கிளை ஆடும்போது மட்டும் கார் முக்கால் தரிசனத்தைக் கொடுத்தது.

—நேத்து பார்த்த கார் தானே? என்றார் விச்வேச்வர்.

—ஆமாம், என்று தலையை அசைத்தாள்.

அவள் குரல் ஏன் இப்படி நடுங்குகிறது?

—உனக்கு ஏன் பதட்டம், லாலி? நீ பார்க்கிற எத்தனையோ கார்லே இது ஒண்ணு. ப்ளேட் மெட்டல், உள்ளே மெஷினரி, மெத்தை, கண்ணுடி! எல்லாம் வெறும் உலோகங்கள். செத்த உலோகம்!

—புரியறது அப்பா! ஆனா எனக்கு அதைப் பார்த்தா கார் மாதிரி தோண்ல்லியே?

—என்ன தோண்றது?

—ஒரு மிருகம் போல [illegible]

—மிருகம்! என்று அழுத்தியவாறு அவளைப் பார்த்தார் விச்வேச்வர்.

—யா! ஸீ த ஹெட்! லைட்! பார்த்தா எலிப்டிகல்லாத் தெரியவில்லே? யாரோ புருவத்தைத் தூக்கிப் பார்க்கற மாதிரி! டயரைப் பாரப்பா! பாயத் தயாரா இருக்கு! இல்லேயாப்பா?

—நோ நோ நோ நோ! என்று அடுக்கினார் விச்வேச்வர். —மனசை நல்ல ரேஷனலா நினைக்க விடு. ஒரு பொருளைப் பார்த்தா அந்தப் பொருளாகவே நினை! வேறு ஒண்ணேனை பிரதி பிம்பமா நினைக்காதே! டாக்டர் அப்படித்தான் சொன்னார்.

—ஓகே'ப்பா. ஆனா எனக்கு முதல்லே தோணும் போதே காராகத் தோன்றவில்லை. வேறே ஏதோ உருவாத்தான் தோணுது!

விச்வேச்வர் உதட்டை வேதனையுடன் மடக்கினார். பேச்சை நிறுத்தினார். மெள்ளத் திரும்பினார். இவள் நோக்கில் ஏன் இப்படி வித்தியாசம்? இவள் பார்வை ஏன் வித்தியாசப்படுகிறது?

மரத்தை மறைத்தது மாமத யானை. மரத்தில் மறைந்தது மாமத யானை. என்ன அரிதான வாக்கு!

ஒரு குழந்தைக்கு அது யானை.

ஆனால் தச்சருக்கு அது வெறும் மரக்கட்டை! அவரவர் பார்வைக்குத் தக்கபடி அதது வித்தியாசமாகத் தெரிகிறது.

எனில் அவரைத் தவிப்புடன் பார்த்தாள்.

—ஊருக்குப் போயிடலாம்பா! என்றாள்.

—ம்... போலாம்! என்றார் அவர் நடந்து கொண்டே.

மேடு ஏறி, பிரதான சாலைக்கு வந்தார்கள். சீக்கிரம் ஹோட்டலை அடைந்தார்கள்.

அறையில் சிறிது நேரம் களைப்பாறும் வியாஜத்தில் விச்வேச்வர் நிறைய யோசித்தார். பிறகு தீர்மானம் எடுத்தவர் போல் எழுந்து துணிகளைச் சேகரம் செய்து பெட்டிக்குள் அடக்கம் செய்யத் தொடங்கினார்.

—ஏம்பா! புறப்பட்டுப் போறீங்களா? என்றாள் அவள்.

—நீ தானே சொன்னே! என்றார் அவர்.

—இப்போ நான் மனசை மாத்திக்கிறேன் அப்பா! என் கோழைத்தனம் எனக்குப் புரியுது. இப்பத்தான் கடவுளை வேண்டிக்கிட்டேன். எனக்குத் தைரியம் வந்திருக்கு! நாளைக்குப் போலாம்.

—நிச்சயமாச் சொல்லறியா?

—நிச்சயம்! இன்னிக்கு நாம்ப போகலை.

—குட்! என்று சொல்லி உட்கார்ந்தார் விச்வேச்வர். நல்லதாப் போச்சு! இன்னிக்குச் சாயங்காலம் சுவாமி புறப்பாடு. பார்க்கலாம்!

—விசேஷமா?

—ஆமாம். சுவாமிக்கு இன்னிக்கு மகர கண்டிகை போடறாங்க! டிரஸ்டி நேத்து சொன்னார்.

—என்னதப்பா அது?

—அபூர்வ மீன் நெக்லஸ். மீன் மீது இருநூறு மீன் இருக்கும் அதுலே.

—யார் செஞ்சு போட்டது?

—பழைய ராஜா யாரோ செஞ்சிருக்காங்க! விஜயநகர ராஜாவா இருக்கணும் கோவில் பொக்கிஷம் வைக்கிற கல்லறையில் ஒரு ரகசியப் பாறைக்குள்ளே கிடைச்சுதாம். விலை என்ன இருக்கும்னு நினைக்கிறே?

—லட்சம் இருக்கும்!

—ஹரும் என்று ஒரு 'உம்'மை தூக்கிப் போட்டார்.

—மீனுங்க அத்தனையும் அபரஞ்சிப் பொன். வாலிலே பொடிப் பொடியா நவரத்தின கற்கள். மொத்த



## சிரிப்புத்தான்!

## வருகுதையா!

டி.வி. நாடகமென்றுமே எதிர்த் திசையில் தலையைத் திருப்பிக் கொள்ள வேண்டிய நிலையில், புதுவருஷம் பிறப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னால் வி. கோபாலகிருஷ்ணன் நடித்த நாடகம் அருமையாயிருந்தது ஓர் ஆச்சரியம். பொய்யைச் சரளமாக வீசும் பாலக்காட்டுப் பிராமணர், ஆபீஸில் அரிச்சந்திர நாடகத்தில் நடித்ததன் விளைவாக இனி உண்மையே பேசுவது என்று அசட்டுத்தனமான(!) முடிவு எடுத்து, பிளாட்பாரத்தில் சுண்டல் விற்கும் நிலைக்கு வர நேரிடுகிறது. தண்ணி-பட்ட பாடாக நகைச்சுவை; மூச்சு விடுகிற மாதிரி அனாயாசமான பேச்சு— பிய்த்துவிட்டார் மனிதர்.

—ர

நீளம் இரண்டரை அடி! கையிலே எடுத்தா நெருப்பை எடுத்தாற்போல் ஜொலிக்கிறதாம். பத்துக் கோடி பெறும்னு டிரஸ்டி சொல்றார்.

—அடேப்பா!

—அதை இன்னிக்குச் சாயங்காலம் மட்டும் வெள்ளோட்டமா சுவாமிக்குப் போடறுங்க! அப்புறம் போடப் போறதில்லையாம்.

—ஏம்ப்பா?

—ரிஸ்க்னு சொல்றுங்க! எங்கேயாவது பாங்க் வால்ட்டிலே வச்சுடப் போறுங்களாம். இன்னிக்கு இந்த நகை போடற விஷயம் கூடச் சில பேருக்குத்தான் தெரியும். ரகசியமா வச்சிருக்காங்க. டிரஸ்டி என் சிநேகிதர். சொல்லிட்டார்.

லாலிக்கு ஆசை! பத்துக் கோடி பெறுமானமுள்ள நகையா? ஒரு வாட்டியாவது அதைக் கண்ணுலே பார்த்துடலாமே!

—என்ன சொல்றே லாலி?

—தங்கிப் பார்க்கலாம். ஆனா ஒரு ரிக்வெஸ்ட்.

—சொல்லு.

—இன்னி ராத்திரி நாம்ப வேறே இடத்திலே தங்கறோம்.

—ஏன்?

—இங்கே தங்கினா மனசைக் கண்ட்ரோல் பண்ண முடியாது. நேத்து ராத்திரி நடந்தது ஞாபகத்துக்கு வந்துடும்.

—ஓகே! கெஸ்ட் ஹவுஸ்லே தங்கலாம்.

தங்க முலாம் பூசிய வாகனம்.

—எச்சரிக்கை! என்று கோஷம்.

மூன்று குடை நிறுத்திய வாகனத்தில் மாலை வேளையில் யோக நாராயணனின் புறப்பாடு.

சுவாமி தங்கத்தால் புதைந்திருந்தார்.

நெற்றியில் நாமத்தில் பொன் துணுக்குகள். செவியில் இரு நீலம்கள். உடலில் மஞ்சள் உருக்குப் போல் சங்கிலி வடங்கள்.

இந்த அழகுகளை அழுக்கிக் கொண்டு, மகர கண்டிகை ஒரு நட்சத்திரத் தொகுப்புப் போல் கழுத்திலிருந்து இடுப்பு வரை பரவியிருந்தது. அது ஒரு ராஜ நகை! கண்களை இழுக்கும் காந்தி! ஊடே பச்சைகளின் குளிர்ச்சிகள். சுவாமியின் அலங்காரம் ஒரு வர்ண ரகளை!

நாதசுவரத்தின் மல்லாரி.

பாண்ட் முழக்கத்தின் தும்தும்கள்.

நெருக்கமான. ஜனத் திரளிடமிருந்து ஏகோபித்து எழும் அழுத்தமான முணுமுணோசை!

கோவில் முகப்பில் சுவாமி நின்று கொண்டிருக்க, இரு புற மேடுகளிலும் வழிந்தாற்போல் கூட்டம்!

யாளிப் படிக்கட்டின் துருத்திய விளிம்பில் லாலி நின்று கொண்டிருந்தாள். கீழே விச்வேச்வர் நின்றார். பத்தடி தூரத்தில் சுவாமியின் வாகனம் நின்றது. மிக அருகில் அந்த சௌகரிய இடம் கிடைத்ததால் சுவாமியின் தரிசனம் தெளிவாகக் கிடைத்தது.

லாலி பிரமிப்புடன் அந்த மீன் நெக்லஸைப் பார்த்தாள். அதைப் போட்டுக் கொண்டால் ராத்திரி விளக்கு வேண்டாம். சுய ஜொலிப்பு!

அவள் பார்வை உற்சாகத்துடன் திரிந்தது. சுவாமியைப் பார்த்தாள். கூட்டத்தைப் பார்த்தாள். மாலைப் பொழுதைப் பார்த்தாள். எல்லாம் சித்திரங்களாகத் தெரிய டிவெண்டியத் ஸெஞ்சரி ஃபாக்ஸாரின் பிரம்மாண்ட ஸெட் போல காட்சி!

பெண்கள் கூட்டத்தைப் பார்த்தபோது ஒரு திடீர் கவனம். பெண்களுக்கு அப்பால் சற்றுத் தள்ளி நிதானமில்லாத கண்களுடன் நிற்பது யார்? காரில் பார்த்த அந்தப் பெண் தானே?

முதல் மர்மம் மனத்தில் தோன்ற வாகனத்தின் பக்கம் பார்த்தாள்.

அவள் ரத்த ஓட்டம் குதித்தது.

பார்வை நின்றது.

கண்கள் இரண்டும் ஐஸ்களாக மாறின.

(தொடரும்)

**இந்தக் கதை வாசகர்களின் ஒத்துழைப்புடன் எழுதப்படுகிறது. சுவனமாகப் படித்துக்கொண்டு வாருங்கள். மூன்றுவது அத்தியாயத்தின் முடிவில் நீங்கள் ஒரு யோசனை சொல்ல வேண்டியிருக்கும்.**

**3** *Mind is a puzzle within a riddle within an enigma.*

*—Some 'x'*

ஒரு தினம் முன்னல்...

இரவு 10.55க்கு தாஸ் தயார் ஆனான்.

—ஷோ! ரெடியா? என்றான்.

ஷோ(பனி) பச்சை ஸாரியும், பச்சை சோளியும் அணிந்து, சில பகுதிகளைப் பச்சையாக விட்டிருந்தாள். ஓட்டல் பாரிஜாதா என்ற ப்ரூச் அவளது வலது கவர்வில் ஏறி அமர்ந்திருந்தது. ஓட்டலின் யூனிபாரம் அவள் மேனியில் சிக்கலாக ஒட்டியிருந்தது.

க்ளீனரின் வெள்ளை யூனி பாரத்தில் தாஸ் புகுந்திருந்தான். அவனிடம் ஜாடை காட்டிவிட்டு ஷோ வெளியேறினாள்.

ஊமையான வராந்தா! இரவு விளக்குகள் தூக்கத்தில் இருந்தன. 208'ல் சென்று பஸ்ஸரை அழுத்தினாள்.

—கமின்! என்று குரல் மெலிந்து கேட்டது.

கைப் பிடியை அமுக்கி உள்ளே வழுவினாள். மார்லோ அப்போதுதான் வந்திருந்தான். படகு போன்ற கோட்டை நாற்காலி முதுகில் விஸ்தரித்து, ஃபோம் மெத்தையில் தனது 130 பவுண்டையும், எட்டு மணி நேர ஆயாசத்தையும் இறக்கினான்.

உள்ளே வரும் அழகான வெயிட்டரைப் பார்த்து மார்லோவின் கண் ஒரு க்ளிக் அடித்தது.

ஷோ புன்னகையை விசிறியாக வீசித் தனது அந்தப்புரங்கள் தெரிய பாயை சுத்திகரிக்கத் தொடங்கினாள். காலியில் சாப்பிட்ட தட்டுகள் அங்கே வாடிக் கிடந்தன. உதவியை எதிர்பார்ப்பவள் போல் —லக்கப்பா! என்று தெலுங்கு நெடியில் கூப்பிட்டாள்.

—தா! என்று சொல்லிக் கொண்டே தாஸ் உள்ளே பீறினான். நேராக டீபாய்க்கும் கட்டிலுக்கும் இடையே தன் உடம்பை நட்டு வைத்தான். தோளில் ஒரு டர்க்கி டவல், கையிலும் ஒரு டவல்.

குனிந்து ஒரு தட்டை எடுத்தான்.

அதை வேண்டுமென்றே கீழே போட, மார்லோ அதைக் குனிந்து பார்க்க, தாஸின் வலது கை டவலில் மறைந்திருந்த இரும்புக் கழி வேகமாக அந்த வெள்ளைக்காரனின் தலையில் விழுந்தது.

முன் நெற்றிக்கு மேல் அது இடித்த வேகத்தில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் உலகை விட்டு ஓடி விட்டான். அவன் உடம்பு, ஒரு அவிழ்த்த சட்டை போல் உதிர்ந்தது.

—க்விக்! என்று தாஸ் துருசுபடுத்த, ஷோ மார்லோவைக் கட்டில் மெத்தையில் இழுத்து, அவனது பட்டன்களைச் சீக்கிரமாக அவிழ்த்துப் பனியனை மேலே தூக்கினாள்.

புஷ்டா தங்கதுரை

தாஸ் வலது பாக்கெட்டிலிருந்து நீளமான கண்ணுடி ஸிரிஞ்சை உருவி, மார்லோவின் நெஞ்சுக் குழிக்குக் கீழ் நிதானம் பார்த்து வெடுக்கென்று சொருகுஞ்சென். இரைப் பைக்குள் 50 ஸிஸி ஆல்கஹாலை வேகமாகச் செலுத்திஞ்சென். பிறகு ஊசியை வெளியே உருவி—ஓகே என்ருன்.

இருவரும் மார்லோவின் கனத்த உடலைத் தூக்கி பால்கனிக்குக் கொணர்ந்தார்கள். 'எப்' என்று ஒரு எம்பு எம்பி அதை வெளியே கடாசிஞ்சார்கள்.

—ஷோ! அது யாரு?

ஷோவும் பார்த்தாள். எதிர் பால்கனியில் நிழல். ஆள் தாஞ்ச?

—சந்தேகமாயிருக்கு!

—டார்ச் கொண்டா, ஷோ!

கொண்டு வர, ஒரு வட்ட வெய்யில் எதிரே பாய்ந்தது.

எதிர் பால்கனியில் அந்தப் பெண் அந்த வெளிச்ச வட்டத்தில் சிக்கி, முகத்தை கைகளால் மூடித் தடுமாறியபோது அறைக்குள் சாய்ந்தாள்.

தாஸும் ஷோவும், உள்ளே வந்து, பால்கனிக் கதவை மூடி, மார்லோவின் காகிதங்களைக் குடையத் தொடங்கினர்கள்.

**காலை 7 மணி.**

**இரவின் களைப்புகளை ஒதுக்கி விட்டு எழுந்து வெளியே வந்தபோது, காரியதரிசி கே.ஜி. பால் முகப்பு அறையில் கனமாக உட்கார்ந்திருந்தான்.**

தாஸைக் கண்டதும், பிரம்மாண்ட உடலோடு எழுந்து, —சீஃப்! எல்லாம் ஓவர்! என்ருன்.

—உடலை எங்கே போட்டே?

—நீங்க சொன்னீங்களே செம் பாறை பக்கத்திலே.

—குட்! யாராவது கவனிச்சாங்களா?

—நோ, சீஃப்! ஆஞ, ஹோட்டல் பின்ஞலேர்ந்து உடலை எடுக்கும்போது நேரே எதிர் பால்கனியிலே சத்தம் கேட்டுது.

—என்ன சத்தம் கவனிச்சியா?

—பேச்சு சத்தம்.

—அப்புறம்?

—அது நிக்கிற வரை காத்திருந்தோம். பிறகு பாடியை எடுத்து, வேலிக்கு அப்பாலே கொண்டு போய் கார் டிக்கியிலே போட்டு மூடி செம்பாறைப் பக்கம் கொண்டு போயிட்டோம். ஒரு சந்தேகம் சீஃப்.

—கேளு!

—நீங்க சொன்னபடி உடலைப் பாறையிலிருந்து கீழே பள்ளத்திலே தள்ளியாச்சு. இதை எப்படி எதேச்சையான விபத்துன்னு காட்டப் போறீங்க?

—மார்லோ வயத்திலே ஆல்கஹால் ஏத்தியிருக்கேன். போஸ்ட் மார்ட்டம் பண்ணிஞ்ச குடிச்சிருக்கான்னு நினைப்பாங்க. மார்லோ குடிச்சான். வாக் போஞன். இப்படி பள்ளத்திலே விழுந்தான். செத்துப் போயிட்டான். ஓகே?

—ஐடியா சீஃப்!

—இப்ப விஷயத்துக்கு வா! ராத்திரி மார்லோ அறையிலே இரண்டு கடிதத்தின் காப்பி கிடைச்சுது. ஸி.எஸ்.ஓ. சீஃபுக்கு எழுதியிருக்கான். கோவில்லே கிடைச்சிருக்கிறது. மீன் நெக்லஸ்! 16 ஆம் நூற்ருண்டு நகை! எட்டரைக் கோடி மதிப்பு!

பால் துள்ளினேன். அவனுக்குப் பெண் பிள்ளைத்தன மார்பு உண்டு. அதுவும் துள்ளியது. —சீஃப்! பெரிய அதிர்ஷ்டம். நகை கிடைச்சுதுன்ஞ பீஸ் பீஸா வெட்டி அமெரிக்காவிலே வித்துடலாம். நெக்லஸ் எங்கே இருக்கு?

—இன்னிக்கு சுவாமி கழுத்துக்குப் போகுது. நாளைக்கு நம்ப ஊர் எம்.என்.ஆர். ஜுவல்லரிக்குப் போகுது.

—எதுக்கு?

(தொடர்ச்சி 26'ம் பக்கம்)





(5'ம் பக்கத் தொடர்ச்சி)

—நெக்லஸ்லே Patina படிஞ்சிருக்கு. வைரத்திலே கறை ஏறியிருக்கு. எல்லாத்தையும் சரியாக் கணும். ''விஷயத்தை காதும் காதுமா முடியுங்க. இல்லாட்டி கடத்தல்காரங்க வந்துடுவாங்க''ன்னு மார்லோ அட்வைஸ் பண்ணியிருக்கான்.

—சரி, நாம்ப என்ன செய்யறேம்?

—இன்னிக்கு சாயங்காலம் சுவாமி புறப்பாடு நடக்கப் போகுது. பெரிய திட்டம் போட்டு நெக்லஸை அபகரிக்கிறோம். ஆபரேஷன் நாராயணன்னு பேரு. ராத்திரி ஷோ கழுத்திலே நெக்லஸ் தொங்கப் போகுது.

—போதும், வேண்டாம். ரொம்ப வெயிட்! என்றுள் ஷோ.

—இது ஒரு வெயிட்டா உனக்கு? என்று சொல்லி ஹேஹேஹே என்று விரசமாகச் சிரித்து, —பால்! ரெடியா இரு! ஆபரேஷன் நாராயணா! என்றான் தாஸ்.

—நாராயணா! என்றான் பால்.

லாலியின் கண்களில் குளிர் அடித்தது.

சுவாமி வாகனத்தின் பதினேந்தடி தூரத்தில் இருக்கும் அந்தப் பக்தன் யார்? ஏன் அவன் உருவம் அவளை இழுத்தது?

—அதே ப்ரொஃபைல்! மூக்கில் அந்த சின்னப்படி. பிரதான முகவாய். கீழே வளையும் கேரா...

நிச்சயம் அந்தக் கரும் பச்சை அம்பாஸிடரை ஓட்டி வந்தவன் தான். இங்கே நெற்றியில் குங்குமம் இட்டு, கழுத்தில் ஸ்படிக மாலை போட்டு, பக்திமானாக நிற்கிறானே!

பாண்டும், நாதசுவரமும் குழப்பமாகக் கலந்தன. கூடவே கூட்டத்தின் அடித் தொண்டை சளசளப்பு. எங்கும் தலை மயம். வாகனத்தைச் சுற்றி வட்டமாகவும் அங்கங்கே பொட்டுகளாகவும் சிவப்புத் தலைகள்.

குங்குமக்காரன் மெள்ள முண்டிக் கொண்டிருந்தான். அவனது நுட்ப இயக்கங்கள் அவளுக்குப் புரிந்தது. அவள் கண் அவனைப் பின்பற்றிச் சென்றது.

சில அடிகள் முண்டிய பிறகு, கர்ச்சீபை மேலே பிரதானமாகத் தூக்கி தலையைத் துடைத்தான் அவன். அவன் பார்வை விருட்டென்று 45 டிகிரி திரும்பி நேர் கோடாக விரைந்தது. அங்கே, அந்த அம்பாஸிடர் பெண் அதை வரவேற்றுக் கொண்டிருந்தாள். உடனே அவள் தன் கையால் தலையை வருடிப் பார்வையை இடது புறம் திருப்பினாள். இருநூறு அடியில் ஒரு மீசைக்காரன் அந்தப் பார்வையை ஏந்திக் கொண்டிருந்தான். அவனுக்கு வேறு ஒரு கோணத்தில் ஒரு கண்ணாடிக் காரன்!

ஆக ஒரு மர்மமான சைகையை நான்கு முனைகளில் நால்வர் நின்று பரிமாறிக் கொண்டிருக்க, அங்கே ஒரு கற்பனையான பாரலெல்லோகிராம் உற்பத்தியாகியிருந்தது. நான்கு பேரும் அதன் நான்கு முனைகள், என்ன செய்யப் போகிறார்கள்?

லாலியின் மனத்தில் ஒரு ராக்கெட் புறப்படத் தயாராக இருந்தது. அதன் பல்வேறு விசை முனைகள் ஒரு ஆயத்தப் பரபரப்பில் இருந்தன. கவுண்டவுன் நடக்கிறது.

சில விநாடிகள்.

குங்குமக்காரன் மேலும் முன்னேறி, கர்ச்சீப்பை மேலே தூக்க, அதன் பலன் அடுத்த முனையில் எழுந்தது.

—திருடன்! திருடன்! என்று

COMICS PDF TIMES

## காந்தி மண்டபம் இப்படி இருக்கலாமா?

பொங்கல் தினத்தன்று கிண்டி காந்தி மண்டபத்துக்குப் போயிருந்தேன். மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஏகப்பட்ட குப்பை. சுவர்களில் மூலைக்கு மூலை ஒட்டடை. படங்கள் அழுக்கு. மண்டபத்துக்கு அருகே ஒரு கழிவறை இருக்கிறது. உள்ளே கால் வைக்க முடியவில்லை. தமிழக அரசுடன் சக்தி அறக்கட்டளையும் சேர்ந்து இந்த மண்டபத்தை நிறுவியதாகக் கல்வெட்டில் காணப்படுகிறது. அவர்களாவது மண்டபத்தைச் சுத்தமாக வைக்க ஓர் ஏற்பாடு செய்யக் கூடாதா?

—கி. வெங்கடாசலம்

அந்த அம்பாசிடர் பெண் கத்தினாள். அவள் சங்கிலியை யாரோ பறித்து ஓடினார்கள்.

உடனே திருடன், திருடன்! என்று கூக்குரல்கள். ஆரவாரங்கள்! தலை முழுத்திரத்தில் ஓர் அலை பிரம்மாண்டமாக எழுந்தது.

இதற்குள் மீசைக்காரன் திடீர் ஆவேசமாகி ஆட ஆரம்பிக்க அங்கே ஒரு ரகளை.

அதே நேரம் கண்ணாடிக்கார்ன் பக்கம் படபட என்று வெடிகள் சிதறிட அங்கே ஒரு குழப்பம்.

ஆக நான்கு திசைகளில் திடீர்க் குமிழ்களாக ஜனப் புடைசல் தெறிக்க, சிவப்புத் தலைகள் அந்தந்தத் திசைகளை நோக்கி விரைந்தார்கள்.

வானத்தைச் சுற்றியிருந்த சிவப்பு வட்டம் சுரைந்தது.

இவ்வளவையும் கேந்திர நிலையில் இருந்த லாலி கவனித்தாள். நடக்கும் இந்த நிகழ்ச்சிகள் உண்மையா? நாடகமா?

குங்குமக்காரனை அவசரமாகப் பார்த்தாள்

பார்வை ஆட்டம் தவிர்த்து அப்படியே நிலைத்தது.

குங்குமக்காரன் நெருக்கி அடித்து வாகனத்தை நெருங்கிக் கொண்டிருந்தான்.

ஜனத் திரளின் கொந்தளிப்பை அனுகூலமாக்கிக் கொண்டு சுவாமியை ஒரே இலக்காக வைத்து முன்னேறிக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையும், வெறியும், அந்த மீன் நெக்லஸை நோக்கித்தான் அம்பாகச் சீறுகிறது என்பது லாலிக்குப் புரிந்தது.

லாலியின் கண்ட்ரோல் ரூம் விளக்குகள் பரபரத்தன. விசைகள் விர்ரென்று பல முனைகளில் சுழல,

அந்த ராக்கெட் பிரம்மாண்ட ஓசையுடன் அடித்தளத்தில் தியை உமிழ்ந்தது.

ஆ ஆ ஆ என்று ஒரு இரைச்சல் சிதறியது.

அமானுஷ்யம் மட்டுமல்ல! பைசாசக் குரல் அது.

அங்கு எழுந்த சந்தடி ஓசைகளை மீறி நூறு அடி சுற்றி வர ஓர் உலுக்கு உலுக்கியது குரல்.

அதற்குள் அவள் குரலுக்குப் பலன் ஏற்பட்டு எல்லோரும் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள். குங்குமக்காரன்

## நாங்கே கொஞ்சம் படிங்க பார்ப்போம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஒரு தமிழ் நூலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழ் எழுத்திலேயே எழுதினால் எப்படியிருக்கும்? இப்படித்தான் இருக்கும்:



எழுத்தின் காலம்: சங்க காலம் (கி.மு.250 கி.பி.250)
நூல்: திருக்குறள்.

விடை: 58'ம் பக்கம்

கூடத் தன் வசமிழந்து ஒரு கணம் திரும்பினான்.

லாலியால் பேச முடியவில்லை. பேச்சு வராமல் முக்கிக் கைகளால் வாகனத்தையும் குங்குமக்காரனையும் மாறி மாறிக் காண்பித்தாள்.

ஏற்கனவே கொந்தளிப்பு. வாகனத்தின் ஸ்திரத்திற்கும் பங்கம் வரும் என்பதை அதன் மேலே இருந்த குடைக்காரர் ஏற்கனவே உணர்ந்து விட்டார்.

லாலி வேறு பீதியோடு சைகை செய்யவே சுவாமிக்கு மேலே உள்ள குடையை மடக்கி, சுவாமியை ஓர் அம்பாரம் போல் மூடினார்.

அவர் மூடுவதற்கும், குங்குமக்காரன் கை சுவாமியின் மார்பை நோக்கிப் பாய்ந்து குடைத் துணியின் தடையால் ஏமாற்றமடைவதற்கும் சரியாக இருந்தது.

குங்குமக்காரன் கோபமாக லாலி பக்கம் திரும்பினான். லாலியும் நேராக அவன் கண்ணுக்குள் பார்க்க இருவர் பார்வைகளும் துவந்தம் செய்தன.

இதற்குள் நெருக்கடி ஏற்படும் என்று எதிர்பார்த்த டிரஸ்டி, சுவாமியைத் திருப்புங்க! கோயிலுக்குப் போங்க! என்று கட்டளை இட,

வாகனம் நெரிசலோடு திரும்பி, ஜனத் திரளை விண்டுகொண்டு கோவிலை நோக்கி ஓடியது.

அதன் பின்னால் ஓட நினைத்த குங்குமக்காரனை ஜன அலை ஒன்று மூழ்கடிக்க, அவன் தத்தளிக்கும் இடம் யாருக்கும் தெரியவில்லை.

அதன் பிறகு கொந்தளிக்கும் தலைகள்தான் எங்கும் தெரிந்தன.

அந்தி வெளிச்சம் அந்த நகரத்தை ஒரு திகிலோடு மூடியது.

எங்கும் ஜனங்களின் பரபரப்பான விவாதங்கள், விமர்சனங்கள்!

கெஸ்ட் ஹவுஸின் வசதியான நவீன அறையில் லாலி தன் கண்களைத் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

—ஏதோ ஒரு பெண் சங்கிலியை யாரோ திருடினான், உனக்கென்ன பரபரப்பு? நீ ஏன் கத்தினே? என்று கடுமையாகப் பேசினார் விச்வேச்வர்.

—நான் அதுக்குக் கத்தலை!

—பின்னே எதுக்குக் கத்தினே?

—ஒரு குங்குமப் பொட்டுக்காரன் சுவாமியைப் பார்த்து ஓடினானப்பா!

—எதுக்கு ஓடினான்?

—நெக்லஸைத் திருடத்தான்!

சிரித்தார் விச்வேச்வர். —என்ன இமாஜினேஷன் உனக்கு! அந்த நெக்லஸ் விஷயம் யாருக்கும் தெரியாது.

—ஏன் தெரியாது?

—நான்தான் சொன்னேனே! ரொம்ப குறிப்பிட்ட சிலருக்குத்தான் டிரஸ்டி விஷயத்தைச் சொல்லியிருக்கார். அதுக்குள்ளே யாராவது திட்டம் போட்டு திருட வருவாங்களா?

லாலி படபடத்து சோபா நுனிக்கு வந்தாள்.

—இல்லேப்பா! நான் என் கண்ணாலே நாலு பேரைப் பார்த்தேன். அவங்க ஒரு பாரலெலோக்ராமின் நாலு முனைகள்!

சங்கடத்துடன் விச்வேச்வர் அவளைப் பார்த்தார்.

—குங்குமக்காரன் ஒரு சிக்னல் கொடுத்தாம்பா! அந்தப் பெண் திருடன்னு கத்தினா. அங்கே ரகளை. அவளைப் பின்பற்றி மற்ற ரெண்டு பேர் என்னவோ திருசமன் பண்ணியிருக்காங்க! அங்கங்கே ரகளை! இதெல்லாம் போலீஸ் கவனத்தைத் திருப்பறதுக்காகத்தாம்பா!

விச்வேச்வர் பேசவில்லை. அவருக்குத் தெரியும் லாலியின் மனம் இன்னும் சீராகவில்லையென்று. அங்கங்கே பிசிறு விழுகிறது. அறையின் அகலங்களை உலாத்தினார். இறுக்கமாக மௌனம் சாதித்தார்.

லாலி அவரைக் கண்களால் பின்பற்றினாள். அவர் மௌனம் அவளைப் பாதித்தது. நெடு நேரத்திற்குப் பிறகு— அப்பா! என்று சொல்லி அவர் கவனத்தைக் கலைத்தாள். —நான் செஞ்சது தப்பிதம்னு சொல்லிவிடப்பா!

—தப்பிதந்தான்! என்று அழுத்தமாகச் சொல்லித் திரும்பினார் விச்வேச்வர். —நீ அதிகமா நினைக்கிறே! உனக்கு ஒரு பொருளோட *Form* தெரியமாட்டேங்குது! அந்தப் பொருள் எதை *Represent* பண்றது என்கிறதுதான் தெரியறது! தப்பு! எதேச்சையா நாலு மூலையிலே நாலு சம்பவம் நடந்திருக்கு! அந்த நாலையும் என் நீ ஒண்ணு முடிச்சுப் போடறே? ஏன் பரபரக்கிறே? ஒவ் வொண்ணையும் நிதானமாப் பாரு! நிதானமா நினை. மனசை ஒய்வெடுக்க விடு! எண்ணங்களைத் துரத்திக்கிட்டே ஓடாதே!

அரவல வளகைக அணைததுப படுத்த பிறகு அப்பாவின் புத்திமதிகள் அவளை வண்டுகள் போல் சுற்றின.

மெள்ள மெள்ள உறங்க ஆரம்பித்தாள். ஆனல் ஆழமான உறக்கம் வரவில்லை. மனசின் ஒரு பகுதி விளக்குப் போட்டுக் கொட்டக் கொட்ட உட்கார்ந்திருந்தது. உடம்பு ஒரு ஜாக்கிரதை நிலையில் தயாராக இருந்தது.

பதினெரு மணிக்கு மனசுக்குள் ஒரு கார் ஒரு வீசு வீசி வந்து நிற்க, நரம்புகள் எல்லாம் ஆர்ப்பரித்து அவளை உலுக்கி விட்டன.

திடுக்கிட்டு விழித்தாள்.

மனசில் ஒரு திகிலான ஆவல் அவளை உந்த, மெள்ள எழுந்து கண்ணடி சன்னல் பக்கம் வந்தாள்.

வெளியே பார்க்க, உலகம் அரை நிலா ஒளியில் சொப்பனக் காட்சியாகத் தெரிந்தது.

கீழே காம்பவுண்டை நோக்கி அவள் கவனம் இழுபட,

ஒரு மின் உணர்வு. நரம்புகளைக் கீறிக் கொண்டு தலைக்குள் ஓடியது.

காம்பவுண்ட அடுத்த சாலையில், கரும் பச்சை அம்பாசிடர் ஒரு மிருகம் போல் நின்றிருந்தது.

அதை விட்டு இரண்டு பேர் இறங்கி, காம்பவுண்டுக்குள் டார்ச் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது உள்நோக்கம் தெரிந்து விட்டது.

அபபாவன கார இங்க இருக்குமா என்று தேடுகிறார்கள்.

அடுத்த விநாடி அவள் கூவி யிருப்பாள்.

அதற்குள் டார்ச் ஒளி சுருங்கி நிரந்தரமாக அணைந்தது. நல்ல வேளை! பார்க்கிங் இடத்திற்கு அப்பால் ஒரு சாலை சுத்திகரிப்பை எதிர்பார்த்து, அவர்களது கார் தனியாக ஒரு குழாய்-ஓரம் நின்று கொண்டிருந்தது.

குழைவுகளைத் தாங்காமல் ஆ என்று ஒரு விம்மல் அவளைத் தாண்டி வெளி வர,

விச்வேச்வர் திடுக்கிட்டு எழுந்தார்.

—லாலி!

விளக்கைப் போடப் போக அவள் தடுத்தாள்.

—அப்பா! அந்தப் பச்சைக் கார்! அதோ, அதோ!

நடுக்கமுடன் கூற, கண்ணடி சன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

ரஸ்தா வெறிச்சென்று இருந்தது. எதுவும் அங்கே தெரியவில்லை.

—லாலி! நீ இங்கேயே இரு. நான் கீழே போய்ப் பார்த்து வருகிறேன் என்று புறப்பட்டார்.

—வேண்டாம்பா'. நீங்க போகாதீங்க. அபாயம். நான் பார்த்துட்டு வரேன் என்றுள் லாலி.

(தொடரும்)

உங்கள் யோசனை என்ன?

## இரண்டு பேரில் யார் கீழே இறங்கிச் சென்றார்கள்? லாலியா, விச்வேச்வரா?

உங்கள் யோசனையை ஒரு கார்டில் எழுதுங்கள். சனிக்கிழமை 31.1.81'க்குள் வருகிற கடிதங்களில், எது மெஜாரிட்டியோ அந்தக் கருத்தின்படி தொடர்கதையின் போக்கு திரும்பும்.

# இரகசியக் குறி

நவரத்தினங்கள் உற்பத்தியான விதம், கிடைத்த முறை, அவைகளின் இனம், ஒளி, நிழல் இவை கொண்டு அவற்றின் குணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

—ரத்தின தீபிகா.

•

இன்ஸ்பெக்டர் துரைபாபுவுக்கு எப்போதுமே அந்தக் காட்சியில் அருவருப்பு. எத்தனை சடலங்களைப் பார்த்திருக்கிறார்! அப்படியும் ஓர் உயிரற்ற உடலைப் பார்ப்பது என்றுல் இன்னமும் அதே ஆரம்ப அருவருப்புதான்.

செம்பாறைக்குக் கீழே முப்பதடி பள்ளத்தில் அந்தச் சடலம் கிடந்தது. கையையும் காலையும் 'ரிகர் மார்ட்டிஸ்' கவ்வியிருக்க, பிணம் ஆகாயத்தைப் பார்த்து வெறித்திருந்தது. வெள்ளைக்கார உடம்பு. அதற்குள் மக்கிக் கருமை படர்ந்துவிட்டது.

சப்—இன்ஸ்பெக்டர் ராமய்யா விவரம் சேகரித்துக் கொண்டிருந்தார். நாலு சிவப்புத் தலைகள் சுற்றிவர நின்றுர்கள். ஒரு ராஜாளி மேலே வட்டமிட்டது. செம்பாறைப் பக்கத்திலுள்ள ஸாண்ட ஸ்டோன் பில்லர்களைப் பார்க்க வந்த உல்லாசிகள் பலர் பாதுகாப்பான உயரத்திலிருந்து எட்டிப் பார்த்தார்கள்.

இன்ஸ்பெக்டர் துரைபாபு வந்ததும், எஸ். ஐ. ராமய்யா காலைத் தாவி வைத்து முன்னுல் வந்தார்.

## திரு

—விபத்து மாதிரி இருக்கு! என்றுர் ஒரு ஸல்யூட்டுடன்.

—எப்படிச் சொல்றீங்க? என்றுர் துரைபாபு.

—ரிஸ்ட் வாட்ச், பர்ஸ் எல்லாம் அப்படியே இருக்கு. பர்ஸ்லே ஐநூற்றிரண்டு ரூபாய் பணம் இருக்கு!

—ஆசாமி யாரு?

—மார்லோன்னு தெரிஞ்சுது! கோயில் விவகாரமா வந்திருக்காரும்.

—இங்கே எப்படி வந்தான்?

## திரிசை

—ஸாண்ட் ஸ்டோன் பில்லர்களைப் பார்க்க வந்திருக்கார்.

ஸாண்ட் ஸ்டோன் தூண்கள் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அற்புதங்களில் ஒன்று. காலம் காலமான் அரிப்பு, பாறையை அரித்து விதவிதமான தூண்களை உண்டாக்கியிருந்தன. இப்போது அவை டூரிஸ்ட் கவர்ச்சி.

—தவறி விழுந்திருப்பான்னு சொல்றீங்களா? என்றுர் துரைபாபு.

—என் ஊகம்.

—காயம் இருக்கா?

—இருக்கு!

—ர்த்தம் உறைஞ்சிருக்கா?

—இருக்கு! அதனுலேதான் விபத்துன்னு சொல்றேன்.

துரைபாபு அந்தத் தூண்களைப் பார்த்தார். முப்பதடி மேலே மேட்டுப் பிரதேசத்தில் இருந்தன.

தூண்களுக்கும் பள்ளத்தின் விளிம்புக்கும் ஐம்பதடி தூரமாவது இருக்கும்.

—ஆமாம், தூணைப் பார்க்க வந்தவன் இந்த விளிம்பு வரை வரவேண்டியதில்லையே. அங்கலாய்த்தார் துரைபாபு.

—அதுதான் எனக்கும் யோசனை. குடிச்சிருப்பானோ என்னவோ. துரைபாபுவின் யோசனை கழலவில்லை.

—சரி. பாடியை ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிச்சுருங்க. போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் சீக்கிரம் வந்தாத் தேவலைன்னு சொல்லுங்க.

—எஸ், ஸார்!

மாலயில் ஹோட்டல் பாரிஜாதாவின் முன்பக்க விஸ்தாரத்தில் இன்ஸ்பெக்டர் துரைபாபு நுழைந்து கொண்டிருந்தார்.

அவர் பின்னால் கோவில் டிரஸ்டி நரசிம்மலு பஞ்சகச்ச வெளுப்போடு பின்பற்றிக் கொண்டிருந்தார்.

சற்று அப்பால் நொய்ந்து போன உடுப்புகளில் கோவில் சிப்பந்திகள் இரண்டு பேர் நெருக்கி நடந்தார்கள்.

உள்ளே விரிவான லவுஞ்சில் உட்கார, ஒரு திணிக்கப்பட்ட மௌனம் விருட்டென்று அங்கே பாய்ந்தது.

இன்ஸ்பெக்டர் தொப்பியை அவிழ்த்து மேஜை மேல் வைத்து, இளம் தொந்தியைச் சிறிது தளர விட்டார். மிஸ் ப்ரீதா என்பது யார்? என்றார்.

அடுக்கினாற்போல் சோபாவில் இருந்த மூவரில் ஒருத்தி கழன்று வந்தாள்.

இருபத்திரண்டு வயது இருக்கும். நீல ஸாரியில் பொதிந்திருந்தாள்.

மார்பில் ப்ரூச் குத்தி, உதட்டில் ஒரு புன்னகையைச் சிறிது செயற்கையாக வழுவ விட்டாள். உதட்டில் பொடியாக ரோஸ் மீசை.

—நீங்க என்ன வேலை பார்க்கறீங்க?

—இங்கே ரூம் ஸர்வீஸ் கவனிக்கிறேன்.

—வெள்ளிக்கிழமை ட்யூட்டியிலே இருந்தீங்களா?

—ஆமா.

—நைட் டியூட்டியா?

—ஆமா.

—மார்லோ எத்தனை மணிக்கு வெளியே போனார்?

—தெரியாது. நான் நாலு மணிக்குத்தான் வந்தேன்.

—ராத்திரி திரும்பி வந்தாரா?

—நான் பார்க்கலை, சார்.

—நீங்க ரெண்டாவது மாடி வராந்தாவிலேதானே இருப்பீங்க?

—ஆமாங்க. ஆனா யாராவது ஆர்டர் கொடுத்தா கீழே இறங்கிடுவேன்.

—ஓகோ, ஸர்வீஸ் பண்ணப் போயிருந்தா யாராவது வர்றது போறது உங்க கவனத்துக்கு வராமல் போயிடும். அப்படித்தானே?

—எஸ் ஸார்.

—அன்னிக்கு ஏதாவது சந்தேகப் படும்படியா நடந்துதா?

—இல்லை ஸார்.

—ரூம்லே தங்கி இருந்தப்போ மார்லோ குடித்தாரா?

—தெரியாது, ஸார்.

—ஸோடா கீடா கேட்டாரா?

—நான் இருக்கும்போது கேட்கலை, ஸார்.

—அவர் ரூமுக்கு யாராவது வந்தாங்களா?

—யாரும் வரல்லே.

—சரி, நீங்க போகலாம்.

அடுத்து மற்ற ட்யூட்டி காரர்களையும் க்ளீனர் பையன்களையும் விளவினார். யாரிடமிருந்தும் ருசியான விஷயம் வெளிவரவில்லை.

துரைபாபு எழுந்தார். டிரஸ்டி நரசிம்மலுவுடன் இப்போது ஹோட்டல் மானேஜர் பத்மாகர ராவும் சேர்ந்து கொண்டார்.

எல்லோரும் இரண்டாவது மாடிக்குப் போனார்கள்.

மார்லோ தங்கியிருந்த அறையைத் திறந்து உள்ளே போனார்கள்.

இன்ஸ்பெக்டர் அங்குள்ள இரு பெட்டிகளையும், அலமாரியையும் கை படாமல் பார்த்தார். தரையில் கூர்ந்து கவனித்தார். பாத்ரூமுக்குள் போய்

நமக்குத் தெரியவில்லையே தவிர, ஒரு தொடர்பு இருக்கத்தான் இருக்கிறது இந்தக் கண்ணுக்கும் அந்தக் கண்ணுக்கும் நடுவே.

'சட்டம் ஒரு இருட்டறை'யில் பூர்ணிமா—விஜயகாந்த்.

---

வந்தார். பால்கனியை ஆராய்ந்தார். கடைசியில் உள்ளே மீண்டும் வந்தார்.

—பணம், நிணம் அப்படியே தானே இருந்தது?

—டிராயரைப் பாருங்க. திறந்தாப்போல இருக்கு. உள்ளே ரெண்டாயிரம் சில்லறை அப்படியே இருக்கு. பெட்டிக்குள்ளே பிரிட்டிஷ் கரன்ஸி அப்படியே இருக்கு, என்றூர் ராவ்.

—கவனிச்சேன், என்றூர் இன்ஸ்பெக்டர்.

கடைசியாக அறையை ஒரு நோட்டம் விட்டு—மிஸ்டர் ராவ் என்றூர்.

—எஸ், என்றூர் ராவ்.

—உள்ளே திறந்து பார்த்தீங்களே, யாராவது எதையாவது தொட்டீங்களா?

—தொட்டிருப்போம் ஸார். யோசிக்கலே. ரூமைக் க்ளீன் பண்ண வேண்டி வந்தது. டூப்ளிகேட் சாவியைப் போட்டுத் திறந்தோம். சாயங்காலம் நியூஸ் வந்தது, ஆள் செத்துக் கிடக்கார்ன்னு.

—தொடாம இருந்தா நல்லா இருந்திருக்கும்! என்றூர் துரைபாபு. பிறகு திரும்பி—இது கொலைன்னு சந்தேகிக்கிறீங்களா? என்றூர் கூர்மையாக.

—இல்லே ஸார்! எதுவும் திருடு போகவில்லே. மார்லோவுக்கு விரோதி யாரும் கிடையாது. அவன் அந்த பாறைத் தூண்களைப் பார்க்கப் போயிருக்கான். இடறிக் கீழே விழுந்திருக்கான்.

எல்லோரும் கீழே வந்தார்கள்.

லவுஞ்சில் மீண்டும் உட்கார்ந்ததும், —மிஸ்டர், நரசிம்மலு! மரணத்துக்குக் காரணம் கண்டு பிடிக்க வேண்டியது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த மார்லோ எதுக்கு வந்தான்? அதைச் சொல்லுங்க! என்றூர் இன்ஸ்பெக்டர்.

நரசிம்மலு பஞ்சகச்சத்தை இழுத்துவிட்டார். —அவரை நாங்கதான் வரவழைச்சோம்.

—எதுக்கு?





—நம்ம கோவில்லே ஒரு பழங்கால நகை கிடைச்சுது.

—அந்த மகர கண்டிகையா?

—ஆமாம், உங்ககிட்டே கூட பந்தோபஸ்து கேட்டு வாங்கினேமே.

—ஓ. கே. சொல்லுங்க!

—அந்த மகர கண்டிகையிலே நவரத்தினம் பதிஞ்சிருக்கு. நகை முழுவதும் அபரஞ்சிப் பொன். பழங்கால நகை என்கிறதாலே இதுக்கு ஆன்டிக் மதிப்பு வேறே வந்துடுது. இதன் மதிப்பை நிர்ணயிக்கணும்னு அரசாங்கத்துக்கு எழுதினேம்.

—யாராவது வந்து பார்த்தாங்களா?

—இல்லே. கோடிக்கு மேலே மதிப்புப் போறதனாலே மேனேட்டு எக்ஸ்பர்ட் யாரையாவது கலந்துகிடச் சொன்னாங்க.

—நீங்க என்ன பண்ணினீங்க?

—எங்களுக்குத் தெரிஞ்சவங்க லண்டன் ஸி. எஸ். ஓ. தான். வைர வியாபாரம் பெரும்பாலும் அவங்க மூலந்தான் நடக்குது.

—சரி.

—எழுதினேம். ஜூவெல்லரி எக்ஸ்பர்ட்டை அனுப்பணும்னு மார்லோவை அனுப்பிச்சாங்க.

—அவர் வந்து எத்தனே நாளாச்சு?

—மூணு நாளாச்சு. கோயில் பொக்கிஷ அறையிலே உட்கார்ந்து மதிப்புப் போட்டார்.

—பக்கத்திலே யார் யார் இருந்தார்கள்?

—நான், கமிட்டி மெம்பருங்க நாலுபேர். ஹெச். ஆர். ஈ. போர்ட் ஆபீசர் ஒருத்தர் ஆக ஆறு. பேர்தான் இருந்தோம்.

—நகையை மார்லர் எதுக்காவது வெளியிலே கொண்டு போனாரா?

—இல்லவே இல்லே.

—சரி, மார்லோ என்ன மதிப்புப் போட்டார்?

—பழங்கால நகை என்கிறதாலே இதுக்கு விலை மதிப்பே போட முடியாதுன்னுர்.ர் இருந்தாலும் நகையிலே இருக்கிற கல்லு, தங்கம் இதை வச்சு எட்டரைக் கோடின்னு மதிப்புப் போட்டிருக்கார். ஐரோப்பிய

மார்க்கெட்டிலே ஏலம் விட்டால் பதினைந்துலேர்ந்து இருபது கோடி வரை போகும்னுர். அவ்வளவு ஆன்டிக் மதிப்பு இதுக்கு இருக்குன்னுர்.

—அடேயப்பா! அப்படிப்பட்ட நகை கோவில்லே இருந்தா ஆபத்தாச்சே!

—அதுதான் அவரும் சொன்னுர். ரிப்பேர் பண்ணிட்டு பாங்க்கிலேயோ இல்லாட்டி மியூசியத்திலேயோ வையுங்க, கோவில்லே பாதுகாக்க முடியாதுன்னுர்.

துரைபாபு இப்போது யோசித்தார்.

—அப்போ மார்லோ நெக்லஸை மதிப்பிடறதுக்காக வந்தார். மதிப்பிட்டார். இனிமே ஊருக்குப் போக வேண்டியதுதான்! அவ்வளவுதானே! என்றுர்.

—இன்னிக்குப் புறப்பட்டிருக்க வேண்டியது, சார்! என்றுர் நரசிம்மலு. தொடர்ந்து, —யாரும் அவருக்கு விரோதம் இல்லே. அவரைக் கொலே செய்யறத்துக்கு யாருக்கும் என்ன காரணமும் கிடையாது. விபத்தாத்தான் இருக்கணும் என்றுர்.

துரைபாபு கையைச் சுரண்டினுர்.

—சரி! போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வரட்டும், பார்ப்போம்.

—சீக்கிரம் உங்க கிட்டேர்ந்து ஸர்டிபிகேட் கிடைச்சால் தேவலே. லண்டன்லேர்ந்து கேபிள் மேலே கேபிளா வருது. மார்லோ இறந்த விதம் நிச்சயமாயிடுத்தான்னு கேட்கிறுங்க.

—ரிப்போர்ட் வரட்டும். நான் சீக்கிரம் க்ளியர் பண்ணிடறேன்.

அந்திக்குப் பிறகு களைப்போடு நிலையம் திரும்பியபோது எஸ். ஐ. ராமய்யா காத்திருந்தார்.

—ஸாரி மிஸ்டர் ராமய்யா. என்னுச்சு? என்று சொல்லியவாறு நாற்காலியில் துரைபாபு அமர்ந்தார்.

—பாடி ஆஸ்பத்திரிக்குப் போயிருச்சு சார்.

—ஓகே! அப்புறம்...

—நேத்து ஊர்வல கலாட்டாவை விசாரிக்கச் சொல்லியிருந்தீங்க.

—மறந்துட்டேனே, என்னுச்சு?

—ஜனங்களுக்கு லீண்ட பீதி, சார்! ஒரு பெண்ணோட சங்கிலியை ஒருத்தன் அறுத்திருக்கான். அவ கத்தியிருக்கா. அங்கே ஒரு கலாட்டா. இன்னெருரு இடத்திலே ஒருத்தன் குடிச்சிட்டு வந்து தாறுமாறுய்ப் பேசி இருக்கான். மூணுவது இடத்திலே யாரோ ஒருத்தன் செயின் பறிச்சிருக்கான். இந்த மூணும் சேர்ந்தவுடனே ஜனங்களுக்கு என்னவோ ஏதோன்னு பீதியாகிப் போச்சு. ஆளுக்கு ஒரு காரணம் சொல்லி ஓட ஆரம்பிச்சுட்டாங்க.

—சரி! யாரோ வாகனத்தின் பக்கம் போனுன்னு சொன்னுங்களே?

—அது சும்மா கற்பனை. வாகனத்து மேலே ஒருத்தன் குடை பிடிச்சுட்டு இருந்திருக்கான். யாரையோ பார்த்துப் பயந்து போய், சுவாமியோட நகையைத் திருட வரான்னு நினைச்சுட்டான். விசாரிச்சுட்டேன். அந்த ஆள் ஒரு செமி.

—அர்ச்சகரைக் கேட்டீங்களா?

—கேட்டேன். வாகனம் தூக்கறவங்களையும் கேட்டேன். யாரையும் பார்க்கலே, யாரும் பக்கத்திலே வர்லேன்னு சொல்லிட்டாங்க.

—கவலே விட்டது போ. அப்புறம் நெக்லஸை எப்போ ரிப்பேருக்கு அனுப்பப் போறுங்க?

—நாளே காலேலே தெரியும். ஏர்போர்ட் வரைக்கும் பலத்த பந்தோபஸ்து கொடுக்கிறேரும்.

—ஏர்லே தான் போறதா?

—கோயில் அதிகாரிங்க அப்படித்தான் தீர்மானிச்சிருக்காங்க.

—ஓகே. நல்லதாப் போச்சு. இந்த நெக்லஸ் கோயிலே விட்டுப் போனு நமக்கும் நிம்மதிதான்...

—சார்...! என்று ஆச்சரியத்தோடு எஸ். ஐ. ராமய்யா நிமிர்ந்தார். —நானும் அப்படித்தான் நினைச்சேன், சார்! ஆனு வேறே காரணத்துக்காக.

—என்ன காரணம்?

—அந்த நெக்லஸ்லிலே ஏதோ தோஷம் இருக்கணும் சார். இல்லாட்டி மார்லோ செத்திருக்க மாட்டான். உள்வலத்திலே கலாட்டா நடந்திருக்காது. ஒண்ணு சொல்றேன் சார்! கிடைச்ச நகையை புரோட்சணம் பண்ணி சுத்தி பண்ணித்தானே வெளியிலே எடுக்கணும். அப்படிச் செய்யாமல் சுவாமிக்குப் போடலாமா? பழங்கால நகை ஒவ்வொன்றுக்கும் ஆவி உண்டு சார்...

ராமய்யா உணர்ச்சியோடு கூறுவதைத் துரைபாபு ஆச்சரியத்துடன் கேட்டார்.

(தொடரும்)

# கீழே

கீழே ஒரு பச்சைக் கார்
இருப்பது தெரிந்ததும்
மாடியிலிருந்து யார் இறங்கிச்
சென்றார்கள்? லாலியா,
விச்வேச்வரா?

வாசகர்களின் யோசனையைக்
கேட்டிருந்தோம்.

லாலி என்று 376 பேரும்
விச்வேச்வர் என்று 333 பேரும்
எழுதியிருக்கிறார்கள்.
பெரும்பான்மையோரின்
விருப்பப்படி லாலி கீழே
இறங்கிச் செல்வதாகக் கதை
இப்போது திரும்புகிறது.

தொடர்ந்து படியுங்கள்.
11'வது அத்தியாயத்தின்
முடிவில் நீங்கள் மறுபடியும்
ஒரு யோசனை சொல்ல
வேண்டியிருக்கும்.

COMICS PDF TIMES

## 5

*Almost everybody is a maniac.*
*Nobody is normal*
*—Sri Ramakrishna Paramahamsa*

நான் கீழே போறேன்! என்று லாலி சொன்னதும் விச்வேச்வர் ஆச்சரியம் ஆனார்.

—அவ்வளவு தைரியமா? என்றார்.

—ஓ! இப்போ நான் நல்லாயிட்டிருக்கேன், அப்பா! மனசு திடம் ஆவுது! என்றாள் லாலி.

விச்வேச்வருக்கு மகிழ்ச்சி. போகட்டும். கீழே போய் இவள் பார்க்கட்டும். அங்கே எதுவும் இல்லை என்று தெரியட்டும். இப்படி ஐந்தாறு அனுபவங்கள் ஏற்பட்டால்தான் இவளுக்கும் பிரமை தெளியும். மனம் சீர்திருத்தம் ஆகும்.

அவள் இறங்கிப் போவதைப் புன்னகையோடு கவனித்தார். கீழே கவுண்ட்டரில் விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. இரவு—பகல் கவுண்ட்டர் அது. நிச்சயம் யாராவது இருப்பார்கள். லாலிக்குத் தீங்கு ஏதும் நேராது.

லாலி கீழே இறங்கினாள்.

ரிஸப்ஷன் கவுண்ட்டரில் இரவு டியூட்டிக்காரர்கள் விதவித நிலைகளில் உறங்கினார்கள். வெளிச்சம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

பூனை அடி வைத்து வ்ாயிலுக்கு வந்தாள். கதவைத் திறந்து முகப்பு நடை பாதையில் இறங்கினுள்.

எங்கும் நிசப்தம். நிலவொளி பலவீனமாகி இருந்தது. மெள்ள நடந்து கேட்டுக்கு வந்தாள்.

அத்தியும் விலக்கி வெளி வந்தவுடன், அந்த அஸ்ஃபால்ட் சாலை இருபக்கமும் வெறிச்சென்று ஓடியது. மரங்கள் கனவுகளாக ... நின்றன. மெல்லிதாக ஒரு குளிர் காற்றில் அலைந்தது.

மேற்கேதானே அந்தக் கார் போயிற்று? எங்கே போயிருக்கும்?

கவலையில்லாமல் மேற்கு நோக்கி நடந்தாள். காம்பவுண்டின் நீளத்தில் நடந்ததும் விருட்டென்று ஒரு கிளைச் சாலை அங்கே வந்து சேர்ந்தது. திரும்பிப் பார்த்தாள். காம்பவுண்ட் இங்கேதான் திரும்பி அந்தக் கிளைச் சாலையோடு சென்றது.

வெகுதூரம் வரை அதன் கரும் மினு மினுப்புத் தெரிய—

அதோ அந்த மர நிழலில் இருக்கும் குட்டி நிழல் எதுவாக இருக்கும்?

சிறிது யோசிப்பில் அதுவும் புலனுகியது. நிச்சயம் அது அந்தப் பச்சைக் கார்தான்! அதன் நீள அகலங்களிலிருந்தே தெரிந்தது.

இங்கே ஏன் நிற்கிறது?

அவள் அதையே பார்த்து நிற்க, அருகே உள்ள புதர்களிலிருந்து இரண்டு நிழல்கள் ஊடுருவி வெளியே வந்தன.

லாலி உடனே பக்கத்து மரம் ஒன்றின் அடிவாரத்தில் மறைந்தாள்.

அவள் கீழே அமுங்கவும், கார் தன் கண்களை விழித்துப் புறப்படவும் சரியாக இருந்தது.

நேராக அவள் இருக்கும் திசையில் வந்து, வேகத்தில் அவளைக் கடந்து மேற்குத் திசையில் திரும்பி விர்ரென்ற மழுங்கிய இரைச்சலுடன் மறைந்தது.

பெட்ரோல் நெடி மட்டும் அவள் மூக்கில் வெகு நேரம் இருந்தது.

லாலி மெள்ள எழுந்து வந்து, கிளைச் சாலையை விட்டுப் பிரதான சாலைக்கு வந்தாள். மீண்டும் அந்த நிர்மானுஷ்யம். உலகம் வெறும் ஜடமாக இறந்து கிடந்தது.

இப்போது அவளிடம் படபடப்புத் தோன்றியிருந்தது.

அந்தக் காரைப் பார்த்ததும் மனம் ஏன் கொந்தளிக்கிறது? இது தேவையற்றதுதானே?

லவுஞ்ச் ஏறி உள்ளே போகும் போது வியர்த்து விட்டது. மாடிப்படிகளில் ஏறினுள். நிசப்தத்திற்கு எவ்வளவு சக்தி! இப்போது திடீரென்று அவளைப் பயமுறுத்துகிறதே!

அறையை அடைந்தபோது வியர்வை ஆறுகளாக ஓடியது. கதவு திறந்திருந்தது.—அப்பா! என்றுள். உள்ளே நுழைந்தாள்.

அறைக்குள் அடையான இருட்டு. எதுவும் முதலில் தெரியவில்லை.—அப்பா! என்றுள்.

மீண்டும் பதில் இல்லை.

அவர் கட்டில் இருந்த இலக்கு அவளுக்குத் தெரியும். நேராக அங்கே சென்று உட்கார்ந்தாள்.—அப்பா! என்றுள்.

பதில் இல்லை.

அப்பா எங்கே?

கட்டில் முழுதையும் கையால் துழாவினுள். பசபசப்பாக ஏதோ ஒட்டியது. அப்பாவைக் காணவில்லை.

—அப்பா!

கட்டிலின் மறுமூலைக்குக் கை சென்றதும் ஒரு கால் தென்பட்டது! பாதமும் விரல்களும்! மீதி உடம்பு எங்கே?

மனத்தில் ஒரு சுருதி திடீரென்று கிளம்பியது. ஒரு கணம் விலவிலத்தாள். விருட்டென்று எழுந்து, ஸ்விட்ச் போர்ட் பக்கம் ஓடி படபடவென்று பியானோ கீக்களைத் தட்டி விட்டாள்.

அறை பூராவும் வெவ்வேறு வெளிச்சங்கள் கண்களைத் திறந்தன.

ஒரு ஜொலிப்பான பகல் அங்கே பரிணமித்தது.

அவள் கண் அந்தக் கட்டிலில் பாய, அதென்ன? வெறும் காலா?

ஒற்றைக்கால் மட்டும் கட்டில் மீது நீண்டு துருத்திக் கொண்டு இருக்க, அப்பாவின் உடம்பு கீழே விழுந்து கிடந்தது.

அவரைச் சுற்றிலும் ரத்தக் குளங்கள். ஒரு குளத்திலிருந்து ரத்தம் திவிலையாகப் புறப்பட்டு, ஜந்து போல் அவளை நோக்கி ஊர்ந்து வந்தது. புது ரத்தம். இப்போதுதான் உடலுக்குள்ளிருந்து விடுதலையான புத்தம் புது ரத்தம்.

முதலில் அவள் வாய் பயங்கரமாகத் திறந்தது. நரம்புகள் மூலம் சுறுசுறு என்று ஓர் ஆத்திர வேகம் தலைக்கு ஓட!

—அப்பா! என்று அலறினாள்.

காற்றைக் கிழித்துத் தாறுமாறுக்கி, அறையை ஒரு முறை குலுக்கிப் போட்டது அந்த வீறல்.

அவள் முன்னால் மின்னல்கள் சாட்டையிட, நிற்க முடியாமல் கீழே உதிர்ந்தாள் அவள்.

* 'ஸ்வீட் ஹோம்' என்ற கிளினிக்கின் மாடி அது. Institute of Mental Health என்று அந்தக் கட்டிடத்தின் நெற்றியில் வெள்ளை எழுத்துக்கள் ஒட்டியிருந்தன.

மாடியில் அறை 81'ல் லாலி படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் அத்தை மீனாடம்பாளுடன் நின்று கொண்டிருந்தாள்.

கடந்த இரண்டு வாரங்களாக இந்த ஹோமில்தான் லாலி தங்கி வருகிறாள். இன்னும் அவள் மனம் முழுசுமாகத் தேறவில்லை. நனவும் கனவும் விசித்திர விகிதாசாரத்தில் அடிக்கடி கலந்த வண்ணம் இருந்தன.

—சாப்பிடம்மா லாலி! என்று அத்தை லாலியை உலுப்பினாள்.

லாலி வெடுக்கென்று விழித்து,—வேண்டாம்னு சொன்னேனில்லே? என்று கூறி, உடனே முகத்தைப் போர்வைக்குள் மூடினாள்.

அத்தை விடவில்லை. மெள்ள அருகில் அமர்ந்து அவளைத் தாஜா செய்து எழுப்பினாள்.

—என்ன வேணும் உனக்கு? என்று வெறுப்புடன் எழுந்தாள் அவள்.

—இதைச் சாப்பிட்டுரு!

—என்னது அது?

—டானிக்!

—டானிக்கா? அந்தக் கண்ராவி மருந்தா?

கடந்த இரண்டு வாரங்களாக அவளுக்குக் கடுமையான அனுபவங்கள். மாற்றி மாற்றி மருந்துகள் கொடுத்து அவளைத் திணற அடித்துக் கொண்டிருந்தார்கள். என்ன மாதிரி மருந்துகள் அவை! நேராகத் தலைக்குள் போவது போல் உணர்ச்சி. அங்கே மூளையை அவை வெகுவாகக் கலக்க, அவளால் சரியாக நினைக்க முடியவில்லை. தலைக்குள் நிரந்தரமான வலி. விழித்திருக்கும்போதே தூங்குவது போல் இருக்கிறது. ஒரு நிமிடம் சேர்ந்தாற் போல நினைக்க முடியவில்லை. அதற்குள் மூளை தளர்ச்சி அடைந்தது. இவர்கள் என்ன செய்கிறார்கள்? என்னை மருந்துகளால் மூழ்கடித்து என் பர்ஸனலிடியையே மாற்ற விரும்புகிறார்களா?

—மருந்து இல்லை, லாலி! டானிக்தான்!

லாலி நம்பிக்கையில்லாமல் அவளைப் பார்த்தாள். —எனக்கு எதுவும் வேண்டாம்! நீ போகலாம் என்றாள்.

—இல்லை லாலி! நான் சொல்றதைக் கேளு! இதைச் சாப்பிடு. உடம்பு குணம் ஆகணும்!

கோபம் லாலிக்குப் பொத்து வந்தது.

—ஐ ஆம் ஆல்ரைட்! என்று ஒரு சத்தம் போட்டாள். அவள் உடம்பு வெவெடத்தது. —ஆயிரம் தடவை சொல்லிட்டேன். நான் சரியாகத்தான் இருக்கேன். நீங்க என்னை நோயாளின்னு



இரண்டு படங்களுக்கும் குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றன. விடை 21'ம் பக்கம்

நினைக்கிறீங்க! நான் நோயாளி இல்லை, இல்லவே இல்லை! நான் நோயாளி இல்லை! இல்லவே இல்லை!

ஒரு தலையணையை மடியில் போட்டுப் படபடவென்று அதைக் குத்தினாள் அவள்.

அத்தை விலவிலத்தாள். அவள் கையில் டம்ளர் தாளம் இட்டது. —இல்லை லாலி! நீ பலவீனமா இருக்கே! இது வெறும் டானிக்தான்! என் கண்ணேல்லியோ! சாப்பிடு, என்று குழைந்து அவள் கையைப் பிடித்து விட்டாள்.

லாலியின் கண்ணில் இரண்டு பல்புகள் எரிந்தன. அத்தை கையிலிருந்து டம்ளரைப் பிடுங்கினாள். ஒரு பெரிய முயற்சியில் உடம்பை வளைத்து அதை எறிய, அது சுவரில் மோதி சுக்குகளாகச் சிதறியது. ஒரு கடைசித் துண்டு அத்தையின் காலடியில் கோபமாக வந்து மோதியது.

அத்தை எழுந்திருப்பதற்குள் லாலி அவள் கைகளைப் பிடித்தாள். சொல்லு, அத்தை! அப்பா எங்கே? எங்கே அப்பா? செத்துப் போயிட்டார்தானே? என்று இரைந்தாள்.

அத்தையின் வயிறு பகீர் என்றது. இந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு மனநோய் இருக்கிறதே என்று நினைத்தாள். இந்த வெறியில் என்ன வேண்டுமானாலும் செய்துவிடுவாள்.

—விடு, லாலி! விடு! உங்கப்பா பம்பாய்க்குப் போயிருக்கார்.

—பொய்யா சொல்றே! என்று லாலி அவள் கைகளைப் பிடித்து அமுக்க, அத்தை ஆ... ஆ... ஆ...! என்று வலியின் க்ளைமாக்ஸ்களில் நீந்தினாள். — லாலி! நான் சொல்வது நிஜம், லாலி! பம்பாய்தான் போயிருக்கார். சீக்கிரம் வந்துடுவார்! என்று முகத்தைக் கோணிக் கத்தியவாறு, தன் கையை விடுவிக்கத் தீவிர பிரயத்தனங்களைச் செய்தாள்.

—போ! என்று வெறுப்புடன் லாலி கைகளை உதற, அத்தை தப்பித்தோம் பிழைத்தோம் என்று தத்திப் பித்தி வெளியேறினாள்.

அறைக்கு வெளியே கவலையான எதிர்பார்ப்புகளுடன் டாக்டர்கள். பெஞ்சமினும் குணசேகரனும் காத்திருந்தார்கள்.

அத்தை அவர்களையும் மீறிப்போய் மாடிப் படி போன பிறகுதான் அவர்களைத் திரும்பிப் பார்த்தாள்.

டாக்டர்கள் அவளை நோக்கி விரைய, அத்தை அவர்களுடன் மாடிப்படி இறங்கிக் கொண்டே, —ஸாரி! டாக்டர்! இப்படி ரொம்ப நாள் போக முடியாது. நீங்க நிச்சயம் ஏதாவது செய்யணும், என்று கூவினாள்.

டாக்டர்கள் பெஞ்சமினும் குணசேகரனும் விக்கித்துச் சிறிது நேரம் நிற்க,

—ஓகோ! டாக்டரா! என்று ஒரு குரல் ஏளனமாகக் கேட்டது.

லாலி அறையின் முகப்பில் நின்றாள்.

அரை நொடியில் டாக்டர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

அவளைப் பிடித்து இஞ்செக்ஷன் கொடுத்து உடனே படுக்கைக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தார்கள்.

இருவரும் ஒரு ஜாடையில் அதைத் தங்களுக்குள் உணர்த்தி, லாலியைப் பிடிக்கப் போக,

அவள் முதல் தாவலில் வழுவினாள்.

அவள் எதிர்பாராமல் துள்ளிக் குதித்து மாடியின் பல படிகளைத்தாண்டிக் கீழே சாடினாள்.

டாக்டர்கள் அவசரமாக அவளைப் பின்பற்ற லாலி அதற்குள் படிகளைக் கடந்து கீழே இறங்கித் தோட்டத்தில் விரைவாக ஓடினாள்.

கண் மூக்குத் தெரியாத வேகத்தில் எதிரே வரும் ஆள் மீது மோதிக் கீழே உருள, மீண்டும் எழுந்து தன்னை உதறிக் கொண்டு அந்த ஆளைப் பார்த்தாள் லாலி! அவள் கண்கள் மிரண்டன.

(தொடரும்)

COMICS PDF TIMES
HSC

*Thought is breeding fear, pain and pleasure. That is the truth.*

*–J. Krishnamurthi*

## 5

லாலி மோதி விழுந்ததும் அந்த ஆசாமியைப் பார்த்தாள். அவளுக்கு அதிர்ச்சி உண்டாகியது.

ஏற்கனவே இருமுறை திருக்கோணத்தில் அவனைப் பார்த்திருக்கிறாள். அந்தக் கரும் பச்சைக் காரை ஓட்டியவன் அவன். நெற்றியில் குங்குமம் இட்டு, சுவாமி வாகனத்தை நோக்கி நெருங்கியவன்! சொல்லப் போனால் அவளது தற்போதைய துர்ப்பாக்கியத்திற்குப் பெரிதும் காரணம் ஆனவன்.

ஒரு சடக் அதிர்ச்சி அவளுக்குள் புஷ்பித்தது. அவள் கால்களையும் கைகளையும் விறைக்க வைத்து முகத்தைச் சுத்தமாக வெளிற அடித்தது. அவள் சுத்துவதற்கு முயன்றாள். ஆனால் குரல் ஐஸ் கனத்துடன் உறைந்தது.

அந்தக் குளிர்க் கண்ணாடிக் காரன் அவளைப் பொருட்படுத்தவில்லை. அவன் ஒரு அவசரத்தில் இருந்தான். கண்ணாடியைச் சரி செய்து, அவளை விலகி, வேறு திசையில் குறிப்பாகப் பார்த்து விரைவாக நடந்தான். அவனது நடையே ஒரு ஓட்டம்.

'ஸ்வீட் ஹோம்' நான்கு துண்டுக் கட்டடங்களால் ஆன காம்ப்ளெக்ஸ். அதன் இடைவெளியின் ஒன்றில் அவன் சீக்கிரம் புகுந்து மறைந்தான்.

லாலி கிலியுடன் எழுந்தாள். அவள் கால்கள் இன்னும் உதறின. அவன் போன திசையைப் பார்த்தாள். பின்னால் டாக்டர் பெஞ்சமினும் குணசேகரனும் வந்தது தெரியாது. அவர்கள் லபக்கென்று அவளைப் பிடித்த பிறகுதான் திரும்பினாள்.

–டாக்டர், டாக்டர்! என்றாள் அவசரமுடன். –அதோ போறான் டாக்டர்! அவன்தான் கொலைகாரன்! அவன்தான் திருக்கோணத்திலே சுவாமி நகையை எடுக்கப் பார்த்தான். பிடியுங்க, பிடியுங்க! என்றாள்.

இரு டாக்டர்களும் திரும்பிப் பார்த்தார்கள். அவள் காட்டிய திசையில் குரோட்டன்ஸ் வரிசைகளும் வெறிச்சிட்ட சரல் பாதையும் தென்பட்டன. ஆள் ஏதும் தெரியவில்லை.

–டாக்டர்! அந்தப் பக்கம் போயிட்டான். உடனே பாருங்க! பாருங்க! என்ற பதைப்பில் லாலி கத்தினாள்.

டாக்டர் பெஞ்சமினுக்கு நம்பிக்கை இல்லை. இருந்தாலும் உண்மையாக இருக்குமோ என்று சபலம்.

–குணசேகரன், நீங்க போய்ப் பாருங்க! என்றார். அதே நேரம் லாலியை பெஞ்சமின் உறுதியாகப் பிடித்துக் கொண்டார்.

குணசேகரன் சீக்கிரமாகப் போய்விட்டுத் திரும்பினார். –ஹூஹூம் என்று அபிநயம் பிடித்தார். பெஞ்சமின் அதைத்தான் எதிர்பார்த்தார். லாலியை இழுத்து மாடிக்குப் போனார்.

அறையில் கொண்டு போய் உட்கார்த்தியதும், –லாலி, எவ்வளவு தொந்தரவு கொடுக்கிறே! உன்னை நல்ல பொண்ணுன்னு நினைச்சேன். இப்படிச் செய்யலாமா? என்றார்.

லாலி மெத்தைத் தலையணையில் சாய்ந்து சிறிது ஆசுவாசித்தாள். பிறகு நிதானமாகி, –டாக்டர், நீங்க ஏன் நம்ப மாட்டேங்கறீங்க? நீங்க எனக்கு மன

புஷ்பா தங்கதுரை

நோய் என்கிறீங்க நீங்க. சரி, எப்போதுமா நான் பிரமையிலேயே இருப்பேன்? ஒரு சின்னப் போதிலே தெளிஞ்சு பேச மாட்டேன்? ஒரு அரை செகண்டு சரியா நினைக்க மாட்டேன்? ஒரு முறை நோயாளி எப்போதும் நோயாளியா? என்றுள் முறையிடாக.

லாலி தலையணையில் சாய்ந்தாள். அவள் பரபரப்பு அடங்கவில்லை. குணசேகரனைப் பார்த்துத் திரும்பி, — டாக்டர்! டாக்டர்! நான் சொன்னதைக் கேட்க மாட்டீங்களா! அந்தக் கிராதகனைப் பிடியுங்க! அவன் இந்தக் காம்பவுண்டுக்குள்ளேதான் இருக்கான். விடாதீங்க! நான் சொல்றதைக் கேளுங்க! விடாதீங்க! என்று படுக்கையில் மண்டியிட்டு நின்று கூவினாள்.

குணசேகரன் வெறுமனே நின்றார். புன்னகை ஒன்று மர்மமாகச் சுழிந்தது.

—நீங்க எல்லாரும் என்னைப் பைத்தியம்னு நினைக்கிறீங்க! நான் இல்லை, நான் இல்லை! என்று கூவிய லாலி ஆத்திரத்தில் தலையணையை எடுத்துத் தூரப் போட்டு மெத்தையில் கவிழ்ந்து விழுந்து —அப்பா! நீ எங்கே இருக்கேப்பா! எங்கே இருக்கே! என்னை எல்லாரும் படுத்தறாங்களே! அப்பா! அப்பா! என்று கேவி, படுக்கையை பஞ்சாகத் துவைத்தாள்.

திவலைகள் இரு கண்களிலிருந்து வீசித் தெளித்துப் போர்வையை ஈரமாக்கின.

பெஞ்சமின் இரக்கத்துடன் அவளைப் பார்த்தார். மனித மனம் மிகமிக அதிசயமானது என்று நினைப்பவர். அதையே தினம் தினம் வாழ்க்கையில் பார்ப்பவர். லாலியின் மனத்தை அவரால் வகைப்படுத்த முடியவில்லை. லாலியின் மனம் கிட்டத்தட்ட ஒரு தொடர்ச்சியான கதையோடு பின்னிக் கொண்டு பிரமைகளைக் கண்டு கொண்டிருந்தது. இதுவும் ஒரு விசித்திரம் என்று அவர் நினைத்தார்.

அல்லது... இவள் சொன்னதில் ஏதாவது உண்மை இருக்குமா?

உண்மையோ, பொய்யோ ,அவள் சொல்வதை நம்புவது போல் நடித்தால் என்ன?

கிளை ஃபோனை எடுத்தார். — ஸெக்யூரிடியைக் கொடுங்க! என்றார்.

—ஸெக்யூரிட்டி! கறுப்புக் கண்ணாடி போட்டுட்டு யாராவது

வழியா போனுங்கன்னு நிறுத்தி வையுங்க. உடனே போன் பண்ணுங்க!

ரிஸீவரைக் கீழே வைத்து, — குணசேகர், வார்டிலே யாராவது இருக்காங்களான்னு தயவு செய்து பார்க்கறீங்களா? என்றார்.

குணசேகருக்கு அதன் அர்த்தம் தெரியும். உடனே அந்த இடத்தை விட்டு மறைந்து போனார்.

லாலி மெல்லக் குலுங்கினாள். கொஞ்சம் கொஞ்சமாக ஆசுவாசம் ஆனாள். மூக்கை உறிஞ்சி நிமிர்ந்து பார்த்தாள். பெஞ்சமின் கனிவோடு இருப்பதைப் பார்த்ததும் சடக்கென்று எழுந்து முகத்தைத் துடைத்து —டாக்டர்! என்று அழைத்தாள்.

பெஞ்சமின் ஒரு பார்வையால் — என்ன, என்றார்!

— உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். என்னை இப்போ நோயாளின்னு மட்டும் நினைக்காதீங்க, ப்ளீஸ்! எப்பவோ பிரமை வரும்! உண்மை! சில சமயம் ஆங்ஸைட்டி மேனியா வரும், ஒப்புக்கறேன். இதை எல்லாம் மறுக்கல்லை. ஆனால் என்னை எப்போதுமே ஒரு நோயாளின்னு பட்டம் கட்டாதீங்க! நான் நோயாளி இல்லை, நிச்சயமா இல்லை. இப்போ உங்ககிட்டே பேசறேனே, என் மனசு கிரிஸ்டல் சுத்தமா இருக்கு, ஸ்பிக் அண்டு ஸ்பான்! நம்புங்க!

பெஞ்சமின் முறுவலோடு பார்த்தார். —உன்னைப் புரிஞ்சுக்கிறேன் லாலி என்றார்.



—பின்னே ஏன் என்னே நம்ப மாட்டேங்கறீங்க?

பெஞ்சமின் நெற்றியைக் கையால் வழுக்கினார்.

—நம்பக்கூடச் செய்யறேன்.

—டாக்டர்! எனக்குத் தெளிஞ்சு இருக்கிற நேரத்திலே என்னே நோயாளின்னு நினைக்காம இயல்பாப் பேசினு சந்தோஷமா இருக்கும்.

—ஒத்துக்கறேன் லாலி!

—இப்போ கேட்கறேன்! அப்பா விஷயத்தை ஏன் என்கிட்டேருந்து மறைக்கிறீங்க?

—எதை மறைக்கிறேன்?

—எங்கப்பா உயிரோட இருக்காரா, இல்லேயா?

பெஞ்சமின் தயங்கிச் சொன்னார். —இருக்கார்.

லாலியின் முகம் கறுத்தது. மேலே பேசவில்லே. தலையைக் கீழே குனிந்தாள்.

—என்ன லாலி! என்றார்.

அவள் கம்மிய குரலில் பேசினாள்.—நீங்க என்னே ஏமாத்தறீங்க... துளித் துளியாகக் கண்ணீர் உதிர்ந்தது.

பெட்ஷீட்டை அவள் விரல் திருகியது.

பெஞ்சமின் அவளே ஆழ்ந்து கவனித்தார். அவள்மீது இரக்கம் எழுந்தது. ஓர் இளம் பெண்ணுக்கு இப்படி நேர்கிறதே என்று வருத்தப்பட்டார். அவளிடம் இதய சுத்தியுடன் பேசிவிடலாமா? நினைத்தார். பேசலாம். ஆனால் உண்மையை விடப் பொய்தான் இப்போது அவளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. பொய்யைச் சொல்லித்தான் அவளது கவலேகளைக் குறைக்க வேண்டி இருக்கிறது.

ஆனால் இந்தப் பொய்யை எத்தனே நாள் நீடிக்க முடியும்?

மிருதுவாகப் பேசினார்.—உன்னே ஏமாத்தலே, லாலி.

அவள் தலேயை நிமிர்த்தவில்லே.—இல்லே டாக்டர். ஒரு சமயம் குற்றவாளி எப்போதும் குற்றவாளிதான். அதேபோல ஒரு சமயம் நோயாளி எப்போதும் நோயாளிதான் மனநோய்க்கு மட்டும்!

பெஞ்சமின் துணுக்குற்றார். அவளிடம் விவரமாகப் பேசிவிடுவோமா என்று ஒரு விநாடி நினைத்தார். போலீசார் வேறு லாலியை விசாரணே செய்ய நெரித்துக் கொண்டிருந்தார்கள். அவளது

—லாலி என்றூர். அவரது ஆதாம் ஆப்பிள் மேலே ஏறி இறங்கியது.—உங்க அப்பா உயிரோட இல்லே.

வார்த்தைகளைச் சொன்னதும் அவளைக் கூர்மையாகப் பார்த்தார். அவளிடமிருந்து வீல் என்று இரைச்சல் கிளம்பி அலைஅலையாக மேலே போகும் என்று நினைத்தார். கட்டிலிலிவிட்டு அவள் வெளியே குதித்துத் துடித்துப்போவாள் என்று எதிர் பார்த்தார்.

எதுவும் நடக்கவில்லே.

லாலி வெறும் காற்றுக்குள் பார்த்துக் கொண்டிருந்தாள். எந்தச் சலனமும் இல்லே. நெற்றிப் பொட்டில் ஒரு நாடி மட்டும் துடிப்பது தெரிந்தது.

பிறகு,—டாக்டர்! எனக்கு ஆன் ஸெட் வருது! என்றாள்.

அந்தப் பயங்கர ஆவிர்ப்பவிப்பு அவளை நோக்கிப் பெரும் தோகைகளை விரித்து வந்தது.

—டாக்டர்! சீக்கிரம்! சீக்கிரம்! எனக்கு ஸெடேடிவ் கொடுங்க.

போர்வையை இழுத்து அவள் படுக்கைக்குள் ஆழ்ந்தாள்.

பெஞ்சமின் விருட்டென்று எழுந்தார். பட்டனை அழுத்தி—நர்ஸ்! என்று கத்தினார். போனை எடுத்து—குணசேகர், என்று இரைந்தார்.

அறை பரபரப்பாகியது.

அடுத்த இரண்டாம் நாள் மாலை, கிட்டத்தட்டப் பொறுமை இழந்த வேகத்தில் இன்ஸ்பெக்டர் ராமதுரை டாக்டர் பெஞ்சமின் அறைக்குள் நுழைந்தார்.

பெஞ்சமின் அவரை வரவேற்று உட்காரக்கூட இல்லே. அதற்குள்,—விஷயம் ஏதாவது தெரிஞ்சுதா? லாலி நார்மலுக்கு வந்துட்டாளா? என்று படபடவென்று கேள்விகளைச் சொடுக்கிவிட்டார் ராமதுரை.

பெஞ்சமின் ஆழமாக ஒரு மூச்சு இழுத்தார். —குணமாகிக்கிட்டு வரா. நார்மலுக்குச் சீக்கிரம் வந்துவிடுவாள்.

ராமதுரைக்குப். பகீர் என்றது. அந்தப் பதிலை அவர் எதிர்பார்க்கவில்லே.

—மிஸ்டர் பெஞ்சமின்! இனிமே என்னாலே தாங்காது! எங்க டி.ஜி.ஜி விடமாட்டேங்கறார். ஏதாவது பதில் தெரிஞ்சாகணும் என்ன சொல்லறு?

—ஸாரி மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! ரெண்டு நாள் முன்னாலேதான் அவளோட அப்பா செத்துப்போன விஷயத்தை அவகிட்டே சொன்னேம்.

—ஏதாவது ரியாக்ஷன் உண்டா?

—மனம் டிஸ்டர்ப் ஆயிட்டுது. ஒரு நாள் முழுக்கும் ஸெடேடிவ்வே இருந்தா. இப்போ தேவலே.

—அவளைப் பார்க்கலாமா?

பெஞ்சமின் விழித்தார்.

—உண்டு இல்லேனு சொல்லுங்க, ஸார்! ரொம்ப நாளாயிட்டுது, இருந்தாலும் எத்தனை நாள் இப்படி ஒரு மெடிகல் போர்வைக்குள்ளே அவளை மறைக்கப் போறீங்க! நான் சீக்கிரம் பார்த்தாகணும்...

எரிச்சலுடன் பேசி, சட்டைப் பை, பாண்ட் பைகளை எல்லாம் மாறி மாறி நோண்டிக் கடைசியில் ஒரு போட்டோவை வெளி எடுத்தார்.

—இந்த ஆளை லாலி பார்த்தாளா, இல்லேயான்னு உடனே தெரியனும். இது ரொம்ப அர்ஜண்ட், என்றூர் ராமதுரை.

பெஞ்சமின் எழுந்தார்.

கண்ணை மூடி இரண்டு விநாடி நின்றூர்.

பிறகு—வாங்க ஸார், என்றூர்.

இருவரும் வராந்தாவில் நடந்தார்கள்.

(தொடரும்)

NOT FOR SALE
FANMADE ONLY

மனம்தான் முடிச்சு இடுகிறது.
மனம்தான் அதை அவிழ்க்கவும் செய்கிறது.
—வட மொழிப் பழமொழி.

டாக்டர் பெஞ்சமின் இன்ஸ்பெக்டர் துரைபாபுவுடன் உள்ளே நுழைந்தார்.

லாலி அவரைப் பார்த்ததும் வெடுக்கென்று, —டாக்டர்! கண்ணுடிக்காரனைப் பிடிச்சுட்டீங்களா? என்றாள்.

—யாரு? என்றார் பெஞ்சமின்.

—தோட்டத்திலே காண்பிச்சேனே! என்றாள் லாலி.

—ஓ! அதுவா? அது நடந்து ரெண்டு நாளாச்சே! என்றார் பெஞ்சமின்.

—இரண்டு நாளா? என்று தலையில் கை வைத்தாள் லாலி.

அந்தச் சம்பவம் நேற்றோ இன்று காலையோ நடந்தாற் போலிருந்தது. இரண்டு நாளாயிற்று என்கிறீரே!

# புஷ்பா தங்கதுரை

கனமான ஸைடேடிவ் கொடுத்து அவளைத் தூங்கப் பண்ணிவிட்டார்களா?

—ஆளைப் பிடிச்சுட்டீங்களா? என்றுள் எதிர்பார்ப்புடன்.

—அகப்படவில்லை.

—தப்பிச்சுட்டானு?

—தப்பவா? இந்த ஹோம்லே ஸெக்யூரிடிதான் ரொம்ப முக்கியம். யாரும் கேட்டைத் தாண்ட முடியாது.

—இவன் மட்டும் எப்படி மறைஞ்சான்?

—ஐ'ம் ஸாரி, லாலி! என்று சொல்லியவாறு பெஞ்சமின் உட்கார்ந்தார். நீ சொன்ன அடையாளத்திலே யாருமே உள்ளே வரவில்லை.

லாலி திடுக்கிட்டாள்.

—அப்போ நான் சொன்னது சரியில்லையா?

—அப்படித்தான்! என்றார் பென்சமின், நைச்சியமாக.

துணுக்காக ஒரு நிசப்தம்.

லாலியின் நெஞ்சம் அடித்தது. அவள் சொன்னதைச் சரியில்லை என்கிறார் அவர். அவள் தன் கண்ணாலே நேரே பார்த்திருக்கிறாள் அந்தக் கண்ணாடிக்காரனை! இல்லை என்று சொன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா?

அவளது மன நோயை வியாஜமாக வைத்து, என்ன வேண்டுமானாலும் சொல்கிறார்களே இவர்கள். அவளுக்குக் கோபம் வந்தது.

—டாக்டர்! என்று கத்தினாள். —அநியாயம்! ஒரு குற்றவாளியைத் தப்பவிட்டுட்டீங்க! என்னைப் பைத்தியக்காரின்னு நினைச்சுட்டீங்க! அலட்சியம் படுத்திட்டீங்க! நீங்க ஒரு ஜென்டில்மேனு? என்றாள்.

வார்த்தைகள் லாவாத் துண்டுகள் போல் சிதறின.

பெஞ்சமின் மூக்கு சிவந்தது. —லாலி! என்று கத்தினார். அது அவளையும் அவள் வார்த்தைகளையும் மூழ்கடித்தது. —எச்சரிக்கை! நீ இதுபோலப் பேசினை, உனக்குத் தினம் இஞ்செக்ஷன் போட்டுப் படுக்க வச்சிடுவேன்! ஆமா!

கிளுக்கென்று அழுதாள் லாலி. பளிங்குத் துளிகள் கன்னத்தில் குதித்தன. விம்மிக் கொண்டு முகத்தை டவலுக்குள் புதைத்தாள்.

பெஞ்சமின் திரும்பினார். கண்களில் வெற்றியின் பெருமிதம் தெரிந்தது. எதிராளியை ஒரே சொல்லில் கடாசிவிட்ட பெருமிதம்!

லாலி சிறிது நேரம் விசித்தாள். பிறகு அடங்கினாள். டாக்டரை எச்சரிக்கையுடன் பார்த்தாள். பயம் பாதி. நடுக்கம் பாதி.

பெஞ்சமின் சாட்டையை மடக்கி வைத்த திருப்தியுடன் அவளைப் பார்த்தார்.

—சரி, சரி, முதல்லே ஸாரை யாருன்னு தெரிஞ்சுக்க.

ஸாரைப் பார்த்தாள். மீதி அழுகையை சட் புட்டாக நிறுத்தினாள்.

இன்ஸ்பெக்டர் துரைபாபு தாமே கனிந்து பேசினார்.—என் பேரு துரைபாபு! திருக்கோணம் இன்ஸ்பெக்டர்!

—ஓ என்று துள்ளினாள் லாலி. —ஸாரி! இன்ஸ்பெக்டர்! மம்மிப்டியிலே

COMICS PDF TIMES

இருக்கீங்க! புரிஞ்சுக்க முடியல்லே. திருக்கோணத்திலே அந்தத் துர்ப்பாக்கியம் நடந்துப் புறம் காலேயிலே என்கிட்டே பேசினீங்க! நான் சரியாய்ப் பதில் சொல்லலே. சொல்லத்தான் நினைச்சேன். மனசு ஒத்துழைக்கவில்லே.

—பரவாயில்லே, மிஸ் லாலி! இப்போ சொல்லுங்க! அன்னிக்கு ராத்திரி என்ன நடந்திச்சு. ஞாபகம் இருக்கா?

—ஓ, ஞாபகமிருக்கே! உங்களுக்குக்கூட முறையாச் சொன்னேன்னு நினைக்கிறேன்.

—அவ்வளவு சரின்னு சொல்ல முடியாது. பரவாயில்லே. இப்போவும் சொல்லுங்க!

லாலி அந்தக் கடந்த நாளுக்குள் நுழைந்தாள். அன்று இரவு எழுந்தது, வெளியே போனது, கிளைச்சாலேயில் பச்சைக் காரைப் பார்த்தது, திரும்பி வந்தது ஆகிய எல்லாம் சொல்லி,

—அறையத் திறந்து பார்த்தேன். ஸார். லேட் போட்டேன். ரத்த வெள்ளத்திலே... என்று நிறுத்தினாள்.

துக்கம் தொண்டையை மூடியது.

—அழாதேம்மா! என்றார் துரைபாபு.

லாலி மெள்ள அடங்கித் தலை நிமிர்ந்தாள்.

—கெஸ்ட் ஹவுசிலே தங்கினீங்களே, யார் மேலேயாவது சந்தேகம் உண்டா? என்றார் துரைபாபு.

—யார் மேலேயும் கிடையாது, சார்!

—நேற்றுக்குள்ளே புது ஆள் யாராவது வந்து பார்த்தாங்களா, வெயிட்டர்கள் தவிர?

—யாருமே வரவில்லே.

—இந்தக் கொலே எப்படி நடந்திருக்க முடியும்னு நினைக்கிறீங்க?

—நான்தான் அன்னிக்கே சொன்னேனே? ராத்திரி வெளியிலே பச்சைக் கார் நிற்கிறதைப் பார்த்தேன். அதைத் தேடறதுக்காக இறங்கிப் போனேன்...

—லாலி! என்றார் அவர் இடைமறித்து. —நீங்க ராத்திரி இறங்கி வெளியிலே போனது, திரும்பி வந்தது எல்லாம் சொப்பனம். எதுவும் உண்மையா நடக்கலே.

—நடக்கலேயா? என்று நம்ப முடியாமல் அவரைப் பார்த்தாள் லாலி.

—நிச்சயம் நடக்கல்லே. அதெல்லாம் உன் மனசிலேதான் நடந்தது.

லாலி கைகளைப் பிசைந்தாள்.

—அப்பா செத்துப்போனது நிஜந்தானே?

—ஆமா.

—அவர் கொலையானது நிஜந்தானே?

—ஆமா.

—அது மட்டும் உண்மையா? எனக்குத் தெரிஞ்சிருக்கே!

—அதுதான் விசித்திரம்! உங்களுக்கு உண்மையும் கற்பனையும் கலந்து கலந்து தெரியுது.

லாலி அவரைப் பார்த்து விழித்தாள்.

—சரி இன்ஸ்பெக்டர்! நான் அறையிலே இருந்தா எனக்குத் தெரியாம எப்படிக் கொலை நடந்திருக்கும்?

—தூங்கிக்கிட்டிருந்தீங்க!

—நோ, இன்ஸ்பெக்டர். நான் தூங்கலே!

—நிச்சயம் நீங்க விழித்திருக்க


# கையெழுத்துக் கஷ்டம் இனி இல்லே

எழுத்தாளர் சுஜாதா டைப் அடிக்கக் கற்றுக் கொண்டு விட்டார். 'பெல்' தொழிற்சாலேயில் வேலே நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் வீட்டிலேயே ஓய்வு நேரத்தில் தமிழ் டைப்ரைட்டிங் கற்றுக் கொண்டு விட்டார்—தானுகவே.

''என் கையெழுத்துப் புரியாமல் பத்திரிகை ஆபீஸ் கம்பாஸிட்டர்கள் ரொம்பச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கஷ்டம் இனி நீங்கும். சென்னே வந்திருந்தபோது லிப்கோ நிறுவனத்திற்குச் சென்று தமிழ் டைப்ரைட்டிங் பற்றிய புத்தகம் ஒன்றையும் வாங்கி, பத்து நாளில் கற்றுக் கொண்டேன்,'' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார் சுஜாதா.

—பி. கல்யாணராமன்

சுமார்ராய் என்ன எடை இருக்குமென்று நினைக்கிறீர்கள்? (விடை: 25'ம் பக்கம்)

முடியாது. விழிச்சிருந்தா காலைகாரன் பால்கனி வழியா வந்ததைப் பார்த்திருப்பீங்க!

—அங்கே வழி இருக்கா?

—இருக்கு! பால்கனி கதவு வழியாகத்தான் அவன் உள்ளே வந்திருக்கான். உங்க அப்பா அவனைப் பார்த்திருக்கார். கூச்சல் போடப் பார்த்திருக்கார். கொன்னுட்டான்.

—என்னை மட்டும் ஏன் கொல்லவில்லை?

—தேவையில்லை. நீங்க தூங்கிக்கிட்டிருந்தீங்க!

லாலியின் பார்வை சுரத்தில்லாமல் கீழே விழுந்தது.

—இன்ஸ்பெக்டர் ஸார்! உள்ளே பெரிய சந்தடி கேட்டா நான் எழுந்திருந்திருக்கணும். இல்லையா?

பெஞ்சமின் துரை பாபுவின் காதுக்குள் சென்று — அப்பா ஸ்டேடிவ் கொடுத்திருக்கார் பெண் நல்லாத் தூங்கியிருக்கா! என்றார்.

—படுத்துக்கிறதுக்கு முன்னடி மாத்திரை சாப்பிட்டீங்களா? என்றார் துரைபாபு.

—ஆமா!

—அதான் நல்ல தூக்கம் வந்திருக்கும்.

—ஓ! என்றாள் அவள்.

—தூக்கத்திலே சொப்பனம் நிறைய கண்டிருக்கீங்க. உங்க மனசுதான் கலங்கினதாச்சே!

லாலியின் முகம் அதுங்கியது. சொப்பனம் அவ்வளவு தத்ரூபமாகவா வரும்? மாடிவீட்டு இறங்கியது, சாலைக்குப் போனது, திரும்பி வந்தது, அத்தனையும் சொப்பனமா?

—ஸாரி, இன்ஸ்பெக்டர். என் மனம் அதைச் சொப்பனம்னு நினைக்க மறுக்கிறது. நான் வெளியிலே இறங்கி நடந்து அந்தக் கிளைச்சாலை வரை போனேன். அது எனக்குப் ' புதிய சாலைதான்.

—இல்லே, அதை முன்னுடியே பார்த்திருப்பே! என்றார் டாக்டர் பெஞ்சமின் இடைமறித்து.

—இல்லை டாக்டர். நான் பார்க்கலே.

—நிச்சயம் பார்த்திருப்பீங்க! அந்த வழியாகத்தானே காரிலே போயிருக்கீங்க!

—இருக்கலாம். ஆனா நிச்சயம் அதை நான் நோட் பண்ணல்லே.

—தேவையில்லே. அது உங்க ஸப் கான்ஷியஸ் மனசிலே விழுந்திருக்கும்.

—விழுமா?

—விழும்! அது ஒரு வெறுமையான ரோடு. இரண்டு பக்கமும் புதருங்க. சுற்றியும் கட்டடம் கிடையாது. அது ஒரு அச்சமான காட்சி. உங்க ஸப் கான்ஷியஸ்லே அது பதிஞ்சுடுத்து. தூங்குகிற போது அந்த ரோட்லே நீங்க நடக்கிற மாதிரி பிரமை வந்துட்டுது.

—அப்போ அந்தக் கார்?

—அது வெறும் நினைவுச் சேர்க்கை. அஸோஸியேஷன் ஆஃப் தாட்ஸ். ஒன்று நினைச்சா இன்னொன்று கூடவே வரும். உங்களுக்குப் பச்சைக் கார் ஒரு அப்ஸெஷனாவே இருந்து வந்திருக்கு. அதனாலே எல்லா சொப்பனத்திலும் அதுவும் சேர்ந்து சேர்ந்து வருது.

லாலிக்குச் சமாதானமாகவில்லே. இவர்கள் சொல்வதெல்லாம் நிஜம்தானா? தன் மனமே தன்னை ஏமாற்றுகிறதா?

சிறிது யோசித்தாள். திடீரென்று திரும்பினாள்.

—இன்ஸ்பெக்டர், நான் நல்லா இருக்கேன்னுதான் தோணுது. நீங்க என்னை ஏமாத்தறீங்க! இது வஞ்சத்தின் அடிப்படையிலே எழுந்த சுத்தமான கேஸ். அதை எவ்வளவு குழப்ப முடியுமோ குழப்பறீங்க!

—லாலி! என்று இடை மறித்தார், பெஞ்சமின்.

லாலி சுள் என்று திரும்பினாள்—நீங்க பேசாம இருங்க டாக்டர்! உங்களாலே நான் ரொம்பக் கஷ்டப்படறேன்.

## சுருளியின் சாரீரம் இவரிடம்

ஜீயா சக்கரவர்த்தி 'பண்ணபுரத்துப் பாண்டவர்கள்' என்ற படம் எடுத்துக் கொண்டிருக்கிறார். டப்பிங் நடக்கவேண்டிய சமயம் சுருளிராஜன் இறந்து விட்டார். அவருக்கு யார் குரல் கொடுப்பது?

சுருளிக்கோ குரல்தான் ஸ்பெஷாலிடி. அது மாறினால் ஜனங்கள் ரசிக்கமாட்டார்களே?

டைரக்டர் லெனின் தவித்துக் கொண்டிருந்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்பு வாணிமகாலில் சுருளி மாதிரியே பேசி மிமிக்ரி செய்த ஒரு ஆட்டோ ரிக்ஷா டிரைவரின் ஞாபகம் வந்தது உதவி டைரக்டர் வேதாவுக்கு. அவரைக் கண்டுபிடித்து டப்பிங் பேச வைத்துவிட்டார்.

அவர் பெயர் சம்பத்குமார். ராயப்பேட்டையைச் சேர்ந்தவர்.

—திரைஞானி

பெஞ்சமின் கண் எரிந்தது.

—நிறுத்திக்கோ. இன்ஸ்பெக்டர், வாங்க போகலாம். இனியும் விசாரிச்சுப் பிரயோசனம் இல்லே.

—இன்ஸ்பெக்டர், இருங்க! நான் இன்னும் சொல்லணும்.

—பேசாமல் படு என்றூர் பெஞ்சமின்.

இருவரும் எழுந்தார்கள். லாலி ஆத்திரத்துடன் அவர்களைப் பார்த்தார்.

இருவரும் போக முற்பட, — இன்ஸ்பெக்டர் ஒரே விஷயம். என்னை வஞ்சத்துக்காகத்தான் கொலை செய்ய முயற்சி பண்ணினாங்க. அதுதான் உண்மை! நம்புங்க என்னை! என்றுள்.

கதவுப் பக்கம் போன துரைபாபு நின்று, பாதி சிரிப்புடனும் பாதி தீவிரத்துடனும்.

—உன்மேலே என்ன வஞ்சம்? என்றூர்.

—நான் அவங்க கொள்ளை அடிக்கிறதைத் தடுத்து நிறுத்திட்டேன். அதுக்காக என்னை வேட்டையாடி வந்திருக்காங்க! இதுதான் உண்மை, இதுதான் சத்தியம், என்று கத்தினாள் அவள்.

பிறகு தலையணையில் கவிழ்ந்து அழுகையுடன் குலுங்கினாள்.

**ஸ்** வீட் ஹோமில் ஒவ்வொன்றாக இருபது நாட்கள் ஓடிவிட்டன.

தினமும் காலையும் மாலையும் ஒரே காட்சியையும் ஒரே ஆட்களையும் பார்த்து லாலிக்கு அலுத்துவிட்டது.

அத்தை தினமும் ஒரு முறை பார்த்து விட்டுப்போனாள்.

அத்தை மூலம் இயல்பான குடும்ப வாழ்க்கையுடன் அவள் தொடர்பு கொள்ள முயன்றாலும், போதிய வலுவான உறவுகள் அத்தை வழியே கிடைக்கவில்லை.

தந்தையின் மரணத்தில் தனக்குப் பெரிய சுவர்க்கம் மறைந்து விட்டது என்று எண்ணினாள் லாலி.

விதியின் ஒரு திடீர்ச் சொடுக்கில் தான் அனாதை ஆகி விட்டதை உணர்ந்தாள்.

தந்தையின் மரணத்தைக் குறித்து ரகசியமாக அடிக்கடி கண்ணீர் விட்டாள்.

எடை: 53.20 கிலோ கிராம்
சுமப்பவர்: கமலஹாசன்
சுமை: சொப்னு
படம்: கடல் மீன்கள்

—அப்பா! நான் எச்சரிக்கை பண்ணினேனே அப்பா! பச்சைக் காரைப் பற்றி எத்தனை வாட்டி சொன்னேன். நீங்க ஜாக்கிரதையாக இல்லாமல் போயிட்டீங்களே! என்னைத் தனியாக்கிவிட்டுப் போயிட்டீங்களே! நான் திடமான பெண்ணாக இருந்தாலும் தேவலே. இப்படி பலவீன மனசோடு இருக்கேனே, அப்பா! இங்கேகூட ஆபத்து இல்லாம இல்லே. அன்னிக்கு அந்தக் கண்ணாடிக்காரனைப் பார்த்தேன். என்னைத்தான் தேடி வந்திருக்கான். நிச்சயம் என்னைப் பழிவாங்கிட்டுத்தான் போவான். நினைக்கவே பயமா இருக்கு. நான் இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் போகணும் அப்பா. இல்லாட்டி ஏக்கத்திலேயே செத்துப் போயிடுவேன்...

காலையும் மாலையும் ஒழுங்குமுறை வாழ்க்கையில் அலுப்போடு ஈடுபடும்போது, ஒரு செவ்வாய் காலையில் மாடியில் இருக்கும் ரீடிங் ரூம் கண்ணில் பட்டது.

இதற்கு முன் இரண்டு முறை அங்கே போயிருக்கிறாள். அந்த அறையில் குளிர்வான உட்புறத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து பழைய பத்திரிகைகளைப் புரட்டியிருக்கிறாள்.

பத்திரிகைகள் எப்போதும் பழையவைதான். அதனால் அவளுக்குச் சுவாரஸ்யம் ஏற்பட்டதில்லை. ஆனால் அந்த அறையில் அமர்ந்து மூன்று பெரிய சன்னல்கள் வழியாக வெளியே பார்த்தால் விஸ்தாரமான ஆகாயமும், நெடுந்தூரத் தரைப்பகுதியும் தெரியும். ஜியாமெட்ரிக்கல் பாட்டர்ன்களில் கட்டிடங்களின் மாடிகளும், அங்காங்கே தாளித்தாற்போல் பசுமரங்களும் தெரிந்து அவளுக்குச் சிறிது இதங்களைத் தரும்.

இன்று ரீடிங் ரூமுக்குள் போனபோது உள்ளே இரண்டு பேர் பத்திரிகைப் பழசுகளைத் துழாவிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் உமேஷ்.

## முகத்தைக் காட்டாமலே நடனம்

நாட்டியக் கலைஞர் காமதேவ் (வலது புறம்) சிறிது கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சென்னைக்கு வந்திருக்கிறார். அவருடன் கூட பிரதீப்கார் என்கிற இளைஞரும் வந்திருக்கிறார்.

காமதேவும், பிரதீப் காரும் இரண்டு மாதங்கள் முன்பு வரை ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து சாயா நடன நிகழ்ச்சிகள் நடத்தினர்.

சாயா நடனங்கள் என்றால் என்ன?

சிவன், பார்வதி, ராதை, கிருஷ்ணன், சூரியன், சந்திரன் ஆகியோர் உருவங்களை முகமூடிகளாகத் தயாரித்து அவற்றை அணிந்து நடனம் ஆடுதல். இது ஒரு புதிய நாட்டிய வகை. முகம் மட்டும் இத்தகைய முகமூடிகளால் மூடியிருக்கும். ஆனால் உடலின் மற்ற அங்கங்கள் நாட்டியம் ஆடும்போது எந்தெந்த பாவத்தில் ஆடுகிறோம் என்பதை ரசிகர்களுக்குப் புரிய வைக்கும். காமதேவ் உடல் அமைப்பு கட்டுக் குலையாமல் இருக்க தினசரி யோகாசனங்கள் செய்து வருகிறார். தன்னிடம் நடனம் பயில வரும் மாணவர்களுக்கும் கட்டாயமாக அரை மணி நேரம் யோகாசனப் பயிற்சி அளிக்கிறார்.

சுறுசுறுப்பாக இருக்க இவர் தினசரி புதிய இலையில் தயாரித்த 'டீ'யை அருந்துகிறார். —பால்யூ

அந்த உமேஷை ஏற்கெனவே பார்த்திருக்கிறாள். பார்த்த சமயம் மிகவும் சங்கடமான சமயம். அவனுக்கு அப்போது ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இரு நெற்றிப் பொட்டுகளிலும் இரண்டு எலக்ட்ராடுகளைப் பொருத்தி சுவிட்சைத் தட்டிவிட, நூறு வோல்ட்களில் சில மில்லியாம்ப்ஸ் மின் துணுக்குகள் அவன் நெற்றிக்குள் பாய,

அவன் துடித்த துடி அவள் இதயத்தை உலுக்கிவிட்டது. தரையில் விழுந்த மீனின் உதறல்கள். அவனை நான்கு வார்டர்கள் கூட்டி அமிழ்த்தினார்கள்.

பிறகு ஸ்ட்ரெச்சரில் செத்த உடல் போலத் தூக்கிக் கொண்டு போனபோது...

அவனை இங்கே பார்த்ததும் முதல் உணர்ச்சியாக இரக்கம் சுரந்தது.

பத்திரிகையை மூடி அவன் அதே நேரம் மேலே பார்க்க, லாலியின் கருணையான புன்னகை சிறிது திடுக்கிட வைத்தது.

பயந்து, ஒரு முறுவல் நழுவவிட்டான்.

—ஹௌள ஆர் யு? என்று மிகவும் தெரிந்தது போல் குசலமிட்டாள் லாலி.

—ஃபைன்! என்றபோது அவன் முகத்தில் அடக்கமான புன்னகை வீசியது.

அவள் உட்கார்ந்து மேலே பேசத் தொடங்குமுன், பார்வை சன்னல் வழியாக அடுத்த காம்பவுண்டு வட்டாரத்துள் விழ, கண் அதிர்ச்சியுடன் இறுகியது.

அங்கே பார்க் பண்ணியுள்ள கார் ஜொலிப்புகளின் நடுவில் தனியாக நின்று சிகரெட் பிடிப்பது அந்தக் கண்ணுடிக்காரன்தானே?

அரை விநாடியில் லாலியின் அமைதி பறந்து ஓட, சுவாசத்திற்குச் சிறிது தடுமாறினாள். பிறகு உமேஷைப் பார்த்து,—ஹேய்! அடுத்த பில்டிங்கில் என்ன இருக்கு? என்று கேட்டாள்.

—எம்.என்.ஆர். ஜுவெல்லரி! என்றான் உமேஷ்.

(தொடரும்)

# ஹாமைக்கு ஹிரோ

8

*The mind is an iceberg. It floats with only one—seventh of its bulk above water.*

*—SIGMUND FREUD*

பக்கத்துக் காம்பவுண்டில் எம். என். ஆர். ஜுவெல்லரி இருக்கிறது என்று கேள்விப்பட்டதும், லாலி—அதுவா? என்று குரலைத் தணித்து முணுமுணுவாகக் கேட்டாள். அவளது இளம் மேனி நடுங்கியது. இரண்டு வெளிச்சமான, திகில் நிறைந்த விழிகளை அந்தக் காம்பவுண்டின் நீண்ட சதுர முன்புறத்தில் பதிய விட்டாள். அவளது நடுக்கம் கூடியது. தன் மெல்லிய இரு விரல்களை எடுத்து வாய் நடுவில் வைத்தாள். —நான் போய்ச் சொல்லணும்! என்றாள். அடுத்த கணம் ஒரு முயல் போல ஒரே துள்ளலில் வெளியே மறைந்தாள்.

உமேஷ் பேப்பர் சுளகை மூடினான். நான்காக மடித்து, திறந்த அலமாரியில் ஹிந்து என்று எழுத்துக்கள் முன்னால் செருகி வைத்து அவசரமாக வாசலுக்கு வந்தான்.

தூரத்தில், வராந்தாவின் கண்ணாடித் தரையில் ஒரு மங்கலான தலைகீழ் உருவத்தை ஏற்படுத்தி, சின்னச் சின்னத் தாவல்களில் லாலி விரைந்து கொண்டிருந்தாள்.

—ஏன்? ஏன் இப்பவும் பறக்கிறாள்? என்று வியப்புடன் நினைத்தான் உமேஷ்.

மாடிப் படிகளில் லாலி இறங்க முயலும் அதே நேரம் கடைசி அறையிலிருந்து, நர்ஸ் சுசீலா வெடித்து வெளிப்பட்டு, —ஏய், ஏய்! லாலி! எங்கே போறது? என்று மலைஞ்ஞாளத் தொனியில் கூவினாள்.

லாலி பதில் சொல்லாமல் போவதைப் பார்த்து—கேசவா, ராஜகோபாலா! லாலி போறது. இறங்கிப் போறது, என்று ஊர் கூட்டும் சத்தத்தில் பிளிற, எங்கெங்கோ தட தடவென்று சத்தங்கள் உற்பத்தியாயின.

லாலி எதையும் லட்சியம் பண்ணுமல் படிக்கட்டுகளில் தாவி, கீழ் வராந்தாவிலும் ஓடி டாக்டர் பெஞ்சமின் அறைக்குள் சூறுவளியாகப் பாய்ந்தாள்.

—டாக்டர், டாக்டர்! மேலே விழாத குறையாகக் கூவ, ஆச்சரியமும் ஆத்திரமும் கலந்த பார்வையில் பெஞ்சமின் அவளைப் பார்த்தார். கோபம் மூக்குக்கு ஏறியது. —யூ... என்று கத்தி மேலே வார்த்தை வராமல் விழித்தார்.

அதே நேரம் அவர் பிடியிலிருந்தும், அந்தரங்க நடவடிக்கையிலிருந்தும் விடுபட்ட ஜூனியர் மோஸ்ட் நர்ஸ் கோகிலா, மார்பு பட்டன்களை அவசரமாகத் தரித்து லாலியைப் பாதிக் கள்ளத்தனமாகப் பார்த்தாள்.

எதையும் பொருட்படுத்தாமல் லாலி, —டாக்டர்! கொலைகாரன் அங்கே நிற்கிறான். வாங்க, வாங்க! என்று வீறிட,

பெஞ்சமின் கோபம் உச்சக் கட்டத்திற்கு ஏறியது. —ஸ்டாப் நான்சென்ஸ்! இங்கே ஏன் வந்தே? உன்னை யார் வரச்சொன்னது? போ, வெளியே! சுந்தரம், சுந்தரம்! என்று ஆபீஸ் பியூனை அழைத்தவாறு எழுந்தார்.

—இல்லை, டாக்டர்! இது அவசரம்! நான் அந்த கொலைகாரனைப் பார்த்துட்டேன். அங்கே நிற்கிறான். அதுக்காகத்தான் வந்தேன். ப்ளீஸ் டாக்டர், ப்ளீஸ், ப்ளீஸ்! என்று முகம் அதுங்கி லாலி வேண்டுகோள் விடுத்தாள்.

பெஞ்சமின் முகம் மாறியது. —நீ போறயா, இல்லையா! என்று சீறி எழுந்திருக்க,

லாலி போவதாக இல்லை. அதற்குப் பதிலாக மண்டியிடுவது போன்று கீழே தாழ்ந்து அவர் கைகளைப் பற்றி, —ப்ளீஸ் டாக்டர்! அவன் ஓடிடுவான், வாங்க! வாங்க! என்று கெஞ்சத் தொடங்கினாள்.

பெஞ்சமின்னின் கோபம் ஏற்கெனவே மண்டையைக் கொளுத்தி யிருந்தது. என்ன செய்வது என்று புரியாமல் —ஏ சுந்தரம்! சுந்தரம்! என்று கத்தினார்.

அவரது பிரதித் தொனிபோல் அதே சுருதியில் —சுந்தரம், சுந்தரம் என்று ஜூனியர் கோகிலா வெளியே ஓடினாள்.

பெஞ்சமின்னுக்குக் கோபம் தூக்கிக்கொண்டு போயிற்று. லாலி அவர் கைகளைப் பிடிக்க வர, தம் நீட்டிய கையால், ஒரு தள்ளுத் தள்ளினார். லாலி சுருண்டு விழுந்தாள். நெற்றி கீழே பட்டு சில வெல்டிங் பொறிகள் தெறித்தன. முதுகில் ஊமை அடி.

கீழே விழுந்ததில் தேகத்தின் கட்டுமானக் கயிறுகள் இரண்டு மூன்று அறுந்த மாதிரி இருந்தது. எழுந்திருக்க முடியவில்லை.

பெஞ்சமின் அதற்குள் உடையைச் சரிசெய்து, சுந்தரத்தைத் தேடி வெளியே விருட்டானார்.

லாலி மெள்ள மெள்ள எழுந்தாள். அவளுக்குள் ஒரு குருட்டு ஆத்திரம் வந்தது. கண் பார்வை மேஜை மீது அந்த பிங்க் கலர் டெலிபோனில் விழுந்தது. சுருக்கென்று அதை அடைந்து 100'ஐச் சுழற்றி —போலீஸ், போலீஸ்! என்றாள்.

இரண்டு மூன்று முறை சுற்றியும் 'எங்கேஜ்ட்' பிப் அடித்தது.

நான்காவது முறை கோபமாகச் சுழற்ற, நம்பர் சிக்கியது.

—போலீஸ்! ஸ்வீட் ஹோமிலிருந்து லாலி பேசறேன். ...ஆமாம்... வாரென்ஸ் ரோடுதான்... பக்கத்து ஜூவெல்லரி ஷாப்புக்கு ஒரு திருடன் வந்திருக்கான்... ஆமாம்... கொலைகூடச் செஞ்சிருக்கான்... நோ, நோ, கொலை இப்போ நடக்கலை...

லாலி தொடர்ந்து பேசுவதற்குள் பெஞ்சமின் இரண்டு ஆண் நர்ஸகளுடன் நுழைய,

—லாலி! என்று ஆவேசத்துடன் போனைப் பிடுங்கினார்.

லாலி கொடுப்பதாக இல்லை. —விடுங்க என்னை! என்று ஒரு கூச்சல் போட்டு, போனை மீண்டும் காதில் வைத்து, —ஷாப் வாசலிலே நிக்கறான்... ஆமாம்...

முடிக்க விடவில்லை. —யு டர்ட்டி ஸ்கப்! என்று அவள் மீது பெஞ்சமின் பறந்தார். போனைப் பிடுங்கி, —இழுத்துப் போங்கள் இவளை! என்று பிடித்துத் தள்ள இரண்டு ஆண் நர்ஸகளும் லபக்கென்று கைப் பிடித்து, அவளை இழுத்துச் சென்றார்கள்.

—விடுங்க! என்னை விடுங்க! நான் போன் பண்ணனும்! டாக்டர்! டாக்டர்! கொலைகாரன் தப்பிச்சுடுவான்! ஐயோ விடுங்களேன்! விடுங்க! கை கால்களை பலமாகக் காற்றை உதைத்தாள்.

இரண்டு ஆண்களும் வேகமாக வராந்தாவில் இழுத்து, மாடிப் படி ஏறினார்கள்.

லாலியின் வெறி ஏறியது, அசுரத்தனத்துடன் திமிறி அவர்களுக்குச் சோதனையான கணங்களை ஏற்படுத்தினாள்.

மாடிப் படியின் திருப்பத்தில் போனதும், யாரும் காணாத இடம் என்று உணர்ந்த கேசவ், —கோவிந்த், நீ பேசாம இரு. நம் வைத்தியம் செய்வோம், என்று முஷ்டியை மடக்கி பம் என்று வயிற்றில் ஒரு குத்து கொடுத்தான். —அப்பா! என்று மழுங்கல் சத்தத்துடன் லாலி சுருண்டாள். சில கணங்களுக்கு நினைவு போய்விட, குத்து விழுந்த வேகத்தில் உடல் சுவரோடு மோதிக் கீழே உதிர்ந்தது. நெற்றியில் துளுக்கென்று ஒரு ரத்த பல்ப் குமிழ்ந்தது.

சில விநாடிகளுக்குப் பிறகுதான் வலியின் முழுப்பிரமாணங்களை அவள் உணர்ந்தாள். வயிற்றை இருகைகளாலும் பிடித்து, —அப்பா, அப்பா என்று அரண்டாள். அந்த வார்த்தைகூட முழு தொனியோடு வெளிவரவில்லை. வலி அதன் வால்யூமைக் குறைத்து வாய்க்குள்ளேயே அடக்கியது.

நர்ஸ்கள் இருவரும் களைப்பாறினர்கள். யாரும் காணாத நேரத்தில் ஓர் அதிர்ச்சி வைத்தியம்— — தங்கள் வேலைகளைக் குறைத்து கொள்ள அவர்களாகக் கண்டுபிடித்துள்ள வைத்தியம் —இந்தப் பெண்ணுக்குச் செய்துவிட்டோம் என்ற திருப்தியில் மேலே பார்க்க, அங்கே அந்த மாடிக் கிணறு தொடங்கும் இடத்தில் கைப்பிடிச் சுவரைப் பிடித்து, உமேஷ் அவர்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

நர்ஸ் கேசவ் —போடா! என்று சொன்னதும், பதறி அடித்து வராந்தாவில் அவன் ஓடினான்.

அவர்கள் லாலியை எழுப்ப முயன்றார்கள். அவளால் எழுந்திருக்க முடியவில்லை. சுருண்டு இருந்தால்தான் வலியை அவளால் பொறுக்க முடியும். தொடர்ந்த வசவுகள் அவள் மீது என்ன பலனையும் கொடுக்காமல் போக, அலக்காக அவளைத் தூக்கி மேலே அறையில் போய்க் கிடத்தினார்கள்.

படுக்கையில் தள்ளி, பெல்ட்டுகளால் உடலைக் கட்டிலோடு கட்டினார்கள். ஸெடேடிவ் கொடுத்தும் பலன் இல்லாத சில பயங்கர

நோயாளிகளுக்காக ஏற்பட்டது அந்த பெல்ட்டுகள். லாலியை அந்தக் கட்டுகளில் அடக்கிவிட்டு, அறைக் கதவை ஓரே ஓசையோடு சாத்தி, மூலையில் சிகரெட் பிடிக்க ஓடினார்கள்.

கீழே, வெள்ளை நிற போலீஸ் வான் பக்கத்துக் காம்பவுண்ட் முற்றத்தில் வந்து, எதையும் காணுமல் ஏமாந்து, பின்னர் விசாரித்து ஸ்வீட் ஹோமுக்குள் நுழைந்தது.

டாக்டர் பெஞ்சமின் முழு நிலைமையும் விளக்க பெரும் சிரமம் எடுக்க வேண்டியதாயிற்று. —அவள் ஒரு பைத்தியம்! போன் பண்ணிட்டா. உங்களைத் தொந்திரவு செய்ததற்கு வருந்தறேன். இனிமே இப்படி நேராது! என்று இன்ஸ்பெக்டரிடம் உறுதிமொழி கொடுத்துக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் முழுதும் லாலி வலியில் இருந்தாள். திடீர், திடீர் என்று குமிழ்களாக அவை மேலெழுந்தன. வயிற்றுக்குள் அவற்றின் ஸ்டாக் நிரந்தரமாக இருக்கும் போலிருந்தது.

நர்ஸ் சுசீலா வந்தபோது புகார் கூறினாள். —நீ கம்மா இருக்கணும். ஆஸ்பத்திரிலே எங்களுக்கு எவ்வளவு வேலை! சப்ளம் அள்ளியா கொடுக்கறுங்க? நீ வேறே தொந்தரவு செஞ்சா... என்று ஆண் நர்ஸ்களின் தாக்குதலை நியாயப்படுத்தினாள்.

லாலி தன் அப்பாவை நினைத்தாள். கண்கள் உருகின. —எவ்வளவு சுயநலம் உங்களுக்கு! என்னை விட்டுட்டுப் போயிட்டயே! நீ இருந்தா என்னைப் புரிஞ்சுப்பே! புரியுறட்டாலும் இதமா நடந்துப்பே! இங்கே எனக்கு யாரும் பொறுப்பா இல்லேன்னு தெரிஞ்சு அடிக்கிறுங்கப்பா. வயித்திலே குத்தறுங்க. வலி பிராணன் போகுது... நீ எங்கே போயிட்டேப்பா? திரும்பி வர்றதுக்கு மறந்துட்டியா...?

அடிக்கடி தூங்க முயன்று, —லாலி! என்று விச்வேச்வரின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். பல கணங்கள் வரை அந்தக், குரல் நிஜமாகத் தோன்றியது. ஆனல் விரைவில் பிரமை என்று தெரிந்ததும் மனம் வெதும்பி, —அப்பா! அப்பா! என்று தலையணையில் முகத்தைத் துடைத்தாள்.

மறுநாள் வலி கொஞ்சம் குறைந்திருந்தது. நிமிர்ந்தால் மட்டும் சுருக்கென்று தைத்தது. முட்டுகளைச் சேர்த்து மடித்துச் சன்னல் அருகிலுள்ள நாற்காலியில் அமர்ந்து பொழுதைப் போக்கினாள்.

வெளியே போக முடியாது. கதவு பூட்டப்பட்டிருந்தது.

மத்தியானம் அரைத் தூக்கமாக நினைப்பும் விழிப்பும் இல்லாமல் இருந்தபோது —ஹேய்! என்று குரல் எழுப்பியது.

உமேஷ் மிருதுவான புன்னகையுடன் வெளியே நின்றான். சன்னல் கம்பிகள் அவனைக் கட்டம் போட்டிருந்தன.

லாலி நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆர்வம் பொங்க, —ஹௌ டூ யு டூ! என்றாள்.



## பழைமையே போ! நாகரீகனே வா!

**கார்ட்டர் காலத்திய 'சுதந்திர'ங்களையெல்லாம் விரட்டி அடித்துவிட்டார் ஜனதிபதி ரீகன். புதிய சட்டதிட்டங்களின்படி—**

வெள்ளை மாளிகை சிப்பந்திகள் யாரும் கன்னுபின்னுவென்று உடை அணியக் கூடாது. பெண்கள் ஸ்லாக் சட்டைகள் போடக்கூடாது. எவரும் மற்றவரைச் செல்லப் பெயரால் கூப்பிடக் கூடாது. 'மிஸ்டர்' போட்டுத்தான் அழைக்க வேண்டும். பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் ஆளுக்கு ஆள் கேள்விகள் கேட்கக் கூடாது. கண்ணியமாகக் கையை உயர்த்திவிட்டு, ஜனதிபதி பார்க்கும் போதுதான் கேள்வி கேட்கவேண்டும்.

டைம்

ரீகன்

காலுக்கு வைத்தியம் இப்படிச் செய்ய வேண்டும்.
(கலியுக ராமுடு படத்தில்: என்.டி.ஆர்.—ரத்தி)
காலுக்கு உபசாரம் செய்வது எப்படி? (62'ம் பக்கம்)

—ஃபைன். நீங்க?

—தேவலே.

—வலி குறைஞ்சிருக்கா?

—குறைஞ்சிருக்கு.

—இதோட ஆறு வாட்டி உங்களைப் பார்த்துட்டுப் போயிட்டேன். நீங்க தூங்கிக்கிட்டே இருந்தீங்க.

அந்த நல்லெண்ணச் செய்கை அவள் இதயத்தை ஸ்பரிசித்தது. —ஓ! நீங்க வந்தீங்களா? என்று பாதி வெட்கமாகக் கேட்டாள்.

—நேத்திக்கு மட்டும் நாலு வாட்டி! இன்னிக்கு இரண்டு வாட்டி! நீங்க புரண்டுகிட்டே இருந்தீங்க. பலமா குத்திட்டாங்களா?

—உங்களுக்குத் தெரியுமா? ஆச்சரியத்துடன் கேட்டாள்.

—தெரியும். ஸ்டோர்கேஸ் மேலே ருந்து பார்த்தேன். ஓங்கிக் குத்துனுங்க பாரு! கண்ணை மூடிக்கிட்டேன். ரூமுக்கு ஓடிப் பிரார்த்தனை செஞ்சேன். வலி குறையணுமின்னு.

—பலிக்குமா?

—எங்க காலேஜ் பாதிரியார் சொல்லியிருக்கார் *more things are wrought by prayer than the world dreams of:*

—தாங்க் யூ. எனக்கு வலி குறைஞ்சிருக்கு.

அவன் கம்பியை வருடினான். அவள் ஒரு விரலால் நாற்காலியின் பிடியை வருடினாள்.

கண்களில் இதமான நீர் வந்திருந்தது. யாரோ கனிவாக விசாரிப்பது மனத்தின் ஓரங்களில் இனிமை கொடுத்தது. வார்த்தைகளுக்கு என்ன சக்தி என்று நினைத்தாள். முகத்தில் சோகம் மாறி நிர்மலம் வந்தது.

அவன் மீண்டும் தொடங்கினான். —உங்களை ஸெக்யூரிஷன்லே வச்சுட்டாங்க. ஏதாவது உதவி வேணும்னு கேளுங்க, நான் செய்யறேன்.

—ஓ, ரொம்ப நன்றி! என்றாள்

மகிழ்ச்சியுடன்.

—உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா?

—லாவி.

—வாட் எ நேம்!

—டெட் ஷேம்! என் உண்மைப் பெயர் விசாலி. சின்ன வயசிலே நான் என் பெயரை லாவி லாவின்னு சொல்வேனும், அது நிலைச்சுட்டது.

—ஓ!... லாலியைவிட விசா நல்லாருக்கும். பெண்களின் பெயர் நெடில் எழுத்திலே முடியணும்னு மனு சொல்லியிருக்கார்.

—ஓ, க்ரேட். என்னை விசான்னு கூப்பிடுங்க. இப்போதே விசா கிடைச்சு வேறே தேசம் போற மாதிரி இருக்கு, என்ரூள் பாதி ஹாஸ்யத்துக்காக.

—நிச்சயம், விசா! இங்கே இந்த ஹோம் என்னதான் ஸ்வீட்னு அடைமொழி கொடுத்தாலும் நரகம்தான். இதிலே மாட்டிக்கிட்டோம். என்னிக்கு வெளியிலே போவோமோ தெரியலை. ஆனா நம்ம மனசு கிடந்து வெளி உலகங்களுக்குப் போகணும்னு துடிக்குது. அதுக்குச் சுலப வழி என்ன? இப்படி ஒருத்தருக்கொருத்தர் சந்திக்கும்போது இனிமையாய்ப் பேசணும். அதன் மூலம் ஒருத்தருக்கொருத்தர் வெளி உலகத்திலே மானசீகத்திலேயாவது சஞ்சரிக்க விசா கொடுத்துக்கணும். இல்லியா, விசா?

—யூ ஆர் ரைட். இங்கே விட்டுப் போக முடியாதா?, கஷ்டம்னு சொல்றீங்களா?

—எனக்கு அப்படித்தான் இருக்கு. டாக்டர் பெஞ்சமின் இருக்காரே! கிராதகர்.

—ஓ!

—நான் உண்மையிலே ஒரு நோயாளி இல்லை, தெரியுமா?

அதிர்ச்சியுடன் லாலி பார்த்தாள். —இது உண்மையா, உமேஷ்.

—சத்தியமா. அது மட்டுமில்லை. இந்த ஆஸ்பத்திரியிலே மூணு நாலு பேர் கொலை செஞ்சவங்களே இருக்காங்க.

லாலியின் கண் சுருங்கியது.

—அவங்களை மன நோயாளின்னு சொல்லி, வேணுமின்னே உள்ளே பாதுகாப்புக் கொடுத்திருக்கார் இந்த டாக்டர்.

லாலி ஸ்தம்பித்தாள்.

(தொடரும்)

---

# இன்று வேதனை—24 மணி நேரத்தில் விருது

குடியரசு தினத்துக்கு முன் தினம். கொல்லத்தில் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுக்குக் கச்சேரி. திறந்த வெளியில் பதினாயிரக்கணக்கானவர் கூடியிருக்கிறார்கள். திடீரெனப் பெரும் மழை. காற்று. மேடைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த ஆயிரம் வாட்ஸ் பல்ப் கீழே விழுந்து உடைந்தது. கிருஷ்ணனுக்கு மிகுந்த மன வேதனை. அத்துடனேயே வேறு மேடைக்கு மாறி, கச்சேரியை முடித்தார்.

மறுநாள் காலை டிபன் கூடச் சாப்பிடாமல், கிளம்பினார். 9 மணி சுமாருக்கு, சங்கரன் கோவிலையடுத்த புளியங்குடி கிராமத்துக் கடைத் தெருவில் நிறுத்தினார். டிரைவர் அன்றைய தினசரி பேப்பர் ஒன்று வாங்கி வந்தார். நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுக்கு பத்மஸ்ரீ விருது கொடுக்கப்பட்டிருக்கும் செய்தி அதில் வெளியாகியிருந்தது. சந்தேகம் தீர, வேறொரு கடையில் இன்னொரு செய்தித்தாள் வாங்கி வரச் சொன்னார். பத்மஸ்ரீ பட்டம் கிடைத்த செய்தி உண்மைதான். முந்தின நாள் இறைவன் தன்னை வேண்டுமென்றே வேதனைப்படுத்தி வேடிக்கை பார்த்திருக்கிறார் என்று புரிந்து கொண்டார்.

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

சேலம் மாவட்டத்திலேயே முதன் முறையாக இவர்தான் பத்மஸ்ரீ பட்டம் பெற்றிருக்கிறார்.

—என்.பி.

# கலைமகள் ஒரு மகா

புஷ்பா தங்கதுரை



மகான்களின் உபதேசமும் ஸைக்கோ அனலிசிஸ்தான். மனத்தை அதன் பந்தங்களிலிருந்து விடுவிக்க வழி சொல்லுகிறார்கள்.

—Harry Overstreet

**9**

காலையின் புதுவெளிச்சம் வராந்தாவில் நிரம்பி இருந்தது. உமேஷ் சன்னல் கம்பி முன்னல் நின்று லாலியிடம் பேசிக்கொண்டிருந்தான்.

காற்று சுத்தமாக இருந்தாலும், ஆஸ்பத்திரியின் கதம்ப நெடிகள் அதை ஊடுருவியிருந்தன.

உமேஷ், தனது கண்களில் பளிங்கு வெளிச்சம் தெறிக்க லாலியிடம் பேசினன்.

லாலி ஏற்கெனவே குழம்பி இருந்தாள். இப்போது மேலும் குழம்பி—உமேஷ்! இது உண்மையா? இந்த ஹோமியோபதி கொலைகாரங்க இருக்காங்களா? என்று கேட்டாள்.

—இருக்காங்க! என்றான் உமேஷ்.

—உள்ளே எப்படி வந்தாங்க? என்றாள் பரபரப்புடன்.

—பெஞ்சமின் பாதுகாப்புக் கொடுத்திருக்கார் என்றான் உமேஷ்.

—ஓ! இவர் ஒரு டாக்டரா? இப்படிச் செய்யலாமா? என்றாள் வெறுப்புடன்.

—நோயாளின்னு சொல்லி உள்ளே வச்சிருக்கார். சட்டம் அதை அனுமதிக்கும் என்றான் உமேஷ்.

ஏற்கெனவே மனம் அதன் மூட்டிலிருந்து ஆடியது. இப்போது ஒருவித பீதி அதைப் பற்றியது. —உமேஷ்! உமேஷ்! ஏன் டாக்டருங்க இப்படிப் பாதுகாப்புக் கொடுக்கிறாங்க? ஆபத்து இல்லையா? இங்கே என்னைச் சுற்றி என்னென்னவோ நடக்கிறது உமேஷ். புரிஞ்சுக்க முடியல்லை... புரிஞ்சுக்க முடியல்லை.

என்று தனக்குள்ளே புலம்பலாகச் சொன்ன அவள்—உமேஷ்! நீங்க ஒரு நோயாளி இல்லையா? என்றாள்.

—இல்லை, விசா! என்றான் அவன்.

—பின்னே ஏன் உள்ளே வந்தீங்க?

—அது ஒரு கொடுமை. அந்தக் கதையை அப்புறம் சொல்றேன், என்றான் அவன்.

கடைசி வார்த்தைகள் ஈரத்தில் நனைந்தவை. லாலியை அவை தொட்டன. அவள் இரக்கத்துடன் பார்த்தாள்.

—நீங்க நோயாளி இல்லையா? ஒரு விஷயம் தெரியுமா உமேஷ்? நானும் நோயாளி இல்லை, என்றாள் முறுவலுடன்.

—ஓ! என்றான் உமேஷ். —உங்களை ஏன் இங்கே கொண்டு வந்தாங்க?

—அதுவும் கொடுமை. எனக்கு ஆங்ஸைட்டி மேனியா உண்டு. அதனுலே சமயங்களிலே டிப்ரஷன்லே இருப்பேன். மருந்து சாப்பிட்டுட்டேன்னு சரியா யிடுவேன்..

—அதுக்கு வீட்டிலேயே இருக்க லாமே!

—இருக்கலாம். ஆனல் நான் சொல்றதை யாரும் எடுத்துக்க மாட்டேங்கறுங்க! நான் பார்த்தது, பார்க்கிறது எல்லாமே பிரமை என்கிறுங்க. என்னுலே நம்ப முடியல்லே. ஒரு நாள் விவரமா சொல்றேன். என் னை நம்புவீங்களா என்றுள் லாலி கெஞ்சும் தொனியில்.

உமேஷ் பதில் சொல்வதற்குள் வராந்தாவில் காலடிகள் கேட்டன. தெய்வ வாழ்க்கை சங்கத்தாரின் ஐந்து பேர் கோஷ்டி ஒவ்வொரு அறைக்கும் வந்து கொண்டிருந்தார்கள்.

ஓர் ஆண் நர்ஸ் அவர்களைப் போலி வினயத்தில் பின்பற்றிக் கொண்டிருந்தான்.

கும்பலைப் பார்த்ததும் —பிரார்த் தனைக்காரங்க வராங்க! என்று சொல்லி, உமேஷ் நொடியில் நழுவினன்.

பிரார்த்தனைக்காரங்கள் தூய வெளுப்பு ஆடைகளுடன் திருநீறு பூசிய நெற்றிகளுடன் லாலியின் அறைக்கு வந்தார்கள்.

ஆண் நர்ஸ் திறந்துவிட எல்லோரும் அறையுள் நுழைந்து இயல்புக்கு அதிகமான இரக்கத்துடன் லாலியைப் பார்த்தார்கள்.

'ஹரே ராமா, ஹரே கிருஷ்ணு' என்ற நாமாவளியை மெல்லிய அடக்கக் குரலில் கோரஸாகப் பாடிவிட்டு அவள் கையில் விபூதியை வழங்க,

லாலியின் கண்கள் ஏன் மரத்து நின்றன?

பின்னல் சற்று எட்டி நிற்கும் அந்த ஐந்தாவது நபர் யார்?

அவனைத்தான் கூர்ந்து கவனித் தாள் லாலி.

அந்த ஆசாமி அதிகமான நீறு பூசியிருந்தார். நடுவில் பொட்டு வைத்திருந்தார். இரு முன் வழுக்கைகளும் அவர் நெற்றியை விஸ்தாரமாக்கி இருந்தன.

அவரது தாடை எலும்புதான் லாலியை அடையாளம் காண வைத்தது.



நிச்சயம் அவன் கறுப்புக் கண்ணுடிக்காரன்தான். இங்கே தலையைப் பரத்திவிட்டு விபூதி அணிந்து பக்திப் பழமாகக் காட்சி தந்தான்.

அவன் லாலியை கனமான பார்வையுடன் பார்த்தான். பிறகு பார்வையை வேறுபுறம் திருப்பிக்கொள்ள லாலியின் உள்மனத்தின் பிசாசுத்தனத்தைத் திறந்து விடுவதற்கு அது போதுமானதாக இருந்தது.

—வீ... என்று ஒரு இரைச்சல் அவளது வாயிலிருந்து கிளம்பியது. காலையும் கையையும் வலிப்பு வந்தவள்போன்று உதறி—இவன்தான்! இவன்தான்! இவன்தான் கொலைகாரன், பிடியுங்க பிடியுங்க! என்று கத்தினுள்.

ஐவர் கோஷ்டி மலைத்துப்போய் நிற்க—நீங்க வெளியிலே போகலாம்! என்று அவர்களை உடனே வெளிப்புறம் தள்ளினுர் ஆண் நர்ஸ்.

பிறகு அவன் லாலியைப் படுக்கைக்குள் தள்ள முயல—இவன்தான் கொலைகாரன்! இவன்தான் திருடன்! என்று கத்திக்கொண்டே அவள் மூர்ச்சையானுள்.

—(முழிக்க ஆரம்பிச்சுட்டா! நினைவு வந்துட்டுது. என்றுர் பெஞ்சமின்.

ஸிரிஞ்சை எடுத்து ஒரு

பிளாஸ்டிக் பெட்டியில் வைக்க, அவரது உதவியாள் அதை மிக மெதுவாக மூடி எடுத்துப்போனான்.

—இவள் சீக்கிரம் சரியாவாளா? என்றார் அந்த நெடு உயர ஆசாமி. நாற்பத்தைந்து வயது இருக்கும். அவர் கன்னத்தில் மச்சம். தலை நிறைய நரை. அவரது எலும்புக்கூட்டுத் தேகத்தைத் தொள தொளப்பான சட்டை மறைத்தது. தவிரலால் அடிக்கடி சட்டையை இழுத்துக்கொண்டிருந்தார். பெயர் நாகசாமி.

லாலியின் அத்தை மகன் அவர். அத்தை அவரை ஊரிலிருந்து வரவழைத்திருந்தார். ஹோமில் அவர் வந்து பார்த்தபோது லாலி நீண்ட மயக்கத்தில் இருந்தாள்.

—வேண்டாத ஆங்ஸைடி ஸார் இவளுக்கு!

—எங்களோட ஒத்துழைச்சாக் குறைச்சுக்கலாம். ஆனா ரொம்ப அழுத்தக்காரியா இருக்கா! சொல்றதைக் கேட்கிறதில்லை. எப்படிக் குணமாகும்? யாரைப் பார்த்தாலும் இவன் தான் கொலையாளின்னு கத்தறா. நேத்து இப்படித்தான் பெரிய பணக்காரர். இந்த ஹோமுக்குப் பத்தாயிரம் ரூபாய் சமீபத்திலே டொனேஷன் கொடுத்திருக்கிறார். அவரைப் போய்க் கூசாமல் கொலையாளின்னு சொல்றா. இவ ஒரு மன நோயாளின்னு சொல்றதுக்கு இதுக்கு மேலே அத்தாட்சி என்ன வேணும்?

—டாக்டர், இப்படி வாங்க! என்று நாகசாமி அவரை அழைத்துக் கொண்டு வெளியே போனார். வராந்தாவுக்கு வந்து மிகவும் அந்தரங்கமான குரலில்,—டாக்டர், நீங்க எத்தனையோ கேஸ் பார்த்திருப்பீங்க! இந்தக் கேஸ் குணமாகுமா, ஆகாதா? என்றார் கூர்மையாக.

டாக்டர் பெஞ்சமின் தமது கோட்பாக்கெட்டுள் கைவிட்டு வெறுமையை நோண்டினார்.

—யு ஸீ! எனக்கு நீங்க அனுமதி அளிச்சீங்கன்னு என்னாலே ஆன எல்லாச் சிகிச்சையும் அளிச்சிடுவேன் என்றார் பெஞ்சமின்.

—நீங்க தாராளமா என்ன வேணாலும் செய்யுங்க. நான்தான் அவளது லீகல் கார்டியன். சொல்லப்போனால்... (அசட்டுச் சிரிப்பு உதிர்த்தார்...) லாலிக்கு ஏதாவது நேர்ந்ததுன்னு சொத்தெல்லாம் எனக்குத்தான்! என்றார் நாகசாமி.

கடைசி வாக்கியம் பெஞ்சமின்னைச் சிறிது இழுத்தது. நாகசாமியை ஏறிட்டுப் பார்த்தார். —எனக்கு ஒன்றும் வேண்டாம், ஸார்! இந்தப் பெண் செல்லமா வளந்துட்டுது. அதனாலே மமதை நிறைய இருக்கு. அது இவளுடைய உண்மை சொரூபத்தை மறைக்குது. எனக்கு முழுச் சுதந்திரம் கொடுங்க! இவளைத் தங்கக் கம்பியாக்கிப் பைத்தியத்தை ஓட்டிடறேன்.

—செய்யுங்க டாக்டர்! என்ன ட்ரீட்மெண்ட் கொடுக்கணும் சொல்லுங்க!

—எனக்கு ஃபிரி ஹாண்ட் வேணும். நான் பழைய மெதேட், புதிய மெதேட் எதை வேண்டுமானாலும் உபயோகிப்பேன். கடுமையான சிகிச்சைகூட மேற்கொள்ளுவேன். எப்படியாவது இவளைச் சீக்கிரம் குணப்படுத்தணும். கொலைக்கேஸ் விசாரணை காத்துக்கிட்டிருக்கு. போலீஸ் இன்ஸ்பெக்டர் போட்டோவைக் கையில் வச்சுக்கிட்டு அல்லாடறார். இவள் மூளை சரியா இருந்தாத்தானே ஐடெண்டிஃபை பண்ண விடலாம்.

நாகசாமி பெஞ்சமின் கையைப் பிடித்தார். —நீங்க தைரியமா இறங்குங்க! நான் உங்களுக்குப் பூரா அனுமதி தரேன்.

—டாக்டர்! என்று அப்போது குரல் கேட்க, இருவரும் திரும்பினர்கள்.

லாலியை ஒரு ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து ஸ்ட்ராப் பூட்டி, இருவர் எடுத்துப் போய்க்கொண்டிருக்க,



இரண்டு படங்களுக்கும் குறைந்தபட்சம் ஆறு வித்தியாசங்கள் இருக்கின்றன. விடை 54ம் பக்கம்

அட்டையில்: பரத நாட்டிய மாணவி திருமதி மாலினி.

பம்பாய் கமலா நேரு பூங்காவில் எடுக்கப்பட்டது.

வண்ணப்படம்: உத்ரா

ஒரு ஸோஷியல் ஒர்க்கர் அவர்கள் பின்னல் போய்க் கொண்டிருந்தாள்.

—டாக்டர்! டாக்டர்! என்று பரிதாபமாகக் கூவினாள் லாலி. குரல் அதிகம் மேலே எழும்பக்கூட இல்லை. ஒரு நாள் பூராவான ஸைடேடிவ் அவளைப் பெரிதும் பாதித்திருந்தது.

"டாக்டர்! என்னைக் கொல்றுங்க! என் மேலே ஃபோர்ஸ் உபயோகிக்கிறுங்க... அங்கிள், நீங்களும் பார்த்து சும்மா இருக்கிறீங்களே! ஸேவ் மீ ஸேவ் மீ! என்று கத்தினாள் லாலி! நாகசாமி உணர்ச்சி இல்லாமல் கடைவாய்ப்பல்லைக் கடித்தார். —என்ன செய்யபோறீங்க, டாக்டர்? என்று கேட்டார் பெஞ்சமின்னை நோக்கி.

—அவளுடைய எல்லாக் கூச்சலுக்கும் ஒரு முடிவு கட்டப்போறேன்! என்றார் பெஞ்சமின், நாகசாமி பேசவில்லை.

—அவள் கடந்த வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருக்கு. அது வெளி வந்துட்டுதுன்னு குணப்படுத்திவிடலாம். தாங்க்ஸ் மிஸ்டர் நாகசாமி. உங்க அனுமதிக்கு நன்றி. அப்புறம் சந்திக்கலாம்! என்றவாறு மாடிப் படி நோக்கி விரைந்தார்.

தமது அறைக்குள் போய் ஒரு சிகரெட் குடித்து சில போன்கால்களை முடித்துவிட்டு வெளியே வந்த பெஞ்சமின்.

அடுத்து, ப்ரைவேட், 'நோ அட்மிஷன்' என்று போட்டிருந்த அந்த வாசலின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்.

உள்ளே பெரிய ஹால் போன்ற விஸ்தார அறை.

அவர் வருவதைக் கண்ட ஸோஷியல் ஒர்க்கர் மெள்ள எழுந்து டாக்டருக்கு இடம் கொடுத்து வெளியேறினாள்.

லாலி ஒரு சாய்மானக் கட்டிலில் படுத்திருந்தாள்.


வடை செயயும நேரமோ மிகவும குறைவு
40% எண்ணெய் மிகுவதால்
மனதிற்கும் நினறவு.

ஆர்கே®
வடை மிக்ஸ்.
இன்ஸடனட் ஜாமூன மிகஸ்.
இட்லி மிகஸ
மறறும தோசை மிகஸ.

ஸ்ரீ
ராமகிருஷ்ண
டெய்ரி.
179, விஸவேஸவராபுரம
பெங்களூர் 560004
போன்: 603482.

அவள் விழிகள் கூட இல்லாமல் வெறுமைக்குள் பார்த்திருந்தன.

லேசாகத் திரும்பி அவரைப் பார்த்தாள்-டாக்டர்! எல்லோரும் என்னைக் கொல்றீங்க! என்குரல் பலவீனமாக, குரல் நிறைய உறைந்திருந்தது.

—நோ நோ! லாலி, உன்னைக் குணப்படுத்த முயலறோம் என்குர் பெஞ்சமின்.

—அதான் எனக்கு பெண்டதால் கொடுத்துப் படுக்க வச்சிருக்கீங்களா?

—ரிலாக்ஸ்! என்குர் பெஞ்சமின்.—மெடிகல் மிஸ்டரீஸ்ல புகுந்து பார்க்காதே! சொன்னபடி செய்! சீக்கிரம் நீ வீட்டுக்குப் போயிடலாம்.

அவள் செய்வதை ஓரளவு லாலி புரிந்து கொண்டு விட்டாள் என்பது ஆச்சரியமாக இருந்தது. இருந்தும் அதைப்பற்றி எதுவும் பேசாமல்—லாலி! நான் உன் நண்பன்! என்னை வெறும் டாக்டரா நினைக்காதே! என்னுடைய சிகிச்சை உறவைவிட நட்பு உறவைப் பெரிதாக நினை. உனக்கு யார் பாட்டு பிடிக்கும்?

லாலி உடனே பேசவில்லை.

பெஞ்சமின் மேலே தொடர வில்லை—உனக்கு எந்தச் சினிமா பிடிக்கும்?

அதற்கும் அவளிடமிருந்து பதில் இல்லை.

—உனக்கு எந்த நடிகர் பிடிக்கும், லாலி!

பதில் இல்லை.

—லாலி! மனசிலே எந்த நினைப்பையும் வைச்சுக்காதே! ரிலாக்ஸ்! உன் மனம் இப்போ மேலே பறந்து போகும் பாரு! எந்தவிதப் பந்தமும் இல்லாமல் பறக்கும் பாரு! எனக்குப் பதில் சொல்லு.

லாலி மேலே பார்த்தே படுத்திருந்தாள்.

—சின்ன வயசிலே உனக்குச் சிநேகிதிகள் உண்டா லாலி?

—உண்டு.

—சிநேகிதங்க...

—அதுவும் உண்டு.

—குட், லாலி! நீ எப்போ பெரியவள் ஆனே?

(தொடரும்)


சுலபமாக ஆங்கிலம் பேசுவதற்கு




பாலாஜிஸ் ஈஸி வே டு ஸ்பீக் இங்கிலீஷ்

பள்ளியில் படிக்கும் மாணவ மாணவி களுக்கும், படித்த பின்பும் ஆங்கில இலக்கணக் குழப்பமுள்ளவர்களுக்கும், இலக்கணப் பிழைகள் இல்லாமல் சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும், கற்பிக்கவும் உதவும் ஒரே நூல்! வியாபாரிகள், தொழில் அதிபர்கள், ஆங்கிலத்தில் அதிகத் தேர்ச்சி இல்லாத மற்றவர்கள், தமிழ் மூலமாகவே இலக்கண விதிப்படி ஆங்கிலத்தைக் கற்க இதுவே ஒரு சிறந்த வெளியீடு. மேலும் இந்நூலைப் படிக்க ஆரம்பித்தவுடன் ஆசிரியர் ஒருவர் உங்களுடன் இருப்பதுபோல் உணர்வீர்கள்.

உங்கள் ஊரில் உள்ள எல்லா புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.... விலை ரூ 17.75

விபரங்களுக்கு:
பாலாஜி பப்ளிகேஷன்ஸ்
103, பைகிராப்ட்ஸ் ரோடு
சென்னை 600 014

10

# இளமைக்கு ஒரு மீசா

மனம் போலக் கடினமான பாறையும் இல்லை
மனம் போல இளசான மெழுகும் இல்லை.

—ஒரு முதுமொழி.

லாலி அந்தச் சாய்வுக் கட்டிலில் படுத்திருந்தாள். சுவரில் ஒரு வட்ட கடிகாரம் சப்தமில்லாமல் ஓடியது. காலை வெளிச்சம் அநேக வடிகட்டங்கள் தாண்டி மிருதுவாக விழுந்தது.

சற்று முன்னர் டிரஸ்ஸிங் டேபிள் அளவுக்கு இஞ்செக்ஷன் கொடுத்திருந்தார். பெண்டதாலோ, பெத்தடினோ, அமிடலோ ஏதோ ஒன்று. மனசை அது பாதிக்கும் என்பது மட்டும் அவளுக்குத் தெரியும்.

தனது உள் மனம் எப்படி மாறுகிறது என்பதைப் பார்க்க வேடிக்கையாகக் காத்திருந்தாள்.

இதுவரை எந்த மாறுதலும் தெரியவில்லை. ஆனால் அதற்குள், மருந்தின் பலன்களைச் சீக்கிரம் எதிர்பார்த்து, பெஞ்சமின் இப்போது அவள் அருகே விஸ்தார ஒன்பது சதுர அடி நாற்காலியில் அமர்ந்து கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார்.

—எப்போ பெரியவள் ஆனே?

என்ன கேள்வி இது? லாலிக்கு ஆத்திரமாக வந்தது. உதட்டைக் கடித்தாள். பிறகு அவர் பக்கம் திரும்பி, —என்னை என்னவென்று நினைச்சுட்டீங்க, டாக்டர்? என்று கோபமாக ஒரு போடு போட்டாள்.

பெஞ்சமின்னுக்கு அது பொறியைக் கிளறியது. ஆனால் இந்த மன விசாரணை நேரத்தில் அது சரியல்ல என்று அடங்கினார். பொதுவாக அவருக்கு இந்த ஸைகோ அனலிஸிஸ் பிடிப்பதில்லை. நீண்ட நீண்ட மணி நேரங்கள் நோயாளி பக்கத்தில் அமர்ந்து, அத்தை பாட்டிக் கதை பேசிக்கொண்டு...

—லாலி! செக்ஸ் அதிலே ஒரு உப அங்கம். உன்னுடைய அந்தரங்கம் எல்லாம் எனக்குத் தெரியணும். அந்தப் பக்கம் திரும்பிக்கோ. ரிலாக்ஸ். நான் உன் நண்பன். என்னை நம்பு.

லாலி சூன்யத்தைப் பார்த்துத் திரும்பினாள். பல்லைக் கடித்தவாறு, —டாக்டர்! எனக்கு செக்ஸிலே அதிர்ச்சி, அனுபவம், பயம், எதிர்பார்ப்பு, ஆசை எதுவும் கிடையாது. ஸில்லி கேள்விகளைக் கேட்காதீங்க, என்றாள்.

'ஸில்லி' இரண்டு மூன்று ஊசிகளை அவர் உடம்பில் செருகியது. கோபம் உராய்ந்து கொண்டு வந்தது. அதைச் சிரமத்துடன் தணித்தார்.

—இல்லை, லாலி! உனக்குத் தெரியாமல் மனசிலே என்னென் னவோ இருக்கும். நான் உனக்கு உதவிதானே செய்யறேன்? பொறுமையாச் சொல்லு,

புஷ்பா தங்கதுரை

போமேறும். உன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். சொல்லு பார்ப்போம்.

—ஸார்!. என் சந்தோஷம் தானே வேணும்?

—ஆமாம்.

—என் பயத்தை முதல்லே நீக்குங்க.

—அதைத்தானே முயற்சிக் கிறேன்?

—எங்கே செஞ்சீங்க? அந்தக் கண்ணுடிக்காரனைப் பிடிச்சீங்களர்? ஒரு பக்தன் போல வேஷம் போட்டுட்டு வந்தானே, அவனைப் பிடிச்சீங்களா?

கேள்விகள் அவர் செவிடடை உடைத்தன.

—லாலி! என்றூர். அவரை அறியாமல் கடுமையின் சாயல் சிறிது விழுந்துவிட்டது. —ஊர்லே இருக்கிறவனை எல்லாம் கொலைகாரன்னு சொன்னு யாரால் யாராவது நம்புவாங்களா?

—நோ நோ! அப்படிச் சொல்லவே இல்லே. என்னை முழு நேரம் பைத்தியம்னு நினைக்காதீங்க! எப்படியோ கொஞ்சம் ஆங்ஸைட்டி வரும். அதைப் பெரிது பண்ணி... டாக்டர் ஸார்! நான் சொல்ற கண்ணுடிக்காரனும், பக்தனும் ஒண்ணுதான். அவனைப் பிடியுங்க! என் கலக்கம் மறைஞ்சுடும்.

பெஞ்சமின் பென்ஸிலைத் திருகி மேலே பார்த்தார். —ஐம் ஸாரி லாலி! நீ அது போலீஸ் விஷயம். இப்போ எனக்கு ஏற்பட்டிருக்கிற பிரசினை எம்பிள். உனக்கு முன்னுடி ஒருமுறை ஆங்ஸைட்டி மேனியா வந்திச்சு. மூணு மாசம் இங்கு தங்கி குணமாகிப் போனே. இப்போ, அதே மேனியா அதிகமாகி உள்ளே வந்திருக்கே! நான் சொல்றதைக் கேளு! நான் உன்னைக் குணப்படுத்தத்தான் இருக்கேன்.

அவர் சொல்வதை முடிக்க வில்லை. —அதான் என்னை ஸெக்லூஷன்லே வச்சீங்களா? ரூமை அடைச்சு சிறைப்படுத்தினீங்களா? கட்டில்லே வச்சுக் கட்டிப் போட்டீங்களா? உங்க நர்ஸ் என்னைக் குத்திறுங்க. குண்டாஸ்! ஆஸ்பத்திரியா இது! மகா மட்டமான ஜெயில் இது! ... டாக்டர்! ப்ளீஸ்! எனக்கு சிகிச்சை போதும். என்னை வீட்டுக்கு அனுப்பிச்சிடுங்க! நான் போறேன். இங்கே இருக்க எனக்கு இஷ்டமில்லை. ப்ளீஸ் ஸெண்ட் மி ஹோம். ப்ளீஸ், ப்ளீஸ்!

அவள் ஏற்கெனவே உச்ச ஸ்தாயியில் ஆரம்பித்தாள். மேலே அலை அலையாகப் போய், கடைசி வார்த்தைகளை ஹிஸ்டீரிகலாகக் கத்தினாள்.

பெஞ்சமின் முதுகில் சாய்ந்தார். அவளது கடைசிக் கதறல்கள் ஆயிரம் பேரைக் கத்திகளாக மாறிக் கீழே உதிர்த்தன.

மந்தமாக அவளைச் சிறிது நேரம் பார்த்தார். தடித்த உதடுகளைச் சிறிது மடக்கினர். பிறகு திடகாத்திரமான அடிக்குரலில் —நீ குணமாகாட்டா வீட்டுக்குப் போக முடியாது என்றூர்.

ஒரு நீதிபதி தண்டனையை

வாசிப்பது போன்ற குரலில் பெரிய முக்கியத்துவத்தை அந்த நேரம் காட்டினர்.

—ரபீஷ்! என்று சீறினாள் அவள். —எனக்கு இங்கே ட்ரீட்மெண்ட் தேவையில்லை. நான் வீட்டுக்குப் போறேன்! அதை யாரு நீங்க தடுக்கிறதுக்கு, என்றாள் அவள்.

—நான் தடுக்கலை. உன் கார்டியன்கள் தடுக்கிறாங்க!

—யாரு என் கார்டியன்?

—உன் அத்தை, அவர் மகன் மிஸ்டர் நாகசாமி!

லாலிக்கு வந்த ஆத்திரம் முகத்தை வரிகளாக்கியது. —வாட் டூ யூ மீன்? நான் ஒரு மேஜர்! எனக்கு ஏது கார்டியன்? நான்தான் என்னோட கார்டியன்.

—உன் காரியங்களைக் கவனிச்சிக்க உனக்கு சுய அறிவு இருக்கும்னு நான் ஸர்ட்டிஃபை பண்ணற வரை நீ இன்னொருத்தரின் பாதுகாப்பிலேதான் இருக்கணும்.

—டாக்டர் என்று சீறினாள் அவள். மேலே வார்த்தைகள் வரவில்லை. அவளது விவாதங்கள் எல்லாம் அவுட்டாகிவிட்டன. உள்ளே, கோபம் வார்த்தைகளுக்காக அல்லாடியது. அதில் திக்கு முக்காடி அவள் மூளையில் ஒரு கதவு படீர் என்று வெடிக்க, அடக்கத்தை உதறி எறிந்துவிட்டு, —யூ ஸ்டுபிட் டாக்டர்! யூ ஸ்கௌண்ட்ரல்! யூ ஆர் எ மேனியாக்! ஸாடிஸ்டிக் மேனியாக்! என்று கத்தினாள்.

அவள் முடிப்பதற்குள் அவர் எழுந்து விட்டார். கதவை நோக்கி ஏற்கெனவே நகர்ந்து கொண்டிருந்த அவரை 'ஸாடிஸ்டிக் மேனியாக்' பின்பற்றி வந்தது.

கதவைப் படாரென்று சாத்தினர்.

அதில் அவரது ஆத்திரம் தெரிந்து விட்டது. வெளியே நர்ஸுக்குக் கண்ணைக் காட்டிவிட்டு, படிகளில் ஏறினர். அவர் தன்னைத்தானே ஸைகோ அனலிஸிஸ் செய்வதில் வல்லவர். அவருக்குத் தெரியும். அவர் மனத்தில் கொஞ்சம் ஸாடிஸம் மறைந்து இருக்கிறது என்று. சில விரக்தியான கணங்களில் மேஜை மீது காலைப் போட்டு, அந்த ஆஸ்பத்திரியே தமது ஸாடிஸத்தில் அமுங்கி நிரந்தர நோயாளியாக இருக்கிறதோ என்று நினைத்தார்.

சரியாகச் சொல்லி விட்டாளே! ஸாடிஸ்டிக் மேனியாக்! இந்தப் பெண்ணுக்கு உறுதியான மனப் இருக்கிறது. எந்த மருந்துக்கும் அது இளகாது.

அத்தை ஜானகிபாய் உள்ளிருந்து காப்பி கொண்டு வந்தாள். கொஞ்ச நாள் பாட்டு உலகிலும் பிறகு காலட்சேப உலகிலும் பெயரைக் காட்டியவள். சகோதரர் விச்வேச்வருக்கு அவளைப் பிடித்ததில்லை. தாம் உயிரோடிருந்தவரைப் பாதுகாப்பான தூரத்தில் தள்ளியிருந்தார். எப்போதாவது ஜானகியைச் சேர்த்துக் கொண்டாலும் கொள்வார். அவளது பையன் நாகசாமியைப் பிடிக்கவே பிடிக்காது.

நாகசாமி நாற்பத்தைந்து வயதில் படுகிழம் ஆகியிருந்தார். சதா வெற்றிலை சுவைக்கும் வாய். சும்பிப்போன பின் புறத்தில் பாண்ட் தொள தொளவென்று தொங்க, விஸ்தார ஜிப்பா அவரது உடலைக் கொடிக் கம்பியாகப் பாவித்து எல்லாத் திசைகளிலும் காற்றில் வெட வெடத்தது.

—லாலி எப்படி இருக்கா? என்று சொல்லி ஜானகி அத்தை காப்பியைக் கொண்டு வந்து டீ டேபிளில் வைத்தாள்.

FORCES PDF TIMES .COM

இந்த இதழ் அட்டையில்:

படம்—4

யார் அவர்? ஜெயகாந்தன்? பூர்ணம் விசுவநாதன்? கண்ணதாசன்? தீபம் பார்த்தசாரதி? அகிலன்? மீ.ப. சோமு?

இப்போது விடை எழுத வேண்டாம். 6 படமும் வெளியானபின் எழுதுங்கள்.

நாகசாமிக்கு ஆஸ்பத்திரியிலிருந்து வந்த அவசரம். ஃபோனைச் சுழலவிட்டு அப்பாடி என்றார்.

—அவ எங்கே தேறப் போறு? என்றார் முகத்தைக் குலுக்கிக் கொண்டு.

—டாக்டர் என்ன சொல்லறார்?

—உலகத்திலே என்னென்ன சிகிச்சை உண்டோ அத்தனையும் செஞ்சு பார்க்கிறேன்னார். தாராளமாய்ச் செய்யுங்கன்னுட்டேன்.

—இப்போ எப்படி இருக்கு?

—இன்னும் ஆர்ப்பாட்டந்தான்! ஆட்டந்தான், பாட்டந்தான். எங்கேயோ தீண்டலோடு போயிருப்பா, முனி அடிச்சுட்டுது.

கையையும் காலையும் 'இண்டு' மார்க் வடிவத்தில் நீட்டி, சோபாவில் ஹீராயாக விழுந்தார்.

மேற்கத்திய மோஸ்தரில் ஜோடிக்கப்பட்டிருந்த அந்த ஹால் அவருக்கு மிகப் பெரிய மனத் திருப்தியைக் கொடுத்தது. ஒவ்வொரு மில்லி நேரத்தையும் அவர் அனுபவித்தார்.

காப்பியை அவசரமாக எடுத்துப் பருகினார். விச்வேச்வருடைய பங்களாவின் எல்லா வசதிகளும் சௌகரியங்களும் இப்படிக் குருட்டாம் போக்கில் அவரை வந்தடையும் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

—குணப்படுத்த முடியும் என்கிறார, இல்லையா?

—முடியாட்டி என்ன? லேபோடமி பண்ணச் சொல்லிட்டேன்.

—என்னது அது?

—மூளையிலே ஒரு ஆபரேஷன் அம்மா!

—எதுக்குடா?

—இப்படிப் பேய் மாதிரி தினம் கத்திட்டிருந்தா யார்தான் பொறுத்துக்கிட்டிருக்க முடியும்? அதுக்கு ஒரு பரிகாரம் வேண்டாமா!

—இது பரிகாரமா?

—நிரந்தரப் பரிகாரம்.

—அப்புறம் சரியாயிடுவாளா?

—கத்த மாட்டா. அவ்வளவுதான். மனுஷக் காய்கறி மாதிரி! உயிர் இருக்கும். உணர்ச்சி ரொம்பக் குறைஞ்சுடும். வெஜிடபிள் லைஃப்.

அத்தை திடுக்கிட்டாள்.

—வெறும் ஜடமா இருப்பாளா?

—ஆமாம்மா!

—அய்யோ!

—ஏன் பயப்படறே! ஹிஸ் டீரியாவிலே ஆயுள் பூராவும் கத்திக்கிட்டே இருக்க ஒத்துப்பியா?

அத்தை நிதானமாகப்

பெங்களூரில் தீ விபத்துக்குள்ளான சர்க்கஸ் கம்பெனி இப்போது கிருஷ்ணகிரிக்கு வந்துள்ளது. அந்த விபத்தில் தீக்காயமடைந்த ஒரு நீர் யானை சமீபத்தில் இறந்து போனதாயும் அதன் விலை ரூ. 75,000 என்றும் சர்க்கஸ் நிர்வாகியொருவர் கூறியிருக்கிறார்.

ஒரு நீர் யானையின் விலை அவ்வளவா?


(40'ம் பக்கம் பார்க்க)

பாவையைக் கீழே இறக்கினாள். ஒத்துக்கொள்ள முடியாதுதான்.

—அப்போ ஆயுள் பூராவும் நாம்பதான் கார்டியனு?

—ஆமாம்மா, இருந்துட்டுப் போறது! என்று சொல்லி அந்த ஹாலையும், அதன் கண்ணாடிகள், மேஜை அமைப்புகளையும், மேலே தொங்கும் பெயிண்டிங்குகளையும் வெளியே பரந்திருந்த தோட்டத்தையும் ஒருமுறை சுற்றிவரப் பார்த்தார்.

அவைகளோடு அவருக்குச் சிக்கிரம் சொந்தம் ஏற்பட்டிருந்தது.

உமேஷ் ஒரு வாரமாகத் தவித்துக் கொண்டிருந்தான் மாடியில். லாலியின் அறை பூட்டிக் கிடந்தது.

விசாரித்ததில் அவள் 'டி' வார்டில் இருப்பதாகத் தெரியவந்தது.

'டி' வார்ட்தான் வயலண்ட் வார்ட் என்று அவனுக்குத் தெரியும்.

முரட்டுத் தனம் காட்டுகிற நோயாளிகள் அங்கே பாதுகாக்கப் படுவார்கள்.

அதன் நரகத் தன்மை அவனுக்குப் புரியும். லாலி அங்கே அகப்பட்டுக் கொண்டாள் என்பதைக் கேட்க எவ்வளவு வேதனையாக இருந்தது.

'டி' வார்டு அடுத்த கட்டடத்தில் இருந்தது. தினமும் மாடி வராந்தாவிலிருந்து அந்த வார்டு ஜன்னல்களைப் பார்ப்பான். எப்போதாவது லாலி தெரிய மாட்டாளா என்று ஆதங்கம்.

அன்று மத்தியானம் வழக்கம்போல் நின்றபோது கழுத்தில் ஒரு கை விழுந்தது. திரும்பிப் பார்த்தால் நர்ஸ் சுசீலா நின்று கொண்டிருந்தாள். மேலுதட்டில் மட்டும் அவளுக்குப் புன்னகை வரும். —நீ என்ன, எப்போதும் இங்கே நிக்கறது? என்று வெறுப்பாகக் கேட்டாள். அந்தக் கேள்வியில் ஒரு செல்லத்தனம் பொதிந்திருப்பது அவனுக்கு மட்டும் தெரியும்.

உமேஷின் வழ வழப்பான பிடரியில் ஸ்பரிசித்து, அவனது கண்ணம் வரை விரல்களை இழுத்து விடுவது அவள் பொழுதுபோக்கு.

அதிர்ச்சியானவன் போல் உமேஷ் அவளைப் பார்த்தான். சுசீலா தனது கையை எடுத்துத் தோள் மீது வைத்தாள்.

—இங்கே இப்படி நின்னு டாக்டர் சத்தம் போடும். என்ன பார்க்கிறே அங்கே! என்றாள்.

—லாலி அங்கே இருக்காளா? டிஸ்சார்ஜ் ஆயிட்டாளா?

—ஓஹ்ஹோ ஹோ! என்றாள் சுசீலா. —அதானே பார்த்தது! லாலி இன்னிக்கு சாயங்காலம் இங்கே வரும். ஒரு கோர்ஸ் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தாச்சு.

உமேஷ் கால்களைக் கீழே அழுத்தினான். உண்மையில் அந்த மின்சாரம் அவன் நெற்றிப் பொட்டு வழியாகப் பாய்ந்து அவன் மூளையை ஒரு சாடு சாடியது. பதட்டத்துடன் கைப்பிடிச் கவரைப் பிடித்தான்.

—ரூமுக்குப் போகணும்! என்று மீண்டும் அவனைச் செல்லமாகத் தட்டிவிட்டு சுசீலா பறந்தாள்.

அவன் போவாயைக் கொஞ்சுகிற மாதிரி அவள் தட்டியதுகூட அவனுக்குச் சுவாரஸ்யம் தரவில்லை.

—பெஞ்சமின் ஒரு ஸாடிஸ்ட்! வஞ்சித்து விட்டார்! என்று நினைத்தான்.

கூடான கண்ணீர் விழிகளை நிறைத்தது.

(தொடரும்)

''மேனேஜர் இருக்கும்போதெல்லாம் டைப்பிஸ்ட் ஏன் திரும்பிப் பார்க்கிறாள்?''

''அவர் Look Look என்னு இருக்கிறாரில்ல!''

—பல்லவராஜா

# தாமரை

11

வேதங்கள் ஒன்றுக்கொன்று எதிராகக் கூறுகின்றன. சுமிருதிகளும் ஒன்றை ஒன்று விரோதமாகப் பேசுகின்றன. அது போல் மகான்களின் உபதேசமும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. உண்மை எப்போதும் மறைந்து கிடக்கிறது.

—ஒரு வடமொழிக் கவிதை.

மாலையில் இரண்டு ஆண் நர்சுகள் லாலியை வீல் சேரில் இழுத்து அறையில் கிடத்திஞர்கள். அவள் பலவீனமாக இருந்தாள். இரு கண்களும் அமிழ்ந்திருந்தன. உடல் வெளுத்து, உதடுகள் வெடித்திருந்தன. தலை சீவப்படாமல் சிறு சிறு கற்றைகளாகப் பரந்திருந்தன.

கதவைப் பலமாகச் சாத்தி, நர்ஸ்கள் உரத்த குரலில் பேசியவாறு போனர்கள். மாடிப் படியில் இறங்கும்வரை சப்தங்கள் கேட்டன.

லாலியின் மனம் கூனிக்குறுகியது. திகில் கண்களுடன் மெள்ளப் பார்த்தாள். நாடி அதிகமாகப் பேசியது. அவள் உள் மனத்தில் அந்த நினைப்பு ஓடியது. 'நாகரிகம் என்று உலகம் சொல்லும் அமைப்புகளில் எங்கெங்கோ பலவீனங்களும் ஓட்டைகளும் இருக்கின்றன. இல்லாவிட்டால் ஒரு சின்ன மன நோயை இவ்வளவு பெரிதுபடுத்துவார்களா?'

பெஞ்சமின் அவளுக்கு விசித்திர மனிதராகத் தோன்றினர். அவர் செய்யும் சிகிச்சை ஒருவரைக் குணப்படுத்துவதற்கா அல்லது தண்டிப்பதற்கா? கொடூரமாக இருக்கிறதே, இல்லாவிட்டால் இந்த மின்சார அதிர்ச்சி வைத்தியத்தை அவளிடம் மேற்கொள்வாரா?

கட்டிலில் கிடத்தி, காலையும் கையையும் அமுக்கி வாயில் ரப்பர் தடியைச் செருகி இரு மின் முனைகளை நெற்றியில் அழுத்தி, அப்பா! அந்த மின் அதிர்ச்சி கொடுக்கும்போது உயிர் போய் உயிர் வருகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்படி ஒரு சிகிச்சையா? ஆதிகால மனிதனின் வைத்திய சிகிச்சை போல இருக்கிறதே!

மெள்ள பலவீனக் கண்களை நிமிர்த்தியபோது சன்னலுக்கு வெளியே கருணையாக இரு விழிகள் அவளை நோக்கிக் காத்திருந்தன. உமேஷ் அங்கே நின்றான். அவன் உதடுகள் நடுங்கின. பேச்சு வரவில்லை.

அவளது மகிழ்ச்சி வெகு நாட்களுக்குப் பிறகு சுரந்தது. கைகளைத் தாங்கி மெல்ல உடலைத் தூக்கிச் சாய்வாக வைத்தாள்—உமேஷ்! என்றாள் மெல்லிய ஆவி போன்ற குரலில். கிட்டத்தட்ட வார்த்தையை உதட்டுள்ளே முணுமுணுத்தாள்.

இரு பளிங்குத் துளிகள் கன்னங்களில் உருண்டன. லாலி என்றான். குரல் காற்றில் மிருதுவாகக் கரைந்தது. —யூ ஆர் ஆல்ரைட்?

சோகமாக அவன் புன்னகை காட்டினான். இருவரும் சிறிது நேரம் பேசவில்லை. மௌனமாகப் பார்வைகளை மாற்றிக் கொண்டார்கள். இருவருக்கும் மின் அதிர்ச்சி கிடைத்துவிட்டதால் இருவர் துன்ப அனுபவங்களும் இப்போது சமமாகிவிட்டன.

—உடம்பு சரியாயிட்டதா, லாலி? என்றான் அவன். குரல் அடித்தொண்டையில் தேங்கியது.

அவள் ஒரு நீண்ட சுவாசத்தை விட்டு —சரியாயிட்டதான்னு கேட்கறீங்களா உமேஷ்! நான் எப்போ சரியில்லாம இருந்தேன்? என்றாள்.

கை விரல்களால் படுக்கையில் கோலம் போட்டாள்.

—நீ அன்னிக்கு ரொம்பக் கத்திட்டே

புஷ்பா தங்கதுரை

—என்னிக்கு?

—அந்தத் தெய்வ வாழ்க்கை கும்பல் வந்ததே அன்னிக்கு...

லாலியின் கண்கள் சிறிது தேக்கமாயின. —நீங்க கூட என்னைப் புரிஞ்சுக்கலே, உமேஷ்! என்றுள் பெருமூச்சு விட்டு.

பிறகு தீர்மானம் செய்தவள் போல் —சொல்றேன். கொஞ்சம் கேட்டுக்குங்க, என்று சொல்லி அதுவரை நடந்த கதை அத்தனையையும் ரிக்கார்டு போல் வரி பிசகாமல் கூறினாள்.

முடிந்ததும் ஒரு நீண்ட சுவாசத்தை ஓடவிட்டு, —அந்தக் கண்ணுடிக்காரனைத்தான் அந்தத் தெய்வ வாழ்க்கைக் கும்பல்லே பார்த்தேன். யாராவது அப்போ கத்தாமல் இருப்பார்களா? என்று கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

உமேஷ் யோசனையோடு நின்றான். அவன் மனத்தில் அவள் சொன்ன துண்டுத் துண்டுச் சம்பவங்கள் ஓடின. தனித் தனியானவை அவை. இவ்வளவையும் ஒருங்கிணைத்து லாலியின் மனம் ஒரு முழுக் கதையை உண்டு பண்ணியிருக்கிறது. அவை உண்மையாக இருந்தால் லாலி மற்றவர்களைப் போல் ஒரு சாதாரண குற்றமற்ற பெண், உண்மையாக இல்லாவிட்டால், அவள் ஒரு மன நோயாளி.

அது அவனுக்குப் புரிந்தது.

அவன் அவளை நம்பியிருப்பான். ஆனால் லாலியே தனக்கு ஆங்லைட்டி மேனியாவும் டிப்ரஷனும் இடையே வருவதுண்டு என்று சொன்னதால், அவள் சொன்ன அத்தனை விஷயங்களுக்கும் ஒரு சுவர் வந்து விழுகிறது என்று நினைத்தான்.

—லாலி! திருட முயற்சித்தவனை நீ பார்த்தே! அதனாலே அவன் உன் அப்பாவைக் கொலை பண்ணினான் என்கிறே! இப்போ அதே ஆள் எப்படி மெட்ராஸிலே இந்த ஆஸ்பத்திரியைக் கண்டுபிடிச்சு வந்தான்? என்றான்.

—என்னைக் கண்டு பிடிக்க வரலே. பக்கத்து எம். என். ஆர். ஜுவல்லரியிலே கொள்ளை அடிக்க வந்திருக்கான். எதேச்சையா இங்கே என்னைப் பார்த்துட்டான்.

உமேஷ் மனத்தில் ஒரு சந்தேகக் கிளை ஓடியது.

—இந்த ஜுவெல்லரியைக் கொள்ளை அடிக்க வந்தான் என்கிறே! எப்படி அதை ஊகிக்கிறே!

—அந்தக் காம்பவுண்டிலே அவனைப் பார்த்தேனே.

—அது ஒரு காரணமா ஆயிடுமா, லாலி?

அவள் மௌனமானாள்..

அவன் தொடர்ந்து, —ஜுவெல்லரியிலே எவ்வளவு பாதுகாப்பு இருக்கு! அதை யாராவது லேசிலே கொள்ளை அடிக்க முடியுமா?

லாலி தன் வசத்தில் ஆழ்ந்தாள்.

அவன் மேலும் தொடர்ந்து, —அதே ஆசாமி ஒரு பக்தன் மாதிரி வேஷம் போட்டுகிட்டு இங்கே வந்தான் என்கிறே. அவன் இங்கே வரவேண்டிய அவசியம் என்ன? ஏன் வரப்போறான்? அதனாலே அவனுக்கு லாபம் என்ன?

கேள்விகள் சரங்களாக வந்தன. லாலியால் பதில் சொல்ல முடியவில்லை.

அந்தக் கேள்விகளுக்கான விடைகளை அவளால் கண்டுபிடிக்க இயலவில்லை. தவித்தாள்.

—உமேஷ்! என்றாள் தீர்மானம் இல்லாமல். —நான் இன்ட்யூடிவ்வா அப்படி நினைக்கிறேன்!

—அது அவசியமில்லை அல்லவா? என்றான் உமேஷ். —ஏற்கெனவே உனக்கு ஆங்சைட்டி உண்டு. கற்பனையை ஓடவிட்டு ஏன் அதை இன்னும் வளர்த்துக்கிறே?

உமேஷ் சொன்னது சரியாகத்தான் பட்டது. ஆனால் அதை அவள் மனம் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறது. ஒருவேளை இங்கேதான் அவளது நோய்க்கும் நோயின்மைக்கும் இடையே உள்ள வித்தியாசம் இருக்கிறதோ!

குழப்பமாக எழுந்தாள்.

அப்பா சொன்ன, —மனசை எப்பவும் திடப்படுத்திக்கோ! வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

அப்பாவின் இந்த உணர்ச்சிக்குப் பிரதிநிதியாகத்தான் உமேஷ் இங்கே நிற்கிறானே?

எழுந்தாள்.

வெற்றுப் பார்வையாக அறையைத் துழாவினாள். உமேஷைச் சிறிது அர்த்தபுஷ்டியுடன் பார்த்தாள். பிறகு நிச்சயமில்லாதவள் போல் எதிர் சன்னலை நோக்கி நடந்தாள்.

அந்தச் சன்னல் வாயிற்புற ரஸ்தாவையும் அதை அடுத்துள்ள பிரதேசங்களையும் காட்டியது.

ஒரு விநாடி அவள் பார்வை விர்ரென்று கீழே இறங்கியது.

பக்கத்து ஜுவெல்லரிக்கு நேர் எதிரே ரஸ்தாவைத் தாண்டி ஒரு காலி மனை தெரிந்தது.

அதில் ஒரு வேப்ப மரமும் ஒரு சின்னக் கோவிலும் தெரிந்தன.

அந்தக் கோவிலின் வாசற்புறத்தில் நின்று நேராக அவள் நின்று கொண்டிருக்கும் சன்னலைப் பார்ப்பது யார்?

அதுவரை அவள் காட்டிய மெத்தனத்தைத் தாண்டி அந்த விறுவிறுப்பான ஆங்ஸைட்டி சக்தி பீறி வந்தது.

குரலைக் கட்டுப்படுத்த நினைத்தாள். முடியவில்லை.

அவள் அமுக்கப் பார்க்கும் அலறல்கள் சின்னச் சின்னத் துணுக்குகளாக வெளிப்பட்டு கூடு கலைந்த பறவைகள் போல் சிதறி ஓடின.

—லாலி! என்று கத்தினான் உமேஷ்.

—அதோ... அதோ... அதோ... என்று கத்தினாள் லாலி.

உமேஷ் சீறிக்கொண்டு கதவைத் திறந்து உள்ளே பாய்ந்தான்.

லாலியின் பதட்டமான உடலைப் பற்றிக்கொண்டு சன்னல் வழியாக பார்க்க, அந்தத் தெய்வ வாழ்க்கை நடர் இப்போது அந்தக் கோவிலை வலம் வந்து கொண்டிருப்பதைக் கவனித்தான்.

இவரைப் பார்த்து இவளுக்கு ஏன் இவ்வளவு கிலி இவள் நோயாளிதானே? என்று நினைத்து அவளைக் கட்டிலில் கிடத்தப் போக,

—உமேஷ்! வாட் ஈஸ் இட்? என்று ஆத்திரமாகக் கேட்டு, சந்தேகம் தவழும் பார்வையோடு நர்ஸ் சுசீலா உள்ளே நுழைந்தாள்.

—மீன் நெக்லஸைக் கொள்ளை அடிக்கணும்னு இந்தப் பெண்ணைக் குளோஸ் பண்ண வேண்டியதுதான்! என்றான் தாஸ்.

விஸ்தாரமான சோபாவில் அவன் அழுத்தி உட்கார்ந்திருக்க அவனது அந்தரங்க உதவியாளர் கே. ஜி. பால் எதிரே ஒரே சோபாவில் தன் மெலிய உடம்பைப் படர்த்தியிருந்தான்.

ஷோபனை கையில் டம்ளரைக் கொணர்ந்து தாஸ் முன்பாக நீட்டினாள். உள்ளே உஷ்ணவகைத் திரவம் காட்டமாகக் கொந்தளித்தது.

வேகமாகச் சூப்பி முகத்தின் வியர்வையைத் துடைத்து, —இரண்டு வாட்டி அந்தப் பெண் என்னைப் பார்த்தாச்சு என்றான்.

—எங்கே பார்த்தா? என்றான் பால்.

—இன்னிக்கு அந்தக் கோவில்லே. இதுக்கு முன்னாடி ஆஸ்பத்திரியிலே! என்றான் தாஸ்.

—ஆஸ்பத்திரிக்கு ஏன் நீங்க போனீங்க!

—நீ கதை கேட்ட லட்சணம் அவ்வளவுதான்! அந்த ஆஸ்பத்திரி எம். என். ஆர். ஜுவெல்லரி பக்கம் இருக்குன்னு சொன்னேனே!

—ஓகே, சீஃப் என்று இன்னும் சந்தேகம் விளங்காமல் பார்த்தான் பால்.

—ஷோ! இவனுக்கு பிளானே தெரியாது போல இருக்கு! கொஞ்சம் சொல்லு! என்றான் தாஸ்.

—மிஸ்டர் பால்! என்று சொல்லி அந்த ஷோ தனது இரண்டு பெரிய மேற்படி ஷோக்களுடன் உட்கார்ந்தாள். —ஆஸ்பத்திரி வழியாக ஜுவெல்லரிக்குப் போக வழி இருக்கா பார்க்கிறார்.

—ஆஸ்பத்திரியிலே ஸெக்யூரிட்டி ரொம்ப டைட் ஆச்சே! நீங்க எப்படிப் போனீங்க, சீஃப்! என்றான் பால் பாதி அறியாமையுடனும், பாதி தாஸுக்குப் புகழ் மாலையுடனும்.

—ஆஸ்பத்திரிக்குப் பத்தாயிரம் ரூபாய் டொனேஷன் கொடுத்திருக்காரு! தெய்வ வாழ்க்கை சங்கத்தோடு சேர்ந்து ஒவ்வொரு வாரமும் உள்ளே போய் நோட்டம் பாக்கிறாரு!

கே. ஜி. பாலுக்குக் கேட்பதெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. முக்கிய காரியமாக பம்பாய்க்கு இருவாரம் போனதில் இங்குள்ள கதையின் தொடர்பு பல இடங்களில் விட்டிருந்தது.

## துபையில் ஒரே தமிழ்நாட்டு இமாம்

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த எனது நண்பர் ஜனூப் ஹாபிஸ் எம்.ஏ.எம். முஹம்மது அப்துல்லாஹ் அவர்கள் துபையில் உள்ள சிறிய ஜர்வானி ஜும் ஆ பள்ளிவாசலில் இமாமாக இருந்து வருகிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் ஒருவர்தான் துபையில் இமாமாகத் தொழுகை நடத்தி வருபவர்.

—ஏ.ஜே. ஹாஜா, துபை.

—சீஃப்! என்முன் பால், தாளை நோக்கித் திரும்பி. —மீன் நெக்லஸ் எம். என். ஆர். ஜுவெல்லரிக்கு வந்தாச்சா!

—வந்தாச்சு!

—உறுதிதானு?

—விசாரிச்சுட்டேன்.

—ஜுவெல்லரியிலே எங்கே வச்சிருக்காங்க?

—நிலவறை ஸேஃபிலே!

—பகல்லே வெளிலே எடுக்கிறுங்களா?

—ஆமா! எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாகக் கறையை நீக்கறுங்க. ரொம்ப ஜாக்கிரதையா, ரகசியமா செய்யறுங்க.

—சரி. நெக்லஸ்ஸை எப்படி அடிக்கலாம்னு பார்க்கறீங்க?

—நேர்முக வழி ஏதும் தெரியலே. யோசனே பண்ணிட்டேன்.

—ஆஸ்பத்திரியிலேர்ந்து ஜுவெல்லரி காம்பவுண்டுலே ஏறிக் குதிச்சு...

—அதையும் யோசிச்சாச்சு. பிரயோசனமில்லே. நகை நிலவறையிலே இருக்கு.

—அப்போ என்ன பிளான் வச்சிருக்கீங்க, சீஃப்?

—ஒரே வழி! இதோ பாரு.

பெரிய வரைபடம் ஒன்றை எடுத்து தாஸ் பிரிக்க, பால் எழுந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

ஜுவெல்லரி, ஆஸ்பத்திரி, அதன் சுற்றுப்புறங்கள் இவற்றைக் காட்டும் வரைபடம் அது.

—ஜுவெல்லரியும், ஆஸ்பத்திரியும் பக்கத்திற்குப் பக்கம் இணைஞ்சிருக்கு! இரண்டுக்கும் அடுத்தாற்போலே ஐம்பதடிச் சாலே. எதிர்த்தாற் போல ஒரு பழைய முருகன் கோவில்.

பால் பார்த்தான். ஜுவெல்லரிக்கு நேர் எதிரே அந்தக் கோவில்! இரண்டுக்கும் நடுவில் ஐம்பதடிச் சாலே.

—நேத்து சாயங்காலம் தான் முருகன் கோவில் பக்கம் நின்று பார்த்தேன். ஒரு திடீர் யோசனே தோணிச்சு.

—சொல்லுங்க, சீஃப்!

—இந்தக் காரியத்தை ரத்தம் சிந்தாம முடிச்சிடறேம்.

இளநீரின் இனிப்பை அதிகரிக்கச் சிலர் சர்க்கரை சேர்ப்பார்கள். சிலர் தேன் சேர்ப்பார்கள். சிலர் இப்படியும் செய்வார்கள்.

'கண்ணீரில் எழுதாதே' படத்தில்: விஸ்வநாத்—ராதிகா

—எப்படி?

—கோவில் ஒரு நடைபாதைக் கோவில் போலச் சின்னக் கோவில். அதைச் சுற்றி காலி மனை. ஒரு வேப்ப மரம் இருக்கு. கோவில்லே பூஜை கிடையாது. கும்பிடறவங்களும் கிடையாது. நாம்ப என்ன செய்யமேரும்னு... நீண்ட சுவாசத்தோடு நிமிர்ந்தான்.

—கோவில் மனையிலேர்ந்து ஜுவெல்லரியின் நிலவறை வரை ஒரு சுரங்கம் வெட்டேரும்.

பாலின் முதுகு சற்றே பின்னுக்கு அடித்தது.

—சீஃப்! என்ருன் ஆச்சரியத்துடன். அதில் நம்பிக்கையும் இருந்தது. அவநம்பிக்கையும் இருந்தது. —முடியுமா?

—ஏன் முடியாது?

—செலவு?

—நகை கிடைச்சா இருபது கோடி கிடைக்குமில்லேயா?

—ஆமா!

—அதனுலே சில லட்சத்தைச் செலவழிச்சு சுரங்கம் வெட்டினு என்ன?

—யாரேனும் கவனிக்க மாட்டாங்களா?

—அதுக்கு நான் பார்த்துக்கொள்கிறேன். திட்டம் போட்டு வச்சிருக்கேன்.

—அப்போ ஆரம்பிச்சிடுவோமா சீஃப்?

—ஆரம்பிக்கலாம்! அதுக்கு முன்னுடி ஒரு பலி! நம்ப காரியம் வெற்றி பெற ஒரு காவு கொடுக்கிறேரும்.

—கோழியா, ஆடா!

—ரெண்டுமில்லே. ஒரு பெண! அந்த ஆஸ்பத்திரிப் பெண்ணைக் கொன்னுலொழிய நமக்கு நிம்மதி இல்லே.

—அவ யாரு சீஃப்?

—ஸ்வீட் ஹோம்லே இரண்டாவது மாடியிலே ஒம்பதாவது அறையிலே இருக்கிரு. இன்னும் நாலே நாளிலே குளோஸ் பண்ரேரும். அப்பா போன இடத்துக்கே பெண்ணையும் அனுப்பரேரும். ஷோ! அவனுக்கு இன்னும் முழுக் கதை தெரியாது. சொல்லு! அந்தப் பெண்ணை எங்கே பார்த்தோம், எப்போலேர்ந்து தொடர்ரேரும்னு என்ருன்.

பிரகாஷ் ராவ் லேசான முதுகு வளைவுடன் நடந்து ஆஸ்பத்திரி வராந்தாவைக் கடந்தார்.

இரண்டு மாதங்களாகக் கிழக்கு நாடுகளில் பிஸினஸ் பிரயாணம் செய்து இரு தினங்களுக்கு முன்தான் சென்னை திரும்பியிருந்தார்.

வந்ததும் வராததுமாக விச்வேச்வருக்கு நேர்ந்த கதியைக் கேள்விப்பட்டதும் பெரிதும் வேதனை அடைந்தார். விச்வேச்வரின் அத்தியந்த நண்பர் அவர். இப்போது லாலியைக் காண விரைந்திருந்தார். நடந்த விஷயங்கள் அனைத்தும் அவருக்கு வெகுவாகப் பிடிக்கவில்லை. லாலிக்கு இதமான ஆதரவு கிடைத்திருக்காது என்று அவர் நம்பிக்கை. அந்தக் குறையை நிவர்த்திக்கவே ஆஸ்பத்திரி நோக்கி ஓடிவந்தார்.

டாக்டர் பெஞ்சமின் பேட்டிக்காகக் காத்திருந்து, அனுமதி கிடைத்ததும் உள்ளே போனுர்.

பெஞ்சமினைப் பார்த்ததும் முதல் பார்வையிலேயே பிடிக்கவில்லை.

ஒரு ஸைகியாடிரிக் டாக்டர் முகத்தில் அந்தக் கடினத்தையும் அஃபீஷியல் தனத்தையும் எதிர்பார்க்கவில்லை.

—என்ன வேணும்? என்ருர் டாக்டர்.

—லாலியை நான் அழைச்சுட்டுப் போக விரும்பரேன் என்ருர் ராவ்.

ஒருவித நையாண்டிப் புன்னகையுடன் சிகரெட் முனையை ட்ரேயில் சிதறினுர் பெஞ்சமின்.

ராவுக்கு அந்தப் புன்னகையும் பிடிக்கவில்லை.

(தொடரும்)

**லாலியைப் பிரகாஷ் ராவ் அழைத்துச் செல்ல வேண்டுமா? அழைத்துச் செல்லக் கூடாதா?**

**உங்கள் எண்ணத்தை 28—3—81க்குள் கிடைக்கும்படி எழுதுங்கள்.**

**மெஜாரிட்டி விருப்பப்படி கதை திரும்பும்.**

*Our contact with the world is not contact with reality at all, a contact with specialized stimuli which the brain interprets.*

*—Isaac Asimov.*

# கோமாக்கு சூடு

12

ராவிடம் மேலே பேசுமுன், போன் வந்தது. பெஞ்சமின் பேசினார். பிறகு —எக்ஸ்க்யூஸ் மி, எனக்கு ஒரு கான்ஃபிரன்ஸ் இருக்கு! இன்னொரு நாள் ஃபிக்ஸ்—அப் பண்ணிட்டுப் பேசலாம்! என்று அவசரமாகச் சொல்லி, எதிராளியின் பதில் உணர்ச்சிகளை எதிர்பாராமல் எழுந்து போனார்.

ராவ் எழுந்தார். வெளியே வந்து, நீளக் காரிடாரில் வளைவு வளைவாக வெளிச்ச வெள்ளிகள் கடைசிவரை கிடப்பதைப் பார்த்தார். பெருமூச்சு விட்டு மேலே நடந்தார்.

பெஞ்சமின் குட்டை அடிகளை டொக் டொக் என்று வைத்து நடந்தார்.

—பெஞ்சமின்! பெஞ்சமின்! என்று அவர் மனம் கூப்பிட்டது.

—உனக்குத்தான் ஸைகியாட்ரிக் சிகிச்சை வேண்டும், நீ நார்மல்னு நினைக்கிறே! நீ ரொம்ப அப் நார்மல்! ஆனா ஒரு உறுதியிலே உன்னைக் கட்டுப்பாடு பண்ணிக்கிறே! என்றது.

நோயாளிகளின் மனங்களைத் தேடித் தேடிப் பார்த்ததில், தம் மனத்தையே அன்னியமாக, பார்க்கும் சக்தி அவருக்கு ஏற்பட்டு விட்டது.

கிழிந்து போய், பலவித எண்ண விகாரங்களோடு இருக்கும் அந்த உள் சொரூபத்தை இப்போது பார்த்தார்.

அவரது காமம் ஒருபுறம்,

ஆசைகள் ஒருபுறம்,

சிறுகச் சிறுக அவரது மருத்துவ உலக கீர்த்தியால் ஏற்பட்ட மமதை ஒருபுறம்,

ஒரு பெரிய ஆஸ்பத்திரியின் நிர்வாகியாக இருந்ததால் ஏற்பட்ட எதேச்சாதிகாரம் ஒருபுறம்,

அதனால் பிறரைத் திருத்துவதற்காக அவர்களை வாட்டி, வதக்கி, துன்பப்பட வைக்கும் அவரது ஸாடிஸ்டிக் உணர்ச்சிகள் ஒருபுறம்.

பூச்சாண்டி ஆக எல்லாம் கலந்த அவரது மனை உடம்பு அங்கங்கே கிழிந்து ஒரு பூச்சாண்டி கோலத்தில் இருப்பதைப் பார்த்தார்.

எத்தனை முறை அதைச் சீராக்க முயன்றிருக்கிறார்!

வெறும் லட்சியந்தான்.

நிறைவேறவே இல்லை.

அதற்குப் பதில் அந்த உள் சொரூபம் இன்னும் கறுப்பாகி வந்தது.

இன்னும் ஒரு ஸ்டேஜ் தாண்டினால் அதை மீட்க முயல்வது முடியாமல் போய்விடும்.

எல்லாம் இந்தத் தாம்பத்திய வாழ்வில் அவருக்கு ஏற்பட்ட தோல்விதான்!

அதுதான் அவரை முழுமை பெறுமல் செய்துவிட்டது.

கான்ஃபரன்ஸ் ஹாலில் நுழைந்தபோது, கரகோஷம் அவர் சோர்கிற மனத்தை உற்சாகப் படுத்தியது.

இன்னும் சிறிது நேரத்தில் பிரதிநிதிகள் அவரை சந்திரன் இந்திரன் என்று புகழ்வார்கள்! மன நோய்க்கும் *blood chemistry*க்கும் அவர் கண்டுபிடித்த தொடர்பை வானளாவப் புகழ்வார்கள்.

அருமையான மதுபான லஞ்சுக்குப் பிறகு தள்ளாடிக் கொண்டே மறைவார்கள்.

இப்போது, மேடை மேலே ஏறி,

புஷ்பா தங்கதுரை

அப்ளாஸ் வாங்கிச் சூடிக்கொண்டே உட்கார்ந்தார் பெஞ்சமின்!

நர்ஸ் சுசீலா மாலையில் ஆஸ்பத்திரி காண்டீனில் நுழைந்தாள். ஏற்கெனவே அங்கே, போர்மிகா பரப்பு மேல் பிரதிபிம்பம் தெரிய டாக்டர் குணசேகரன் உட்கார்ந்திருந்தார்.

காண்டீன் மன நோயாளிகளே நிர்வகிப்பது. குணமாகும் நோயாளிகளும், குணமாகி வீட்டில் சேர்த்துக் கொள்ளப்படாத மாஜி நோயாளிகளும் அதைப் பராமரிக்கிறார்கள்.

சுசீலா குணசேகரன் முன்னால் உட்கார்ந்து காப்பி ஆர்டர் செய்தாள். —என்ன டாக்டர் ஸார்! காலையிலே காண்ஃபரன்ஸ் போகலையா? என்றாள்.

குணசேகரன் தட்டிலிருந்து ஒரே ஒரு காராபூந்தியை எடுத்துக் கையில் வைத்து —இதுக்கெல்லாம் என்னைக் கூப்பிட மாட்டார் பெஞ்சமின்! என்றார். பிறகு தமக்கு அந்த ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் மீது இருக்கும் அதிருப்தியையும், சீக்கிரம் வேறு இடத்தில் பதவி கிடைத்தால் இதை உதறித் தள்ளிவிட்டுப் போக விரும்புவதாயும் கூறினார்.

ஆஸ்பத்திரி ஒரு தனியார் டிரஸ்ட்! இதை அரசாங்கம் எடுத்துக் கொண்டால் தவிர நிர்வாகம் சீர்திருந்தாது, என்றாள் சுசீலா.

—நர்ஸிங் ஸ்டாஃபிலே இருபத்திரண்டு பேர் ஷார்ட்டேஜ்! ஒரு சூப்பிரண்டெண்டண்டுக்கு இதெல்லாம் தெரிய வேணும்?

சுசீலா முப்பது வயதானவள். வாழ்க்கையில் இளவயதுக் கஷ்டங்களால் இப்போது மனம் சுனியாகி எல்லோரையும் இதமாகக் கவனிப்பவள். ஆஸ்பத்திரியில் நல்ல பெயர் எடுத்தவள்.

—ஆஸ்பத்திரியே ஒரு நோயாளியா இருக்கு! என்றார் குணசேகரன்.

—அந்த லாலியை ஏன் இங்கே வைச்சிருக்கு?

—ஸிம்பிள் கேஸ். ஆங்ஸைடி கொஞ்சம் உண்டு. அதனாலே டிப்ரஷன். ஏற்கெனவே ஒரு முறை சிகிச்சை பண்ணி அனுப்பிச்சாச்சு.

—இப்போ ஏன் திரும்பி வந்திருக்கு?

—டிப்ரஷன் திரும்பி வந்துடுத்து.

—ஏன்?

—அவங்க அப்பாவை யாரோ கொலை பண்ணிட்டாங்க.

—ஆன்டி—டிப்ரஸண்ட் மாத்திரை போட்டு வீட்டிலேயே குணமாக்கலாமில்லே?

—செய்யலாம்.

—ஏன் செய்யலே?

—ஆஸ்பத்திரிக்கு வருமானம் வேணுமில்லே!

—அதுக்கு இத்தனை நாள் இங்கே வச்சுப்பாங்களா?

—சுசீலா கோபமாக் கேட்டாள்.

—அந்தப் பெண் குணம் ஆகலேனு சொல்றாரு! நானும் கேட்டுவிட்டேன்.

—எப்படி ஆவா? இங்கே படுத்தறபாடு போதாதா? நோய் இல்லாதவங்க கூட நோயாளி ஆகிடுவாங்க!

குணசேகரன் முறுவலித்தான்.

—நான் சொல்றேன் டாக்டர்! இங்கே இருக்கிற நோயாளிகளிலே பாதிப் பேர் குடும்பச் சூழ்நிலையிலே குணமாயிடுவாங்க! குடும்பம் தான் பெஸ்ட் தெராபி. அதை விட்டுட்டு இங்கே வச்சு ஷாக் கொடுத்து, டிரான்குலைசர் கொடுத்து, எங்க பிராணனை வாங்கி... இவர் (பெஞ்சமின்) எக்ஸ்பெரிமெண்ட் பண்ணியே பல பேருக்கு நோயை அதிகமாக்கறார்னு சொல்றேன்.

—அதுகூட உண்மைதான்! சில ட்ரீட்மெண்ட் இவர் கொடுக்கிறதே பிடிக்க மாட்டேன்கறது.

—நீங்க எதிர்ப்பு தெரிவிக்கிறதுதானே!

—எப்படி முடியும்! அவர் புகழ் வாய்ந்தவர். அவர் சொல்றதைத்தான் எடுத்துப்பாங்க, மதிப்பாங்க. இந்த லாலி கேஸ் எடுத்துக்க. இவள் விஷயத்திலே வேறு விதமா விசாரணை செஞ்சா காரணம் கண்டுபிடிச்சிடலாம். அதைவிட்டு...

சுசீலா காப்பியைச் சூப்பி முடித்தாள். —மொத்தத்திலே, நர்ஸா நான் வந்திருக்கக் கூடாது. அதுவும் மனநோய் ஆஸ்பத்திரிக்கு, என்று சொல்லி எழுந்தாள்.

திருக்கோணம் இன்ஸ்பெக்டர் துரைபாபு கடிதத்தைப் படித்ததும், —ராமய்யா! என்று அழைத்தார்.

எஸ்.ஐ.ராமய்யா உள்ளே பந்தாவோடு நுழைந்தார்.

COMICS PDF TIMES



—கடிதத்தைப் பார்த்தீங்களா?

வாங்கிப் படித்தார். இண்டர்போல் பாரிஸிலிருந்து கிளம்பியிருந்தது கடிதம். போலீஸ் இலாகா வழியாக முறையாக அனுப்பப்பட்டு திருக்கோணம் நிலையத்திற்கு வந்திருந்தது.

மார்லோ இறந்தது தற்செயல் விபத்து என்பதை இண்டர்போல் ஒத்துக் கொள்ளவில்லை. இது உண்டாக்கப்பட்ட விபத்தாக இருக்க வேண்டும். மார்லோ புறப்பட்ட விஷயம் ஆம்ஸ்டர்டாமிலுள்ள சில கடத்தல்காரர்களுக்கு தெரிந்திருக்கிறது. அவர்கள் ஏதாவது விஷமம் செய்து மார்லோ இறப்பதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆகவே மார்லோ மரணத்தை மீண்டும் தீவிரமாகப் புலன் விசாரிக்கும்படி இண்டர்போல் கேட்டுக் கொள்கிறது.

ராமய்யா முறுவலித்தார்.

துரைபாபு மீண்டும் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

—அவங்க சொல்றதை ஒத்துக்கிறீங்களா, ராமய்யா! என்றார் துரைபாபு.

—நிச்சயமாக இல்லை.

—எப்படிச் சொல்றீங்க?

—போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்தாச்சு! அதிலே கிளியரா விபத்திலேதான் ஆள் செத்திருக்கான்னு சொல்லியிருக்காங்க. நம்ப டாக்டருங்களை நம்பவா, வேண்டாமா?

துரைபாபு பேசவில்லை.

யோசித்தார்.

—ஒருவேளை அப்படி யாரோ கொலை செஞ்சாங்கன்னு வச்சுக்குங்க!

—எப்படி முடியும்? யாரும் புதுசா நம்ப ஊருக்கு அன்னிக்கு தேதியிலே வரல்லே!

—வெள்ளைக்காரங்களைச் சொல்றீங்க! இல்லையா?

—ஆமாம்!

—ஒருவேளை நம்ப ஆளுங்களே யாராவது...

ராமய்யா சிரித்தார். —நம்ப ஆளுங்க இன்னும் அவ்வளவு தூரத்துக்கு வரல்லை, ஸார்! அப்படியே வச்சுக்கிட்டாலும் ஆம்ஸ்டர்டாமிலிருந்து செய்தி வந்து நம்ப ஊர் ஆள் தயாராகி... ஊஹூம், ஒத்துக்கும்படியா இல்லை, ஸார்.

—ஒரே ஒரு விஷயம்! என்று சொல்லி துரைபாபு எழுந்தார்.

ராமய்யா அவர் பேச்சில் கவனத்தை வைத்தார்.

—இந்தக் கேஸ்லே ஒரு வீக் லிங்க் ஒண்ணு உண்டு.

—என்ன, ஸார், அது?

—அதை நான் கொஞ்ச நாள் முன்னடிதான் யோசிச்சேன். பளிச்சுன்னு தோணித்து.

ராமய்யா மேலும் கவனமானார்.

—மார்லோ வயத்திலே ஆல்கஹால் இருந்ததுன்னு போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்ல இருந்ததில்லே?

—ஆமாம்.

# புத்தகம்

பொதுமைப் பூக்கள் (கவிதைத் தொகுப்பு)

ஜோயபாரதி—பக். 120—ரூ. 5. வி.ஆர். பதிப்பகம், 20, அய்யா முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை—14.

நல்ல எண்ணம் நன்மை தரும் (வெற்றிக்கு வழி காட்டி)

மெர்வின்—பக். 116—ரூ. 5.

மனதில் மறைந்திருக்கும் சக்தி (வெற்றிக்கு வழிகாட்டி)

பி.எஸ்.ஆர்.ராவ்—148—ரூ. 6.50.

இரண்டு புத்தகங்களும்: நர்மதா, பதிப்பகம், 1, வியாசராவ் தெரு, தி.நகர், சென்னை—17.

இளைஞர் கம்ப ராமாயணம்

சரஸ்வதி ராம்ஜத்—பக். 448—ரூ. 22. ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

டாக்டர் க. காந்தி—பக். 402 —ரூ. 16.

தமிழர் ஆடைகள்

கே. பகவதி—பக். 422—ரூ. 16.

இரண்டு புத்தகங்களும்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை—20.

ஊமைக்காதலின் மௌன ராகங்கள்

(கவிதைத் தொகுபபு) செ. ஞானன் —பக். 42—ரூ. 2. கவிதா மண்டலம், மயிலை, சென்னை—4.

தரிசல் கீதங்கள்

(கவிதைத் தொகுப்பு) இளசை அருணை—பக். 42—ரூ. 3. தமிழ் எழுத்தாளர் சங்கம், ஓட்டப்பிடாரம், திருநெல்வேலி மாவட்டம்.

பயன்தரும் மனோதத்துவம்

(வெற்றிக்கு வழிகாட்டி) ஸ்ரீனிவாசன் ராமலிங்கம்—பக். 162.—ரூ. 7.50.

தாழ்வு மனப்பான்மை நீங்க மன இயல் மருத்துவம்

வெற்றிக்கு வழிகாட்டி) பி.எஸ்.ஆர். ராவ்—பக் 132—ரூ. 6.

இரண்டு புத்தகங்களும். நர்மதா பதிப்பகம், 1, வியாசராவ் தெரு, தி.நகர், சென்னை—17.

கதைகள் நாவல்கள் அல்லாத, 1980'க்குப பிறகு வெளிவந்த தமிழ் நூல்கள் இந்தப் பகுதியில் இடம் பெறும். இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

இந்த ஆல்கஹால் சாப்பிட்டதற்கு உடந்தையா ஏதாவது தடயம் கண்டு பிடித்தோமா?

—என்ன தடயம்?

—அவன் குடிச்ச பாட்டிலோ, டம்ளரோ!

—அது எனக்குத் தோணல்லே, ஸார்.

—எனக்கும் தோணல்லே. அவன் விழுந்து கிடந்த இடத்திலே பாட்டில் ஏதாவது கிடந்திச்சுன்னு, அது நமக்கு முழு சமாதானமா இருக்கும். அது கிடைக்காட்டா கூட நம்ப தீர்மானம் மாறிடப் போறதில்லே. ஒருவேளே கிடைச்சா...

—நான் ஒருமுறை அங்கே போய்த் தேடிப் பார்க்கவா ஸார்!

—செஞ்சா நல்லா இருக்கும். நாம்ப நிச்யத்தோடு ஒரு பதில் எழுத முடியும். என்றூர் துரைபாபு.

மறுநாள் காலேயில் துரைபாபு கெஸ்ட் ஹவுசை நோக்கிச் சென்றூர்.

விச்வேச்வர் கொலே இன்னும் தீர்க்கப்படாமலேயே இருந்தது.

அதைப் பற்றிய கவலே அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

அவர் பதவி காலத்தில் ஒரு கொலே கேஸ் இரண்டு மாதங்கள் வரை தீர்க்கப்படாமல் இருந்ததில்லே.

இந்தக் கேஸ் எதிலும் பிடிபடாமல் இருந்தது. விச்வேச்வரின் மகள் லாலி பச்சைக் காரைப் பார்த்ததும், அதிலிருந்து இரண்டு மனிதர்கள் இறங்கி வந்ததும் நம்பக் கூடாததாக இருந்தது. ஏனெனில் மறுநாள் முழுதும் பச்சைக் காரைத் தேடிப் பார்த்தாயிற்று. காணவில்லே. திருக்கோணத்திலிருந்து பிரியும் பிரதான சாலேகளில் உள்ள போலீஸ் நிலேயங்களுக்கு வயர்லஸ் மூலம் செய்தியும் சொல்லியாகிவிட்டது. பச்சைக் கார் பிடிபடவில்லே. லாலி சித்தப் பிரமை உள்ளவள் என்று தெரிந்த பிறகு அவள் சொல்லிய விவரங்களே எல்லாம் பிரமை என்று ஒதுக்கியாகி விட்டது.

இப்போது ஒருவேளே. அது உண்மையாக இருக்கலாம் என்று வைத்துப் பார்த்தால் என்ன?

துரைபாபு கெஸ்ட் ஹவுஸ் வெளிப்புறத்தில் மெயின் ரோட்டில் நடந்து, பின்னர் காம்பவுண்டுச் சுவரோடு திரும்பும் கிளேச் சாலேயில் திரும்பினூர்.

ஜீப்பிலிருந்து இறங்கி சில கணங்கள் நின்றூர்.

(தொடரும்)

# தமிழ் மீடியா

புஷ்பா தங்கதுரை

## 13

அன்புள்ள வாசகப் பெருவாரி!

வணக்கம். நீங்கள் என் மீது வஞ்சம் தீர்ப்பது இது இரண்டாவது முறை! இல்லாவிட்டால் நான் நினைத்திருந்ததற்கு எதிர்மாறுகத் தீர்ப்பு கொடுப்பீர்களா? லாலியைப் பிரகாஷ் ராவ் அழைத்துப் போய்விட வேண்டும் என்று 231 பேரும், அவள் ஆஸ்பத்திரியிலேயே இருக்க வேண்டும் என்று 192 பேரும் எழுதியிருக்கிறீர்கள். லாலியை ஆஸ்பத்திரியிலே வைத்திருந்தால், எழுதுவதற்குப் பல அருமையான சம்பவங்கள் தொகுத்து வைத்திருந்தேன். அத்தனையும் வீண். இதோ உம்மையே ஸைகோ அனலிஸிஸ் பண்ணுகிறேன்: பெஞ்சமினின் ஸாடிஸம் உங்களிடமும் கொஞ்சம் இருக்கிறது. இல்லாவிட்டால் என்னை இப்படித் தினற அடித்து வேடிக்கை பார்ப்பீர்களா?

—பு.த.

We believe, whatever we want to believe.

—Some 'Y'

திருக்கோணம் இன்ஸ்பெக்டர் துரைபாபு கெஸ்ட் ஹவுஸை அடுத்த கிளைச் சாலையில் நின்றார்.

நினைவு பளிச்சிட்டது.

கொலை நடந்த இரவு லாலி இந்தச் சாலைக்கு வந்ததாகக் கூறினாள். காம்பவுண்ட் பக்கத்திலிருந்து இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். சாலையில் ஒரு கார் ஒதுங்கி இருந்திருக்கிறது. இவ்வளவு சொன்னாளே?

இத்தனையும் பிரமையா?

அவருக்கு அப்படித்தான் தோன்றியது.

டாக்டரும் அதையே உறுதி செய்தார்.

ஆனால்...

பெரிய ஆவன்னா அது!

ஒரு வேளை அவள் பார்த்தது எல்லாம் நிஜமாக இருந்தால்...

மனத்தில் இண்டர்போல் தாக்கி உறுத்தியது. தமது விசாரணையில் குறைபாடு இருக்குமோ?

சாலையில் நடந்தார்.

குட்டையான, கொழுத்த இலை மரங்கள் இரு பக்கமும் வரிசையிட்டன.

சாலை குறுகலாக இருக்க, இந்த மரக் கிளைகளின் வியாபகம் சாலையைக் கிட்டத்தட்ட நெருக்கியிருந்தது.

லாலி இரவில் இங்கே

வந்தபோது நிலா எந்தக் கோணத்தில் விழுந்திருக்கும்?

நேராக விழாமல் சற்றுச் சாய்வாக விழுந்திருந்தால் சாலையில் நிறைய நிழல் வார்ப்புகள் படிந்திருக்கும்.

இந்த நிழல் வார்ப்புகளை லாலி சரியாக மனத்தில் வாங்கி வைத்திருந்து, ஒரு விவரம் பிசகாமல் கூறினாள்.

அவள் பிரமை காணவில்லை. நிஜத்தைத்தான் கூறுகிறாள் என்று சொல்ல முடியும். சரியாகச் சொல்வாளா?

கொலை எந்தத் தேதியில் நடந்தது? அன்று சந்திரனின் பட்சம் என்ன? லாலியைத் திரும்ப விசாரிக்கலாமா? அல்லது அவளையே இங்கு கொண்டு வரலாமா?

எப்படியும் இண்டர்போல் சந்தேகங்களுக்குப் பதில் சீக்கிரம் அளிக்க வேண்டும் என்று நினைத்தவாறு திரும்பினார் துரைபாபு.

பிரகாஷ் ராவ் தமது நேரக் குறிப்பேட்டில் மிகவும் சுண்டிப்புக்காரர்.

பெஞ்சமினுக்கு போன் பண்ணி மறுநாள் சந்திப்புக்கு நேரம் கேட்டு வாங்கினார்.

டாண் என்று சரியான பொட்டு நேரத்தில் ஆஜரானார்.

பெஞ்சமின் சுவாரஸ்யமாக மூக்கைக் குடைந்து கொண்டிருந்த நேரம். ராவைக் கண்டதும் சடக்கென்று விரலை எடுத்து, தோற்றத்தைச் சரி செய்து ஒரு ஹஹ்ராம் கனைத்தார்.

லாலியை அழைத்துப் போகும் விருப்பத்தை உடனே தெரிவித்தார் ராவ்.

—எனக்கு ஆட்சேபனை இல்லை, என்று சொல்லித் தமது பெரிய பின்புறத்தைச் சற்றே நாற்காலியில் நகர்த்தி வைத்தார் பெஞ்சமின். —இப்போ இருக்கிற நிலையிலே அவளை அழைச்சிட்டுப் போனா நோய் அதிகமாகும்.

—எப்படிச் சொல்றீங்க?

—Acute Panic State லே இருக்கிறாள். ஹிஸ்டீரிகலா மாறிடறாள். தனக்குத் தானே ஏதாவது தீங்கு செய்துகிட்டாலும் ஆச்சரியப் படறதுக்கில்லே.

ராவ் ஒரே கணம் தயங்கினார்.

—Panic State என்று எப்படிச் சொல்றீங்க?

யாரைப் பார்த்தாலும் கத்தறா.

—காரணம்?

—அப்பா சாகிறதுக்கு முன்னாடியே ஆங்ஸைடி மேனியா இருந்திருக்கு. அப்பா கொலை ஆன அப்புறம் ஆங்ஸைடி அதிகமாயிடுத்து. யாரைப் பார்த்தாலும் கொலைகாரன்னு கத்தறா! சீக்கிரமே வெறும் சூன்யத்திலே உருவங்களைப் பார்த்துப் பயப்பட ஆரம்பிச்சிடுவா! அவ்வளவுக்கு வலுவான கற்பனை அஸ்திவாரம் அவளுக்கு இருக்கு. அதுதான் எனக்குக் கவலை.

—என்ன சிகிச்சை செஞ்சீங்க?

—என்ன செய்வோம், டிராங்குலைஸர் கொடுப்போம். ஆன்டி—டிப்ரஸன்ட் கொடுப்போம். ஹிஸ்டீரியாவுக்கு ஈஸி ஷாக் கொடுத்தாச்சு. நாங்க செய்யறதெல்லாம் தற்காலிகந்தான். இவளே இவள் ஆங்ஸைடியை நேருக்கு நேரா எதிர்த்து அதைத் தாண்டிப் போனாத்தான் நிரந்தர குணம் ஏற்படும்.

—அப்படிச் செய்ய முடியுமா?

—முடியணும்.

—முடியாட்டா?

—மருந்துகளைப் போட்டு அப்பப்போ பரபரப்பை அடக்கி வைக்கலாம். அவ்வளவுதான்.

—இதை நாங்களே வீட்டிலே செஞ்சுக்கலாமில்லே!

—செஞ்சுக்கலாம். அவளை அழைச்சிட்டுப் போறதிலேதான் நீங்க குறியா இருக்கிறப் போல இருக்கு.

—யூ ஆர் ரைட்! வீட்டுக்கு அழைச்சிட்டுப் போனா ஏதாவது மிரகிள் நடக்கலாம்.

—நடக்காமலும் இருக்கலாம்.

—அது ஆண்டவன் சித்தம்.

—ஆண்டவன் மேலே பழியைப் போடறது சரி. மனம் ரொம்ப நுட்பமானது. நீங்க ஏதாவது செஞ்சு நோயை அதிகமாக்கி... ஒரு காரியம் செய்யுங்க! வாரம் ஒரு முறை இங்கே அவுட் பேஷண்டா வந்துட்டுப் போகணும். ஒத்துக்கறீங்களா!

—அப்படி ஒரு நிர்ப்பந்தம் உண்டா?

—நிர்ப்பந்தம் இல்லை. இதிலே போலீஸ் கேஸும் மாட்டியிருக்கில்லே? நாளைக்கு என் மேலே ஏதாவது வரக் கூடாது இல்லே?

மாலையில் ஸ்வீட் ஹோமை விட்டு வெளியே வந்ததும் —தொஞ்சம்

நிறுத்துங்க அங்கிள்! நான் சுதந்திரமா சுவாசிக்கட்டும்! என்று சொல்லி லாலி காரிலிருந்து கீழே இறங்கி, வெளிப்புறக் காற்றை ஆனந்தமாக முகர்ந்து புப்புசங்களை நிரப்பினாள்.

• அவள் கண்களில் பேரின்பம் லயித்தது.

சுற்றியும், வெளிச்சமடிக்கும் கண்களோடு பார்த்தாள். புதுப் பிறப்பின் ஆனந்தம் அவளைப் பற்றியது.

இரண்டு நிமிடங்கள் இந்த லயிப்பினுள் இருந்துவிட்டு, பிறகு மீண்டும் காரில் ஏறினாள்.

ராவின் வீடு ஒரு மைல் தொலைவில் கைலாஷ் காலனியில் இருந்தது. விக்டர் காட்டன் என்பது வீட்டின் பெயர். ராவ் சுதேசி மணமானவர். வாசலில் கோம்பை நாய் வரவேற்றது. உள்ளே மிஸஸ் பிரசன்னா ராவ் அன்புடன் வரவேற்றாள். மாடிக்கு அழைத்துப் போய் அவளுக்குத் தயாராக வைத்திருந்த அறையில் தங்க வைத்தாள்.

இரவு டின்னரை அடுத்து, ராவ் தம்பதியருடன் லாலி நெடு நேரம் பேசினாள்.

• ராவ் அந்தச் சந்திப்பில் அவளது தந்தையைப் பற்றிக் கேட்க விரும்பவில்லை.

எதைப் பற்றிப் பேசினாலும் கடைசியில் டாபிக் அவளது தந்தையைப் பற்றியே வந்து நின்றது.

—இந்த பிஸினஸ் எனக்கு உங்க அப்பா பண்ணிக் கொடுத்தது. அவரை மறக்க முடியுமா? என்று ராவ் ஒரு முறை கேட்க,

லாலியின் கண்கள் மூடிக் கொண்டன. அவளுக்கு இன்னும் அப்பா மறைந்து விட்டார் என்ற நினைவு டியாகி விடவில்லை.

எங்கேயோ இருக்கிறார். ஒரு நாள் திடுதிப்பென்று வருவார் என்று அடிக்கடி மனம் நினைத்தது.

இப்போது விழி நிரம்பலுடன் ராவைப் பார்த்து —என் அப்பா இறந்தது அநியாயம் அங்கிள்! நான் சொன்னதை அவரால் செவி கொடுத்துக் கேட்டிருந்தால்... என்று நிறுத்தினாள். பிறகு தனக்கு நடந்தவைகளை ஒரு தொடர்ச்சியோடு மெள்ள விவரித்துக் கொண்டே போனாள்.

முழுக் கதையையும் கூறி முடித்த பிறகுதான் முற்றுப்புள்ளி வைக்க முடிந்தது.

ராவுக்குப் பல இடங்களில் கண்ணீர் வந்தது.

பணம் இருந்தும் விச்வேச்வரரின் ஒரே பெண் இப்படி அனுதை போல் துணையில்லாமல் இருந்து விட்டாளே என்று வருத்தப்பட்டார்.

தம்மால் முடிந்த அளவு அவ்ளுக்குத் தேறுதல் சொல்லித் தைரியத்துடன் அவளைப் படுக்கைக்கு அனுப்பினர்.

லாலி கனமான இதயத்தோடு படுத்தாள். அவளுக்கு ஒரு புதுத் துயரமும் சேர்ந்து கொண்டது. மாடி ஜன்னல் க்ரில்லில் முகத்தை அழுத்தி உமேஷ் அவளுக்குக் கடைசி நேர விடை கொடுத்தது அவளது நினைவுப் பலகையில் ஒரு அச்சுப் போல் உறைந்து விட்டது.

—உமேஷ், உமேஷ்! என்று மெள்ளப் புலம்பினாள். அதில் துயரமும் இருந்தது. அவள் அது வரை உணர்ந்தறியாத இன்பமும் இருந்தது.

மறுநாள் காலையில் அவள் மிகத் தாமதமாக எழுந்து மனசில் எந்தப் பரபரப்பும் இல்லாமல் வெகு நிதானமாகக் காரியங்களில் இறங்கினாள்.

மிஸஸ் ராவ் அவளது தேவைகளை மிகவும் நுணுக்கமாக கவனித்துக் கொண்டாள்.

இரண்டாம் முறை காப்பியும் ஆன பிறகு, ராவ், ஒரு அவுட்டிங் போய் வந்த பிறகு அப்போதுதான் உள்ளே திரும்பி வந்தார்.

சோபாவில் நிம்மதியாகச் சாய்ந்து இருக்கும் லாலியைப் பார்த்து, —லாலி! ஒன்பது மணிக்கு ரெடியா இரு. போத்தி வராரர். ஏற்பாடு பண்ணியிருக்கேன்! என்றார்.

—போத்தி? என்று சொல்லி ஒன்றும் புரியாமல் லாலி மிர்ந்து உட்கார்ந்தாள்.

—நீலகண்ட போத்தி என்று விவரித்தார் ராவ்.

—எதுக்கு வராரர்?

—பூஜை பண்ணுவர். பில்லி சூன்யம் இதுங்களைத் தடுக்கிறதுலே கெட்டிக்காரர்.

கையில் மடித்திருந்த பேப்பரை ஒதுக்கி வைத்தாள் லாலி —அங்கிள்! அவ்வளவு தூரம் கதை கேட்டீங்க! என்னை என்ன நினைக்கிறீங்க! என்றாள் ஆச்சரியமுடன்.

# புதுதுய

## தமிழ்ப் பேழை

(தமிழ் இலக்கிய அறிமுகம்) பதிப்பாசிரியர்: டாக்டர் ஆறு. அழகப்பன், பக். 334—ரூ. 22. தமிழ்ச் சுரங்கம், 49—தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை—1.

## சிவானந்த நடனம்

(சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்பு) டாக்டர் ஆனந்த குமாரசுவாமி—தமிழாக்கம்: சொ நடராசன்—பக். 204- ரூ. 17.

## சேலூர் முருகன் உலா

(பழஞ்சுவடிப் பதிப்பு) சேறைக் கவிராச பிள்ளை—பதிப்பாசிரியர்: மு. அருணாசலம்—பக். 152—ரூ. 14.
இரண்டு புத்தகங்களும்: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

## நட்சத்திர நகைச்சுவை

(தமிழ்த் திரை நடிகர் நடிகைகள் பற்றிய துணுக்குகள்) நவீனன்—பக். 80—ரூ. 4.

## பாரதியின் இதயம் பேசுகிறது

(பாரதியின் கவிதைத் திறனாய்வு) கே.எஸ். இராஜேந்திரன்—பக் 134 -
ரூ. 6 75
இரண்டு நூல்களும்: குமரன் பதிப்பகம், 33, கணபதி மேற்கு மாம்பலம், சென்னை—33

## மொழிவழிச் சிந்தனைகள்

(இலக்கியக் கட்டுரைகள்) குன்றக்குடி அடிகளார்—பக். 80—ரூ. 4.
கவிதா பப்ளிகேஷன்ஸ், 3—2, கன்னியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பாளையம், சென்னை—33.

## குடும்ப வரவு செலவை வகைப்படுத்துவது எப்படி?

(வெற்றிக்கு வழிகாட்டி) பி.சி. கணேசன்—பக் 102 -ரூ. 4—50.

## பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும்

(பாரதி திறனாய்வு) பெ. தூரன் -பக். 136. ரூ. 6—50.
இரண்டு நூல்களும்: வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை—17.

## சமயச் சான்றோர்கள்

(பல சமயப் பெரியோர் வரலாறு) வித்துவான் எம் நாராயண வேலுப்பிள்ளை—பக். 144—ரூ. 7 -25.
ரேவதி பதிப்பகம், 33, கணபதி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை -33.

கதைகள், நாவல்கள் அல்லாத, 1980'க்குப் பிறகு வெளிவந்த தமிழ் நூல்கள் இந்தப் பகுதியில் இடம் பெறும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்

—எதுவுமில்லே லாலி! சும்மாதான். மணி, மந்திரம், ஔஷதம்னு சொல்வாங்க. கடைசி விஷயம் ஆயிட்டது. நடு விஷயம் இப்போ நடத்தணும்.

—அப்போ எனக்கு நோய்னு [redacted]க்கிறீங்களா?

—அது இருக்கோ, இல்லேயோ! எல்லாத்தையும் செஞ்சிடறது நல்லதில்லேயா?

லாலியின் கண்கள் தவித்தன. ராவை உன்னிப்புடன் பார்த்தாள். அதுவரை அவள் சொன்ன கதையை நம்பவில்லேயா?

—அங்கிள்! உங்க கிட்டே நான் ப்ளெய்ன்ஞ் சொல்ல விரும்பறேன். ஐ'ம் ஆல்ரைட்!

—கொஞ்சம் கொஞ்சம் டிப்ரஷன் இருக்கு இல்லேயா? என்றார் ராவ் கைகளைப் பிசைந்து கொண்டு.

—அது ஒரு பொது வகை. வீட்டிலே யாராவது செத்துப் போனால் நம்ப எல்லாருக்குமே ஏற்படறதே, அந்த டிப்ரஷன்தான். அது போல வாழ்க்கையிலே எல்லோருக்கும் நேர்ந்திருக்கும். நான் விதிவிலக்கல்ல.

—உன்னைப் புரிஞ்சுக்கிட்டேன் லாலி! இருந்தாலும் கொஞ்சமாவது [redacted]ப்டம் இருக்குதில்லேயா! அதுக்குத்தான்.

—என்ன எம்ப்டம் அங்கிள்?

—யாரையாவது பார்த்தா அவன் கொலைகாரனைத் தெரியறான் இல்லே?

—அது உண்மைக் கொலைக் காரன்னு சொன்னேனே அங்கிள்!

—உண்மையாவும் இருக்கலாம். பொய்யாவும் இருக்கலாம்.

—நிச்சயம் பொய் இல்லே அங்கிள்! திருக்கோணத்திலே நகை எடுக்க முயற்சித்த ஆசாமி, கெஸ்ட் ஹவுசிலே அப்பாவைக் கொன்ற ஆசாமி, ஆஸ்பத்திரியிலே பக்திமாஞ்க வந்து ஆசாமி எல்லாரும் ஒன்றுதான்.

—லாலி! என்று சொல்லி ஒரு கணம் தயங்கினார் ராவ்.

—சொல்லுங்க அங்கிள்.

—மூணு ஆசாமியும் ஒருத்தன்தான்னு நம்பறியா?

—ஆமாம் அங்கிள்.

—நான் நம்பவில்லே.

—அங்கிள்! என்று சொல்லி லாலி எழுந்திருந்தாள்.

அவள் முகத்தில் அதுவரை இருந்த முறுவல் மறைந்து விட்டது. கண்ணில் பழைய வெறுப்பும் நம்பிக்கையின்மையும் சீக்கிரம் வந்து விட்டன. —நீங்க நினைக்கறதைப் பார்த்தா ஆச்சரியமாயிருக்கு, அங்கிள். நான் என்ன பச்சைக் குழந்தையா? ஒருத்தரை வேணுமின்னே குற்றம் சாட்டுவேனு?

—ஒரு விஷயம் சொல்லட்டுமா, லாலி.

—சொல்லுங்க!

—ஒரு ஆசாமி ஒரு மாயாவியைப்

''என்ன விமலா, ஒன்றுக்கு மூன்றுய்ச் சீட்டுகள் கட்டிட்டு ஏமாந்து நிற்கிறேம். இப்பப்போய் இப்படிச் சந்தோஷப்படறியே?''

''சும்மா இருங்க. அடுத்த வீட்டு அலமேலு ஐந்து சீட்டுகட்டி ஏமாந்திருக்கிறாளே!''

—பி.ஆர். கண்ணன்.

போல இப்படி டக்டக்குன்னு மாறுவான்னு என்னாலே நம்ப முடியவில்லை.

—எல்லோரும் அதே மாதிரிதான் சொல்றாங்க அங்கிள். ஆனா நீங்க வித்தியாசமா இருப்பீங்கன்னு நினைச்சேன்.

ராவ் ஒரு கணம் தயங்கினார். சற்று அவசரப்பட்டுத் தன் அபிப்பிராயத்தை சொல்லி விட்டோமோ என்று நினைத்தார். சொல்லாமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் பலரும் லாலியிடம் சொன்னால்தான் தன் மனத்தைப் பற்றிய பரிசோதனை அவளுக்கு ஏற்படும் என்று நினைத்தார்.

—லாலி! நான் வித்தியாசமாத்தான் இருக்கேன். இருந்தாலும் எனக்கும் சின்னக் குழப்பம் வராதா? அட, பல பேர் வேறு விதமாச் சொல்றாங்களே, அது உண்மையா இருக்குமோன்னு ஒரு சின்ன சந்தேகம் வராதா? அதனாலேதான் லாலி, எப்படியிருந்தாலும் நல்லதுதானேன்னு ஏற்பாடு பண்ணியிருக்கேன். ஒன்றும் பயப்படாதே! உன் நன்மைக்குத்தான் செய்யறேன். நீ நல்லா வாழணும்னுதான் செய்யறேன். சீக்கிரம் குளிச்சு ரெடியா இரும்மா! என்றார்.

மிஸஸ் ராவ் அவளைக் குளிப்பதற்காக அழைத்துப் போக, லாலி உமேஷை மானசீகமாக அழைத்தாள். —உமேஷ்! ஃபன்னி! இவங்க என்ன நினைக்கிறாங்க தெரியுமா! யாரோ எனக்குச் சூன்யம் வச்சுட்டாங்களாம் சூன்யம்!

அப்படிச் சொல்லும்போது அவளை மீறி ஒரு சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

பாத் ரூமில் விட்டுத் திரும்பிய மிஸஸ் ராவ், தன் கணவரைப் பார்த்து, —அந்தப் பெண் பாத்ரூமிலே தனக்குத் தானே சிரிச்சுக்கிறா, பாருங்க! இந்தப் பெண் எங்கேயோ தீட்டோடு போயிருக்கா! முனி அடிச்சிருக்கு! என்றாள்.

பத்து மணிக்கு மலையாளப் போத்தி ஆர்ப்பாட்டமான சாமக் கிரியைகளுடன் வந்தார்.

நெற்றியில் சந்தனப் பட்டை விழியாக ஒரு குரோதமான மூன்றாவது கண் அவளைப் பார்ப்பது போலிருந்தது.

பல தாந்திரிக சைகைகளுடன் அவர் பூஜையை ஆரம்பிக்க, அவருக்குத்தான் மனநோய் போல் தோன்றியது.

நாலு திக்குக் /காற்றுகளையும் பார்த்துப் பேசுவது போல் மந்திர உச்சாடனம் பண்ணினார்.

லாலியை அடிக்கடி பார்த்து, குனி, நிமிர், உட்கார், எழுந்திரு என்று ட்ரில் வாங்கிக் கொண்டிருந்தார்.

ஒரு அஃறிணையைப் போல் அவளை நடத்துவதைப் பார்த்து லாலிக்கு அடிக்கடி கோபம் வந்தது.

பல்லைக் கடித்து உட்கார்ந்திருந்தாள்.

மணி ஒன்றுக்குத்தான் பூஜைகள் முடிந்தன.

லாலி களைத்துப் போனாள். சாப்பிட்டுவிட்டு மாடி அறையில் படுக்கை மீது விழுந்ததும், கண்ணீர் மளமள என்று உதிர்ந்தது. தனக்கு நேர்ந்த கதியை நினைத்து மனம் வெகுவாக வெதும்ப, சீக்கிரம் வேதனையோடு அவள் தூங்கிப் போனாள்.

மாலை நாலரை மணி.

மிஸஸ் ராவ் அவளை எழுப்ப, எழுந்திருந்து காப்பி அருந்தக் கீழே வந்தாள்.

அவள் பார்வையில் அந்த மாலைப் பதிப்பு பத்திரிகையும் அதன் எழுத்துக் கொட்டைகளும் விழுந்தன.

மனநோய் ஆஸ்பத்திரியில் கொலை.

பணக்காரப் பெண் கொலை செய்யப்பட்டாள்.

பேப்பரைக் கையில் எடுத்துப் படிக்க,

நேற்று இரவு ஒரு மணிக்கு நகரில் 'ஸ்வீட் ஹோம்' என்ற மன நோய் ஆஸ்பத்திரியில் இரண்டாவது மாடியில் எட்டாவது அறையில் கல்பனா என்ற இளம் பெண் கொலை செய்யப்பட்டாள். அன்று பகலில்தான் அந்தப் பெண் ஆஸ்பத்திரியில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தாள். போலீசார் தீவிர விசாரணை செய்கிறார்கள்.

அடுத்த கணம் வீல் என்ற இரைச்சல்தான் மிஸஸ் ராவுக்குக் கேட்டது.

அவள் அவளைப் போய் எடுப்பதற்கு முன், —அங்கேதான் நான் இருந்தேன்! அதே அறைதான்! என்று கத்தி மூர்ச்சை அடைந்தாள் லாலி.

[தொடரும்]

# மலைமகள்

முன்கதை சுருக்கம்

விச்வேச்வரனும் அவர் மகள் லாலியும் திருக்கோணம் கோவிலுக்குப் போகிறார்கள். லாலி ஒரு வித மன நோயிலிருந்து (ஆங்சைட்டி மேனியா) சமீபத்தில் சிகிச்சை பெற்றுத் தேறியவள்.

திருக்கோணம் லாட்ஜ் ஒன்றில் மார்லோ என்ற வெள்ளைக்காரனை தாஸ் குழுவினர் கொன்று அப்புறப்படுத்துகிறார்கள். அவன் ஒரு பழைய நகை மதிப்பீட்டுக்காரன். திருக்கோணம் கோவிலில் ஒரு பழைய கால மீன் நெக்லஸ் கிடைத்தது என்றும் அதன் மதிப்பு எட்டரை கோடி என்றும் தாஸ் குழுவினர் அறிகிறார்கள். அதை அபகரிக்கத் திட்டமிடுகிறார்கள்.

மறுநாள் மாலை நடக்கும் சுவாமி புறப்பாட்டில் தாஸ் ஒரு பக்தனைக் கலந்துகொண்டு சுவாமி மீதிருக்கும் நெக்லஸைத் திருடுவதற்குப் பெரும் முயற்சி செய்கிறான். ஆனால் அது தோல்வி அடைகிறது. காரணம் லாலி! தாஸ் திருட முனையும்போது அவள் கத்திவிடுகிறாள்.

லாலிக்கு அந்த நெக்லஸின் பழைமையும் மதிப்பும் தெரியும். விச்வேச்வரன் அதுபற்றி அவளுக்குச் சொல்லியிருந்தார்.

திருட்டு முயற்சி நடந்த இரவு தன் அலுவலில் விச்வேச்வரனை கொலை செய்யப்படுகிறார் தாஸ் குழுவினரால் என்று வெளியிலிருந்து [illegible] தெரிவித்தாள்.

அதை அடுத்து ஏற்பட்ட மனச் சோர்விலிருந்து லாலி [illegible] என்ற மனநோய் மருத்துவ மனையில் மீண்டும் சேர்க்கப்படுகிறாள்.

மருத்துவமனையை அடுத்து எம்.என்.ஆர் ஜுவல்லரி இருக்கிறது. அங்கே ரிப்பேருக்காக அந்த மீன் நெக்லஸ் வந்திருக்கிறது என்பதை தாஸ் குழுவினர் அறிகிறார்கள். எப்படியும் அதை அபகரிப்பது என்று தாஸ் வீட்டில் போட அவனும் லாலியும் பல இடங்களில் நேருக்கு நேர் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

லாலி தாஸைக் காண்பித்து அந்தக் கண்ணுடிக்காரன்தான் கொலைகாரன், அவன்தான் நெக்லஸைத் திருட முயன்றவன் என்று பலருக்குச் சொல்லியும் அவர்கள் நம்ப மறுக்கிறார்கள். லாலியின் பிரமை அது என்கிறார்கள்.

இந்த நிலையில் பிரகாஷ் ராவ் என்ற குடும்ப நண்பர் லாலியை மருத்துவ மனையிலிருந்து தம் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே ஒரு பேப்பர் செய்தி லாலியை உலுக்குகிறது.

ஒரே உண்மை பலருக்கு அது
பலவிதத்தோற்றம் கொடுக்கிறது.
—வேதவாக்கியம்.

## 14

மலர் பத்திரிகையில் ஆஸ்பத்திரி கொலை பற்றிய செய்தி பற்றுக்குறையாக இருந்தது.

செய்தி இன்னும் திரளவில்லை.

மிஸஸ் ராவுக்கு அதிகமான பின்னணி தெரியாது.

பத்திரிகையைப் பார்த்ததும் லாலி வீல் என்று கூவிக் கீழே மூர்ச்சையாகி விட்டாள். ஏன்? ஆனால் தெரியாது.

தவித்துப்போன திருமதி ராவ் உள்ளே ஓடித் தண்ணீர் கொணர்ந்து லாலி முகத்தில் தெளித்தான்.

அப்போது ராவ் வாசலில் வந்து இறங்கினார்.

—நல்லவேளை வந்தீங்க! என்று மிஸஸ் ராவ் பாய்ந்து போய் அவரிடம்

# ஒருவிசை

விஷயத்தைக் கூறினாள்.

ராவ் கலங்கி உள்ளே ஓடி லாலியைப் பார்த்தார். சிதறிக் கிடக்கும் பேப்பரைப் பார்த்தார்.

—லாலி! எழுந்திரு! என்னம்மா, உனக்கு? என்றார்.

லாலி கண் விழித்தாள். ராவ் அதற்குள் பேப்பர் தலைப்பைப் பார்த்துவிட்டார். வியப்புடன் பேப்பரைச் சேகரித்தார். தலைப்பின் பாதிப்பு அவரைச் சிறிது வாய் திறக்க வைத்தது.

லாலி எழுந்து உட்கார்ந்து, — பார்த்தீங்களா? என்றாள்.

ராவ் சட்டென்று அவள் பக்கம் திரும்பி,—உனக்கு ஒன்றுமில்லையே! என்றார்.

—இப்போ சரியாயிட்டேன்! என்றாள். பிறகு திகிலுடன்,—அங்கிள் அதைப் படியுங்க, என்றாள்.

—படிச்சேன். இதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?

—இருக்கு!

— ஸ்வீட் ஹோமிலே நடந்திருக்கு. அதுதானே?

—அது மட்டுமில்லே ஹோம்லே எங்கேன்னு பாருங்க.

பார்த்தார்.

புஷ்பா தங்கதுரை

COMICS PDF TIMES

—ரெண்டாவது மாடியிலே எட்டாவது அறையிலே.

—புரிகிறதா?

—அதிலே என்ன இருக்கு லாவி?

—அந்த அறையிலேதான் நான் இருந்தேன்.

—ஓ! என்று ராவ் இழுத்தார். —அதனாலே என்ன?

—இன்னும் புரிஞ்சுக்கலியா, அங்கிள்? கொலைகாரன் என்னைத் தேடி வந்திருக்கான்.

—மை காட்! என்றார் ராவ்.—நீ எப்படி அந்த மாதிரி நினைக்கலாம், லாவி! ரொம்ப ஆச்சரியமாயிருக்கே!

—இல்லே, அங்கிள்! ஏற்கெனவே அப்பாவைக் கொன்னுட்டான். நான் தான் பாக்கி.

—சும்மா ஏன் கொல்லப்போறான்?

—நகையைத் திருடறதை நான் பார்த்துட்டேன்.

ராவிடம் வேதனையான புன்னகை வந்தது.—அது எப்பவோ நடந்தது லாவி! அதை இன்னும் நினைச்சுக்கிட்டு ஒருத்தன் உன்னைத் தேடிவராண் என்கிறியே, யாரேனும் நம்புவாங்களா?

—அங்கிள்! நான் சொல்றதை நம்புங்க! அந்தச் சம்பவத்தைப் பார்த்தப்புறம் அவன் என்னைத் தொடர்ந்து கிட்டே வராண்.

—அவனுக்கு என்ன லாபம்?

—என்னைக் கொன்னுட்டா அவனுக்கு ஒரு முக்கிய சாட்சி மறைந்து போகும்.

ராவ் மொளைக்கில் கை ஊன்றிப் பின்னல் சாய்ந்தார்.

—நகை திருடு போயிருந்தா நீ சொல்றதை நம்பலாம். அதுதான் திருடு போகலியே!

—பின்னடி திருடுவாங்க.

—பின்னடி திருடறதுக்கு முன்னடியே சாட்சி இல்லாமல் பண்ணிக்குவாங்களா? பேஷ் பேஷ்...

லாலி விக்கித்தாள். தர்க்க ரீதியாகப் பேசினால் அவள் அடிபட்டுப் போகிறாள்.

—அங்கிள்! என்றாள் மெதுவாக. அவள் தொனியில் சந்தேகம் இருந்தது. —கொலை வேறே செஞ்சிருக்கான். ஞாபகம் வச்சுக்குங்க.

—உங்க அப்பா கொலையைச் சொல்றியா?

—ஆமாம்!

—அதை அவன் தான் செஞ்சான்னு நிச்சயமாகத் தெரியாதே!

லாலிக்கு வெறுப்பாக இருந்தது. என்ன மனிதர்கள்! எதையும் நேரில் பார்த்தால்தான் நம்புவார்கள் போல இருக்கிறது. பிறர் சொன்னால் நம்ப மாட்டேன் என்கிறார்கள்.

மௌனமாக எழுந்தாள். ராவைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. மாடிப்படி மீது காலை வைத்தாள். —அங்கிள்! என்றாள் கீழே குனிந்து —என்னுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பீங்கன்னு நினைக்கிறேன்—நீங்க மட்டும் தீவிரமாக விசாரிச்சுப் பார்த்தீங்கன்னா இந்தக் கொலை ஏன் நடந்ததுன்னு தெரியவரும். என்னுடைய தியரியைச் சொல்றேன். அந்தக் கொலைகாரன் யாரையோ

# ஆற்றுப் படையா, ஆறு படையா?

புதுக்கோட்டை சாந்தானந்த சுவாமிகள் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் புலவர் கீரன் பேசும்போது குறிப்பிட்டார்:

'ஆறுபடை வீடு' என்று எந்த இலக்கியத்திலும் கூறப்படவில்லை. முருகனை வேண்டி ஆற்றுப் படையை நக்கீரர் பாடினார். அதுதான் திருமுகாற்றுப் படை. ஆற்றுப்படை என்பதுதான் ஆறுபடையாகத் திரிந்து விட்டது.

இக்கருத்தைப் புலவர் முத்து வெங்கடேசனும் ஆதரித்தார்.

புலவர் கீரனின் கருத்துப்படி ஆறுபடை வீடு என்பது இல்லையா? புலவர்கள் கருத்து என்ன?

—மு.வே. கல்யாண் குமார்

ஒன்று இரண்டு மூன்று சொல்லிக் கொடுக்க இந்த இடம்தானு அகப்பட்டது என்று கேட்கக் கூடாது. 'பள்ளியறை' ஆயிற்றே!

'ஆராதனை'—படத்தில் சுமலதா, ரவி.

ஏவிவிட்டிருக்கான். இரண்டாவது மாடியிலே, எட்டாவது அறையிலே இருக்கிற பெண்ணைக் குளோஸ் பண்ணுன்னு அவன் கிட்டே சொல்லி அனுப்பிச்சிருக்கான். அவனுக்குத் தெரியாது முந்திய நாள்தான் நான் விடுதலையாகிப் போய்ட்டேன்னு! இன்னும் அங்கேயே இருப்பேன்னு நினைச்சு ஒரு கையாளை அனுப்பி என்னைக் கொலை செய்யச் சொல்லியிருக்கான். கையாளும் அறைக்குப் போய் அங்கே இருக்கிற பெண்ணைக் குருட்டுத்தனமாக கொன்னுட்டான். அவனுக்குத் தெரியாது, அந்த பெண் நான் இல்லேங்கிறது. இனிமே தெரிஞ்சுட்டதுன்னு என்னைத் தேடி இங்கேயே வந்துவிடுவான். நிச்சயம் அங்கிள்!

கிட்டத்தட்ட, அவர் மீது வேதனை கொண்டவள் போல் பேசி, சிறு அடிகளை அவசரமாக வைத்து மாடி ஏறினாள்.

அறைக் கதவை மெதுவாகத் திறந்து உள்ளே படுக்கையின் மிருதுவில் அழுத்தினாள்.

தூக்கம் அவளைப் பிடிப்பிடியாகக் கவ்வியது. சில சமயம் நீண்ட பெருமூச்சுக்களில் தனது தாபங்களைக் கரைய விட்டாள். சில சமயங்களில் கண்ணீராக அவைகளை உருக வைத்தாள்.

திடீரென்று தனிமையாகிவிட்ட உணர்ச்சி. நிச்சயம் யாரும் அவளுக்கு இல்லை, இங்கே இந்த வீடு வந்ததில் அவள் எதிர்ப்பார்த்தது முற்றிலும் மாறுபாடான வரவேற்பை. ராவ் ஒரு டீக் கம்பெனியில் தென் பிராந்திய மானேஜர். திறமை சாலி! அறிவாளி! அவர் நிச்சயம் அவளைப் புரிந்து கொள்வார் என்று எதிர்பார்த்தாள்.

ஆனால் வந்த இரண்டாம் நாளே போத்தியைக் கொண்டு வந்து பூஜை செய்து கையில் காப்புக் கட்டி...

ஒரு கணம் தனது சொந்த வீட்டுக்குப் போகலாம் என்று தோன்றியது. அத்தை இப்போது அங்கே சுவாதீனமாக இருக்கிறார். அந்த நாகசாமி மூஞ்சியும் அங்கேதான் இருக்கிறது.

அவளுக்கு உடம்பு சரியில்லை, வீட்டைப் பராமரிக்க ஆள் தேவை என்று தாங்களாகவே தங்களுக்கு ஒரு கடமையை உண்டு பண்ணி அங்கே வந்து தங்கிவிட்டார்கள்.

சாதாரண நோயாக இருந்தால்,—நான் என்னைக் கவனித்துக்

கொள்கிறேன், போங்கள்! என்று சொல்லி ஒரு நர்ஸையோ ஒரு வேலைக்காரியையோ வைத்துக்கொண்டு அவர்களை ஊருக்கு அனுப்பியிருப்பாள்.

அவளுக்கு வந்திருப்பது மனநோய்! அது சின்னதாக இருந்தால் என்ன பெரிதாக இருந்தால் என்ன, அந்தப் பட்டம் கட்டிவிட்டால் பொதுவாக ஒருத்தர் இன்னொருவர் சார்பின்றி இருக்க முடியாது என்பது நிர்மாணமாகிவிடுகிறது. அதைக் காரணமாக வைத்து இந்த அத்தை வந்திருப்பதில் எந்தக் குறையும் கூற முடியவில்லை.

கடவுள் அவளை இப்படி ஒரு விசித்திரச் சூழ்நிலையில் வைத்துவிட்டார் என்று வெதும்பினாள் அவள்.

சன்னல் வெளியே மாலை மெள்ளத் திரிந்து ஊரம்ப இருட்டு மெல்லிய புகை போல் விழுந்தது.

எழுந்து விளக்கைப் போடும்போது ராவ் அங்கே வந்திருந்தார்.

அவளுக்கு முதுகுவலி தோன்றி உடனே பட்டுப்போயிற்று.

—லாரி, லாலி! என்று சொல்லியவாறு உட்கார்ந்தார் அவர், எதிரே நாற்காலியில்.

அவர் முகத்தில் இரக்கம் தெரிந்தது.

—லாலி! நீ நோகும்படி பேசிட்டேன். வருத்தமா இருக்கு! ஒரு வேளை நிஜமாச்சா, நீ சொல்றதுகூட உண்மையா ஏன் இருக்கக் கூடாதுன்னு தோணுது! அதை நான் நம்பறேனே இல்லியோ, விசாரிச்சுப் பார்த்துடலாமில்லையா? அதை விட்டுட்டு உன் கிட்டே ஏன் எதிர்மாறாப் பேசணும்? உன் விஷயத்தில் உன் மனசைப் புரிஞ்சவங்களோ புதிய முயற்சி செய்யறவங்களோதான் உனக்கு இந்தச் சமயத்திலே ஆறுதல் தர முடியும். நான் நடந்துகிட்டது எனக்கே பிடிக்கலில்லே. இனிமே இப்படி நடந்துக்க மாட்டேன். லாலி! என்றார் அவர் குழைந்து கொண்டு.

லாலி வெகு நேரம் பேசவில்லை.

ராவ் சிறிது வற்புறுத்திய பிறகுதான் பேசத் தொடங்கினாள்.

—முதல்லே எங்க கார் எனக்கு வேணும் அங்கிள்! நாளு கவருக்குள்ளே இருந்து எனக்கு தலைவலி வருது. உலகத்துக்குள்ளே கொஞ்சம் போய்ட்டு வந்ததாத்தான் எனக்கு நிம்மதி கிடைக்கும். நீங்க என்னதான் சொல்லுங்க அங்கிள்! அவங்க அவங்க அவங்களுக்குத்தான் உலகம் அப்படித்தான் இருக்க முடியும். அதனாலே நீங்க எனக்குப் பாதுகாப்பா இருந்தாலுமே நானே என்னைக் கொஞ்சம் கவனிச்சுக்க வேண்டியதுதான், என்றாள் லாலி.

ராவுக்கு அவள் பேச்சு ஒரு டோஸ் போல் இருந்தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தார்.

பிறகு எழுந்து—லாலி! நீ சொல்றதிலே உண்மை இருக்கு! ஒத்துக்கறேன். ஆனால் என் விஷயத்தில் நீ வருத்தப்பட வேண்டாம். உனக்கு எந்த விதத்திலும் உதவி பண்ணத் தயார்! என்ன செய்யணும்னு சொல்லு! இப்போ அந்த ஆஸ்பத்திரி சம்பவம் உன் சம்பந்தப்பட்டதுன்னு சொல்றே! அதுக்கு நான் ஏதாவது செய்யணுமா?

பளிச்சென்று நிமிர்ந்தாள் லாலி.
—ஒரு காரியம் செய்வீங்களா?

—ஷ்யூர்.

—நான் நானாக்கு போலீஸ்கிட்டே பேச விரும்பறேன்.

—எதைப் பத்தி?

—இந்த ஆஸ்பத்திரி கொலை பத்தி.

—ரைட். செஞ்சுக்க!

—எனக்கு ஏற்பாடு பண்ணிக்கொடுங்க!

—நிச்சயமா?

போலீசுடன் அப்பாயிண்ட்மெண்ட் கிடைத்த நேரம் மறுநாள் மாலை மூன்று மணி.

இன்ஸ்பெக்டர் முருகேசன் காத்திருந்தார்.

ஆஸ்பத்திரியில் நடந்த கொலை அவரது விசாரணையில் இருந்தது.

இரவும் பகலும் இரண்டு நாள் விசாரித்ததில் மிகவும் களைத்திருந்தார்.

நேரத்திற்குச் சாப்பிட்டிருப்பார் என்று கூடத் தோன்றவில்லை.

இப்போதுதான் ஆஸ்பத்திரி ஸ்டாஃப் முழுவதுக்கும் கைரேகை பதிவு செய்து மிகவும் விரக்தியோடு போலீஸ் ஸ்டேஷன் திரும்பி இருந்தார்.

ராவும், லாலியும் உள்ளே நுழைந்தபோது, முருகேசன் தமது இரு கைகளிலும் தலையை வைத்துத் தமது ஆயாசத்தைச் சிறிது ஆற்றிக்கொண்டிருந்தார்.

சத்தம் கேட்டதும் நிமிர்ந்து, அவர்களை உட்காரச் சொல்லி,—ம். சொல்லுங்க! ஏன் என்னைச் சந்திக்க விரும்பினீங்க? ஏவாவது க்ளூ கிளு இருக்கா? இந்தக் கொலையைச் செஞ்சவன் யாருன்னு தெரியுமா? என்றார் யந்திரத்தனமாக.

—எனக்குத் தெரியும் என்றாள் லாலி.

—தெரியுமா? என்று பெரிதாகப் புருவத்தை உயர்த்தினர் இன்ஸ்பெக்டர்.

—ஆமா ஸார்.

—சொல்லுங்க சீக்கிரம்.

—இன்ஸ்பெக்டர்! என்றாள் லாலி.—இந்தக் கொலையில் கொலைகாரன் கொல்ல வந்த பெண் நான்தான். அந்தப் புதுப் பெண் இல்லை.

—என்ன சொல்றீங்க? என்றார் இன்ஸ்பெக்டர்.

—என்னது? கேஸையே திருப்பறீங்களே! என்றார் இன்ஸ்பெக்டர்.

—உண்மை அதுதான்?

—எப்படிச் சொல்லுங்க?

—புதுப் பெண் வர்றதுக்கு முந்திய நாள் வரைக்கும் நான் தான் அந்த எட்டாம் நம்பர் ரூமிலே இருந்தேன்.

நீங்க நேயாளியாக இருந்தீங்களா?

—ஆமா!

இன்ஸ்பெக்டரின் பாதி திர்பார்ப்பு இப்போது குறைந்துவிட்டது.—சரி, சொல்லுங்க!

—கொலைகாரன் என்னைக் கொல்லத்தான் வந்திருக்கான்.

—என்ன ஆதாரம்?

—பெரிய கதையே இருக்கு.

இன்ஸ்பெக்டர் குப் என்று சிரித்தார். அவர் அப்படிச் செய்தது ராவுக்குக்கூட அநாகரிகமாக இருந்தது. —ஏன் இன்ஸ்பெக்டர்? என்று கேட்டார். முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொண்டு.

—நாங்க கொலைகாரனை முக்கால்வாசி கண்டு பிடிச்சாச்சு! இவங்க என்னடான்னு... என்று சொல்லி மீண்டும் சிரித்தார் இன்ஸ்பெக்டர்.

ராவ் மீண்டும் துணுக்குற்றார்.

இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். —அது ஒரு விசித்திர லவ் கேஸ். அந்தப் பெண் லவ்வில விழுந்து பைத்தியமாயிட்டா. அது ஒரு ட்ரையாங்கிள் ஆஃப் லவ்வோ, க்வாட்ராங்கிள் ஆஃப் லவ்வோ. அநேகமா ஆளை நாளைக்குள்ளே பிடிச்சுடுவோம்.

அப்போது,—என்ன விஷயம் என்று கேட்டு எஸ்.ஐ ஒருவர் உள்ளே வர, முருகேசன் அவரிடம் பேச,

—ஸார்! நான் கண்ட்ரோல் ரூமிலே இருந்திருக்கேன் ஸார்! இரண்டாவது மாடி எட்டாம் நம்பர் ரூம் பெண்தானே இவங்க! பொய்யா 100ஐப் போன் பண்ணி வரவழைச்சு ஒரு நாள் சிரிப்பாகச் சிரிக்க வச்சுட்டா ஸார், என்றார் அந்த எஸ்.ஐ.

லாலியின் முகம் கறுத்தது.

அதே நேரம், மணி அடிக்க, போனை எடுத்து, —டாக்டர் பெஞ்சமினை என்று கேட்டு இன்ஸ்பெக்டர் பேசத் தொடங்கினார்.

—மிஸ்டர் பெஞ்சமின்! இங்கே ஒரு குட்டித் தமாஷ்! என்று சொல்லி லாலியின் விவரங்களைக் கூற சிறிது நேரத்தில் இன்ஸ்பெக்டரும் பெஞ்சமினும் பேசவே இல்லை. அதற்குப் பதில் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள்.

போனை ஒருவாறு முடித்துவிட்டு, ராவைக் கோபமாகப் பார்த்த இன்ஸ்பெக்டர், —ஸார்! அவங்கதான் இங்கே வரணும்னு சொன்னகூட உங்களுக்கு யோசனை வேண்டாமா ஸார்? இப்படி போலீஸ் ஸ்டேஷனை ஒரு கேலிக் கூத்தா மாத்தறீங்களே! போய்ட்டு வாங்க! என்று சொல்லி, சட்டென்று எழுந்து உள்ளே போய்விட்டார்.

லாலியும் ராவும் வெளியே போய்விட்டார்கள்.

லாலியின் முகம் இறுக்கமாக இருட்டியது.

—அங்கிள்! என்றாள். —ஸ்வீட் ஹோம் வழியாகக் காரைவிடச் சொல்லுங்க! என்றாள்.

(தொடரும்)



பெரியவர்: உன்னைப்பற்றி ஊருக்குள்ளே நாலு பேர் நாலு விதமாகப் பேசுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம்?

இளைஞன்: அப்படியா? அந்த நாலு பேர்களுக்குள் ஒற்றுமை இல்லை என்றுதான் அர்த்தம்!

அபிப்பிராயம் சொல்றே! அவர் ஒரு அபிப்பிராயம் சொல்றார்.

—அதத்தான் நானும் சொல்றேன். எனக்கு எப்பவோ சின்ன ஆங்ஸைட்டி வியாதி இருந்தது என்கிறதுக்காக, நான் சொல்ற அபிப்பிராயத்தைக் கிண்டல் பண்ணி எனக்குப் பைத்தியக்காரப் பட்டம் கட்டிக் கீழே தள்ளறுங்களே, அது சரியா?

ஒரு போடு போட்டாள்.

ராவ் பின்னல் சாய்ந்தவர்தான். திரும்பவும் எழுந்திருக்கவில்லை.

நான் குதுண்டுக் கட்டிடங்களோடு ஆஸ்பத்திரி எதிர் வந்தது.

ஈட்டி முள் வேலிகளில் பசும் கொடிகள் படர்ந்திருந்தன.

லாலிக்கு மனத்தில் கூடு இன்னும் தணியவில்லை. என்னை யா மனநோயாளி என்கிறார்கள்? ஒரு கை பார்க்கிறேன், ஒரு கை!

கீழே இறங்கினாள்.

வழக்கமாக வரும் அச்ச உணர்வு மெல்லத் தலைகாட்ட, சீ! என்று அந்த உணர்வை ஒரு சீறு சீறினாள்.

அவளது அந்தச் சீறல் கைமேல் பலன் கொடுத்தது. வழக்கமாகத் தரையில் கால்



வாசலில் போலீஸ் பாரா இருந்தது. கொலை நடந்த பிறகு போடப்பட்ட பந்தோபஸ்து.

தூ! எனக்கு ஆங்ஸைட்டியாம்! மேனியாவாம்! ரிடிகுலஸ்.

சுர்ரென்று இந்த நினைவுகள் ஓட, கழுத்தை ஒடித்து அலையாசமாகத் திரும்பினாள்.

கேட் வழியாக உள்ளே போனாள்.

ரிஸப்ஷனைச் சுற்றிப் பெரிய லவுஞ்ச். வலது ஓரத்தில் ஸ்தாபகரின் வெண்கல 'பஸ்ட்.' இரண்டு வெள்ளை உடை நர்ஸ்கள் குறுக்கே போனதைப் பார்த்ததும், மெள்ள டிப்ரஷன் தலைதூக்க,—சீ! என்று உதறினாள்.

அந்த இன்ஸ்பெக்டர் உன்னைக் கேலி பண்ணலை? என்ன ரோஷமாக இருந்தது? எல்லோரும் சிரித்தார்களே? ராவுக்குக்கூட உதடு நெளிந்ததே!

இனியும் அதே மாதிரி நடக்க விடலாமா? மீண்டும் மீண்டும் போலீஸ் ஸ்டேஷன் சம்பவத்தைக் கனல் ஊதிக் கொண்டிருந்தாள் அவள்.

கொலைக்குப் பிறகு உள்ளே கெடுபிடிகள் அதிகமாக இருந்தன.

சுசீலா ஒரு கணம் துளியாகத் தெரிய, —ஓ. லாலி! என்று ஓடிவந்து, —உமேஷைப் பார்க்கணுமா? இதோ அனுப்பறேன், என்று சொல்லி உள்ளே மறைந்தாள்.

உமேஷ் அடுத்த சில நொடிகளில் அவசரமாக வந்தான். மிகுந்த பரபரப்பான குரலில், —லாலி என்று சொல்லி அருகில் உட்கார்ந்தான். குரலே மிகவும் தணித்து, —யூ ஆர் ரைட், லாலி! உன்னை நம்பறேன், என்றான்.

லாலி படபடப்புடன், —எதைச் சொல்றே உமேஷ்? என்றாள்.

—அந்தக் கொலை! உன் ரூம்மே நடந்திருக்கே! யோசிச்சுப் பார்த்தா உன்னைக் கொல்லத்தான் வந்திருக்காங்க.

லாலிக்கு உற்சாகம் பொங்கியது. — நம்பறீங்களா? உமேஷ்!

—நம்பறேன்.

லாலிக்கு முகம் வெளிச்சமாகியது. — எப்படிச் சொல்லுங்க?

—நீ அன்னிக்குக் காலேலதானே ஆஸ்பத்திரியை விட்டுட்டுப் போனே! எனக்கு வருத்தமா இருந்தது. பல வாட்டி பால்கனிக்கு வந்து பார்த்தேன். அறைக்குள்ளே இருப்புக் கொள்ளலை. அப்போதான் எதிரே இருக்கிற முருகன் கோவில்லே அந்த பக்தரைப் பார்த்தேன்.

—பார்த்தியா? என்று வாய் முழுதும் கேள்வியாகக் கேட்டாள் அவள்.

—ஆமாம்! மத்தியானம் பார்த்தேன். சாயங்காலம் ரெண்டு வாட்டி பார்த்தேன். அவன் உன் ரூமை அடிக்கடி கவனிச்சிட்டிருந்தான். எனக்கு அப்போதான் சந்தேகம் தோணிச்சு! நீ

வைத்ததும் ஏற்படும் அச்ச நடுக்கம் இப்போது ஏற்படவில்லை.

ஒரு கணம் பளீர் என்று ஆஸ்பத்திரியைப் பார்த்தாள். ஆச்சரியமாக இருந்தது. அதை ஊடுருவி நிற்கும் பீதித்தன்மை போய், அது சாரமற்ற வெறும் கட்டிடமாக அவளுக்குத் தெரிந்தது.

இந்தக் கட்டிடத்தையும், இதற்குள் இருக்கும் மனிதர்களையும் பார்த்து ஏன் பயப்பட்டோம்? தேவையில்லாத பயம்தானே!

# நான் ஒருத்தன்தான் வாழைப்பழ ஜூஸ் போடுகிறேன்

சென்னை ஐ.ஐ.டி. கல்லூரிக்கு அருகில் உள்ள பழக்கடையில் வாழைப்பழ ஜூஸ் செய்து தருகிறார், கடைச் சொந்தக்காரர் சந்திரன். ''வாழைப்பழத்தை நறுக்கி மிக்ஸியில் போட்டுத் தண்ணீர் கலக்காத பால் ஊற்றினால் போதும். கொஞ்சம் கோகோ எஸ்ஸென்ஸும் சேர்க்கிறேன். இதைச் சுலபமாகச் செய்யலாம். ஆனால் சென்னையில் வேறு யாரும் வாழைப்பழ ஜூஸ் செய்வதில்லை,'' என்றார்.

—அசோக்.

சொன்னதெல்லாம் நிஜமா இருக்கலாம்னு நினைச்சேன். நீ ரூமை விட்டுப் போய்ட்டதனாலே உனக்கு ஆபத்து இல்லேன்னு நினைச்சேன். ஆனா காலேலே ரகளையைப் பார்த்ததும்தான் அந்த ரூம்லே கொலே நடந்திருக்குன்னு தெரிஞ்சுது. நல்ல வேளை, நீ தப்பிச்சே லாலி!

—போலீஸ் வந்தாங்களா?

—காலேலே வந்துட்டாங்க!

—நாய் கொண்டு வந்தாங்களா!

—ம்! அதைத்தான் சொல்ல வந்தேன். அது கீழே இறங்கிப்போய் அந்தக் கோவிலே ஒரு சுற்றுச் சுற்றி ரோடுப் பக்கம் போயிட்டுது.

—அப்போ அந்த ஆள்தான்! என்று குதித்தாள் லாலி.

—ஆமாம், என்றான் உமேஷ்.

— நீ போலீஸ்லே சொல்லறதுதானே! என்றாள் லாலி.

—நோ நோ! நீ செய்யற தப்பிதத்தை நான் செய்ய மாட்டேன். நான் இருக்கிறது மனநோய் ஆஸ்பத்திரி: நான் சொன்னா நம்ப மாட்டாங்க! நம்ப மேலே ப்ரஜூடிஸ் இருக்கும். சொல்லிப் பிரயோசனமில்லே. அப்புறம் உன்னைச் செய்யற மாதிரிதான் என்னையும் பூப்பூ என்பாங்க!

—இப்போ என்ன செய்யறது?

—அதுதான் தெரியலே. நீ ஜாக்கிரதையா இருக்கணும்.

—இருப்பேன்! எனக்கு இப்போ ஒரு வேகம் வந்திருக்கு!

—ஏன்?

— எனக்குச் சூடு போட்டாப்போல எல்லோரும் பேசறாங்க! ஆத்திரம் வந்துடுத்து. இனிமே நான் புறப்பட மாட்டேன்.

—நிச்சயமா?

—நிச்சயம். எனக்கு ஒரு காரியம் செய்! உமேஷ்!

—செய்யறேன், விசா!

—அந்தக் கோவிலேத்தான் கவனிக்கணும். அந்தக் கண்ணாடிக்காரன் அங்கே ஏன் வரான்னு கண்டுபிடிக்கணும்.

—இனிமே வருவானு?

—நிச்சயம் வருவான். அங்கே அவனுக்கு என்னமோ இண்டரஸ்ட் இருக்கு.

—ஓகே. கவனிக்கிறேன்.

—நான் போன் பண்ணறேன். அப்புறம் விவரம் சொல்லு.

—ஓ. கே!

—நான் வரட்டுமா?

—பை!

லாலி வெளியே வந்தாள்.

வெளியே காரும், ராவும் அவளுக்காகக் காத்திருந்தார்கள்.

லாலி உடனே போய் ஏறவில்லை. மேலே அவள் இருந்த ரூமின் ஜன்னலைப் பார்த்தாள். இப்போது அது அடைபட்டிருந்தது.

உமேஷின் அறையைப் பார்த்தாள். அவன் கையை ஆட்டிக் கொண்டிருந்தான்.

லாலிக்கு இன்னுமொரு உந்துதல் கிடைத்தது போலிருந்தது.

இந்த ரூம்லே இருந்திருந்தா நான் இந்நேரம் இறந்திருப்பேனே என்று நினைத்தாள். உடல் முழுதும் ஓர் உதறல் ஓடியது.

மெள்ள டிப்ரஷன் தலை தூக்க, சீ! என்று ஒரு உதறு உதறினாள்.

பிறகு காரில் ஏறுமல் நேராக திர்வாடையில் இருக்கும் முருகன் கோவிலை நோக்கிப் போனாள்.

ராவ் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

மேலே உமேஷ் அச்சம் கலந்த உற்சாகத்துடன் பார்த்தான்.

இருமுறை தயக்கம் ஏற்பட்டு, இரு முறையும் உமேஷைப் பார்த்துவிட்டு, எதிர்த்திசை போய்க் கோவிலை அணுகினாள்.

ஆச்சரியம்.

கோவிலைச் சுற்றி ஒரு காம்பவுண்ட் இப்போது தலைதூக்கியிருந்தது.

நாலு செங்கல் உயரம் வளர்ந்திருந்தது.

அருகில் செங்கல்லும் மணலும் குவியல்களாக இருந்தன.

இங்கே என்ன வேலை நடக்கிறது?

யார் இதைச் செய்கிறார்கள்?

கண்ணடிக்காரனுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா?

கோவிலை மெல்ல வலம் வர, பின் பக்கம் ஒரு புதுக் கிணறு தோண்டப்படும் நிலையில் இருந்தது.

அதில் இருந்து எடுக்கப்பட்ட கரிசல் மண் சுற்றிவரக் கட்டியும் கிட்டியுமாக இருந்தன.

கிணற்றுள் எட்டிப் பார்த்தாள். இன்னும் தண்ணீர் வரவில்லை.

இப்படியெல்லாம் எதற்கு?

—ஏம்மா! உன்னைக் கொல்லத்தான் இந்தக் கோவில்லே நின்று பார்த்தான்னு சொல்றே? அப்படியே உன்னைக் கொல்லத்தான் கோவிலுக்குக் காம்பவுண்டும் கிணறும் கட்டினானே? நீ பேசறது பைத்தியக்காரத்தனமா இருக்கே!

மனசில் அந்த இன்ஸ்பெக்டர் கேள்வி கேட்டுக் கேலி பண்ணிக் கொண்டிருந்தார்.

எதிரே பார்த்தாள்.

எம்.என்.ஆர். ஜுவெல்லரி



அவர்: ''இந்த ஊரிலிருக்கிற கரும்புத் தோட்டங்களுக்கு உடனே போலீஸ் பாதுகாப்பு போட்டுடுங்க ஸார்!''

போலீஸ் அதிகாரி: ''ஏன்?''

அவர்: ''என் சர்க்கஸ் கம்பெனியிலிருந்த நாலு யானைகளும் தப்பிச்சுக்கிட்டு ஓடிடிச்சு!''

—உ. ராஜாஜி.

என்று பெரிய விளம்பரப் பலகை.

மாலை வெய்யில் பளீர் என்று சிலிர்த்தது.

இந்த ஜுவெல்லரிக்கும், இந்தக் கோவிலுக்கும், இந்தக் கண்ணுடிக்காரனுக்கும், அவன் செய்கைகளுக்கும் சம்பந்தம் உண்டா?

—அபிப்பிராயம் சொன்னு ரீஸனுக்கு உட்படும்படி. அபிப்பிராயமாச் சொன்னு ஒத்துக்கலாம். அதுக்கு உட்படாத அபிப்பிராயம் சொல்லலாமா? என்று அவள் மனசில் ராவ் கேட்டார்.

குழம்பியவாறு வெளியே வந்தாள்.

ஆஸ்பத்திரி ஜன்னலிலிருந்து உமேஷ் ஆர்வமோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் செய்கையை ஒரு வீரச் செய்கை என்பதுபோல் அவன் கை காட்டி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான்.

சாலையைத் தாண்டினாள்.

கார் பக்கத்தில் நின்றுள். ராவ் பெரிய வியப்புடன் அவளது நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

—ம். நாழியாச்சு! போலாமா? என்றார் அவர்.

அவள் அவர் முகத்தை மட்டும் பார்த்தாள். பதில் சொல்லவில்லை.

ராவின் கண்கள் தீவிரமாயின.

—லாலி! என்றார்.

திரும்பினாள்.

—நான் சொல்றேன்னு வித்தியாசமா நினைக்காதே, லாலி.

—இல்லை.

—பெஞ்சமின் சொன்னது தப்பிதமோன்னு நினைச்சேன். தப்பிதமில்லை. நீ இன்னும் கொஞ்ச காலம் ஆஸ்பத்திரியிலே இருக்கிறதுதான் நல்லது.

விருட்டென்று பார்வையைத் தூக்கினாள் அவள். அடக்க முயற்சித்தும் குரல் அடங்கவில்லை. —அங்கிள்! என்று இரைந்தாள். சீறிக்கொண்டு வந்த தொனி இது.

மேலே பேசவில்லை. அதற்குள் அவள் கவனம் தடைப்பட்டது.

எதிரே ஒரு டாக்ஸி கோவில் பக்கம் நின்று விட்டுப்போக, அதிலிருந்து இறங்கி நின்ற கண்ணுடிக்காரன் அவளைத் தீவிரமாக நோக்கினான்.

(தொடரும்)

# இளமைக்கு ஒரு சிகிச்சை

'Fear, Ma? What is it?'

—Horatio Nelson

## 16

லாலியால் ஒரு நொடியில் புரிந்து கொள்ள முடிந்தது. கண்ணுடிக்காரன் இப்போது பக்த வேடத்தில் மைனஸ் கண்ணுடியாக நின்முன். அவன் முகத்தில் ஏற்படும் ஆச்சரியத்தையும், குரோதத்தையும் கைகொடுக்கும் நேரத்தில் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

உடம்புக்குள் ஓர் ஆர்ப்பாட்டமான தைரியம் குதித்தது.

எதேச்சையாக, சில உன்மத்த கணங்களில் மாத்திரம் திடீரென்று எதிர்பாராமல் எழும் தைரியம் அது!

அவள் மேனி முழுவதும் மேவி அவளது உருவத்தின் மீது இன்னெரு உருவத்தைப் பதித்து விட்டு ஓடியது அது.

அவள் கண்களில் ஒரு வெளிச்சமான மினுக்கம் பற்றியது. கைகளும் கால்களும் வழக்கத்திற்கு மாறுகக் கெட்டியாகி நிங்கூரமாக நின்றன.

கீழ் உதட்டை மடித்து அவன் மீது ஒரு தீவிர திருஷ்டியைத் திருப்பினுள். துளைப்பது போல் பார்த்தாள்.

—அங்கிள்! என்னோடு வாங்க! என்று கூறி நிதானம் சிதருமல் அழுத்த நடை வைத்துப் பக்திமானை நோக்கி நடந்தாள்.

பக்திமான் கால்கள் கீழே துவைத்தன. கைவிரல்கள் குழியில்லாமல் குவிந்தன. விரிந்தன. பார்வையில் சில கணங்கள் தடுமாற்றம் போல் ஒரு கவனம் தெரிந்தது.

அத்தனையும் கவனித்து அருகில் போய் நின்று பக்தரைக் கூர்ந்தாள் லாலி.

பேசவில்லை.

கண்கள் கொட்டவில்லை.

நேராக அந்தப் பக்தரின் விழிக்குள் பார்த்தாள்.

சூல் தொண்ட கண்கள் அவை. இறுக்கமாகவும் அழுத்தமாகவும் இருந்தன.

எங்கேயாவது எதையாவது தொட்டால் பகீர் என்று தீப்பற்றி விடும் என்று தோன்றியது.

பக்தர் கீழுதடு நடுங்கியது. சிரமப்பட்டுத் தமது தைரியத்தை இழுப்பது தெரிந்தது. பேச முடியவில்லை.

நீண்ட சகாப்த நேரம் ஒரு மௌனம். பிறகு லாலி துணிச்சலுடன்—நீங்களா? என்முள்.

அந்தக் கேள்வி விஷமமாக இருந்தது. பக்தர் பேசவில்லை. ஆனால் என்னை கேட்காதீர்கள் என்பது போல ஒரு பார்வை பார்த்தார்.

லாலி கடைவாயைக் கடித்துத் தனது உணர்ச்சி வசங்களைக் கட்டுப்படுத்தினுள். —நீங்களா கோவில் கட்டுவது? என்முள் அழுத்தமாக.

பளீர் என்று பக்தரின் முகம் தெளிந்தது. கண்கள் விரிந்து,—ஆமாங்க! வந்து பாருங்க! என்முர் குழைந்து.

திடீரென்று இறுக்கம் தளர்ந்து ஒரு ரப்பர் பொம்மையாக அவர் உடல் வளைவது ஆச்சரியமாக இருந்தது.

புஷ்பா தங்கதுரை



—ஸார் வந்து பார்க்கணும்! வெறும் பாழாய்க் கிடந்த கோவில்! முருகன் என் சொப்பனத்திலே தோன்றி இதைச் சரியாகக் கட்டு என்று கட்டளை போட்டான். கட்டறேன்! என்றார்.

ராவ் முறுவல் வெளியில் பறக்க, தலையைப் பலமாக ஆட்டினார்.

பிறகு அந்த பக்தர்,—ஸார் வரணும், என்று ராவை அழைத்துப் போனார்.

லாலி யோசனையுடன் காருக்குத் திரும்பினாள்.

ராவ் அந்த ஆசாமியிடம் சிறிது பேசிவிட்டுத் திரும்பி வந்து காரில் ஏறினார்.

அன்று முழுவதும் அவர் அந்த விஷயத்தை அவளிடம் எடுக்கவில்லை.

மறுநாள் உற்சாக தோரணையில் அவளைப் பார்த்து—லாலி! நீ நேத்து ரொம்பத் தைரியமா நடந்துகிட்டே. அந்தப் பக்தரை நீயே நேரிலே பார்த்துட்டே. இப்போ எல்லாம் கன்வின்ஸ் ஆயிட்டுதா? என்று கேட்டார்.

—எது என்றாள் லாலி, விழியைத் தூக்கி.

—அந்தப் பக்தர் உண்மை யானவர்தான், போலி இல்லேன்னு.

பகீர் என்று உணர்ச்சி!

—எப்படிச் சொல்றீங்க, அங்கிள்?

—இன்னும் நம்பிக்கை இல்லேயா? என்று லாலியையே நம்பிக்கை இல்லாமல் பார்த்தார் ராவ்.

—அங்கிள்! நீங்கள் அந்த ஆளோட ரியாக்ஷனைக் கவனிக்கலேயா?

—ரியாக்ஷனு? சும்மாதானே நின்றான்?

—இல்லே அங்கிள்! ஒரு சமயம் நடுங்கினான். ஒரு சமயம் கடுகடுன்னு பார்த்தான். *He was a bundle of cross emotions.*

ராவ் சிறிது மௌனமானார். —இல்லே, லாலி. நான் அவரை அப்படி நினைக்கவில்லே.

—ஸாரி அங்கிள்! இங்கேதான் நாம்ப வித்தியாசப் படறோம், என்று வருத்தத்துடனே சொன்னாள் அவள். —உங்ககிட்டே பேசினதனே, என்ன சொன்னேன்!

—ஒண்ணுஞ் சொல்லலே. இந்தக் கோவில் கட்டற பணி அவனுக்கு எப்படிக் கிடைச்சதுன்னு விவரிச்சான். 'குழந்தை என்னைப் பார்த்து மிரளுது ஸார். ஏன்னு தெரியலே. உங்க வீட்டிலே வந்து அதுகிட்டே பேசறேன்'னு அட்ரஸ் கேட்டான்.

—கொடுத்தீங்களா? என்று பதைப்புடன் லாலி கேட்டாள்.

—கொடுத்தேன். வந்துட்டுப் போகட்டுமே!

லாலியின் கண்களில் நீர் வந்துவிட்டது. —ஐயோ! எப்படிச் சொல்வீங்க, அங்கிள்! - அவன் இங்கே வரலாமா? என்று பாதி புலம்பலில் கூறினாள்.

—நீ என்ன லாலி! வரட்டுமே? பேசிட்டுப் போறும்! அதிலே என்ன தப்பு?

—பேசறதுக்கு இங்கே பகல்லே வருவான்னு நினைக்கிறீங்களா?

—ஏன், வரமாட்டானு?

—ராத்திரி வருவான். கத்தியாலே பேசுவான்.

ராவின் முகம் சுரத்து இழந்தது. லாலியின் புதுப் புது அச்சங்களைத் தவிர்க்க மருந்தே இல்லே என்று நினைத்தார். சமாதானமாக, —அவனைப் பார்த்தா அப்படித் தோணலே! என்றார்.

லாலி மௌனமானாள்.

—எங்கே அவன், பங்காரு? கிடைச்சானு? என்று சீறினான் தாஸ்.

மேல் மாடி ஹால் கப்சிப் என்று அடங்கி இருந்தது.

எல்லோரும் அஃறிணைகளாக நின்றார்கள்.

கே.ஜி. பால் தனது பெரிய மார்புகள் வழியே மூச்சு விட்டதைக் கூடத் தப்பிதமாக நினைத்தான்.

—கிடைச்சானு? மீண்டும் உதறினான் தாஸ்.

அவன் கேட்டது பெரிய நாடகமாக இருந்தது.

# வை.எ.நகர்

என்ன, பாயசம் ஒரே புளிப்பாயிருக்கு?

சாப்பிடறப்போ விளக்கு அணைந்தால் இப்படித்தான்!

நீங்க சாப்பிடறது மோர்க் குழம்பு! பாயசம் வலப்பக்கம் போட்டிருக்கேன்!

ரிங் மாஸ்டர் போல் ஒரு ஸ்டூலில் கால் வைத்துப் பின் சுவர் பக்கம் திரும்பியிருந்தான். சுவரைப் பார்த்துத்தான். சீறினான்.

—வந்திருக்கான், சீஃப்! என்றான் பால்.

பங்காரு ஓர் உதறலின் தோற்றமாக ஹால் வாயிலில் உதயமானான்.

அவன் முகத்தில் கிலி.

கண்கள் இரண்டும் ஏற்கெனவே கூம்.

இடது கை தாயத்து துரு துரு என்று துடித்தது.

—வந்துட்டானு, ராஸ்கல்! என்று தாஸ் பெரிய திரும்பு திரும்பினான்.

—மன்னிக்கணும், எஜமான்! என்றான் பங்காரு. அடுத்த நொடி துரும்பு போல் கீழே உதிர்ந்து மண்டி போட்டிருந்தான்.

மேஜையில் கிடந்த கறுப்புச் சாட்டையைத் தாஸ் எடுத்தான்.

எடுத்த வேகத்தில் காற்று விஷ்ஷ் என்று முனகியது.

—காரியத்தைக் கெடுத்தியே பாவி, என்று தாஸ் பாய்ந்து பங்காரு முன்னால் ஓட, பால் அவனைக் குறுக்கே தடுத்தான்.

—சீஃப், இது எதிர்பாராதது, என்றான் தரையை நோக்கி.

—எப்படிச் சொல்றே?

—எட்டாம் நம்பர் அறைன்னு சொன்னேம். அவன் போனான். காரியத்தை முடிச்சான். ஒரே நாளுக்குள்ளே எட்டாம் நம்பர் அறையிலே ஒரு பெண் மாறி இன்னொரு பெண் வந்திருப்பாள்னு அவனுக்குத் தெரியாது.

—நீ சொல்லியிருக்க வேண்டாம்?

—எனக்குத் தெரியாது.

—நீ நிச்சயம் கவனிச்சிருக்கலாம், பால்!

—எப்படிக் கவனிச்சிருக்க முடியும்?

—ஒவ்வொரு ரூம் முகப்பிலேயும் கார்ட் வச்சிருந்தாங்களே!

—எனக்கு அந்தப் பெண் பேர் தெரியாதே?

—விசாலின்னு சொல்லிட்டிருக்கேனே? லாலின்னு கூப்பிடுவதுண்டு.

—எனக்கு நினைவில்ல. இரண்டாவது மாடி, எட்டாவது அறை என்கிறதுதான் எனக்குக் காதிலே விழுந்தது. அதே மாதிரிதான் நானும் பங்காருவுக்கு உத்தரவு கொடுத்தேன். சரி, சீஃப்! நடந்தது, நடந்தாச்சு! பங்காரு வேலையிலே சுத்தம். தடயம் எதுவும் வைக்க மாட்டான். குத்தம் நம்ம பேர்லே திரும்பாது.

—சும்மா மனக்கோட்டை கட்டு என்று சீறினான் தாஸ். —இன்னிக்கு அந்த லாலி என்கிற பொண்ணு என் முன்னாலே நேரே வந்து முறைச்சுட்டுப் போகுது. தெரியுமில்லே?

பால் திடுக்கிட்டான். —அதுக்கு நம்ப விஷயம் தெரியுமா, சீஃப்?

—தெரிஞ்சிருக்கணும்! இல்லாட்டி என்னை ஆஸ்பத்திரியிலே கண்டவுடனே கொலைகாரன்னு கத்துமா?

பால் மௌனமானான். பிறகு தணிந்து கொண்டே,—கவனிக்க வேண்டிய விஷயந்தான்! என்று முணுமுணுத்தான்.

—செஞ்சுடுவோம்.



# இந்தப் படத்தின் பின்னே ஒரு கதை இருக்கிறது.

*(பின்னே என்றுல் பின்னேயே தான்! புரட்டிப் பார்க்கவும்.)*

—அந்தப் பெண்ணை உடனே தீர்த்தாகணும். இல்லாட்டி எல்லோரும் சாவியை எண்ணுவோம்.

—ஒரு வாரம் அவகாசம் கொடுங்க. தீர்த்துடறேம். பங்காரு!

பங்காரு உயிர் பெற்று எழுந்தான்.

—சீஃப்! அந்தப் பெண் எங்கிருக்கா?

—அட்ரஸ் தரேன்! அவள் போட்டோவும் எடுத்து வச்சிருக்கேன். அதையும் தரேன். இந்தத் தடவை கரெக்டா காரியத்தை முடிக்கணும். தெரிஞ்சுதா?

—எஸ், சீஃப்! பங்காரு!

—ரெடி ஸார்.

இரவு சரியாகத் தூக்கம் வரவில்லை லாலிக்கு. தூக்கத்தில் அழவும் அவளுக்கு விருப்பமில்லை.

கண்ணடிக்காரனை நேருக்கு நேர் பார்த்ததிலிருந்து அவளை அறியாமல் ஒரு திகில் வளர்ந்திருந்தது.

நிச்சயம் வீடு தேடி அவன் வருவான் என்று நம்பினாள்.

ஆனால் இந்தத் தடவை, முன்பு போல் தவறு செய்ய விரும்பமாட்டான். அவளைச் சரியாக இனம் கண்டுபிடித்துக் கொல்லுவான்.

தடக்கென்று சத்தம்.

மாடிப் படியில் யாரோ தடுக்கியிருக்கிறார்கள். மணியைப் பார்த்தாள். பன்னிரண்டு.

யாரோ மேலே வந்து கொண்டிருக்கிறார்கள்.

மெத்தையில் காதைப் பொருத்தி, சப்தங்களை ஆராய்ந்தாள்.

மேலே ஏறிவிட்டார்கள்.

மாடி வராந்தாவில் அவர்கள் கால்கள் உராய்ந்து வரும் சப்தம்.

கூர்ந்து கவனித்தாள்.

ஒருத்தர் மட்டுமல்லாமல் இருவர் என்று தெரிந்தது. இரு ஜோடிக் கால் தடங்கள் கேட்டன.

யாராக இருக்கும்?

பாதங்கள் அவள் அறையை நெருங்கின. இழையும் சுவாசங்கள் இப்போது கேட்கத் தொடங்கின.

யாரோ இரைக்க மூச்சு விடுகிறார்கள்.

## முன்னுள்ள படத்தின் கதை

சென்ற ஆண்டு அக்டோபர் 6'ம் தேதி, கேரளா மாநிலம் திருவள்ளாவில், கே.சி. ஜார்ஜ்—குஞ்சம்மா என்ற வயோதிக தம்பதி கொலை செய்யப்பட்டார்கள். இது சம்பந்தமாக ரென்னி ஜார்ஜ் என்பவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். வழக்கு நடந்து வருகிறது.

இதற்கிடையே, மணி மல்லியத் என்பவர் 'மத்ராணிலே மோன்' என்ற மலையாளப் படத்தைத் தயாரித்து, சென்ஸார் போர்டிற்கு அனுப்பிவைத்தார். திருவள்ளா படுகொலை வழக்கை அடிப்படையாக வைத்து இந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

இந்தப் படம் தன் மீதுள்ள வழக்கைப் பாதிக்கும் என்றும், ஆகையால் இந்தப் படத்துக்குத் தணிக்கைக் குழு அனுமதி வழங்கக்கூடாது என்றும் கேரள உயர்நீதிமன்றத்தில் ரென்னி ஜார்ஜ் ஒரு ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்.

—அசோக்.

---

கண்ணாடி சன்னலில் பிம்பங்களைப் பார்த்தாள். கலைந்த இரண்டு உருவங்கள் ஒன்றுக்குப் பின் ஒன்று சென்றன.

லாலியின் நெஞ்சு பதறியது. ஆபத்து மாடி ஏறி அவள் அறை வாசலில் வந்து நின்றது.

எழுந்து உட்கார்ந்தாள்.

இரவு விளக்கு மின் மினி பரப்பியது.

மூச்சு சரியாக வரவில்லை.

டொக் டொக் என்று முதல் சத்தம் கேட்டவுடன் உடலில் ஒரு பதறல் ஓடியது.

டொக் டொக்!

—லாலி! லாலி!

தன் பேரைச் சொல்லி யார் அழைக்கிறார்கள்? ராவ் குரல் போல் இருக்கிறதே! ராவ்தான்!

—அங்கிள்! வரேன்.

எழுந்து மாக்ஸியைச் சீர்திருத்திக் கதவுக்கு விரைந்தாள்.

திறப்பதற்கு முன் குழப்பம்.

—அங்கிள்!

—நான்தான் லாலி. திற!

மனத்தில் நம நம என்று ஓர் உணர்வு மெள்ள உலைந்தது.

—அங்கிள்!

—லாலி!

ராவின் குரலில் பழக்கமான கனிவு இல்லை. இந்த ராத்திரி இங்கே வரக் காரணம் என்ன?

கதவைத் திறக்கவில்லை.

அதற்குப் பதில் பக்கத்தில் உள்ள சன்னலைத் திறந்தாள். ஒரே ஒரு கீழ்க் கதவை மட்டும். வெளி வெளிச்சத்தைப் போட்டாள்.

—அங்கிள்!

—லாலி!

—இப்படி வாருங்க! உங்களைப் பார்க்கணும்.

காலடி கேட்டது.

ராவ் சன்னல் பக்கம் வந்தார். அவர் முகம் தெரிந்தது. அதில் அந்தக் கண்கள் நிலையில்லாமல் தவிப்பதைப் பார்த்துப் பக்கென்றது.

—அங்கிள்!

—திற, லாலி.

—நீங்க மட்டுந்தானு? வேறே யாராவது வந்திருக்காங்களா?

—நான் மட்டுந்தான்.

லாலிக்குச் சந்தேகம் தட்டியது. ஒன்று, ராவ் யந்திரத்தனமாகப் பதில் சொல்கிறார். இரண்டாவது, அவள் ஏற்கெனவே ஒரு ஜோடிக் காலடிக்கு அதிகமாகக் காதில் கேட்டிருக்கிறாள்.

யாரோ ராவுடன் வந்திருக்கிறார்கள்! ராவின் பின்னால் சூத்திரதாரியாகவும் நிற்கிறார்கள்!

யார்?

—திற லாலி! என்று கத்தினார் ராவ்.

லாலி வெலவெலத்துக் கதவுத் தாழ்ப்பாளில் கையை வைத்தாள்.

(தொடரும்)

# தோழமைக்கு ஒரு வீச்சரா

உண்மை மிக நுண்ணிய துவாரங்கள் வழியாகக் கூடக் கசியும்.

—யாரோ.

17

லாலியின் அறிவுக் கூர்மை உடனே வேலை செய்தது. நிச்சயம் அங்கிள் ராவின் பின்னல் யாரோ இருக்கிறார்கள். இல்லாவிடில் அவர் குரல் இவ்வளவு கனத்து வராது. முகமும் இப்படிக் காகிதமாக வெளிறியிராது.

—திறம்மா, லாலி!

லாலிக்கு அது கடைசி உந்து! வயிற்று அடியிலிருந்து ஒரு 'கீ' குரல் தொண்டைச் சுவரைக் கிழித்து வெளியேறியது. இருட்டை இரு துண்டாகக் கீறி அமானுஷ்யமாய் ஒலித்து இரவு நிசப்தத்தைக் கிடுகிடுக்க வைத்தது.

முதல் 'கீ'யைத் தொடர்ந்து அடுத்த 'கீ!' அதைத் தொடர்ந்து வரிசையாகக் கீக்கள் வெளியேற அந்த இரவில் நிசப்தம் தகடு தகடாகப் பெயர்ந்து கீழே உதிர்ந்தது.

இரண்டு அண்டை சன்னல்கள் பளிச்சென்று வெள்ளையாயின.

ஒரு நாய் உசும்பி லோ லோ லோ என்றது.

தொடர்ந்து இரண்டு மூன்று சந்தடிகள்.

லாலி ஒரு கணம் அமைதியானாள். அதே நேரம் ராவ் பின்னலிருந்து ஒரு நிழல் துண்டு டக்கென்று விலகி, வராந்தாவில் வீசி ஓடியது. அதன் பாதடித் 'தடக்'குகள் படிப்படியாகக குறைந்து வெகு தூரத்தில் புள்ளியாகி மறைந்தன.

சில விநாடிகளில் வராந்தா முழுதும் பளிச்சென்று வெளிச்சமாகியது.

மிஸஸ் ராவ் கலவரமாக வந்து

## புஷ்பா தங்கதுரை

ராவைப் பற்றினாள்.

ராவ் வெறித்த பார்வையுடன் அப்படியே நின்றார்.

—உங்களுக்கு என்ன ஆச்சு? பேச மாட்டேங்கறீங்களே! என்று அவள் புலம்ப,

லாலி படக்கென்று கதவைத் திறந்து வெளியே வந்தாள். வராந்தா முழுதையும் நோட்டம் விட்டாள். —ஆண்ட்டி! வெளிக் கதவு திறந்திருக்கா பார்த்தீங்களா?

—திறந்திருக்கு! இவர் இப்பொழுதான் பார்ட்டியிலிருந்து திரும்பி வந்திருக்கார். இவர் ஏன் இப்படி நிற்கிறார்? மாடியிலே என்னவோ சத்தம் கேட்டதே, என்னது அது?

லாலிக்குப் புரிந்தது.

ராவ் வீட்டுக்குத் திரும்பும் போது அவருடன் யாரோ உள்ளே நுழைந்து கத்தி முனையில் அவரை மாடிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயம் லாலியின் ரத்தத்தை விரும்பித்தான் அந்த 'யாரோ' வந்திருக்கிறான்.

—கதவை மூடிட்டீங்களா?

—வரும்போது இப்போ மூடிட்டு வரேன்.

லாலிக்கு நிம்மதி ஏற்பட்டது.

இருவரும் ராவைக் கீழே கொணர்ந்து படுக்கையில் படுக்க விட்டார்கள்.

ஃபோனைச் சுழலவிட்டு அவரை ஆசுவாசப்படுத்தி வெளியே வந்தார்கள்.

லாலி தன் கலவரத்தை அடக்கிக்கொண்டு, —ஆண்ட்டி, நீங்க

பாரையாவது பார்த்தீங்களா? என்றுள்.

—பார்த்தேனே! கறுப்பு! வெளியே ஓட்டமா ஓடிச்சே!

—அது கறுப்பு இல்லே ஆன்ட்டி! முகமூடி!

திருமதி ராவ் லாலியை ஒரு வெறிப் பார்வை பார்த்தாள். —அம்மா! லாலி! நான் சொன்னேன்னு நினைக்காதே! நீதான் இந்தக் கறுப்பை வீட்டுக்குள்ளே கூட்டிக்கிட்டு வந்துட்டே! இதுக்கு முன்னுலே பேய், பிசாசு, ஆவின்னு எதுவும் எங்க கண்ணிலே எத்துப் பட்டதில்லே. அவர் ரொம்ப ஆசாரமானவர். வீட்டிலே தெய்வம் அப்படியே பிரசன்னமா இருக்கும். என்னைத் தப்பா நினைக்காதேம்மா! என் குடும்பத்தை நான் காப்பாத்திக்கணும், நீ நாளைக்கு உங்க வீட்டுக்குப் போயிடறதுதான் நல்லது.

லாலியின் முன் புகை மூட்டம் எழுந்தது. வருத்தத்துடன் குனிந்தாள்.

—சரி ஆன்ட்டி. போயிடறேன்! நான் யாருக்கும் தொந்தரவு கொடுக்க விரும்ப மாட்டேன், என்றுள்.

பிறகு படிக்கட்டுக்களை நோக்கி நடந்தாள்.

படிக்கட்டின் மடிப்புகளில் அவளும் அவள் கலைந்த நிழலும் மெல்லியதாக ஏறின.

மறுநாள் ராவ் அப்படியே இருந்தார். ஒரு தலையணையை இறுகப் பற்றி, பின்னல் சாய்ந்து வெறும் சூனியத்துள் பார்த்துக் கொண்டிருந்தார்.

லாலி உள்ளே போனபோது ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. லாலிக்குத் தெரியும் அவர் பல மைல்கள் ஆழத்தில் இருக்கிறார் என்று.

மெதுவாக அவர் கையைப் பற்றி, —அங்கிள், நான் வரேன். கொஞ்ச நாள் இங்கே எனக்கு அடைக்கலம் கொடுத்தீங்க, நன்றி! என்று தழதழத்தாள். மெள்ள அவர் கையைக் கீழே வைத்து வெளியேறினாள்.

ராவ் நடந்தது எதையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இன்னும்

ஒரே கோணத்தில் ஒரே பார்வையை ரிவெட் அடித்திருந்தார்.

லாலி ப்ரீஃப் கேசுடன் வெளியே வந்தாள்.

இளம் காலை வெய்யில் சுறுசுறு என்று விழுந்திருந்தது. காலை மெருகேறிக் கரிதாக மாறுத்தது. வாழ்க்கையில் இனித்தது போன்ற புத்துணர்வு பெருகியது. காற்றை ஆழமாக இழுத்துச் சுவாசத்தை நிரப்பினுள். அவளது ரத்தம் புதிதாக உள்ளே துள்ளியது.

ஒரு டாக்சி காலியில் நீந்திவர, கையைக் காட்டி நிறுத்தினுள்.

—மிடையா! அந்த ஆளைப் பிடிச்சியே! அவனையே சாய்ச்சிருக்க வேண்டியதுதானே! என்று சீறினுன் தாஸ்.

கையை ஓங்கி மேஜையில் குத்த, அதன் அதிர்ச்சி வடிவேலுவைக் கலக்கியது.

—இல்லை ஸார்! அந்தப் பொண்ணு அறைக்குள்ளே இருக்கிறு, கதவைத் திறக்கணும். அதுக்காகத்தான் அந்த ஆசாமியை நெட்டிட்டு மாடிக்குப் போனேன். ஆனு அந்தப் பொண்ணு ஒரு பொண்ணு ஸார்? வீல் வீல்னு கத்தி, ஊரைக் கலக்கிடுச்சி. இன்னும் கொஞ்ச நேரம் மட்டும் அங்கே இருந்தேன்னு ஆப்டுருப்பேன்.

தாஸ் ஒரு ஓரப் பார்வையை மட்டும் திருப்பினுன். சூடாக ஒரு மூச்சு விட்டான். —வடிவேலு! என்றுன்.

அதில் ஆயிரம் அர்த்தம் புதைந்திருந்தது.

கே.ஜி. பால் ஸ்தம்பித்த பார்வை பார்க்க, வடிவேலு அதற்குள் எலும்பு வரை நடுங்கினுன்.

—ஏன் வாயடைச்சுட்டே வடிவேலு?

நிதானமான அளவுகளில் வார்த்தைகள் விழுந்தன.

—ஸாராழ்! மன்னிச்சுடுங்க! என்று தழதழப்பில் சொன்னுன் வடிவேலு. அவன் முகம் பாதி அழுகையில் அதுங்கியது.

—ஒவ்வோ! மன்னிக்கணுமா? நீ என்ன சபதம் செய்தே, சொல்லு!

வடிவேலு சொல்லவில்லை. அவன் மனத்தை ஒரு ரம்பம் அறுத்தது.

—சொல்லு! என்ன சபதம் செய்தே?

—அந்தப் பெண்ணை கொன்னுடறேன்னு சொன்னேன்.

—செஞ்சியா?

—இல்லை, ஸார்.

அழுகை வாயைக் கோணியது.

—உனக்கு என்ன தண்டனை தெரியுமா?

கே.ஜி. பால் மெள்ளத் திரும்பினுன்.

—ரீஃப்!

—நீ பேச வேண்டாம் பால்!

—வடிவேலு இந்த முறை மிஸ் பண்ணிட்டான். அடுத்த முறை...

—பால்! கர்ஜித்தான் தாஸ். எத்தனை அடுத்த முறை!

பால் கலங்கினுன். எனினும்

''இதென்ன! நம்ம ஓயின் ஷாப் போனில் மணி, டிரிங்ஸ்... டிரிங்ஸ்... டிரிங்ஸ்... என்று அடிக்குது!''

—சுதர்ஸன்

கூந்தல் பறப்பதை வைத்துச் சொல்லுங்கள்: காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது?
(புது முகங்கள் பக்கம்தான்!)

மோளித்து. —இன்னும் ஒரே ஒரு சான்ஸ்... என்றான்.

—பால்! திடுமென்று அவன் குரல் உயர்ந்தது.

—எஸ் சீஃப்!

சுரங்க வேலை எவ்வளவு தூரம் வந்தாச்சு?

—40 அடி! கிட்டத்தட்ட பாதி!

—ஹ்ம்ம்... இன்னும் அந்தப் பெண் உயிரோட இருக்கா! நீங்க விட்டு வச்சிருக்கீங்க! அண்ணிக்கு என்னடான்னு என்னை நேரிலே முறைச்சிட்டுப் போனு! நாளைக்குக் கோவில் கிணத்திலே இறங்கி நம்ம ரகசியத்தை அம்பலமாக்கிடப் போறு!

பால் அந்தத் தாக்கில் சிறிது தடுமாறினான். —அதுக்கு முன்னடி முடிச்சுடலாம், சீஃப்! என்றான் நயமாக.

—எப்படி முடியும்?

—முடியும் சீஃப்!

—சொல்லு! என்று பால் பக்கம் சுழுவளிக் கோபத்துடன் தாஸ் திரும்பினான்.

அதே சுருதியில் —வடிவேலு! என்று திரும்பினான் பால்.

—எஸ் ஸார்!

—இது கடைசி தடவை!

—எஸ் ஸார்!

—நீ போறே! பெண்ணைக் கொல்லறே!

—சரி ஸார்!

—கொல்லாட்டி, நீ திரும்புறதில்லே. போ போ...

போனான் அவன்.

—மொத்தம் பத்து வாரி மண் வெளியே போச்சு, லாலி!

—பத்து!

—ஆமாம்.

லாலி ரிசீவரை வெறுமனே பிடித்து, கீழே விரலால் டயல் பண்ணினாள். —உமேஷ்!

எஸ்!

—நேத்திக்கு எத்தனே லாரி?

—சரியா எண்ணலே இருந்தாலும் பத்துக்குக் குறையாது.

—அப்போ தினம் பத்து லாரி மண் வெளியே போறது.

—ஆமா.

—அவ்வளவுக்குத் தோண்டறுங்க!

—ஆமா!

—இன்னும் கிணத்திலே தண்ணி வரலியா? தோண்டிக்கிட்டே இருக்கூங்களே?

—அதான் ஆச்சரியம்.

—நான் கவனிக்கிறேன் உமேஷ்.

போனை வைத்து விட்டு எழுந்தாள். மாடிப்படிக் கூண்டு அருகில் ஒரு துண்டு நிழல் உலாத்தியது.

—மிஸ்டர் நாகசாமி! என்றாள். உறைப்பாக வந்தது.

நிழல் வெளியாகி, நாகசாமி ஆகியது.

—நான் எல்லாம் உடம்பு சரியாயிட்டேன். நீங்க என்னே வேவு பார்க்க வேண்டாம். கீழேயே இருங்க! முன்னுலே ஒருவாட்டி சொல்லிட்டேன் இல்லே?

நாகசாமி பதில் பேசாமல் திரும்பினான்.

லாலி பெருமூச்சுடன் எழுந்தாள்.

தன் சொந்த வீட்டுக்கு வந்து நான்கு நாட்கள் ஆயிற்று.

இதில் வந்ததுமே, பழைய காலத்துள் புகுந்த உணர்ச்சி. அப்பா அடிக்கடி புன்னகை சிதற —லாலி! என்று அழைப்பார். பல முறை அது உண்மைக் குரல் என்று நம்பித் துள்ளிப் போயிருக்கிறாள். பிறகு கண்ணீர் பொங்க ஏமாந்திருக்கிறாள்.

அப்போதெல்லாம் கீழே மண்டியிட்டுக் கை கூப்பி சூன்யத்தைப் பார்த்து, —Father, be thou my guiding spirit..." என்று பிரார்த்தித்திருக்கிறாள்.

ஒவ்வொரு முறை அவள அப்படி செய்யும் போதும் ஒரு யானே பலம் அவளுக்குள் புகுவது தெரிந்தது.

மிகவும் உற்சாகத்துடனும் தைரியத்துடனும் எழுந்தாள். வீட்டில் பாதுகாப்புகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று மேற்பார்வை பார்த்தாள். அவள் நியமித்த நான்கு சூர்க்காக்களும், ஒரு மாஜி ராணுவ ஹவில்தாரும் தங்கள் ஸ்தானங்களில் ஒழுங்காக இருக்கிறார்களா என்று

COMICS PDF FILES

# இது என்ன விளையாட்டு?

எல்லாத் துறைகளிலும் எலெக்ட்ரானிக்ஸ் புகுந்திருப்பது போல, விளையாட்டுக்களுக்கும் எலெக்ட்ரானிக் கருவிகள் வந்திருக்கின்றன.

உதாரணமாக, அட்டைப் படத்தில் இருக்கும் கருவியின் பெயர் 'ஸ்பேஸ் இன்வேடர்ஸ்.' இந்தக் கருவியை இயக்க, ஒன்றரை நிமிடத்திற்கு, இரண்டு அரை ரூபாய் நாணயம் இதில் போட வேண்டும். அப்போதுதான் அது இயங்கும்.

விண்வெளியிலிருந்து பூமியைத் தாக்குவதுதான் இந்த விளையாட்டு. நீங்கள் பூமியின் ஒரு பகுதியைத் தாக்க வேண்டும். எதிரியின் தாக்குதலைச் சமாளிக்க நான்கு கோட்டைகள் உண்டு. எதிரிகளைச் சுட்டு வீழ்த்த ஒரு டாங்க். அந்த டாங்க்கை இடது பக்கமாகவோ வலது பக்கடாகவோ நகர்த்த ஒரு பொத்தான் உண்டு. சுடுவதற்கு ஒரு பொத்தான். விண்வெளிக்காரர்களை நீங்கள் சுடும்போது, அவர்களும் உங்களைப் பார்த்துச் சுடுவார்கள். நீங்கள் சமாளிக்க வேண்டும். கோட்டைகளின் பாதுகாப்பையும் மீறி, உங்களை மூன்று முறை சுட்டுவிட்டால் நீங்கள் அவுட். ஆட்டமும் முடிவு. நீங்கள் எதையெல்லாம் சுட்டு வீழ்த்துகிறீர்களோ அவற்றிற்குப் பாயிண்ட் வந்து கொண்டே இருக்கும்.

இது போன்ற எலெக்ட்ரானிக் விளையாட்டு கருவிகள் பம்பாய், பெங்களூர், டெல்லி, ஹைதராபாத் போன்ற நகரங்களில் ஏற்கனவே இயங்கி வருகின்றன. சென்னையில், தாஜ் கொரமாண்டலுக்கருகே உள்ள 'இன்ட்டர் ஷாப்' நிறுவனத்தில் எட்டு வகையான எலெக்ட்ரானிக் விளையாட்டுக் கருவிகள் இருக்கின்றன.

—எஸ். ரஜத்

அட்டையில் விளையாடுபவர்கள்: ரமேஷ், ஷோபனு ரமேஷ், மோகன், குமாரி வனிதா ராபர்ட்.

வண்ணப்படம்: உத்ரா

கவனித்தாள். வாசல் கேட் எப்போதும் உஷார் நிலையில் மூடப்பட்டிருக்கிறதா? அனுமதி இல்லாமல் யாராவது உள்ளே நுழைகிறார்களா? நம்பகமான வேலைக்காரிதானே உள்ளே வருகிறாள்?

ஒரு சுய பாதுகாப்பு என்று ஆரம்பித்து விட்டால் இப்படி எத்தனை விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது!

சந்தடி கேட்டதும் லாலி திரும்பினாள்.

அத்தை படிக்கூண்டு அருகில் நின்றாள்.

—அத்தை! டிரைவர் வந்துட்டாரா?

—வந்தாச்சு!

—அப்போ நான் கொஞ்சம் வெளியே போகணும்.

அவசரமாகக் கிளம்பி அத்தையுடன் படிக்கூண்டில் இறங்கினாள்.

ஹாலுக்குள் வந்ததும்,—அத்தை, உங்க பிள்ளைகிட்டே சொல்லுங்க! நேத்து சாயங்காலம் வராந்தா கதவைத் திறந்து போட்டு வெளியே போய்ட்டார். எனக்குப் பாதுகாப்பு முக்கியம்.

அத்தை தயங்கினாள். தொண்டைக்குள் கரகரத்தது. பிறகு லாலியைத் தாபமாகப் பார்த்து, —லாலி! நான் சொல்றேன்னு நினைச்சுக்காதே! என்றாள்.

—என்ன? என்று வெறுப்புடன் திரும்பினாள் லாலி.

—வீட்டு வாசல் கதவைச் சாயங்காலம் திறந்துதான் வைப்பா.

—இங்கே வேண்டாம்னு சொன்னேனில்லே, அத்தை! ஒன்று புரிஞ்சுக்குங்க! இது என் வீடு! இங்க என் இஷ்டப்படிதான் நடக்கணும்.

விருட்டென்று வராந்தா வந்தாள். வெளியே இரு புறமும் தீர்க்கமாகப் பார்த்தாள். பிறகு வேகமாகக் காரில் ஏறி, —எம்.என்.ஆர். ஜுவெல்லரிக்குப் போங்க! என்றாள்.

கார் தோட்டத்தில் வளைந்து வாசல் கேட் வழியே மெயின் சாலைக்கு வந்தது.

சாலையில் மெல்லிய சத்தத்துடன் அது நழுவும்போது, லாலியின் கண்கள் அந்த ரியர் வியூ கண்ணாடியில் விழுந்தது. திடீரென்று பெரிதாகியது.

(தொடரும்)

•

# புத்தகம்

**புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு:**

தமிழண்ணல் இராம. பெரியகருப்பன்—பக்.408—ரூ.10. சோலை நூலகம் சதாசிவ நகர், மதுரை—625002.

**அறிவுக்கு விருந்தாகும் 1000 நிதிகள்:**

பக். 232—ரூ.10.

**ஆனந்தமாக வாழ 1000 வழிகள்:**

பக். 232—ரூ.10. இரண்டு நூல்களும் தொகுப்பு: ஆர். சோலையப்பன்—அருணோதயம்; 3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை—14.

**சுலபமாகச் சித்திரம் கற்கலாம்:**

பக். 48. ரூ.5.

**ஒரே மாதத்தில் ஓவியர் ஆகலாம்:**

பக்.64. ரூ.6.

**சிரிப்புப் படங்கள் வரைவது எப்படி?**

பக். 64. ரூ.5. மூன்று நூல்களுக்கும் ஆசிரியர்: ஓவியர் ஆழி (படம் வரைந்து—விளக்கம்) சித்ரகலா பதிப்பகம்; அகரக் கடம்பனூர்; ஆழியூர் அஞ்சல்; நாகப்பட்டினம் வட்டம், பின்: 611 104.

**புரட்சிக் கனல் பெரியார்**

(பெரியார் புகழ் நூல்) வி. இளவழகன்—பக்.70 —ரூ. 1.50.

**அறிவுப் புகழ் அண்ணா**

(அண்ணா புகழ் நூல்) வி. இளவழகன்—பக்.96 —ரூ. 2. இரண்டு நூல்களும்: செல்வராசன் பதிப்பகம், 83—பாசியம் நகர், பெங்களூர்—560021.

**கிரிக்கெட் கற்கலாம்**

(சித்திர விளக்கங்கள்) குண்டுமணி—பக்.76 —ரூ. 5.

**குடும்பச் சுடர்**

(இல்லற வழிகாட்டி) சரசு சம்பந்தம்—பக்.144 —ரூ. 6.

**மன அமைதிக்குச் சில வழிகள்:**

பி.சி. கணேசன்—பக்.92—ரூ. 4. மூன்று நூல்களும்: வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை—17.

கதைகள், நாவல்கள் அல்லாத, 1980'க்குப் பிறகு வெளிவந்த தமிழ் நூல்கள் இந்தப் பகுதியில் இடம் பெறும். இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

# இளமைக்கு

# விசா

# ஒரு

புஷ்பா தங்கதுரை

## 18

To conquer fear is the beginning of wisdom in the pursuit of truth.

-Bertrand Russel.

பின்னல் அந்தக் காரைப் பார்த்ததும் லாலியின் ஓர் உஷார் நாடி சுண்டியது.

திரும்பினாள்.

அம்பாஸடர் கார்!

ஓரத்துக்கு ஓரம் அது சாலையில் அலைலாடியது. அதன் பானெட்டில் கோபம் ஜொலித்தது.

யாராவது பின் தொடர்கிறார்களா?

தொடர்ந்து என்ன செய்ய முடியும்?

பொதுச் சாலையில் காரை நிறுத்திக் கொலை செய்ய யாருக்காவது துணிச்சல் இருக்குமா?

முன்பக்கம் திரும்பினாள்.

பாதி நிமிடம் ஓடியிருக்காது. அதற்குள் மனத்தில் அந்த நெருடல் ஏற்பட்டது.

பரபரப்புடன் திரும்பினாள்.

திடீரென்று திருக்கோணமலை நினைவில் தோன்ற, பின்னால் வரும் காரை விசேஷமாகக் கவனித்தாள்.

பச்சை நிறமில்லை. ஸ்கை ப்ளூ! ஆனால் அதன் தோற்றத்தைப் பார்த்தால், அது அந்தக் கார்தான் என்று பட்டது.

அது அவளது நம்பத் தகுந்த உள்ளுணர்ச்சி.

—டிரைவர்! கொஞ்சம் வேகமாய்ப் போகணும்.

கார் பறந்தது.

ஒரு ஆடோமாடிக் சிக்னல் அந்த ஸ்கை ப்ளூவைத் தக்க வைத்து விட,

லாலியின் கார் மட்டும் பிய்த்துக்கொண்டு பறந்தது.

எம்.எம்.ஆர். ஜூவெல்லரியில் லாலி இறங்கினாள்.

உள்ளே போனதும் ஏர்கண்டிஷண்டு ஹால் பெரிய அலங்காரக் காட்சியுடன் தென்பட்டது. பளபளக்கும் மேஜை மீது வியாபாரங்கள் நடந்து கொண்டிருந்தன. நேராகப் புரொப்ரைட்டர் அறையை நோக்கிச் செல்லும் போது, வலது கண் ஓரத்தில் ஆண்டிக் ஜூவெல்லரி என்ற நெற்றிப் பட்டத்துடன் ஒரு கண்ணாடி அலமாரி நின்றதைக் குறித்துக் கொண்டாள்.

புரொப்ரைட்டர் ஏதோ ஒரு ஜூவு பெயர்ப் பலகை பின்னால் அழுத்தமாக உட்கார்ந்திருந்தார்.

—உங்க கிட்டே ரொம்ப முக்கிய விஷயம் பேசணும்! என்று லாலி அவர் முன்னால் உட்கார்ந்தாள்.

—சொல்லுங்க! என்ரூர் ஜூலு.

—உங்ககிட்டே ஒரு லிலே உயர்ந்த ஆன்டிக் நகை ரிப்பேருக்கு வந்திருக்கு. இல்லேயா?

ஜூலு கொட்டையாக விழித்தார்.

—எத்தனேயோ வரும். எத்தனேயோ போகும்.

—ஒரு மீன் நெக்லஸ்! திருக்கோணம் கோவில்லேர்ந்து வந்ததா?

ஜூலு தமது கதுப்பான தாடையைச் சுரைந்தார். பெண்ணே உற்று நோக்கினர்.

—எத்தனேயோ வர்றது போறது! ஞாபகம் இருக்காதம்மா.

—யோசிச்சுப் பாருங்க! இது ரொம்ப முக்கிய விஷயம்!

ஜூலு திரும்பவும் சுரைந்தார்.

—உனக்கு எப்படிம்மா தெரியும்?

—ஊகும்.

—எப்படி ஊகும்?

—அதைத் திருட வந்தவன் உங்க கடைப் பக்கம் வந்திருக்கான்.

—இங்கேயா? என்று திடுக்கிட்டுக் கேட்டார் அவர்.

—ஆமாங்க!

அதற்குள் ஜூலு தமது உணர்ச்சி வெளியீட்டைக் கட்டுப்படுத்திக் கொண்டார்,

—அதெப்படிம்மா, அவ்வளவு நிச்சயமாச் சொல்றே?

—அந்த ஆசாமி ஏற்கெனவே அதைத் திருட முயற்சித்தது—எனக்குத் தெரியும்.

—எங்கே?

—திருக்கோணத்திலே.

ஜூலு விழித்தார். முன்பின் தெரியாத பெண்ணிடம் எவ்வளவு ரகசியத்தை வெளியிடலாம் என்பது அவருக்கு யோசனே.

—யோசிக்காதீங்க ஸார்? அந்தத் திருக்கோணக் கோயில் நெக்லஸ் இங்கே இருக்கான்னு சொல்லுங்க! நீங்க உறுதிப்படுத்திட்டீங்கன்னு நான் ஆசாமியைப் பிடிச்சுக் கொடுக்கறேன். போலீஸ்லே கொடுத்திடலாம்.

ஜூலு மசிபவராக இல்லே. பால்பாயிண்டை எடுத்து டக்டக் அடித்தார்.

—சொல்லுங்க ஸார்! ஒரு நேர் கேள்வி—நேர் பதில் சொல்லுங்க! திருக்கோணம் நெக்லஸ் இங்கே இருக்கா இல்லேயா?

ஜூலு தர்ம சங்கடத்தில் இருந்தார். ஓர் அன்னியரிடம் ஒரு ரகசிய சமாசாரத்தை விட்டுக் கொடுக்கச் சம்மதமில்லே. யோசித்தார். பிறகு தீர்மானித்தவர் போல்,

—ஸாரிம்மா! நான் எதுவும் சொல்றதுக்கு இல்லே.

லாலிக்கு அதன் அர்த்தம் புரிந்து விட்டது.

நிச்சயம் நெக்லஸ் இங்குதான் இருக்கிறது.

—ஸார்! நீங்க வெளிப்படையா ஒப்புக்க விரும்பவில்லே, தெரியறது. நான் வரேன் என்று எழுந்தாள்.

—இந்தாம்மா! இந்தாம்மா! என்று எழுந்தார் ஜூலு. —யாரோ ஆசாமின்னு சொன்னியே, காட்டலேயே!

—நீங்கதான் நகை இருக்குன்னு ஒப்புக்கலேயே! நான் ஏன் காட்டணும்?

வெடுக்கென்று சொல்லி லாலி வெளியே வந்தாள். அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

வெளிப்புறத்தில் அவசரமாகப் போய் கேட்டில் நுழைந்திருப்பாள்: 'ஸும்' என்று ஒரு சத்தம். ஒரு கார் வேகமாக கேட்டுக்குள் நுழைய அவள் ''ஐயோ'' என்று அலறி ஓரம் ஒதுங்கப் பார்க்க சுவர் அவளைத் தடுக்க, காரின் பக்கவாட்டம் அவளை நசுக்க.

அலறல்கள், தடதடப்புகள், உச்சமான குரல்கள்...

கூட்டம் ஒன்று மாயமாகச் சேர்ந்துவிட்டது.

—பெண்ணே எடுங்க! எடுங்க!

—காரைப் பின்னுக்கு இழுங்க!

லாலி பாதி உயிராக இருந்தாள். நெற்றி, கை கால்களில் சிராய்ப்பு. அவளைத் தாங்கலாக இருவர் நிறுத்த,

லாலி அந்த இடத்தைக் கண்ணேட்டம் விட்டாள்.

அதே கார். ஸ்கை ப்ளூ.

அவளைத்தான் குறி நோக்கி வந்திருக்கிறது. கேட்டில் இடித்து, அது சரிய, அதோடு பள்ளத்தில் விழுந்த லாலியும் மளீரிழையில் தப்பித்தாள்.

பானெட்டின் முழு வேகத்




நேராக தாஸ் முன்னால் நின்று அவனது கையைப் பிடித்து,

தயும் கேட்டின் சுவர் தாங்கி இரண்டாக விண்டிருக்கிறது.

அதே நேரம், —மடையா, இப்படி ஓட்டலாமா? என்று குரல் கேட்க லாலி திரும்பினாள்.

அந்தக் கண்ணாடிக்காரன் தனது வஸ்தாது டிரைவரைக் கடிந்து கொண்டிருந்தான்.

லாலியின் பொட்டு தெறிக்க, ஒரு தாவலில் கண்ணாடிக்காரன் முன்னால் நின்றாள் அவள்.

—புரொப்ரைட்டர்! இந்த ஆள்தான்! இவன்தான் திருடன்! இவன் தான் கொலைகாரன்! இப்போ நடந்தது விபத்து இல்லை! இவன் என்னைக் கொல்லப் பார்த்திருக்கான். பிடியுங்க. பிடியுங்க... என்று கத்தினாள்.

ஜாலு முன்னால் வந்தார். ம்மா! நல்லா இருக்கு நீ சொல்றது? அவர் எங்க கஸ்டமர் மிஸ்டர் தாஸ்! என்கூட வியாபாரம் நடத்தியிருக்கார். அவர் பெரிய மனுஷரம்மா! அவரைப் போய்...

• லாலி பொருட்படுத்தவில்லை.

—யூ ராஸ்கல்! யூ ஸ்கௌண்ட்ரல். எங்க அப்பாவைக் கொன்னவன் நீ! என்னையும் கொல்ல வந்திருக்கே!

என்று அழுதுகொண்டே கத்தி அவன்மீது தன் மெல்லிய கைகளால் பல குத்துகள் விட,

ஜாலு உடனே ஓடிவந்து லாலியை மறித்தார்.

லாலி திமிறினாள்.

ஒரு சிப்பந்தி லாலியைப் பிடித்தார்.

லாலி கையையும் காலையும் உதறி, —தாஸ் ஒரு கொலையாளி! விடாதீங்க! என்று கத்தி மேலும் அவன் மீது பாய,

எல்லோருமாக அவளைச் சேர்த்துப் பொத்திக் கடைத் தாழ்வாரத்துக்குள் கொண்டு போனார்கள்.

—இந்தப் பெண் தெரியும் ஸார்! பக்கத்து மெண்ட்டல் ஆஸ்பத்திரியிலே இருந்திச்சு, என்று ஒரு சிப்பந்தி சொல்ல,

புரொப்ரைட்டர் ஜாலு போனை

எடுத்து —ஹலோ போலீஸ் போலீஸ்! என்று கத்தினார்.

இன்ஸ்பெக்டர் துரைபாபு கவலை முகத்துடன் போலீஸ் ஸர்ஜன் கிருஷ்ணசாமி முன் உட்கார்ந்தார்.

—டாக்டர், சிக்கல் வந்திருக்கு! என்றார்.

டாக்டர் கிருஷ்ணசாமி தின் ப்ரேம் கண்ணாடியுடன் நிமிர்ந்தார். காலை கூவரப் பளபளப்புடன் முகம் மின்னியது.

—சொல்லுங்க!

—கேஸ் நம்பர் 8308/80 ஆர்.எம். பாருங்க!

பைல் உடனே அங்கு வர வழைக்கப்பட்டது. உள்ளே அதைத் திறந்ததும் —மார்லோ கேஸா? என்று பரிச்சயத்துடன் டாக்டர் கேட்டார்.

—ஆமா ஸார்! இண்டர் போல் விடமாட்டேங்கறான்.

—என்ன விஷயம் சொல்லுங்க!

—மார்லோ வயத்திலே ஆல்கஹால் இருந்ததுன்னு ரிப்போர்ட் கொடுத்தீங்க.

கிருஷ்ணசாமி ஒரு கண்ணேட்டம் விட்டு, —ஆமா! என்றார்.

—அதை வச்சு, ஆள் போதையிலே இருந்திருக்கான், பள்ளத்திலே விழுந்து இறந்துட்டான்னு ரிப்போர்ட் கொடுத்துட்டேன்.

—தற்கொலைனு சொல்லியிருக்கீங்க!

—ஆமா! ஆனா இண்டர் போல் இப்போ திருப்பி மட்க்கறான்.

—என்ன சொல்லறான்?

—மார்லோ ஒரு டூடோடல்லர். குடிக்கவே மாட்டான். ஆல்கஹால் எப்படி வயத்துக்குள்ளே இருந்ததுன்னு கேட்கறான்.

—மை காட்! என்றார் கிருஷ்ணசாமி! கண்ணாடியை எடுத்துத் திரும்பவும் மாட்டினார்.

—சரி... அதனாலே...


# Lady Stenographers

**15 posts**
**Rs. 500/800 + perks.**

[illegible]

Nariman Point, Fort and Western Suburbs

[illegible]


**டம்மாய் திருமணங்கள்** சில வெளியிடும் விளம்பரங்கள் முற்றிலும் வித்தியாசமாக இருக்கின்றன. உதாரணத்துக்கு, 'சுருக்கெழுத்தாளர்கள் தேவை' என்று 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' செய்தித் தாளில் வந்திருந்தது இந்த விளம்பரம்.

—என். ராதாகிருஷ்ணன்

எத்தனை பணக்காரியாய் இருந்தென்ன! வீட்டில் ஒரு நல்ல நாற்காலி சோபா இல்லையே, பாவம்!

'ஆராதனை' படத்தில் சுமலதா.

—என்ன கேஸ்?

—இது பிரிட்டன்லே நடந்திச்சு. விசித்திரமானது.

—சொல்லுங்க!

—ஆளைக் கொன்னுட்டு அவன் குடிபோதையிலே செத்திருக்கான்னு ஒரு இம்ப்ரஷனை உண்டு பண்ணக் குற்றவாளி ஒரு காரியம் செஞ்சான்.

துரைபாபு ஆவலோடு கேட்டார்.

—செத்துப் போனவன் வயித்துக்குள்ளே ஆல்கஹாலை இஞ்ஜெக்ட் பண்ணிட்டான்.

—இஸிட்? என்னூர் துரைபாபு.

—இது மாதிரி நடந்திருக்கா?

—பிரிட்டன்லே நடந்திருக்கு!

—அப்படி இஞ்ஜெக்ட் பண்ணினதை கண்டுபிடிக்க முடியுமா?

—முடியும்.

—என்ன செய்யணும்?

டாக்டர் எழுந்தார்.

(தொடரும்)

—எனக்கே இப்பொ சந்தேகம் வந்துடுத்து ஸார்.

—என்ன நினைக்கிறீங்க?

—மார்லோவைக் கொன்னுட்டு யாராவது அவன் வாய் வழியே ஆல்கஹாலை ஊத்தியிருப்பாங்களோ?

—இன்ஸ்பெக்டர்! செத்துப் போயாச்சுன்னு வாயிலே எது ஊத்தினாலும் உள்ளே போகாது.

—ட்யூப் வச்சு உள்ளே செலுத்த முடியுமா?

—முடியும். அவ்வளவு புத்திசாலியா யாராவது இருப்பாங்களா?

—இருப்பாங்கன்னு வச்சுக்குங்க?

கிருஷ்ணசாமி யோசித்தார்.

—அது ஒரு கஷ்டமான ப்ரோஸஸ் தான்!

வேற வழி ஏதாவது இருக்கா?

கிருஷ்ணசாமி மீண்டும் யோசித்தார். கண்ணுடியைச் சுழற்றிக் கண்களை மூடி யோசித்தார்.

பிறகு நிதானமாகக் கண்களைத் திறந்து—எனக்கு ஒரு கேஸ் தெரியும்.

*Society prepares the crime,*
*The criminal commits it,*
*—HENRY THOMAS BUCKLE*

ஸர்ஜன் எழுந்து ஒரு நாலுக்கு மூன்று அலமாரியும் திறந்தார். ஒரு பெரும் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தார். பிறகு இரண்டு மூன்று தஸ்தாவேஜுகளைப் புரட்டினார். கடைசியில் உட்கார்ந்து,

—ஸாரி இன்ஸ்பெக்டர்! செத்துப் போனவனின் வயித்தை வெளிப்புறத்திலே சோதிக்கலே. சோதிச்சா ஊசி குத்தின தழும்பு தெரிஞ்சிருக்கும்.

இன்ஸ்பெக்டர் துரைபாபுவுக்கு ஆத்திரமாக வந்தது.

—எல்லாக் கோணத்திலேயும் நீங்க ஆராய்ச்சி செய்ய வேண்டாமா? டாக்டர்? என்றார் சற்று அழுத்தமாக.

—இதைப்போல ஒரு கேஸ் இதுவரை நடந்ததில்லே. எங்களுக்கு இது புதுசு. இப்படியும் கொலைகாரங்க நடந்துப் பாங்கன்னு தெரிஞ்சா இனிமே இதைக் கண்டு பிடிக்கவும் ஆராய்ச்சி பண்ணுவோம்! என்றார்.

துரைபாபுவுக்கு எதுவும் பிடிக்கவில்லே. சட்டென்று எழுந்து வெளியே நடந்தார்.

லாலியை வீட்டில் கொண்டு விட்டபோது பெரிய பதட்டத்தில் இருந்தாள்.

அது மாதிரி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லே.

கண்ணுடிக்கார தாமின் ஸ்டைப்ளு கார்—காரின் பச்சைக் கலரை மாற்றியிருந்தார்கள் என்று அவளுக்குத் தெரியும்—அவனே நிச்சயம் கொல்லத்தான் வந்தது.

கேட் ஓரத்தில் அவனைச் சுட்டு அரைந்திருக்கும்.

புஷ்பா தங்கதுரை

கேட் உடைந்து அந்தப் பகுதியோடு அவனும் சேர்ந்து பள்ளத்துள் சரிந்திரா விட்டால் நிச்சயம் எமலோகப் போயிருப்பான்.

தன் மீது நடந்த கொலை முயற்சியை அவன் வெகுவான கூச்சலில் வெளிப்படுத்த...

யாரும் நம்பவில்லை!

புரொபஸர்ட்டர் ஜோஷ்—என்னம்மா பைத்தியக்காரி மாதிரி பேசறே! அவர் எங்க மதிப்பு மிகுந்த வாடிக்கைக்காரர்! என்றார்.

அதையும் மீறி அவன் எழுப்பிய ஹல்லோ புல்லோ ஒரு சின்னக் கூட்டத்தைச் சேகரித்து விட்டது.

வாலி வெகுண்டு முஷ்டியினைத் தான் மீது வீசிலான்.

இரண்டு பேர் அவனை இடைமறித்தாகள்.

அவனுக்கு ஆத்திரம் எப்படி வந்தது!

தன்னைச் சூழ்பவர்களை மீறி நாலு பக்கத்திலும் பீறி அடிக்க,

ஒரு கால் உதையில் வாசல் டில்பலை கண்ணாடி நொறுங்கியது.

புரொபஸர்ட்டர் ஜோஷ் பதறிப்போய் வாலியை உள்ளே இழுத்தார்.

—அவனை விடாதே, வெறி பிடிச்சுடுத்து! என்று குரல்.

யாரோ போலீஸை அழைக்கும் போன் குரல்.

நல்லவர் யாராவது அவள் பேச்சைக் கேட்க மாட்டார்களா என்று அவள் கூக்குரல்.

உள்ளே கவுண்டருக்குள் வெளி ஆட்களும் நுழைய, —எல்லோரும் வெளியே போங்கோ! என்று குரல்.

அதை அடுத்துக் குழப்பம்.

பிறகு சப் இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டபிள்களுடன் நாடகமாக உள்ளே வர...

அவர் அவனை மிரட்ட...

—ஒன்று வீட்டுக்குள்ளே இரு! இல்லாட்டி பொது அமைதியைக் கெடுத்தேன்னு பழையபடி மென்டல் ஆஸ்பத்திரியிலே தள்ளிடுவேன், என்று கார்னை செய்துவிட்டுப் போக,

வாலி நம்பர் 3'ன் கட்டத்திற்கு மீண்டும் திரும்பியிருந்தாள்.

என்ன பதட்டம்! என்ன கோபம்! நெற்றியில் கண் இருந்தால் பொசுக்கி விடுவாள் பொசுக்கி! எல்லோர் மீதும் அவ்வளவு கோபம்!

மணி அடித்தது.

கீழே யாரோ வந்திருக்கிறார்கள். யாராக இருக்கும்?

தனது கூந்தலைச் சீர் பரப்பி, மாடிப் படிகளில் மெல்ல இறங்கினாள்.

கீழே வராந்தாவில் கூர்க்கா பாதுகாப்புடன் நிற்கும் அந்த உருவத்தைப் பார்த்ததும் ஒரு விநாடி நிச்சயமில்லை.

# மலைக்கோட்டை மோகினி

ஒரு

பிறகு வாரி எழுந்து படிகளை நன்னுலாகத் தாண்டி, சூறுவளியாக வெளியே சீறிப் பாய்ந்தாள்.

உமேஷ் வராந்தாவில் இரு கண்களும் இரு கனவுகளாகத் தெரிய, அவளுக்கு நிகரான பிரமையுடன் அவளைப் பார்த்தான்.

லாலி அவன் கைகளைப் பிடித்து, சந்தோஷம் இரு கிளைகளாக வழிய, ஆரம்ப உபசரிப்புகளை அள்ளிவிட்டவாறு மாடிப் படிகளில் ஏறினாள்.

இருவரும் மாடி பால்கனியில் அமர்ந்ததும், —நான் வெளியே வந்துட்டேன், லாலி என்றான் அவன்.

லாலியின் கண்கள் துள்ளிப் பெரிதானது.

—எப்படி உமேஷ்?

—எங்க அப்பா செத்துட்டார். அதுனாலே என்னை உள்ளே வச்சிருக்க வழியில்லை.

—உள்ளே இருக்கிறதுக்கும் உங்க அப்பாவுக்கும் என்ன சம்பந்தம்?

—நிறைய.

—ஓ! என்று அதிசயம் காட்டினாள் லாலி.

—என் அப்பாதான் என்னை உள்ளே அனுப்பிச்சார்.

—உன் சொந்த அப்பாவா?

—ஆமா.

—ஏன் அனுப்பிச்சார்?

—அவர் எங்க அம்மாவை விஷம் வைத்துக் கொல்றதை நான் பார்த்துட்டேன்.

லாலியின் வாய் குருவி போல் திறந்தது—கொடுமை!

—பெரிய கொடுமை, லாலி! அநியாயம்!

—ஏன் அப்படிச் செஞ்சார்?

—ஆபீஸ் செக்ரட்ரியைக் கல்யாணம் பண்ணிக்க நினைச்சார்.

—ஷாக்!

—அம்மா அவரைக் கண்டிச்சாள். அப்பா அதை விரும்பல்லே! விஷம் வச்சுக் கொன்னுட்டார். நான் பார்த்துட்டேன்.

லாலி சுவாசம் தடுமாறினாள்.

—அப்புறம்?

—நான் அவரை மிரட்டினேன். போலீஸ்லே காட்டிக் கொடுப்பேன்னு சொன்னேன். அவராலே தாங்கிக்க முடியல்லே. என்னைப் பைத்தியம்னு ஸர்டிஃபை பண்ண வச்சு ஆஸ்பத்திரிக்குள்ளே அனுப்பிவிட்டார்.

—இப்போ எப்படி வெளியிலே விட்டாங்க?

—அப்பா செத்துப் போய்விட்டார். ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கிற தொகை நின்று போச்சு. ஹாஸ்பிடல் கமிட்டி என்னை நார்மல்னு டிக்ளேர் பண்ணி வெளியிலே

மறைக்கிறார் மாயனூர் எம்.எல்.ஏ.

# மாயனூரில் மருத்துவமனை இல்லையா, யார் சொன்னது!

தங்களது 30—4—81 தேதியிட்ட குமுதம் இதழில் 'கட்டினீர்.. கட்டினீர் என்கிறார்களே அது...' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளிவந்துள்ளதைப் படித்தேன்.

மாயனூருக்கு ஒரு மருத்துவமனை கிடையாது என்று எழுதப்பட்டிருந்தது. மாயனூருக்கு 10 மைலுக்கு மேற்கே கரூரிலும் 10 மைலுக்குக் கிழக்கே குளித்தலையிலும் சகல வசதிகளும் கொண்ட பெரிய அரசாங்க மருத்துவமனைகள் இருக்கின்றன. மாயனூருக்கு ஒரு மைலுக்குக் கிழக்கே உள்ள கிருஷ்ணராயபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. மாயனூருக்கு மருத்துவமனை வேண்டும் என்று யாரும் இதுவரை என்னிடம் கூறவில்லை.

மேலும் நான் சட்ட மன்ற உறுப்பினராக வந்தவுடன் (மாயனூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான) மாயனூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க ஏற்பாடு செய்து நானே சென்ற ஜூலை மாதம் திறந்து வைத்தேன்.

காசா நிறுவனத்தினருடன் தொடர்பு கொண்டு சுமார் 300 வீடுகளும் குடிநீர் வசதியும் சிறு சிறு தொழிற்சாலைகளும் இந்த ஓர் ஆண்டில் கட்டப்பட்டு மக்கள் பலனடைந்துள்ளார்கள்.

—பி.எம். தங்கவேல்ராஜ்
பி.ஏ.பி.எல். எம்.எல்.ஏ.

அனுப்பிச்சுட்டது. இப்போ ஒரு கம்பெனிக்கும் இரண்டு வீட்டுக்கும் நான் அதிபதி.

லாலி உமேஷின் கைகளைப் பற்றினாள். —உமேஷ்! என்று அடித்தொனியில் அழைத்தாள்.—எனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கு, துக்கமாகவும் இருக்கு! உலகத்திலே எத்தனை கொடூர மனுஷங்க இருக்காங்கன்னு இப்போதான் தெரியுது. உமேஷ்! நீ தப்பிச்சது எனக்கு ஒரே சந்தோஷம்! எனக்கும் நீ உதவி பண்ணுவியா?

—உனக்கு இனிமே என்ன பயம்? என்றான் உமேஷ்.

—இருக்கு! என்று சொல்லி நடந்த கதைகளை விவரமாகக் கூறினாள்.

உமேஷ் விரலை நெற்றியில் வைத்துச் சிறிது நேரம் யோசனையில் இருந்தான். பிறகு—லாலி, எனக்கு ஒரு மாதிரி எல்லாம் புலனுகுது! என்றான்.

—என்ன, உமேஷ்! என்று ஆவலுடன் கேட்டாள் லாலி.

உமேஷ் எழுந்தான்.

—அந்த ஜூவல்லரி புரொப்ரைட்டர் உன்கிட்டே பேசிய விதத்தைப் பார்த்தா நிச்சயம் அந்த மீன் நெக்லஸ் அங்கேதான் ரிப்பேருக்கு வந்திருக்குன்னு தெரிகிறது.

—நானும் அப்படித்தான் நினைக்கிறேன், உமேஷ். பூசி மெழுகினார் அந்தப் புரொப்ரைட்டர்.

—அப்புறம் கேளு! முருகன் கோவில்லே கிணறு வெட்டறாங்களே!

# ஐ.எஸ்.ஆர். வீட்டு அதிசயக் கோழி!

COMICS PDF TIMES

என் வீட்டில் உலக மகா அதிசயம் ஒன்று நடக்கிறது. இதை நான் சொன்னால் பலர் நம்ப மறுக்கிறார்கள்.

என் வீட்டில் நான் வளர்த்த கோழிக் குஞ்சுகளில் இரண்டு சேவலாகவும் ஒன்று பெட்டைக் கோழியாகவும் வளர்ந்து வந்தன. அதிகாலை வேளையில் இந்தச் சேவல்களின் கூவல் அண்டை அயலாருக்குப் பெரும் தொந்தரவாக இருந்தது. அதிகாலை வேளையில் தூக்கம் கெட்டுவிடுவதாகச் சொன்னார்கள். ஆகவே சேவல்கள் இரண்டையும் வெட்டிப் பிரியாணி போட்டுச் சாப்பிட்டு விட்டோம். இப்போது என்ன அதிசயமென்றால், அவைகளுடன் கூட வளர்ந்து வந்த பெட்டைக் கோழி, இப்போது சேவலைப்போல் 'கொக்கரக்கோ...' என்று கூவுகிறது. இதுவரை 50 முட்டைகள் இட்டிருக்கும் இந்த கோழிக்குப் பிஸ்கெட், வெங்காயம் என்றால் ரொம்பப் பிடிக்கும்.

சொன்னவர்: ஐ.எஸ்.ஆர்.; கேட்டவர்: செல்லப்பா



அவன்: இரவு ஒன்பது மணிக்கு மேலே டியன் சாப்பிடப் போலாங்கறையே, இப்பப் பசிக்கலேயா?

இவன்: ஜவுளிக் கடை வெச்சிருந்த ஒருத்தர் இப்ப அதை ஓட்டலா மாத்தி இருக்கார். விற்பனை ஆகாத பலகாரம் எல்லாம் இரவு ஒன்பது மணிக்கு மேலே ரிடக்ஷன் விலையிலே தர்றார்! அங்கே போகலாம்னு சொன்னேன்.

மண் எடுத்துட்டுப் போற லாரியையும் அதிலே இருக்கிற மண்ணையும் கணக்குப் போட்டுப் பார்த்தால் அங்கே ஒரு கிணறு இல்லே, நாலு கிணறு வெட்டலாம்.

லாலியின் கண்கள் விரிந்தன. —அப்போ? என்று இழுத்தாள்.

—வெறும் கிணறு வெட்டலேன்னு தெரியுது லாலி!

லாலிக்குப் பளிச்சென்று வெளிச்சம் அடித்தது.—மை காட்! நான் புரிஞ்சுக்கிட்டேன் உமேஷ்! கோவில் லேருந்து நகைக் கடையின் ஸ்ட்ராங் ரூமுக்குச் சுரங்கம் வெட்டறாங்க!

—கை கொடு! அதைத்தான் நானும் நினைச்சேன்.

—அதை முறியடிக்கணும், உமேஷ்!

—முறியடிக்கிறது மட்டுமில்லே. முறியடிச்சு அவர்களை உள்ளே தள்ளினால்தான் உனக்குப் பாதுகாப்பு ஏற்படும்.

—ஆமாம்!

—அவகாசம் கொடு! நான் ஃபூல் ப்ரூஃப் வழி ஒன்று கண்டுபிடிச்சுச் சொல்றேன்.

லாலியைப் பெரிய உற்சாகம் மூழ்க்கியது.

இளம் காலையில் அந்தச் சிவப்புக் கட்டத்தில் இன்ஸ்பெக்டர் சிங் நுழைந்தபோது துரைபாபு தம் கையில் உள்ள பேப்பர் வெயிட்டை டக்கென்று கீழே வைத்தார்.

விரைவாக எழுந்து அபிமானத்தில் ஒரு ஸல்யூட் அடித்து, —வாங்க வாங்க! என்று அபரிமிதமாக உபசரித்தார்.

துரைபாபுவுக்கு ஆச்சரியம்.

இண்டர்போல் தாக்கீதுகள் போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸ் வழியே ஒவ்வொன்றுக அவரிடம் வர,

அவரது இயல்பான தைரியமும் துணிச்சலும் சிறிது சிறிதாகக் கரைந்தது.

அதுவும், சமீபத்திய தாக்கீதில், இறந்துபோன மார்லோ குடிப்பழக்கம் அறவே இல்லாதவன் என்று தெரிய வந்ததும் அவரது நாடிகள் ஒடுங்கிவிட்டன.

தமது விசாரணையில் எங்கே யாவது கோட்டைவிட்டு விட்டோமோ என்று தோன்றியது.

அதுவும் விவகாரம் சர்வதேசீய விவகாரமாக மாறிவிட வாய்ப்பு உண்டு என்று நினைத்தபோது மேலும் அவருக்குப் பதட்டம் எடுத்தது.

இந்தக் கேஸைப் புத்தம் புதிதாக ஒரு கோணத்தில் வேறு யாராவது விசாரிக்க வேண்டும் என்று எண்ணினார்.

குற்ற விசாரணையில் பிரபலம் அடைந்துள்ள இன்ஸ்பெக்டர் சிங் இதை மறு விசாரணை செய்தால் நன்றாக இருக்கும் என்று தம் அபிப்பிராயத்தை மேலிடத்திற்குத் தெரிவித்தார்.

இது ஒரு சர்வ தேசீய விவகாரம், இதில் அப்படிச் செய்வதால் தமக்கு ஒன்றும் மதிப்புக் குறைச்சல் இல்லை என்று தீர்மானமாகக் கருதினார்.

ஹெட்குவார்ட்டர்ஸுக்குத் தமது அபிப்பிராயத்தை எழுதிவிட்டு என்ன பதில் வரும் என்று காத்திருக்கும்போது,

இன்ஸ்பெக்டர் சிங்கே அந்தப் பதிலாக வந்து சேர்ந்தது அவருக்குப் பேராச்சரியமாகப் போய்விட்டது.

சிங் தமது மஃப்டி உடையில் மிகக் கம்பீரமான தோற்றத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தார்.

—மிஸ்டர் துரைபாபு! நீங்க இந்தக் கேஸைச் சரியாத்தான் விசாரிச்சிருப்பீங்க! உங்க திறமை மேலே எனக்கு எப்போதும் நம்பிக்கை உண்டு. என்னவோ என்னையும் இந்தக் கேஸ்லே சேர்த்து விடறீங்க. பரவாயில்லே! நான் ஒரு ஹாலிடேயை இங்கே அனுபவிக்கப் போறேன். அவ்வளவுதான்! வரும்போதே நான் கேஸை ஓரளவு படிச்சுட்டுத்தான் வந்திருக்கேன். ஹோட்குவார்ட்டர்ஸுக்குப் பெரிய ஃபைலே தயாராயிடுத்து! இப்போ நான் என்ன செய்யணும் சொல்லுங்க!

—மிஸ்டர் சிங்! ஒரு சின்ன விஷயம். ஆனால் அது வைடலாக இருக்கும் போல் தோணுது.

—சொல்லுங்க!

—மார்லோ குடிச்சுட்டுப் பாறையிலிருந்து தற்செயலா விழுந்து இறந்தான்னு முதல்லே சொல்லியாச்சு.

—ரைட்!

—இப்போ என்னடான்னா அவன் குடிக்கவே மாட்டான், ஒரு டோடலர்னு ரிப்போர்ட் வந்திருக்கு.

மேஜை மீது டுடுல் போட்ட சிங்கின் கை பக்கென்று நின்றது.

அவர் கால் ஆடுவதும் நின்றது.

—ஓ! என்று சின்னச்சத்தம் செய்தார்.

—இது கொலே, தற்கொலே இல்லேன்னு இண்டர்போல் சாதிக்குது.

—ரைட்! அவங்க சந்தேகப்பட உரிமை இருக்கு!

—அதனாலே தான் எனக்கும் கலக்கம்!

சொல்லிவிட்டு நிமிர்ந்தார் துரைபாபு.

சிங் சூன்யத்தைச் சிறிது வெறித்தார். விழிகள் வெட்டிக்கொண்டு ஓடின. துரைபாபு ஆவலாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு சிங் நிதானமாக—சரி! ஒரு கொலேன்னு அனுமானிக்கவாம். கொலையைச் செய்வதற்கு ஏதாவது காரணம் இருக்கா?

—அதான் எனக்குத் தெரியலே.

—அதைக் கண்டு பிடிச்சுட்டாப் போதும். மார்லோ எதுக்கு இங்கே வந்தான்? என்று எழுந்தார் சிங்.

(தொடரும்)

# புத்தகம்

## சங்கத் தமிழ்ப் பொன்மொழிகள் தெளிவுரை

க. முத்துச்சாமி—பக். 116—ரூ. 10.
பொதிகை நிலையம், 29—ஜே.தா.பே. சாலே,
முகிலை—621 211.

## அரும்புகள் மொட்டுகள் மலர்கள்

(பாரதிதாசன் புகழ்மாலே)
தொகுப்பு: முருகு சுந்தரம்—பக். 180—ரூ. 10.
அகரம், சிவகங்கை.

## ஐம்பதுக்குப் பிறகும் ஆண்மையுடன் இருக்க வழி

தயாரிப்பு: சூர்யகாந்த்—பக். 80—ரூ. 10.
ப்ரீதி பப்ளிகேஷன்ஸ், 5—ராஜரத்தினம் தெரு,
சென்னை—45.

## இருட்டில் தொலைத்த வெளிச்சங்கள்

(புதுக் கவிதைகள்) கே. வெங்கடேச ரவி,
பக். 120—ரூ. 5.

## செட்டி நாட்டுப் பலகாரங்கள்

(சமையல் குறிப்பு) அரு. கல்யாணி,
பக். 56—ரூ. 2.50.
இரண்டு நூல்களும்: அருணோதயம்,
3, கௌடியா மடம் சாலே, இராயப்பேட்டை,
சென்னை—14.

## தந்தை மகள் பிரதமர்கள்

(ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி பற்றி)
பக். 30—ரூ. 4.

## சும்மா கிடைத்ததோ சுதந்திரம்?

(சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள்)
பக். 32—ரூ. 4.
இரண்டு நூல்களுக்கும் ஆசிரியர்: ஜகன்,
பூர்ணிமா பிரசுரம், 40 தேரடி தெரு,
சென்னை—5.

## பொது அறிவுப் புதையல்

(கட்டுரைத் தொகுப்பு) வி.வி. கிரி,
பக். 128—ரூ. 6.
புத்தகப் பூங்கா, 245, பைகிராப்ட்ஸ் சாலே,
திருவல்லிக்கேணி, சென்னை—5.

## காலத்தைப் பயன்படுத்துவது எப்படி?

(வாழ்க்கை வழிகாட்டி) பி.சி. கணேசன்,
பக். 92—ரூ. 4.

## பொர்னட்ஷாவின் வாழ்வும் வாக்கும்

நா. எதிராஜ்—பக். 72—ரூ. 3.

## புண்ணிய பூமியில் புனித யாத்திரை

(இந்தியத் தலப் பயண நூல்)
வி.என். சிதம்பரம்—பக். 128—ரூ. 5.
மூன்று நூல்களும்: வானதி பதிப்பகம்,
13, தீனதயாளுதெரு, தி.நகர், சென்னை—17

கதைகள், நாவல்கள் அல்லாத 1980'க்குப் பிறகு வெளிவந்த தமிழ் நூல்கள் இந்தப் பகுதியில் இடம் பெறும். இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்

# இளமைக் குருதி

புஷ்பா தங்கதுரை

தந்திரத்திற்கு ஆடைகள் தேவை. உண்மை நிர்வாணமாகவே செல்லும்.

—தாமஸ் ஃபுல்லர்

## 20

—மார்லோ எண்ண வாணத்திற்குத் திருக்கோணம் வந்தான்?

இன்ஸ்பெக்டர் சிங் ஆவலோடு கேட்க துரை பாபு தொடர்ந்தார்.

—கோவில்லே ஒரு பழங்கால நெக்லெஸ் கிடைச்சுது ஸார்! அதை மதிப்புப் போட அவனை அழைச்சிருந்தாங்க.

—எங்கிருந்து வரான்?

—லண்டன்.

—இவன் என்ன எக்ஸ்பெர்ட்டா?

—ஜூம்மாலஜிஸ்ட் ஸார்! ஆண்டிக் நகைகளை மதிப்புப் போடறதிலே கெட்டிக்காரன். அதனாலே ஸி.எஸ்.ஓ.வே தேர்ந்தெடுத்து அனுப்பியிருங்க!

—அது யாரு ஸி.எஸ்.ஓ.?

—செண்ட்ரல் செஸ்லிங் ஆர்கனைஸேஷன். உலகத்திலே உள்ள வைர வியாபாரம் முழுக்கும் அதன் கையிலே.

சிங் யோசித்தார்.

பிறகு திடும் என்று திரும்பி.

—இவரோ என்னன்னு சொன்னீங்க துரைபாபு?

—ஜூம்மாலஜிஸ்ட்! நவரத்தினங்களைப் பரிசோதிப்பதில் கெட்டிக்காரன். ஆண்டிக் நகைகளை மதிப்புப் போடறதிலே நிபுணன்.

—இந்தியாவுக்கு இதுக்கு முன்னாலே வந்திருக்கானு?

—பலமுறை வந்திருக்கானு கேள்வி.

—இவன் எங்கே தங்கியிருந்தான்?

—ஹோட்டல் பாரிஜாதாவிலே.

—அங்கே போய்ப் பார்க்கலாமா?

—ஷ்யூர்!

வெளியே வந்தார்கள். மலைப் பிரதேச வெய்யில் மெலிந்து கிடந்தது. பசுமை நிரம்பிய புது வாடை.

ஜீப் பாரிஜாதா முன்னால் நின்றது. நீண்ட சலவைக் கல் படிகளில் ஏறி விஸ்தார லவுஞ்சுக்குள் நுழைந்தார்கள். திரும்பிய இடமெல்லாம் தேக்குப் பானல் வட் ஆயில் பூசலுடன் மினுக்கியது.

—அவதான் ப்ரீதா! என்று ரிஸப்ஷன் கவுண்ட்டரைக் காட்டினான் துரைபாபு. —முன்னூடி ரூம் ஸெர்வீஸிலே இருந்தாங்க.

ப்ரீதா மெல்லிதாக முறுவலித்தாள். கையில் ஒரு வளை தி அடித்தது. கழுத்தில் கருகுமணி. சின்ன இடுப்பில் நைலான் துணியைச் செருகவிட்டு, கவுண்ட்டர் முன்னால் சாய்ந்த தன்னைச் சரியாக இரண்டு பக்கமாக வெட்டிக் கொண்டாள்.

அறிமுகம் நடந்தது.

—நீங்க தானே மார்லோ மறைஞ்சு போன அன்னிக்கு ரூம் ஸர்வீஸ் பார்த்தது?

—ஆமா.

—மார்லோ குடிச்சாரா?

—நோ. நெவர்.

—உங்கிட்டே எப்படிப் பழகினார்?

—ரொம்ப கண்ணியமா நடந்துகிட்டார். இன் பாக்ட், அறையிலே நாங்க அதிக நேரம் இருப்பதையே அவர் விரும்பவில்லே.

யாராவது அவரை வந்து பார்த்தாங்களா?

—யாரும் கிடையாது.

—அடிக்கடி வெளியிலே போவாரா?

—காலையிலே போவார். மத்தியானம் லஞ்சுக்கு வருவார். திரும்பிப் போவார். சாயங்காலம் வருவார்.

—டாக்ஸியிலே போவாரா?

—அதை நான் விசாரிச்சுட்டேன், என்று குறுக்கே புகுந்தார் துரைபாபு. —டாக்ஸிலே போகவே இல்லே. தேவஸ்தான ஜீப்லேதான் போவார்.

—மிஸ் ப்ரீதா! ஒரு வெள்ளைக்காரன் இங்கே தங்கியிருக்கான்னு, அவன் எதுக்கு வந்திருக்கான் என்கிற பேச்சு அடிபடுமே! உங்க காதிலே என்ன பட்டது?

அவள் உதட்டைப் பிதுக்கினாள்.

—எதுவுமில்லையா? என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சிங்.

—எதுவுமில்லே, ஸார்!

—அதை எப்படிச் சொல்வேம்மா? ஒரு வெள்ளைக்காரன் திருக்கோண மலைக்கு வந்தா...

—ஹரே கிருஷ்ணா ஆளுக்கு எத்தனையோ பேர் வராங்க ஸார், சாமி கும்பிடறதுக்கு! என்று வெட்டினாள் ப்ரீதா.

—சரி! வெளியிலே போனா சாவியைக் கவுண்ட்டர்லே கொடுப்பாரா?

—மாட்டார் ஸார்! தானே கவனமா பையிலே போட்டுக்கிட்டுப் போவார்.

அவளிடம் விடை பெற்று இரண்டாவது மாடிக்குப் போனார்கள்.

மார்லோ தங்கி இருந்த அறை அன்று காலியாக இருந்தது.

கதவைத் திறந்து உள்ளே மௌனமாக சிறிது நேரம் யோசனையோடு நின்றார்கள்.

பிறகு உள் கதவைத் திறந்து பால்கனிக்குப் போனார்கள்.

—இப்படிக்கூட ஏறி வரலாம்! என்று பொதுப்படையாகச் சொன்னார் துரைபாபு.

—இறங்கவும் செய்யலாம், என்றார் சிங்.

அறை முடிந்த பிறகு கீழே இறங்கினார்கள். இருவரும் ஜீப்பில் ஏறி அந்த ஸாண்ட் ஸ்டோன் பில்லர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

மார்லோவின் உடல் கிடந்த இடத்தை துரைபாபு காண்பிக்க, சிங் பல கோணங்களில் நின்று, அந்தப் பிரதேசத்தை ஆராயத் தொடங்கினார்.

இயற்கை அங்குள்ள ஸாண்ட் ஸ்டோன்களைப் படிவங்களாகக் கரைத்திருந்தன. துளசிச் செடிகள் இங்குமங்கும் மார்பு உயரம் வளர்ந்திருந்தன. ஒரு ஈய ஆகாயம் மந்தமாக வெகுதூரம் பரவியிருந்தது.

இருவரும் வியர்வையோடு மேலே ஏறி ஒரு மர நிழலில் நுழைந்தார்கள்.

—மார்லோ உடம்பிலே கீறல் நிறைய இருந்ததில்லே? என்றார் சிங்.

—இருந்திச்சு ஸார்.

—அதிலே ரத்தம் பார்த்தீங்களா?

—பார்த்தேன். புழுதி ஒட்டியிருந்திச்சு.

—புழுதியா? என்று திடுக்கிட்டுக் கேட்டார் சிங்.

—ஆமாம் ஸார். கீறல் மேலே! தலை, சட்டையிலே கூட!

—கொஞ்சம் இப்படி வாங்க!

துரைபாபுவை அழைத்துச் சிங் அவசரமாக மீண்டும் கீழே இறங்கினார்.

பாறைக்குக் கீழ்ப் பகுதியைப் பரபரப்பாக ஆராய்ந்தார்.

—மிஸ்டர் துரைபாபு! இது ஒரு சதிச் செயல்னு தோணுது.

—எப்படிச் சொல்றீங்க?

—மார்லோ மேலே இருந்து விழுந்தார்ன்னு வையுங்க. விழுந்த இடம் எல்லாம் அநேகமாகப் பாறையாத்தான் இருக்கு.

துரைபாபுவுக்கு ஒரு நாடி சுளீர் என்று இழுத்தது.

—விழுகிற ஆள் வேண்டுமென்றே தள்ளிக் குதித்திருதால் தவிர, எதேச்சையாக விழுகிறவன் பாறைப் பக்கம்தான் விழுந்திருப்பான்.

—அப்புறம் உருண்டிருப்பான் இல்லே?

—ரைட்! ஒத்துக்கறேன். கொஞ்ச தூரம் உருண்டிருக்கலாம். ஆனா சுத்திவர என்ன மாதிரித் தரை இருக்கு?

பார்த்தார் துரைபாபு.

—கட்டாந்தரை. கருங்கல் வேறே! புழுதியிருக்கா, கவனிச்சீங்களா?

—கட்டாந்தரையைக் கிளைத்தாலும் புழுதிதானே.

—புழுதி என்கிறது ஃபைன் பௌடர். இதைக் கிளைத்துப் பாருங்க! இதெல்லாம் கோர்ஸ் கிரயின்ஸ்.

மண் ஊணக் கிளறிக் காண்பித்தார். துரைபாபு அதிசயமாகத் திகைத்தார்.

—எனக்கு ஒரு சந்தேகம்! ஹோட்டல் பாரிஜாதா பின்புறம் பார்க்கணும்! வாங்க.

இருவரும் பாரிஜாதாவை நோக்கி அவசரப்பட்டார்கள்.

---

## டைரக்டரின் மகன் டைரக்டராகிறார்

ஒரு வித்தைக்காரன் கடத்திச் சென்ற குழந்தையைப் பற்றிய கதை. 'பதிக் சந்த்' என்ற பெயரில் அதைப் படமாக்குகிறார் சந்தீப் என்ற இந்த 28 வயது டைரக்டர். கதை, வசனம், இசை மூன்றும் அப்பாவினுடையது. அப்பாவின் பெயர்: சத்யஜித்ராய்.

அவர், உடம்பை மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்; இவர், பிரசினையை மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்.

'வடிவங்கள்' படத்தில் வனிதாஸ்ரீ, ராதிகா.

—லாலி! நான் கணக்குப் போட்டுப் பார்த்துட்டேன். இந்த ரேட்லே லாரி மண் வெளியிலே போச்சுதுன்னு இன்னும் ஏழு நாளிலே அவங்க அந்த ஜுவெல்லரிக்கு அட்டாச் இருப்பாங்க!

மறு முனையில் உமேஷ் படபடத்தான்.

லாலி கவனமோடு கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் சுரத்தில்லாமல் வெளியே பார்த்தன. முகத்தில் மெல்லிய நிழல் படர்ந்தது.

—லாலி, கேட்கறியா? என்றான் உமேஷ்.

—ஊம்.

உமேஷ் மௌனமானான்.

—உமேஷ்!

—சொல்லு, லாலி! யோசிக்கிறியா?

—எனக்கு எதுவுமே பிடிக்கலே.

—ஏன் இப்படி வெறுப்பா பேசறே?

—இல்லே, இவ்வளவு தூரப் துப்புக் கண்டுபிடிச்சு உலகத்துக்குச் சொன்னு அது ஒத்துக்க மாட்டேன்குது, பாரு!

—உலகத்துச் சுபாவம் அப்படித்தான். பணம் எல்லாத்தையும் மறைச்சுடும். உண்மைக்குப் போராடணும்னு நினைச்சா இதை எல்லாம் சகஜமா ஒத்துக்க வேண்டியதுதான்.

—இப்போ என்ன செய்யலாம், சொல்றே?

—எனக்கு ஒரு யோசனை தோணுது.

—சொல்லு.

—ஜுவெல்லரியின் ஸ்ட்ராங் ரூம் எங்கே இருக்குன்னு சொன்னே?

—அந்த நியான் லைன் இருக்கே, அதுக்கு நேரே, கீழே.

—ஓ கே! கிணத்துலேர்ந்து அந்த ஸ்ட்ராங் ரூமுக்கு ஒரு கற்பனைக் கோடு போட்டுப் பாரு. அது ஒரு சாய்வுக் கோடா இருக்கும்.

—ரைட்!

—அந்தக் கோடு வழியாத்தான் சுரங்கப் பாதை போகும்.

—ஓ கே!

—அது ப்போற வழிக்குக் கொஞ்ச தூரத்திலே ஒரு மேன்—ஹோல் இருக்கு.

லாலிக்கு நாக்கு இஸ்ஸ்ஸிட்டது. —சுவாரஸ்யமா இருக்கு. சொல்லு, உமேஷ்!

—அந்த மேன் ஹோல் மூடியைத் திறந்து உள்ளே போய்ப் பார்த்தா...

—பார்த்தா என்ன தெரியும்?

—தெரியாது! சுரங்கத்திலே வேலே செஞ்சா பாதாளச் சாக்கடைச் சுவர் அதிர்ச்சி அடையும். அதைக் காதாலே கேட்கலாம்.

—அச்சா! நம்ப கேஸை நிரூபிக்க அது ஒரு நிச்சயமான வழி! நீங்க ப்ரொஸீட் பண்ணுங்க!

—இதைத் தவிர இன்னும் ரெண்டு வழி என்கிட்டே தெளிவில்லாமல் இருக்கு. சிநேகிதங்ககிட்டே கலந்துகிட்டு அப்புறம் சொல்றேன்.

—ஓ கே!

—இன்னிக்கு உங்க வீட்டைச் சுற்றி, பாஸ்கரனும் ரவியும் காவல் இருக்காங்க! கலாய் பூசறவங்க மாதிரி இருப்பாங்க! பார்த்துப் பயந்துடாதே!

—இல்லே.

—டை!

லாலி போனே வைத்தாள். மாடிப் படியில் நிழல் தெரிந்தது. —யாரு? என்றாள்.

வேலைக்காரன் தலை நீட்ட, அவன் பின்னால் ராவ் நின்று கொண்டிருந்தார்.

—வாங்க ராவ்! என்றாள்.

ராவ் தயக்க நடையுடன் வந்தார். மெலிந்திருந்தார். லாலியின் முன் ஒரு நாற்காலியில் மெள்ளக் கையை ஊன்றி உட்கார்ந்தார்.

—நீங்க கூப்பிட்டிருந்தா நானே வீட்டுக்கு வந்திருப்பேனே, ராவ்! என்றாள் லாலி.

ராவ் மெல்ல முகத்தைத் திருப்பினார். நோயிலிருந்து அடிபட்டு விழுந்த சாயல் முகத்தில் நன்கு தெரிந்தது.

—இல்லே, லாலி! பர்ஸனலா ஒரு விஷயம் சொல்லிட்டுப் போக வந்தேன்.

—சொல்லுங்க. உடம்பு குணமாயிட்டதா?

—ஆயிட்டது, லாலி! ஆனா எனக்கு உடம்பிலே எதுவும் வரல்லே! மனசிலேதான்!

—மனசிலே என்ன?

—நாலு நாள் பிரமை அடிச்சாப்பல இருந்துட்டேன். என்ன நடந்ததுன்னு எனக்கே தெரியலே. அன்னிக்கு ராத்திரியிலே ஏற்பட்ட அதிர்ச்சி அப்படியே தங்கிட்டுது. என்னாலே அதை மீண்டு வெளிவர முடியல்லே! ரெண்டு நாளுக்கு முன்னாடிதான் அது தெளிய ஆரம்பித்தது. இப்போ ஓரளவு என் மனசு என் வசமானதும் உன்னைப் பார்க்க ஓடோடி வந்திருக்கேன்.

ராவ் தமது நாற்காலியைச் சற்று முன்னால் இழுத்தார். —லாலி! உன்கிட்டே ஒரு விஷயத்திலே மன்னிப்புக் கேட்க வந்தேன்.

—மன்னிப்பா? எதுக்கு? நான் சின்னவ, ராவ்!

—இல்லே. இப்போ நான் இந்த மனப் பிரமைகளை அடைஞ்சுட்டு வெளியிலே வந்தப்புறந்தான், ஒரு மனம் நார்மலா இருக்கிறதுக்கும் அப்—நார்மலா இருக்கிறதுக்கும் ஒரு நூல் போல சின்ன இடைவெளிதான் இருக்குன்னு புரிஞ்சுகிட்டேன் நான். என்னவோ என் மனசு ரொம்ப ஸ்ட்ராங். எதுவும் அதை ஒண்ணும் செய்ய முடியாது. . அப்படி இப்படின்னு மனப்பால் குடிச்சிட்டு இருந்துட்டேன். ஒரே ஒரு சின்ன நிகழ்ச்சி! அது என்னை என்னமா மாத்திட்டுது?

லாலி அவர் சொல்வதை எல்லாம் விநோதமாகக் கேட்டாள். புருவத்தை உயர்த்தி ஆச்சரியமுடன் பார்த்தாள்.

அவர் தொடர்ந்தார்:

—உன்னைப் போய் வீக், நம்பிக்கை இல்லாப இருக்கே, திடப் இல்லே, உறுதியில்லேன்னு என்னென்னவோ நினைச்சுட்டேன். ஆனால் எனக்கும் அதே மாதிரி அனுபவம் நிகழ்ந்த பிறகுதான் உன்னுடைய நிலைமையிலே நீ அப்படித்தான் இருக்க முடியும்னு தெரிஞ்சுகிட்டேன். அது மட்டுமில்லே. நீ என்னைவிட எவ்வளவோ தைரியசாலி யாக்கூட இருந்திருக்கே! என்னை மன்னிச்சுடு லாலி!

அவள் கையைப் பிடிக்க, —நோ, நோ! என்று அவள் துள்ளி எழுந்தாள்.

—லாலி! நீ சொல்றதை எல்லாம் நிச்சயம் இனிமே நம்புவேன். உன் மேலே நம்பிக்கை வந்துட்டுது. உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் செய்யறேன். உன் அதிர்ச்சிக்கும், மன நோய்க்கும் யார் காரணமா இருந்தாங்க சொல்லு. சொல்லு! என்று ஆத்திரமான குரலில் கேட்டார் அவர்.

(தொடரும்)



# இலைமறைத்த ஏமாற்றம்

## 21

If a true man speaks as loud as a scoundrel that will be a great day.

ரா வின் வார்த்தைகள் லாலிக்கு இதமாக ஒலித்தன.

இருதயத்தில் வெகுநாட்களுக்குப் பிறகு ஒரு குளிர்ச்சி வர்ஷித்தது.

—மிஸ்டர் ராவ், அனுபவம்தான் வாழ்க்கையில் மனிதனுக்குப் பெரிய குரு! என்றாள்.

—நூறு சதம் உண்மை! இப்போ சொல்லு! லாலி. உனக்கு வாழ்க்கையிலே என்ன அதிர்ச்சி ஏற்பட்டது? ஏன் இப்படிப் பிரமை பிடிச்சுது? என்று கேட்டார்.

லாலியின் மனத்திரை ஒரு முந்திய காலக் காட்சியைக் காட்டியது.

அதில் அவள் பதினைந்து வயதுப் பெண்ணாக இருந்தாள்.

சின்ன மேல்புறங்களைத் தழுவித் தாவணி ஓடியது.

கன்னத்தில் இரு பிங்க் பருக்கள்!

கையிலும் காலிலும் இனமில்லாத தினவு!

கண்களில் ஆச்சரியம் ஆச்சரியமான காட்சிகள்!

பேச்சின் மெல்லச் சிறுமித்தனம் விலக, கனவு தோய்ந்த வார்த்தைகளும் கருத்துக்களும் மெள்ள வந்து ஒட்டிக்கொண்டன.

எல்லா ஆண்களும் அவள் மீது பார்வைகளைச் சுட்டது எவ்வளவு புல்லரிப்புகளை விளைத்தன?

தன் மேனியில் புதுப்புது வளர்வுகள் எல்லாரையும் இழுக்கின்றன என்று நினைத்தாள்.

அப்போது வீட்டில் அப்பாவுக்கு பார்ட் டைம் உதவியாளராக வந்த முப்பத்தைந்து வயது ஹரிஹர் அவள் மீது நிறையப் பார்வை புள்ளிகளை வைத்தது அந்த நேரத்தில் அவளுக்குப் பெருமையைக் கொடுத்ததே தவிர விகாரத்தை உண்டு பண்ணவில்லை.

அதே ஹரிஹர் ஒரு நாள் அந்தி வேளையில், அப்பா வெளியூருக்குப் போயிருக்கும் போது, அபூர்வமாய் வந்து,

இரண்டு கடிதங்களை டைப் செய்து விட்டு, அவள் புத்தகத்தில் ஆழ்ந்திருக்கும் எதிர்பாராத நேரத்தில் திடீரென்று அவள்மீது பாய்ந்து ஒரு பலாத்காரத்தில் இறங்க,

அவளுக்கு அதுவரை உலகைப்பற்றி இருந்த அழகான தோற்றம் தார் தாராகக் கிழிந்து பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியது.

அதுவரை அவளை ஆண்கள் பார்த்ததெல்லாம் இது போன்ற ஒரு ஆக்கிரமிப்பை எதிர்பார்த்துத்தான் என்று அறிந்தபோது அவளது அடித்தளம் மெள்ளப் பெயர்ந்து விட்டது.

நல்ல வேளை, ஹரிஹர் அவளை ஒரு எக்கச்சக்க நிலையில் வைத்து ஒரு பயங்கரச் செயலில் இறங்குமுன்,

வாசலில் அப்பாவின் கார் வந்த சப்தம் மட்டும் கேட்டிராவிட்டால் நிச்சயம் அவள் ஓர் அநியாயத்திற்கு இலக்காகி இருப்பாள்.

கீழே அப்பாவின் குரல் கேட்டதும் ஹரிஹரர் ரப்பர் போல் சுருங்கி, —லாலி! என்னை மன்னிச்சுடு. நடந்ததை வெளியிலே சொல்லி மானத்தை வாங்கிடாதே! லாலி! மன்னிச்சுடு! என்று எவ்வளவு புலம்பலாகப் புலம்பினான்.

அவளுக்கும் அன்று ராத்திரி முழுதும் யோசனை.

சொல்லலாமா, வேண்டாமா?

ஆனால் மறுநாள் காலையில் ஹரிஹரர் தூக்கில் தொங்கி இறந்து விட்டான் என்று செய்தி கேட்டதும்...

அந்தச் சம்பவத்தை அவன் இறந்த துக்கத்திற்கு இரங்கலாக மனத்திலேயே வைத்துப் புதைத்துவிட்டாள்.

ஆனால் அது விளைத்த பின் விளைவுகள்தான் அந்தப் பிதிகள், பிரமைகள்...

—ராவ், பழைய விஷயம் ஒன்று உண்டு! அதை நான் மறந்துட்டேன். இப்போ என் அதிர்ச்சிக்குக் காரணம், நான் திருக்கோணத்திலே வரிசையாச் சில அக்கிரமங்கள் நடக்கிறதைப் பார்த்தது தான்! அதை எத்தனையோ போர் கிட்டே சொல்லியாச்சு! யாரும் நம்பலே. நீங்க நம்பினா அது எனக்குப் பெரிய அதிர்ஷ்டம்.

—லாலி, நிச்சயம் நம்டறேன் என்றார் ராவ்.

அவர் முகத்தில் தெரிந்த தீவிரம் அவளை ஊக்கியது.

—நம்பறது மட்டுமில்லே லாலி! அந்த அக்கிரமக்காரனை அம்பலப் படுத்தவும் உதவி செய்யறேன்.

—முடியுமா?

—முடியும்.

—மிஸ்டர் ராவ்! நீங்க நினைக்கிற மாதிரி அவன் சாதாரண ஆள் இல்லே. பணத்தை ஏராளமாகச் செலவழிச்சு எல்லார் கண்ணையும் மூடுவான், வாயையும் மூடுவான்.

—பரவாயில்லே. எல்லாத்தையும் சமாளிக்கிறேன்.

—பயங்கரமானவன்! ஒரு வாரம் முன்னடி என் மேலே கார் ஏத்திக் கொல்லப் பார்த்தான்.

—அதையும் புரிஞ்சிக்கிட்டேன். அன்னிக்கு ராத்திரி என் வீட்டிலே நடந்த அமளியே ஒரு சாம்பிள் ஆச்சே! இப்போ பாரு! அவனை நாம்ப அம்பலப்படுத்தணும். அதுவரைக்கும் உனக்கு ஆபத்து, எனக்கும் ஆபத்து. அதனாலே ஒரு வழி வச்சிருக்கேன்.

—சொல்லுங்க!

—அவனைக் காட்டிக் கொடுக்கிற வரைக்கும் எங்க கம்பெனி கெஸ்ட் ஹவுசிலே இருக்கப் போறும். பெரிய செக்யூரிட்டி படையே அங்கே இருக்கு! இப்போதே உன்னை அழைச்சிட்டுப் போயிடப் போறேன். அங்கே போய்த் திட்டம் போடறும்.

லாலிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

—நம்பகூட இன்னொருத்தரும் சேருவார், என்றாள்.

—யார்?

---

எனது மகள் மூன்றும் வகுப்புப் படிக்கின்ற ஒரு நர்சரி பள்ளிக்கூடத்தில் பரீட்சைக்குத் தரும் ஒவ்வொரு கேள்வித்தாளின் ஆரம்பத்திலும் இவ்வாறு கட்டம் கட்டிப் போட்டிருந்தார்கள்:

'அன்புக் குழந்தைகளே!

ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள்! அவன் துணை நிற்பான்!

உங்கள் வெற்றிக்காக நாங்களும் பிரார்த்திக்கிறோம். வாழ்த்துகிறோம்.'

—ஆர்.கே. சுப்பிரமணியன், மதுரை—15.




COMICS PDF TIMES

—உமேஷ்!

சிங் சுறுசுறுத்தார்.

அவருக்குத் தெரிய வேண்டியது மார்லோ தலையில் புழுதி எப்படி ஏற்பட்டது என்பது.

அவன் விழுந்து கிடந்த ஸாண்ட்ஸ்டோன் தூண்கள் இருந்த பகுதியில் நிச்சயம் தரைப் புழுதிப் பாங்காக இல்லை.

ரவை போன்ற துகள் துகளாக இருந்தன.

ஓட்டினுல் அந்தத் துகள்கள்தான் ஓட்டியிருக்க வேண்டும்.

அப்படியானுல் புழுதி எப்படி வந்தது?

துரைபாபுவை அழைத்து நேராகத் திருக்கோணம் கோவிலுக்கு வந்தார்.

மார்லோ நகை மதிப்பீடு செய்த மண்டப அறையையும் அதைச் சுற்றி இருந்த மண் பகுதியையும் பார்வையிட்டார்.

கையில் ஒரு கொத்து மண்ணை அள்ளிப் பார்த்தார். நிச்சயம் அது புழுதி வர்க்கம் அல்ல.

பிறகு அங்கிருந்து போலீஸ் நிலையம் வந்தார்கள்.

சிங் அந்தக் கேஸ் பைலை வாங்கி, அவசரமாகப் போட்டோக்களைப் பார்த்தார்.

மார்லோவின் உடலைப் பல விதக் கோணங்களில் பிடித்த போட்டோக்கள் அவை.

தலைப் பகுதியை சிங் கூர்ந்து நோக்கினர். பிறகு லென்ஸ் ஒன்றைக் கொண்டு வரச் செய்து உற்று நோக்கினர்.

மார்லோவின் வெளிர்க் கறுப்பு ரோமத்தில் நிச்சயம் தேசலாக ஒரு படிவத்தை அவர் பார்க்க முடிந்தது.

துரைபாபு கூறியதுபோல் அது புழுதியாகத்தான் இருக்க வேண்டும்.

—மிஸ்டர் துரை! ஒரு சின்ன விஷயம்! அது ஒரு கேஸில் எவ்வளவு பெரிய வித்தியாசத்தை உண்டு பண்ண முடியும். பாருங்கள்! என்ரூர்.

துரைபாபுவுக்கு அது தனது குறைபாடாகத்தான் தோன்றியது.

அது எப்படி நேர்ந்திருந்தது என்று ஆச்சரியமாக இருந்தது.

—ஒரே இடம், மிஸ்டர் துரை! அந்த ஓட்டலைப் பார்க்க வேண்டும்! மார்லோ தங்கியிருந்த ஓட்டல்.

இருவரும் ஜீப்பில் விரைந்தார்கள்.

ஒரு வெள்ளி வெய்யில் ஓட்டல் முகப்பைக் கூச வைத்தது.

கேட் முன்பாக சிங் ஆவலோடு இறங்கினர்.

வெளியிலிருந்து உள்ளே நோக்கி நடைபாதையில் மெதுவாக நடந்தார்.

தோட்டப் பகுதியையும் கண்ணுல் பார்த்தார்.

ஓட்டலின் லவுஞ்ச் முகப்பு வரை வந்து விட்டார். அவர் ஆவலாக எதிர்பார்த்த புழுதி எங்கும் தென்படவில்லை. மண் தரை வெவ்வேறு இறுக்கங்களில் எங்கும் பரந்து கிடந்தது.

—மிஸ்டர் சிங்! என்ரூர் துரைபாபு.

சிங் திரும்பினர்.

—மார்லா தலையிலே தெரிகிறதைப் புழுதியென்று சொல்ல முடியாது. அது சாதாரண மண் வர்க்கமாக இருக்கும் என்ரூர் மெதுவாக.

சிங் சட்டென்று திரும்பினர்.

—இல்லை துரை! பல கேஸ் பார்த்திருக்கேன். அந்தப் போட்டோவில் உள்ள பாட்ச் நிச்சயம் புழுதிதான். அதைப் பின்னல் ஆராய்ச்சியில் நிரூபிக்க முடியும்?

கூறிக்கொண்டே சிங் லவுஞ் சுக்குள் படி ஏறி மாடி வராந்தா வுக்குப் போனர்.

பெருக்கிச் சுத்தம் செய்வதற்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்த ஓர் அறையில் நுழைந்து யோசனையோடு பால்கனிக்கு வந்தார்.

ஏதோ உந்தலில் கீழே பார்க்க, பரபரப்பில் —துரைபாபு! என்ரூர்.

—எஸ், ஸார்!

—கீழே பாருங்க! நாம்ப தேடி வந்த மண் கிடைச்சாச்சு.

துரை எட்டிப் பார்த்தார்.

பிறகு இருவரும் பரபரப்புடன் இறங்கி ஓட்டல் பின்புறம் அவசரப்பட்டார்கள்.

அதிகாரி: உங்க வயது?

குடும்பஸ்தர்: ஐம்பது.

அதிக்காரி: உங்க மனைவியின் வயது?

குடும்பஸ்தர்: நாற்பது.

அதிகாரி: போனமுறை கணக்கெடுக்கும் போது உங்க மனைவியின் வயது உங்க வயதை விட அஞ்சுதானே குறைச்சலா இருந்தது.

குடும்பஸ்தர்: அவ ரொம்ப சோம்பேறிங்க. அவளுக்கு மெல்லத்தான் வயசர்கும்.

—கே.ஆர்.எம்.

நீண்ட காரிடாரைக் கடந்து சமையல் அறை விளிம்பு வழியாக தாழ்வாரத்தில் இறங்கப் பின்புறம் குதித்தார்கள்.

சிங்கின் கண்கள் விரிந்தன.

'ப' வடிவில் இருந்த அந்தக் கட்டிடத்தில் பின்புறம் முழுவதும் புழுதியால் நிரம்பி இருந்தது.

அந்தப் புழுதி அந்த ஓட்டலின் வேலிவரை பரவி இருந்தது.

அது ஒரு இயற்கை விநோதமாகக்கூடப் பட்டது.

நேர்த்தியான பட்டுப் போன்ற புழுதி.

—அநேகமாகக் கேஸ் தெரிஞ்சாச்சு! என்றார் சிங்.

—என்ன? என்று ஆவலுடன் கேட்டார் துரை.

—மார்லோவை யாரோ அறைக்குள்ளேயே கொன்னிருக்காங்க! பிறகு பால்கனி வழியே கீழே தள்ளி இருக்காங்க! இங்கிருந்து பின்னடி உடலை ஸ்காண்ட்—ஸ்டோன் பகுதிக்குக் கொண்டு போயிருக்காங்க.

துரைபாபுவுக்குப் பாதி நம்பிக்கை ஏற்பட்டது.

—யாரு கொன்னிருப்பாங்க!

—யாரோ நம்பிக்கையோடு அவன் ரூமுக்குள்ளே நுழைஞ்சிருக்க வேண்டும்.

—வெயிட்டர்கள் உலாத்திக்கிட்டே இருப்பாங்களே! ஓட்டல்லே நல்ல பாதுகாப்பு வேறே உண்டே...!

—மார்லோ இருக்கிறது தெரிஞ்சு, அதே இரண்டாவது மாடியிலே யாராவது ரூம் எடுத்திருப்பாங்க. கம் ஆன்! அதையும் கண்டு பிடிச்சுடலாம்.

கவுண்ட்டருக்கு விரைந்தார்கள். அங்கே மானேஜரைக் கேட்டு ரிஜிஸ்தரை வாங்கிக் கொண்டார்கள்.

கொலை நடந்த தினத்தின் முன்னும் பின்னும் ஓட்டலில் தங்கியவர்கள் யார் யார் என்று பார்த்தார்கள்.

விதவிதப் பெயர்களுடன் விதவித விலாசங்கள் தெரிந்தன. எத்தனை விலாசங்கள்?

இவற்றில் அந்தக் குற்றவாளி விலாசத்தை எப்படிக் கண்டு பிடிப்பது?

சிங் ரிஜிஸ்டரை மூடி யோசித்தார்.

துரைபாபு கொட்டாவியோடு நின்றார்.

கட்டென்று கையைச் சொடுக்கி சிங் ரிஜிஸ்டரை மீண்டும் திறந்தார்.

—துரை, கொஞ்சம் நோட் பண்ணிக்கிறீங்களா? மொத்தம் எட்டு மெட்ராஸ் அட்ரஸ் இருக்கு. அதை நோட் பண்ணுங்க.

துரை ஒரு குறிப்பேட்டை எடுத்தார். —ஆ! அதுவும் ஒரு யூகம்!

இந்த மாதிரிக் குற்றம் செய்யறவன் பெரிய லிஸ்டியிலேதான் பேஸ் (base) வச்சிருப்பான். இங்கே ரிஜிஸ்டர்லே தன் பெயரை மாற்றி பொய்ப் பெயர் எழுதியிருந்தாலும் ஊரை அநேகமாகச் சரியாக எழுதியிடுவான். அது ஒரு ஸைகாலஜி.

எட்டுப் பெயரை குறித்ததும் சிங் அன்றைக்கே சென்னைக்குச் செய்தி அனுப்பினார்.

எட்டு விலாசங்களையும் கொடுத்து அவைகள் உண்மையான விலாசங்களா என்று சோதிக்கச் சொன்னார்.

மறுநாள் காலைக்குள் பதில் தந்தி வந்தது.

அவர் எதிர்பார்த்தது போலவே ஒரு விலாசம் பொய் விலாசம்.

சிங்கின் ஊகம் சரியாகிவிட்டது.

—இப்போ அடுத்த விசாரணையிலே இறங்கணும்! என்றார் சிங்.

(தொடரும்)

### ஆறு வித்தியாசங்கள் விடை:

1. கீழ்ப்பூட்டில் சாவித் துவாரம்
2. தோள்பையின் பட்டை
3. விளக்குக் கம்பத்தின் கம்பி
4. கூடை அருகிலுள்ள சிறுமியின் பின்னல்
5. கதவு நம்பர் உள்ள இடம்
6. பூட்டருகே உள்ள குழந்தையின் கவுன் மடிப்பு

# 22

*The ones who live are*
*the ones who struggle.*

**Victor Hugo**

ஹோட்டல் பாரிஜாதாவில் தங்கிய ஐந்து சென்னை வாசிகளில் ஒருவர் பொய் விலாசம் கொடுத்திருக்கிறார் என்று தெரிந்ததும் இன்ஸ்பெக்டர் சிங் நேராக ஓட்டலுக்கு விரைந்தார். துரையும் தொடர்ந்தார்.

ரூம் ரிஜிஸ்டரை கொணரச் சொல்லி அந்த ஒரு ஆசாமி யார் என்று பார்த்தார்.

கே. ராம், முப்பாத்தா தெரு, சென்னை—72 என்று இருந்தது.

எத்தனுவது அறையில் தங்கினுன் என்று பார்த்தார். 38 என்று தெரிந்தது. மார்லோ 34ல் தங்கியிருந்தான். துரையைப் பார்த்துத் திரும்பினர் சிங். —மிஸ்டர் துரை! இப்போ லிங்க் ஒவ்வொரு கண்ணியாய்ப் புலப்படுது பாருங்க! என்றார்.

துரை வியப்புடன் பார்த்தார். உண்மையில் சிங், தமது புகழுக்கு ஏற்ப ஜாலங்களைச் செய்ய முடிகிறது என்று நினைத்தார்.

—ஸோ, என் தியரி சரியாயிருக்கு. இந்த 38'ம் நம்பர் அறையில் குற்றவாளி தங்கியிருக்கான். மார்லோவின் அறைக்குள்ளே போயிருக்கான். மார்லோவைக் கொன்றிருக்கான். பால்கனி வழியா வெளியே உடலை அப்புறப்படுத்தியிருக்கான். ஸாண்ட் ஸ்டோன் தூண்கள் இருக்கிற இடத்திலே தூக்கிப்போட்டு அது ஒரு தற்கொலை என்கிற மாதிரி அபிப்பிராயத்தை உண்டு பண்ணியிருக்கான். ஓகே?

துரை தலையை ஆட்டினர்.

—இப்போ நம்ப வேலை, இந்த ஏமாத்து ஆசாமியைக் கண்டு பிடிக்கணும். அதுக்கு முன்னுடி மார்லோவை அவன் கொல்ல வேண்டிய காரணத்தைக் கண்டு பிடிக்கணும்.

—எஸ் ஸார்!

—ஒரு விஷயம்! மார்லோ இந்த ஊருக்கு வந்த காரணம் எத்தனை பேருக்குத் தெரியும்?

—டிரஸ்டிக்குத் தெரியும். கமிட்டிக்கும் தெரியும்.

—வேறே யாருக்கும் தெரியாதே?

—தெரியாது.

—ஒரு தியரி சொல்றேன். சரியா இருக்கா பாருங்க! மார்லோ இந்தியாவுக்குப் பல தடவை வந்திருக்கான்.

# இரண்டாம் ஜாமம்

—ஆமா, ஸார்.

—இதுக்கு முன்னுடி அவன் வந்த விஷயம், காரணம் எல்லாம் யாருக்கோ தெரிஞ்சிருக்குன்னு வச்சுக்குங்க.

—ரைட்! ஆண்டிக் நகைன்னு சொன்னால் பல பேருக்கு இன்டரெஸ்ட் இருக்கும்.

—அப்படிப்பட்ட ஒரு ஆசாமிக்கு மார்லோ இப்போ வந்த விஷயம் தெரிய வந்ததுன்னு வச்சுக்குங்க.

—ஓ கே!

—திருக்கோணம் கோவில்லே மார்லோவை அழைச்சிருக்காங்க. அங்கே அப்படி என்ன ஆண்டிக் சாமான் இருக்கப் போறதுன்னு ஒரு ஆர்வம் அவனுக்கு வருமில்லையா?

—ஒத்துக்கறேன்.

—அதைத் தெரிஞ்சுக்கணும், தெரிஞ்சுகிட்டா அது கோவில் பொருளாக இருக்கிற்தினாலே சுலபமாய் அபேஸ் பண்ணலாம்னு நினைச்சிருக்கலாமில்லே?

—அதுவும் சரிதான்.

—அப்படித்தான் இங்கேயும் நடந்திருக்கணும்.

துரைக்குப் புலன் அடித்தது. அப்போ மார்லோ மதிப்புப் போடப் போகிற பொருள் என்ன என்கிறதை அறிஞ்சுக்க யாரோ இங்கே வந்திருக்கணும்.

—யு ஆர் ரைட்! வந்தவன் இங்கே பல வேலை செஞ்சு பார்த்திருப்பான். விவரம் தெரிந்திருக்காது. கடைசியிலே விஷயம் தெரியணும்னு மார்லோ ரூமையே தேடணும்னு நினைச்சிருப்பான். நிச்சயம் மார்லோ அந்த ஆண்டிக் பொருளைப் பத்தி ஏதாவது நோட்ஸ் அல்லது லெட்டர் கிட்டர் எழுதி வச்சிருப்பார்னு நினைச்சிருப்பான்.

புஷ்பா தங்கதுரை

—ரைட் ஸார்.

—இதுக்காக மார்லோவைக் கொன்று அவன் ரூமைச் சோதனை போட்டிருப்பான். விஷயம் தெரிந்திருக்கும்.

—இதுக்காகக் கொல்வானு?

—கோடிக் கணக்கில் பணம் கிடைக்கப் போறதென்றால் ஏன் செய்யமாட்டான்?

துரைக்குச் சரி என்று தோன்றியது.

இன்னும் ஒரே ஒரு சிக்கல் இருந்தது. மிக முக்கியமான சிக்கல்!

மார்லோ திருக்கோணம் வருகிறான் என்று எதிராளிக்கு எப்படித் தெரிந்தது? இது ஒரு ரகசியமான விஷயம் ஆயிற்றே! கோவில் நிர்வாகிகளும் யாரிடமும் தெரிவிக்கவில்லையே?

இந்தச் சந்தேகத்தை சிங்கிடம் தெரிவித்ததும் அவர் தயக்கமுடன் யோசித்தார்.

—அதைத்தான் நானும் யோசிக்கிறேன் துரை! இது ஒரு வேளை சர்வதேசியச் சதி வேலையா இருக்குமான்னு!

—இருக்கலாம் சார்!

உலகத்தில் இப்படிப் பழம்பொருள்களைத் திருடறதுக்கென்றே சக்தி வாய்ந்த கோஷ்டிங்க இருக்கு. அவங்க எதுக்கும் அஞ்சமாட்டாங்க! என்ன வேலை வேணும்னாலும் செய்வாங்க. அப்படி ஒரு கோஷ்டிக்குப் பிரதிநிதி நம்ப நாட்டிலே இருக்கலாம் இல்லையா? அதையும் சீக்கிரம் கண்டு பிடிக்கிறேன் என்றார் சிங்.

உமேஷ் பரபரப்போடு வந்திருந்தான்.

ராவின் கம்பெனி கெஸ்ட் ஹவுஸில் லாலி ராவுடன் பேசிக்கொண்டிருந்த சமயம்.

ஒரு உற்சாகத்துடன் உள்ளே

# இரண்டு பேரல்ல, ஒருவர்தான்!

இரண்டிரண்டு பேராக ஆடுகிறார்கள் என்று நினைக்க வேண்டாம். ஒவ்வொருவரும் அவ்வளவு வேகமாகச் சுழன்று ஆடுவதால் புகைப்படத்தில் இப்படித் தெரிகிறது.

லூரா டீன் என்ற அமெரிக்கரின் தலைமையில் 14 பேர் கொண்ட நடனக் குழுவினர் சென்னை வந்திருந்தபோது இப்படிப் புயலாகச் சுழன்று ஆடினார்கள். இடை விடாமல் வலது புறமாக நாற்பது நிமிடமும் இடது புறமாக இருபது நிமிடமும் சுழன்றாடினார்கள் இவர்கள்.

—அசோக்.

COMICS PDF TIMES

படிப்பது பேய்க் கதையா அல்லது அரிச்சந்திர புராணமா?

'மெட்டி' படத்தில் ராதிகா.

பளிச்சிட்டான்.

—எனி நியூஸ்? என்றாள் லாலி.

—இருக்கு! என்று துள்ளி உட்கார்ந்தான். —நிறைய இருக்கு.

ராவ் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

லாலிக்குக் குழந்தைத்தன மகிழ்ச்சி பொங்கியது.

—அந்த மேன் ஹோலுக்குள்ளே போயிட்டேன், என்றான் அவன்.

—எப்போ? என்றாள் லாலி.

—காலேலே! பரமசிவம்னு ஒரு ஸ்யூவேஜ் வொர்க்கர். அவனுக்குப் பத்து ரூபாய் கொடுத்தேன். அற்புதமா ஒத்துழைச்சான். காக்கிச் சட்டையும் டிரவுசரும் எனக்குக் கொடுத்தான். வாளி, மங்கில் பத்தையோடு புறப்பட்டோம்.

—அச்சா!

—எம்.என்.ஆர் ஜுவல்லரி ஓரமா அந்த மேன்ஹோல் இருக்கு. முதல்லே அவன் இறங்கினான். எல்லாம் சரியாயிருக்குன்னு தெரிஞ்சப்புறம் என்னை இறங்கச் சொன்னான்.

—இறங்கினீங்களா? என்று சிறுபிள்ளை ஆர்வத்துடன் லாலி கேட்டாள்.

—இறங்கினேன். உள்ளே இடுப்பளவுக்குச் சாக்கடைத் தண்ணீர். நெடி சகிக்கலே. ஒரு வாட்டி மேலே வந்துட்டு வாந்தி எடுத்தேன். அப்புறம் இரண்டாம் வாட்டி இறங்கினேன். கொஞ்சம் நெடி பழகிட்டுது. அப்படியே இடுப்பு ஆழத்திலே நின்னுட்டேன். முதல்லே என் சுவாசமே எனக்கு இடைஞ்சலா இருந்தது. அது அடங்கற வரைக்கும் நின்னேன். நிதானம் ஆனதும் மெள்ளச் சாக்கடைச் சுவர்லே காது வச்சேன். கொஞ்ச நாழி எதுவும் கேட்கலே. காதை ரொம்பக் கூர்மையாக்க வேண்டி இருந்தது. அப்புறம் வச்சுக் கேட்டா, முதல்லே குறுகுறுன்னு சத்தம். அதைச் சுவாரஸ்யமாகத் தொடர்கிற போது தோள் பட்டையில் ஒரு ஊறல். திரும்பிப் பார்த்தேன்.

இவ்வளவு பெரிசுக்கு ஒரு நண்டு! அம்மாடியோவ்!

அவன் மெல்ல சொல்ல, லாலி துள்ளிக் குதித்தாள். —அப்புறம் என்ன ஆச்சு? என்றாள்.

—அதைத் தூக்கிக் கடாசச் சொன்னென் பரமசிவம். கடாசினேன். அப்புறம் சுவர்லே காதை வச்சுக் கேட்டால், மெள்ள மெள்ளச் சத்தம் வர ஆரம்பிச்சுது. இப்போது ரொம்ப நல்லாக் கேட்டிச்சு! கடப்பாறை சத்தம், தோண்டற சத்தம், மண் வாருகிற சத்தம். இன்னும் என்னென்னமோ சத்தம். அஞ்சு நிமிஷம் கேட்டேன். நிச்சயம் அது சுரங்கம் வெட்டற சத்தம்தான். அவங்க ஜுவெல்லரி காம்பவுண்டுக்குள்ளே போயாச்சு. அந்தத் தூரத்திலிருந்துதான் சத்தம் வந்திச்சு.

—அப்போ நாளைக்கோ மறுநாளோ ஜுவெல்லரிக்குள்ளே போயிடுவான்! என்றார் ராவ்.

—அது என்னிக்குன்னு எனக்குத் தெரிஞ்சாச்சு.

—என்னிக்கு உமேஷ்! என்று குறுக்கிட்டாள் லாலி.

—இன்னிக்கு மூணும் நாள் ஞாயிற்றுக்கிழமை.

அவன் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல,

ராவும் லாலியும் திகைப்புடன் பார்த்தார்கள். எதுவும் பேச வாய் எழவில்லை.

சிறிது நேரம் கழித்து லாலிதான் கேட்டாள். —ஞாயிற்றுக் கிழமைன்னு எப்படித் தெரிஞ்சுது?

—குருட்டாம் போக்கிலே தெரிய வந்திச்சு. நான் சாக்கடையிலிருந்து வெளிவந்தப்புறம் கோவில் இருக்கிற பக்கம் பார்த்தேன். நான் போன போதிலிருந்தே அங்கே கொஞ்சம் நடமாட்டம் அதிகமாசு இருக்கிறதைப் பார்த்தேன்.

—வழக்கத்தை விடவா? என்றாள் லாலி.

—வழக்கத்தை விடப் பல மடங்கு அதிகம்.

—ஓ!

—நான் வெளியேறி வந்தப்புறம், ரோட்டல நடந்து போனபோது எதிரே ஒரு வண்டிலே பந்தக்கால், தூணி, கீத்து எல்லாம் வந்திச்சு. அவனை நிறுத்தி விஷயத்தைக் கேட்டேன். முருகன் கோவிலுக்குப் போகிறதாகச் சொன்னான். திருவிழாவான்னு கேட்டேன். ஞாயிற்றுக்கிழமை .காவடி உற்சவம் நடக்கிறதாச் சொன்னான். விஷயம் புரிஞ்சு போச்சு.

லாலி கனமான பார்வை பார்க்க,

ராவ் அவனை நோக்கித் திரும்பினார்.

—எனக்கு இன்னும் பிடிபடல்லே, என்றார்.

## பையன்கள் கேட்கிற கேள்விகள்!

உதிரிப்பூக்கள், மூடுபனி, சுவரில்லாத சித்திரங்கள் உள்பட்ப் பல படங்களில் நடித்திருக்கும் சிறுவன் ஹாஜா ஷெரீப், வடபழனி கார்பரேஷன் பள்ளியில் ஏழாம் வகுப்புடன் படிப்புக்கு டாடா காட்டிவிட்டு சினிமா உலகில் புகுந்து விட்டான்.

''ஷூட்டிங் நிறைய இருப்பதால் படிக்க முடியவில்லை. கூடப்படிக்கிற மாணவர்கள் கமலைப்பத்தியும், ரஜனியைப்பத்தியும், சிவாஜியைப்பத்தியும் கேட்கிறார்கள். என் படிப்பையும் கெடுத்துக்கிட்டு அவங்க படிப்பையும் கெடுக்கறதைக் காட்டிலும் வீட்டிலேயே படிக்கலாம்னு இருக்கிறேன்,'' என்றான்.

சிறிய காட்சியாக இருந்தால் 500 ரூபாயும்—பெரிய காட்சியாக இருந்தால் 1000 ரூபாயும் தமிழ்ப் படங்களில் கிடைக்கிறது என்கிறான் ஹாஜா ஷெரீப்.

ஹாஜாவுக்குக் கூடப்பிறந்தவர்கள் இரண்டு அண்ணன், இரண்டு அக்கா, ஒரு தங்கை, ஒரு தம்பி. அப்பா நூர் முகம்மது பிளாஸ்டிக் பட்டன் தயாரிக்கிற கம்பெனி வைத்திருக்கிறார். அம்மா இல்லை.

—வி.எஸ்.

—ஞாயிற்றுக் கிழமை கடை அடைப்பு. அதனுலேதான் அந்த நாளேத் தேர்ந்தெடுத்திருக்காங்க.

—சரி, காவடி உற்சவம் எதற்கு?

—அதையும் யோசிச்சுட்டேன். அன்னிக்குச் சுரங்கத்தின் வழியா ஜுவெல்லரியின் ஸ்ட்ராங் ரூம் தளத்தை உடைக்கணும். தளத்தை லேசிலே உடைக்க முடியாது. வெடி வச்சு உடைச்சாலும் உடைப்பாங்க. அல்லது ஸ்ட்ராங் ரூமுக்குள்ளே இரும்பு அலமாரி இருக்குமே, அதை வெடி வச்சு உடைச்சாலும் உடைப்பாங்க...

லாலி உடனே தொடர்ந்தாள். —அப்படி வெடி வச்சா சத்தம் வெளியே கேட்குமில்லையா? அது யார் காதிலும் விழாமல் இருக்க வேண்டி, தாரை தப்பட்டை வாத்தியம் எல்லாம் அடிச்சு, காவடி உற்சவம் கொண்டாடப் போறுங்க.

—ஹா! என்று வாயைப் பிளந்தார் ராவ். —எவ்வளவு சாதுரியமான வேலை! எவ்வளவு புத்திசாலித்தனம்!

லாலி பேசவில்லை.

உமேஷ் அவளை ஆவலோடு பார்த்தான். அவள் என்ன சொல்லப் போகிறுள் என்பதை அறிய ஆசை.

சிறிது நேரத்திற்குப் பிறகு, அவள்—உமேஷ்? என்றுள்.

—எஸ் லாலி!

—நீங்க செஞ்சிருக்கிறது மகத்தான கண்டு பிடிப்பு.

—தாங்க் யு லாலி!

—நமக்கு இனிமேல்தான் கவலை. நாம்ப சொல்றதை இதுவரை யாரும் நம்பலை. இனிமே நம்பப் போறுங்களா?

—லேசிலே மாட்டாங்க, லாலி.

—அப்போ நாம்ப என்ன செய்யறது? தாஸ் அவன் கூட்டத்தோடு வந்து காவடி ஆடுவான். நாம்ப அவர்களை எதிர்க்க முடியாது. ஆனு எதிர்க்காமலும் இருக்க முடியாது. நிச்சயம் நம்ப மதியாலேதான் இதை வெல்லணும்.

—கட்டாயம் செய்யலாம். லாலி.

—எல்லோரும் யோசிப்போம், என்றுள் லாலி.

அதைத் தொடர்ந்து எல்லோரும் மௌனமானுர்கள்.

(தொடரும்)

•

## ஆங்கிலத்தில் ராமாயண நாடகம்— அமெரிக்காவில் நடக்கிறது

வால்மீகி ராமாயணத்தை ஆங்கிலத்தில் 4 அங்க கவிதை நாடகமாக எழுதியிருக்கிறுர் கோபால் ஷர்மான். அவர் மனைவி ஜலபாலா வைத்யா அதை மேடையில் உணர்ச்சி ததும்பப் படித்துக் காட்டுகிறுர்.

சென்ற பத்தாண்டுக் காலமாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்த நிகழ்ச்சி பிரபலமாக நடைபெற்று வருகிறது.

படமும் தகவலும்:
இலஸ்ட்ரேட்டட் வீக்லி.

இன்பம் என்பது என்ன?
எதிர் சக்திகளை முறியடித்தோம் என்ற நினைப்புதான் இன்பம்.

—ஃபெடரிக் நீஷ்

## ஓட்டல் பாரிஜாதாவில் பொய் விலாசத்தைக் கொடுத்தது யார்?

யாராயிருந்தாலும் அந்த ஆசாமிதான் மார்லோவைக் கொன்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பொய் விலாசத்தைக் கொடுத்திருக்க அவசியமில்லை.

அந்த ஆசாமி யார்? எப்படிக் கண்டுபிடிப்பது?

இன்ஸ்பெக்டர் சிங் தீவிரமாக யோசித்தார். பாரிஜாதாவில் மீண்டும் பலரை விசாரணை செய்தார். ஒரே ஒரு உபரிச் செய்தி கிடைத்தது. அந்த ஆசாமி தனியாக வரவில்லை. அவனுடன் ஒரு பெண்ணும் வந்திருந்தாள்.

அதற்கு மேல் ஒரு துளி விவரம் கிடைக்கவில்லை.

சிங் தவித்துக் கொண்டிருக்கும்போது இன்ஸ்பெக்டர் துரைபாபு, —ஸார்! என்று தொடங்கி, —அதுக்கு ரெண்டாம் நாள் இன்னொரு கொலையும் இந்த வட்டாரத்திலே நடந்திச்சு, என்றார்.

—எங்கே? என்று பரபரப்புடன் திரும்பிய சிங், —மிஸ்டர் துரை! இங்கே நடந்த எல்லாச் சமாசாரமும் எனக்குத் தெரிஞ்சாகணும்! ஒண்ணு மேலர்ந்து ஒண்ணுக்குத் தடயம் கிடைச்சாலும் கிடைக்கும், என்றார்.

—இது கெஸ்ட் ஹவுசிலே நடந்திச்சு.

—இறந்து போனது யாரு?

—விச்வேச்வர்னு ஒருத்தர்.

—கொலைக்குக் காரணம் கண்டுபிடிச்க முடிஞ்சுதா?

—திருட்டுத்தான்! பெட்டியிலேர்ந்து ரெண்டாயிரம் பணம் போயிட்டுது.

—விசாரிச்சீங்களா?

—விசாரிச்சேன். கொலையான ஆசாமிக்கு லாலின்னு ஒரு பெண்ணு. அது ஒரு ஹிஸ்டீரிகல் பெண்ணு. சரியாய்ப் பதில் சொல்ல முடியலே.

—கொலே செஞ்சவனைக் கண்டுபிடிக்கலியே?

—இல்லே ஸார்!

—அதான் கேட்டேன்! ஏதாவது லிங்க் கிடைச்சாலும் கிடைக்கும். கெஸ்ட் ஹவுசுக்கு வாங்க!

• கெஸ்ட் ஹவுசில் கொலே நடந்த அறையை முழுதுமாகப் பரிசோதித்தார்கள்.

பிறகு கீழே இறங்கி, ரூம் லெட்ஜரை வாங்கி அன்று யாரெல்லாம் கெஸ்ட் ஹவுசில் தங்கியிருந்தார்கள் என்று பார்த்தபோது, சிங் சடக்கென்று திரும்பி —துரை! கொலையானது யாருன்னு சொன்னீங்க? என்றார்.

—விச்வேச்வர்.

COMICS PDF

—விச்வேச்வர். இந்தப் பெயரை ஓட்டல் பாரிஜாதா லெட்ஜர்லேயும் பார்த்த மாதிரி இருக்கே. போன் பண்ணிக் கேளுங்க.

துரை போன் பண்ணினார்.

பதில் வந்தது.

விச்வேச்வர் ஓட்டல் பாரிஜாதாவில் மார்லோவின் கொலை நடந்த முந்திய நாள் இருந்திருக்கிறார். மறுநாள் மாலையில் காலி பண்ணியிருக்கிறார்.

—யு ஆர் ரைட்! மறுநாள் மாலையிலேதான் இந்தக் கெஸ்ட் ஹவுசுக்கு வந்திருக்கிறார். அங்கே காலி பண்ணிட்டு இங்கே வந்த காரணம் என்னவா இருக்கும்? மர்மமாக இருக்கே?

சிங் தத்தளிக்க, துரை தமது நினைவைத் தோண்டிக் கொண்டிருந்தார்.

பிறகு, —சிங்! என்றார், எதையோ நெருடியவர் போல. அவர் கண்கள் பெரிதாக விரிவடைந்தன. —அந்தப் பெண், விச்வேச்வர் பெண் ஒரு விஷயம் சொல்லிச்சு, என்றார்.

—என்ன சொல்லிச்சு?

—யாரோ ஒருத்தன், சுவாமி ஊர்வலம் வரும்போது அந்த மீன் நெக்லஸைத் திருடப் பார்த்தான்னு சொல்லிச்சு!

—அப்படியா? என்று துள்ளினார் சிங். —விசாரிச்சீங்களா?

—விசாரிச்சேன். அதுலே ஒன்றும் சாரமில்லேன்னு தோணுச்சு. அந்தப் பெண் சொன்னதை யாரும் ஸப்போர்ட் பண்ணிச் சொல்லல்லே. ஆயிரக்கணக்கானவங்க இருக்கிற கூட்டத்திலே இவளுக்கு மட்டும் எப்படித் தோணுச்சுன்னு நினைச்சுட்டோம். அப்படியே விட்டுட்டோம்.

—அந்தப் பெண் அட்ரஸ் இருக்கா?

—இருக்கு ஸார்! நானே இன்னும் அவளை விசாரிக்கணும். அந்தக் கேஸ் இன்னும் முடியாம இருக்கு.

சிங் கையைத் திருகினார்.

—துரை, இங்கே நடந்திருக்கிற விஷயம் எல்லாம் மர்மமா இருக்கு. அங்கங்கே மொட்டை மொட்டையா நிக்குது. எனக்கு என்னவோ ஒரு மறைஞ்சிருக்கிற விஷயம் தெரிஞ்சா எல்லா மர்மமும் பளிச்சுனு வெட்ட வெளியாகிடும்னு தோணுது. இது ஒரு ஊகந்தான்.

துரை மேலே பேச முடியவில்லை.

—இது வரை விசாரிச்சதிலே ஏதாவது தோணுதா? என்றார் மெள்ளமாக. அவர் மனத்தில் ஒரு குற்ற உணர்வு தோன்றியிருந்தது.

—என் ஊகம் சொல்றேன் துரை! குற்றவாளி நெக்லஸைத் திருட முயற்சிக்கிறதையோ, அல்லது மார்லோவைக் கொன்னதையோ இந்த விச்வேச்வர் நேரிலே பார்த்திருக்கணும். அப்படிப் பார்த்ததினாலே தனக்கு ஏதாவது ஆபத்து வருமோன்னு பாரிஜாதாவைக் காலி பண்ணி, கெஸ்ட் ஹவுசுக்குப் போயிருக்கணும். ஆனால் குற்றவாளி அவர் போன இடத்தைக் கண்டுபிடிச்சு அவரைத் தேடிப் போய் அங்கே கொலை பண்ணியிருக்கணும். நான் சொல்றது சரியாகவும் இருக்கலாம், தப்பிதமாகவும் இருக்கலாம்.

## ஒரு கோடி ரூபாய் வருமானம் இருந்தும்...

சேப்பாக்கம் இந்தியப் பொறியாளர் கழகத்தில், 'சாலைகளை வெட்டுதல்' பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. அப்போது வெளியான தகவல்:

சென்னையில் சராசரி 174 இடங்களில் தினந்தோறும் சாலைகள் வெட்டப்படுகின்றன. மின்சாரத் துறை மட்டும், சாலைகளை வெட்டுவதற்காகச் சென்னை மாநகராட்சிக்கு 35 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் கட்டணம் செலுத்துகிறது. மற்றத் துறையினர் 65 லட்சம் கட்டுகிறார்கள். ஆக, ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் சென்னை மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்கிறது.

ஆனால் பள்ளம் பறிப்பவர்கள் அப்படியே விட்டுவிட்டுப் போகிறார்கள் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்துகொள்ளும் மாநகராட்சியும், சாலைகளை மறுபடி திருத்தியமைப்பதற்கு அதிகம் செலவழிப்பதில்லை. குண்டும் குழியுமாக அப்படியே இருப்பதால் சாலை விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

—சி.எச்.ஜி.

செலவுகளைக் கணக்கு எழுதி வைக்க வேண்டியதுதான். ஆனால் எல்லாரும் பண்ணுகிற தப்பு: மொத்தம் என்ன ஆச்சு என்று கூட்டிப் பார்ப்பது!

'ஒரு வாரிசு உருவாகிறது' படத்தில்: ஸ்ரீப்ரியா—பிரதாப்

---

சென்னை வந்ததும் சிங் சுறுசுறுத்தார். மார்லோ திருக்கோணம் வந்த செய்தி குற்றவாளிக்கு எப்படித் தெரிந்தது? அதில் ஒரு சிக்கல் இருந்தது. மார்லோ திருக்கோணம் வந்தபோது குற்றவாளியும் அதே ஓட்டலில் அறை எடுத்துத் தங்கியிருக்கிறான். இது எப்படி நேர்ந்தது?

மார்லோ வரும் செய்தி கோவில் [illegible] தவிர வேறு யாருக்கும் [illegible]. குற்றவாளிக்கு மட்டும் [illegible]?

[illegible] வெளிநாட்டிலிருந்தே [illegible]?

[illegible] சதியாக

[illegible]

ரைட்! மார்லோ இந்தியாவுக்குப் புறப்படுவதை அறிந்த வெளிநாட்டுச் சதிகாரர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் பிரதிநிதிக்குத் தகவல் கொடுத்திருப்பார்கள்.

அப்படியானால் அந்தப் பிரதிநிதி யார்?

சிங்குக்கு ஒரு குருட்டு யுக்தி தோன்றியது.

கவர்ன்மெண்ட் டெலிபோன் இலாகாவைத் துருவி, சென்னைக்குக் குறிப்பிட்ட தினங்களில் யாருக்கெல்லாம் வெளிநாட்டு டெலிபோன் தொடர்பு ஏற்பட்டது என்பதை விசாரித்தார். பிறகு, அந்த விலாசங்களில் நம்பிக்கையானவர்கள்தான் வாழ்கிறார்களா என்று தமது துணையாளர்கள் மூலம் விசாரணை செய்து கொண்டார்.

டெலிபோன் விஷயத்தில் அவருக்குப் பலன் பூஜ்யந்தான் கிடைத்தது.

அவர் உடனே தந்திப் பக்கம் திரும்பினர். யாருக்கெல்லாம் குறிப்பிட்ட தேதிகளில் அயல் நாட்டுத் தந்தி வந்திருக்கிறது?

இலேசான காரியமல்ல அது! மிகுந்த பிரயாசை எடுக்க வேண்டி வந்தது. கடைசியில் ஆம்ஸ்டர்டாமிலிருந்து சென்னைக்கு வந்த ஒரு சங்கேதத் தந்தி அவர் பார்வைக்கு வந்தது.

தாஸும், அவன் விலாசமும் உடனே கிடைத்தது.

அந்த அதிகாலையில் டெலிபோன் டிபார்ட்மெண்டார் அந்த இடத்தில் வேலை செய்ய வருவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

சொல்லப் போனால் முந்திய தினம் மாலையே அந்தத் துணிக் கூடாரம் அங்கே அரும்பி விட்டது. எம்.என்.ஆர். ஜுவெல்லரி முன்பாக.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.

காலையில் அந்த இரட்டை மேளங்கள் டண்டன டண்டன என்று ஒலிக்க,

வெவ்வேறு தினசகளிலிருந்து காவடிகள் தூக்கிய பக்தர்கள் ஒன்று கூட ஆரம்பித்தார்கள்.

ஜுவெல்லரிக்கு நேர் எதிரில் உள்ள முருகன் கோவிலில் மொய்த்தவாறு ஒரே கூட்டம்.

அநேகமாக எல்லாரும் ஆண்கள்தான்.

ஏழரை மணிக்கு டெலிபோன் ரிப்பேர்க்காரர்கள் அங்கே சென்றபோது, கோவிலும் அதன் முகப்பும் ஜேஜே என்றிருந்தது.

பெரிய லாரிகள் இரண்டு வந்து காரணமில்லாமல் கோவில் பக்கம் நின்றன.

கூட்டத்தில் அநேகர் சாலைப் பக்கம் வழுவி அந்த டெலிபோன் கூடாரத்தை ஆச்சரியமுடன் பார்த்தார்கள்.

ஏழரைக்கு ரிப்பேர்க்காரர்கள் காக்கிச் சட்டை பாண்ட்டுகளுடன் வந்தார்கள். கட்டை வண்டி ஒன்று அவர்கள் பின்னல் ஊர்ந்து வந்தது.

—சீக்கிரம்! சீக்கிரம்! என்ற குரல் எல்லோரையும் உசுப்பி, காக்கிச் சட்டைக்காரர்கள் விரைந்தார்கள்.

அதே குரல்தான், மறுபுறம் திரும்பி, —லாலி! நீ கூடாரத்துக்கு அந்தப் பக்கம் உட்கார! வாக்கி டாக்கியை மறைச்சு வச்சுக்க! என்று கூற,

காக்கி உடை தரித்து, குல்லாய் வைத்திருந்த லாலி, —எஸ் உமேஷ்! என்றுள்.

ராவ் பெரிய மேஸ்திரி வேடத்தில் பிரமாத நடிப்பு நடித்துக் கொண்டிருந்தார்.

அவரது கம்பெனி ஆட்களும், உமேஷின் கல்லூரிச் சிநேகிதர்களும் சிற்றாள்களாகச் சுறுசுறுத்தார்கள்.

எட்டு மணிக்குள் இரண்டடி ஆழம தோண்டி மண்ணை வெளியே குவித்து விட்டார்கள்.

—லாலி! சீதாவைத் தயாராக இருக்கச் சொல்லு. நாங்க சுரங்கத்தைக் கண்டுபிடிச்சவுடனே கையைத் தூக்குவோம். உடனே சீதாவுக்குச் சொல்லு. அவள் 100'க்கு டயல் பண்ணிடுவா! என்றான் உமேஷ்.

எட்ட எட்ட தூரங்களில் தெரு வழிகளில் வாக்கி டாக்கி வைத்துக் கொண்டு உமேஷின் சிநேகிதர்கள் நிற்க,

அவர்கள் தோண்டும் இடத்துக்கும் ராவின் கம்பெனி கெஸ்ட் ஹவுசுக்கும் ஒரு வயர்லஸ் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

கெஸ்ட் ஹவுசில் சீதாவும், ரமாவும் தயாராக இருந்தார்கள்.

சிக்னல் கிடைத்ததும், அவர்கள் போலீஸை போனில் கூப்பிட்டு, —எம்.என்.ஆர். ஜுவெல்லரி பக்கம் பெரிய கலவரம்! கடையைச் சூறையாடுகிறுங்க! என்று தெரிவிக்க வேண்டியது.

மணி எட்டரை!

ரோடில் மேலும் மண் குவிய,

—யாரையா இது? என்று சொல்லி ஒரு ஆத்திரமான பக்தர் அங்கே தோற்றமானர்.

—என்ன வேணும் ஸார்? என்றார் மேஸ்திரி ராவ்.

—நாளைக்கு ரிப்பேர் வேலை வச்சுக்கப்பா. ஜனங்களுக்கு இடைஞ்சலாக இருக்குமில்லே!

—நாங்க ஏன் இடைஞ்சலா இருக்கோம்? நீங்க அங்கே ஆடிப் போறீங்க! நாங்க இங்கே தோண்டப் போறோம்.

பக்தர் வேடத்தில் இருந்த கே.ஜி. பால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

உங்க சூப்பர்வைசர் எங்கிருக்கிறார்? என்றார் கோபத்தில்.

அவரா! ஆபீசிலே இருப்பாரு, போய்ப் பாரு!

பால் பல்லைக் கடித்து நின்றான். பிறகு அவசரமாகத் தனது சீஃபிடம் அறிவிக்க ஓடினான்.

இதற்குள் யாரோ ஒருவன் குறித்த நேரம் வந்ததால் மணி அடிக்க,

ஏராளமான ஜனங்களுடன் மேள தாளங்கள் வெடித்துவிட,

அரோகரா அரோகரா என்று பக்தர்கள் காவடி எடுத்துக் குதிக்க ஆரம்பித்தார்கள்.

அநேகர் காவடியை ஆயுசில் பார்த்திருக்க மாட்டார்கள். குருட்டுத் தனமாகக் கண்டபடி ஆடினார்கள்.

—சீக்கிரம் வெட்டு, வெட்டு! என்று உமேஷின் குரல் கேட்க,

பள்ளம் தோண்டுபவர்கள் வெறியோடு வெட்ட,

—பலகை வந்தாச்சு. பலகை வந்தாச்சு! என்று ஒருவன் பள்ளத்திலிருந்து கத்தினான்.

உமேஷுக்குப் புரிந்து விட்டது.

சுரங்கத்தில் மண் சரிந்து விடாமல் இருக்க,

உள்ளே சுரங்கக் கூரையில் பலகைகளை வைத்து அவற்றுக்குத் தாங்கலாகக் கொம்புகளை வைத்திருக்கிறார்கள்.

உமேஷ் உடனே, —அதையும் உடை! என்று கூறிவிட்டு, —லாலி! சிக்னல் கொடு! என்று கையை ஆட்டினான்.

சிக்னல் தெருவில் வெவ்வேறு தூர அளவுகளில் நிற்கும் சிநேகிதர்கள் வழியாக ராவின் கெஸ்ட் ஹவுஸைச் சேர்ந்தது.

சீக்கிரம் கெஸ்ட் ஹவுசிலிருந்து பதில் வந்தது.

—சந்தோஷமான செய்தி! போலீஸ் படையே அங்கே வருது!

ஏற்கனவே அவங்களுக்கு விஷயம் தெரியும் என்று அவசரச் செய்தி தடுப்புக்காக வந்தது.

பலகைகள் ஒவ்வொன்றுக உடைய, உள்ளே சுரங்கம் கறுப்புப் பொந்தாகத் தெரிய, வெளியே டுமீல் என்று வேட்டுச் சத்தம்.

வெடிக்காரன் வெடி கொளுத்தி யிருந்தான்.

அதே நேரம்,— கையைத் தூக்கு! என்று இடி போல குரல். தாஸ் அங்கே கடுங் கோபத்துடன் தோன்றினான். அவன் பின்னல் அவன் சேக்காளிகள். தாஸ் கையில் குரோமியம் பளபளப்புடன் துப்பாக்கி!

உமேஷுக்கு ஒன்றும் புரியவில்லை.

—தூக்கு மேலே!

கையைத் தூக்கி, குழியில் உள்ளவர்களை வெளியே வரும்படி தாஸ் கர்ஜித்தான்.

ஒவ்வொருவராக மேலே வர —லாரியில் ஏறுங்க! என்றான் தாஸ்.

லாரி ஒன்று ஓடி வந்து நிற்க, அவர்கள் ஒவ்வொருவராக மேலே ஏற,

லாலியின் முகத்தைப் பார்த்ததும் தாஸ் கடுமையானான்.

—நீயா? என்று கூறி, ஆத்திரத்தில் அவளை நெருங்க அவன் கை ட்ரிகரை நெருங்குமுன் ஒரு கராத்தே கால் அவன் கையைத் தட்டியது.

இன்ஸ்பெக்டர் சிங்கும் அவரது ஆட்களும் நிரவலாகப் பரவி, துப்பாக்கிகளைக் காட்டி அந்த தாஸ் கும்பல் முழுவதையும் சரண் அடைய வைத்தார்கள்.

—உன் பேர் விசான்னு உமேஷ் சொன்னது ரொம்ப சரி! எங்கள் எல்லாருக்கும் தைரியத்திற்கும், ஊக்கத்திற்கும் நீதான் விசா வழங்கினே, என்றார் ராவ் கெஸ்ட் ஹவுசில்.

எல்லோரும் பெரிய புயலுக்குப் பிறகு ஆர அமர உட்கார்ந்து காப்பி பருகிக் கொண்டிருந்த நேரம்.

—உமேஷ், நீ என்ன சொல்றே? என்று ராவ் கேட்க,

உமேஷ் மெள்ளத் தயக்கமுடன் எழுந்து, —லாலி எனக்குத் தைரியத்துக்கு விசா கொடுக்கவில்லை. கனவுக்கு விசா கொடுத்தாள். என் இன்பத்துக்கு விசா கொடுத்தாள். இங்கே எப்போதும் என்றைக்கும் இளமைக்கு விசாவா அதே சுறுசுறுப்போடு பக்திக் கூர்மையோடு அதே அழகோடு இருக்கப் போறு.

—உமேஷின் காதலுக்கும் விசா தருவா! என்று யாரோ கூற, எல்லோரும் கை தட்டினார்கள்.

ஆச்சரியமாக லாலி தன்னை மறந்து அவனை நோக்கிக் கை நீட்ட, உமேஷ் அதை ஆனந்தமாகப் பற்றிக் கொண்டான்.

[முற்றும்]

COMICS PDF FILES

# முத்துமணி

# ஞாயிறு ஒரு பார்வை

COMICS PDF TIMES
HSC